மகாமகோபாத்யாய,
உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
அடையாறு, சென்னை-20.

ஸ்ரீ சற்குருவே நம:

XI. D. 17 அ

வாசுதேவமனனம்

என்று வழங்குகிற

விவேகசாரம்.

இஃது,
வசனரூபமாய் சகலவேதாந்த சாஸ்திரார்த்தங்களுமடங்கி
யிருக்கின்றமையால் முமூட்சுக்களிற் கற்றவர்களன்றி
மற்றவர்களும் எளிதிலறிந்து மோட்சானந்தத்
தைப் பெறும்படியான உபகாரார்த்
தத்தைக் கருதி,
காஞ்சீபுரம்
ம-ா-ா-ஸ்ரீ, வா. சரவணமுத்துபிள்ளையவர்கள்
சங்கையுத்தரங்களாக்கிப் பிழையறப் பரி
சோதித்து அச்சிட்டுத் தரவேண்டு
மென்று கேட்டுக்கொண்டபடி,

பாரிப்பாக்கம்.
முனியப்ப முதலியாரால்
அச்சிட்ட பிரதிக்கிணங்க,
ஞானசுந்தரபிரம்மம் அவர்களால்
சென்னை,
வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1924.

இதன் விலை ரூபா 1 8 0

| 201 |

உ

சிவமயம்.

பிரகரண அட்டவணை.

பக்கம்.	பிரகரணத்தின் பெயர்.	இலக்கம்.
1	அத்தியாரோபநிருபகம்	1
2	அபவாதநிருபகம்	7
3	சாதனசதுஷ்டயநிருபகம்	9
4	உபயபதார்த்தநிருபகம்	13
5	துக்காரோபநிருபகம்	17
6	கர்மத்திரயநிருபகம்	26
7	ராகத்துவேஷநிருபகம்	36
8	ஆத்மாநாத்மவிசாரநிருபகம்	45
9	சரீரத்திரயவிலக்ஷணநிருபகம்	51
10	அவஸ்தாத்திரயசாக்ஷித்வநிருபகம்	70
11	பஞ்சகோசவிலக்ஷணநிருபகம்	78
12	சச்சிதானந்தலக்ஷணநிருபகம்	87
13	அகண்டத்வநிருபகம்	96
14	அஞ்ஞானசொரூபநிருபகம்	104
15	ஞானஞ்ஞானசொரூபநிருபகம்	115
16	சரீரத்திரயநிருபகம்	130
17	தாபத்திரயநிருபகம்	155
18	பிரதிபந்தத்திரயநிருபகம்	157
19	நவவிதசமுசாரநிருபகம்	161
20	வயிராக்கியாதிநிருபகம்	162
21	வாசனாத்திரயநிருபகம்	165
22	ஆசுரவாசனாப்பிரதிபந்தநிருபகம்	196
23	சிரவணாதித்ரயநிருபகம்	172
24	பாவனாத்திரயநிருபகம்	174
25	ஷட்விதலிங்கதாற்பரியநிருபகம்	180
26	தத்துவநிருபகம்	182
27	பிரமசரியத்வநிருபகம்	182
28	சத்தவிதசைதன்யநிருபகம்	185
29	பஞ்சப்பிரமைநிருபகம்	186

பக்கம்.	பிரகரணத்தின் பெயர்.	இலக்கம்.
30	பிராரத்தத்திரயநிருபணம்	187
31	சஞ்சிதாதிகன்மத்திரயநிருபணம்	190
32	தார்க்கிகாதிபேதநிருபணம்	193
33	பஞ்சவிதமுத்திநிருபணம்	197
34	பிரமவித்தாதிசதுஷ்டயநிருபணம்	198
35	சத்தாவஸ்தைநிருபணம்	201
36	தாதாத்மியத்திரயநிருபணம்	204
37	ஜீவேஸ்பரஸ்வரூபநிருபணம்	206
38	சித்தநிரோதநிருபணம்	211
39	தேகாத்மவைலக்ஷணநிருபணம்	213
40	ஆத்மானாத்மநிருபணம்	214
41	அவஸ்தாத்திரயநிருபணம்	218
42	பிரளயசொரூபநிருபணம்	221
43	வேதாந்தவெதிருத்தமனனநிருபணம்	222
44	பிரியத்வநிருபணம்	224
45	மகாவாக்கியநிருபணம்	225

ஆக பிரகரணங்கள்-௪௫.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

ஆசிரியப்பா.

பொன்னமர்திருநிறப்பூவையம்படிவப்
பன்னகமணிமிளிர்பணமெனுந்தளிம
நெட்டணைக்கண்வளர்நிலைகெழுநாரணன்
மட்டவிழாயிரமணமலிசேயிதட்
பூவுறையாரணன்புரந்தரன்முதலா
மேவருமெய்துறுமின்பமுங்கான்ற
போனகமெனவொரீஇஞானநற்சுடர்பெறீஇ
மோனமுத்திரையுறீஇமானமுத்தியைமரீஇ
யளப்பிலின்பார்தற்கறியாதுமன்பதை
களப்பெரும்பாசக்கட்டுண்டுறுபவப்
புணரிவீழ்ந்தாழ்ந்துபுன்கணுற்றலமர
லுணர்தராப்பரிந்தவ்வுவரிநீந்திடற்கோர்
திமிலெனவாசுதேவப்பிரம
விமலனல்லருளின்விழுத்தகுவாக
தேவமனனம்மெனத்திருப்பெயராலொரு
மேவருஞ்சிறப்பினூல்விரித்துரைத்தனனஃ
தேட்டுப்பிரதியிலேககர்தம்மாற்
றீட்டும்போழ்திற்செறிவுறுந்துகள்க
ளடையவுமாற்றியமைவினுவிடையாந்
திடனுறும்பகுதியிற்றெளிவுசெய்தெழுதா
வெழுத்திற்றருகெனுவிறைதிருமுடியில்
வழுத்தருஞ்சிறப்புவாழ்ந்திலகிடுமவ்
வரநதிமரபின்வந்தவதரித்த
திரனுறுசுப்பராயமால்செய்த

நற்றவமேயுருநயந்தெனவுதித்த
நற்றவசரவணசாமிவேணவின்றுங்
காசறத்திருத்தியச்சிற்பதித்துத்
தேசுறத்தந்தனன்செறிநறும்பங்கயத்
துருவளர்குடவளையுற்றிவர்ந்துயிர்த்த
குருவளராரமுங்கொழுந்தீங்கன்னலின்
விட்டொளிநாலும்வெண்ணிறத்தரளமு
முட்டாட்டாமரைமுத்தமும்பூகந்
தருநித்திலமுந்தழைவுறுகதலியின்
பெருமைசேர்முத்தும்பிறங்குபுவொளிரா
மடைநீர்றகைப்பமதிமுகத்துவர்வாய்க்
கடைசியராயிடைகளைகடிந்திடுவா
னென்றியச்செறுவினையொளிருறநோக்காக்
கன்றிநம்முறுவற்கடும்பகையென்றுச்
சீரடிமலராற்சிதறியவற்றை
வீறுதனப்பகைமேவுமுண்டகமுகை
வேரறக்கொய்துதம்மேம்படுசெவிக்குத்
தீர்விலிகலெனுத்திகழ்வளைவீசித்
தேம்பழுத்தொழுகுதஞ்செவ்வாய்ப்பகையெனு
வாம்பலம்போதையலகிலவெறிந்து
வளிமதுப்பருகவகவிதழவிழ்க்கு
மொளிவளர்பானலவொண்மலர்விழிக்குப்
பெரும்பகையென்றுப்பிறங்குமவற்றி
னரும்பறக்கொய்துதம்மணிநிறைந்திலகு
கந்தரப்பகையெனுநந்தினைவாரி
யந்தமாரகன்கரையணுகிடவெறிந்து
வாய்பிணிதுடைத்துமக்கட்காக்குந்
தாய்பொரப்புரத்தலிற்றழைதருசெந்நெல்
வானெடும்புழைக்கைமானகர்காண்பான்
காணிவந்தெனவெழுங்கவின்றருபண்ணையுங்
கொழுமதுக்கன்னலைக்குதட்டிடுநயவாய்
விழுமுலைக்கருநிறமேதிகடம்புனற்

றடமடுப்பாய்நரத்தட்பூங்கமுகின்
மிடறுடைதரவரால்வெடிகொளீஇயேகிமீக்

கற்பகநிழற்குலாங்காமருசுரபிதன்
பொற்புறுவியன்மடிபொருந்துறத்தாக்கப்

புனிற்றிளங்கன்றெனுப்பரிந்துளமிரங்கிப்
பணித்திடுமுலைவழிப்பாண்மிகப்பெருகி

யலையெறிந்துவட்டெடுத்தம்பர்நின்றிம்பர்த்
தொலையில்விண்ணதிமணிற்றுணைவதுகடுப்ப

நண்ணுறுமாற்றானவையறநிறைந்த
வெண்ணறுவாவியுமியங்குநீர்நிலைகளுஞ்

செல்லூர்பொழிலுஞ்செறிந்துசூழ்தருமெழிற்
பல்லூர்புகழ்திருப்பாரிப்பாக்கத்

தருத்தியுற்றுறைபவனமலமிக்குயர்ந்திடு
திருத்துருத்தியில்வருதேசிகனுங்கர

பாத்திரனடியிணைபழிச்சிடுமெழிறத்
தாத்திரயன்பதமன்பொடுபரவுஞ்

செங்கமலன்றாடிருமுடிபுனைந்த
வங்கணனுகைவாழருணாசலனுங்

குரவனாரருள்பெறீஇக்குலவுவாசிட்டம்
வரனுற்றிலங்குகைவல்லியமுதனாற்

கெழிலுரைவிரித்தவிளமதிதவழும்
பொழிலுடுத்தொளிரும்புனிதமாநகராம்

பிறைசைவாழருணாசலனடிபெட்புறு
முறையுளத்திருத்திமும்மைவன்கயிறு

கொய்தனாதுருமுதற்குறிகண்மூன்றற்ற
மெய்திகழ்பிரமவேலையிற்படிந்தாழ்ந்

தவ்வனுபூதியினுருலகனைத்து
மவ்வுருவெனக்கண்டகமகிழ்வுறுவோ

னுசிதீர்சாத்திரமாறனுட்டலையாப்
பேசுவேதாந்தப்பெருக்கமுற்றுணர்ந்தோன்

மையலார்மனத்துவாதிகளேங்க
வையகமெங்கணுமெய்யிசைநிறுத்தோன்

றன்னுயிரென்னமன்னுயிர்க்கெல்லா
மின்னருள்சுரக்கும்பன்னருங்கருணைய
னவநிதியடையவுமறப்புங்கவர்த
நவநிதிசமழ்ப்பநல்கருட்கொடையினோன்
குனியப்புலப்பகைநடிந்த
முனியப்பநாமமுத்துபெருந்தவனே.

இஃது,

காஞ்சீபுரம்-இராமசாமிநாயகர்

இயற்றியது.

ஸ்ரீசற்குருவேநம:

வாசுதேவமனனம்

என்று வழங்குகிற

விவேகசாரம்.

அவதாரிகை.

ஸ்ரீ அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபமாகிய ஸ்ரீவாசுதேவ யோகீந்திரர் தமது சுவானுபூதிப் பிரத்தியக்ஷத்தை உலகம் எளிதிலடைந்து ஆனந்தாதீதமாகும்பொருட்டுக்காருண்யத்தினாற் கிருபைகூர்ந்து வடமொழியில் நாற்பத்தைந்து சுலோகமாய்த் திருவாய்மலர்ந்தருளிய விவேகசார கிரந்தார்த்தத்தைத் தமிழில் மொழிபெயர்த்து நாற்பத்தைந்து பிரகரணமாகத் தொகுத்து அத்தியாரோப அபவாத யுத்திகளினாலன்றிப்பிரமசொரூபத்தை யறியக்கூடாதென்று சகலவேதாந்த சாஸ்திரங்களுஞ் சொல்லுகின்ற முறைமைப்படி முந்தி அத்தியாரோப நிருபகப் பிரகரணத்தைச் சொல்லுகின்றார்.

முதலாவது,

அத்தியாரோபநிருபகம்.

சங்கை. சுருதியாதிகளிற் சொல்லுகின்ற அத்தியாரோபயுத்தி யாவதேதென்னில்,

உத்தரம். ஒருவஸ்துவினிடத்தி லன்னியவஸ்துவாய்த் தோன்றுகிறது.

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் கிலிஞ்சலினிடத்தில் வெள்ளியும், பழுதையினிடத்திற் பாம்பும், கட்டையினிடத்திற் கள்ளனும், கானலினிடத்திற் றண்ணீரும், ஆகாயத்தினிடத்திற் கறுப்பும், எப்படி பாரோபித்ததோ, அப்படிபோல

தாஷ்டாந்தத்திலும் நிஷ்பிரபஞ்சசொரூபராகிய ஆத்மாவினிடத்தில் பிரபஞ்ச மாரோபித்ததே அத்தியாரோபம்.

ச-கை. அது எதினால் வந்ததென்னில்,

உ-ம். அதிஷ்டானாஞ் ஞானத்தினால் வந்தது. அதன்சொரூபத்தைப் பின்னால் விஸ்தாரமாகச் சொல்லுகிறோம் இப்போது சம்க்ஷேபமாகச் சொல்லுகிறோம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஒரு அஞ்ஞானமே பிரகிருதியென்றும், மாயையென்றும், அவித்தையென்றும், தமசென்றும் அனேகவிதமாய்ச் சொல்லப்படும்.

ச-கை. இதுகளிற் பிரகிருதியாவ தேதென்னில்,

உ-ம். குணங்களுடைய சாமானியா வஸ்தைகளுக்குப் பிரகிருதியென்றும், பிரளயாவஸ்தையென்றும், மகாசுழுத்தியவஸ்தையென்றுஞ் சொல்லப்படும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். வெள்ளைநூலும், சிவப்புநூலும், கறுப்புநூலும் ஒன்றாய் முறுக்கினா லெப்படி யிருக்குமோ, அப்படிப்போல இந்தப் பிரகிருதியில் அனேககோடி ஜீவராசிகள் தங்களுடைய கர்மமும், வாசனைகளுமாகிய பலத்துடனே கூடிப் பொருந்தி யிருப்பார்கள்.

ச-கை. இதற்குத் திருஷ்டாந்த மெப்படியென்னில்,

உ-ம். மெழுகுண்டையில் நவலோக ரவைக ளெப்படி இலீனப்பட்டிருக்குமோ, அப்படிப்போலப் பிரகிருதியில், ஜீவர்கள் இலீனமா யிருக்கிறார்கள்.

ச-கை. இது ஏகதேச திருஷ்டாந்தம் ஆயினும் சர்வத்திர பிராணிக ளனுபவம் எப்படியென்னில்,

உ-ம். சுழுத்தியில் ஜீவர்கள் வெகுகாலம் இலீனமா யிருக்கத் தெய்வகதியாய் ஒருசமயத்தில் அந்தச் சீவர்களுடைய கர்மபலம் பக்குவப்படும். அப்போது திரிகுணாத்மகமான பிரகிருதியாகிற சத்துவகுணம் விசிரிம்பிக்கும். அங்ஙனம் விசிரிம்பிக்கிற சத்துவகுணத்தை மாயை யென்று

சொல்லப்படும். இந்தமாயையிற் பிரதிவிம்பித்த சைதன்யமும், மாயையும், இதற்கதிஷ்டான சைதன்யமும் இம்மூன்றுங்கூடி ஈஸ்வரனென்றுசொல்லப்படும். இந்த ஈஸ்வரனுக்கே அந்தரியாமியென்றும், அவ்வியாகிருதனென்றும் இரண்டுபெயர். இவரே ஜெகசிருஷ்டிகர். இந்தச் சிருஷ்டிக்கிரமத்தில் உபாதான காரணம், நிமித்தகாரணமென்கிற இரண்டு காரணமும் வேண்டுமென்று லோகத்திற் கண்டிருக்கிறோம்.

ச-ங்கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். கடமுதலிய பாண்டங்களுற்பவிக்கிறதற்கு மண் உபாதானமும், குயவனும் அவனுயுதங்களும் நிமித்தமாகவும், புடவையுண்டாக்குகிறதற்கு நூல் உபாதானமும், நெய்யக்காரனும் நாடாமுதலிய வவனுயுதங்களு நிமித்தமாகவும் எந்தப்படி லோகத்தில் இரண்டு காரணத்தினுலும் கடபடாதிகள் உற்பத்தியாகின்றதோ, அந்தப்படியே, இரண்டு காரணத்தினுலும் சகத்துற்பத்தியென்று தோற்றுகின்றது.

ச-ங்கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். மாயை உபாதானமும். ஈஸ்வரன் நிமித்தமு மென்று சொல்லுவோமாகில், சுருதிகளுக்கு விரோதம் வரும். இதுமாத்திரமல்ல, உபாதானகாரணம் சற்பதார்த்தமாயிருக்கவேண்டும். அப்படி யிருக்குமானுல், மாயையும் ஆத்மாவு மிரண்டு பதார்த்தமாகிற படியினுல் அத்வைதத்திற்கு ஆனிவரும். ஆதலா லிப்போது சொன்னபட்சங் கூடாது. பட்சாந்தரமாய்ச் சொல்லவேண்டும், மாயை நிமித்தமென்றும், ஈஸ்வர னுபாதானமென்றுஞ் சொல்லுவோமாகில், முன்போல அத்வைத விரோதம் வரும். உலகத்திலும் சேதனனையே நிமித்த காரணமாகக் கண்டோம். அசேதனமான மாயை நிமித்த காரணமாகமாட்டாது. ஆனுல் அத்வைதஹானிவரும். இந்தத் தோஷங்க ளிருக்கிறபடியினுல் கேவலமான மாயைஉபாதானமுமாகாது. நிமித்தமுமாகாது. ஆதலால் உபாதானமும், நிமித்தமும் ஈஸ்வரனென்றே சொல்லவேண்டும்.

ச-ங்கை. உலகத்தி லிரண்டுகாரணமொன்றினிடத்திற்காணேமே, அஃதெப்படி சொல்லுகிறதென்னில்,

உ-ம். சொல்லலாம்; உலகத்தில் நூலையுண்டாக்குகிற சிலந்திப் பூச்சியினிடத்தி லிரண்டுகாரணமு மிருக்கின்றது. அந்தப்பூச்சியே சரீரப்பிரதானத்தினால் உபாதானமும், புத்திப்பிரதானத்தினால் நிமித்தமுமா யிருக்கக்கண்டோம். அப்படிப்போல ஈஸ்வரனும் சத்துவகுணப் பிரதானமான மாயையுடனேகூடி நிமித்தகாரணமானார்; தமோகுணப் பிரதானமான மாயையுடனேகூடி உபாதானகாரணமானார். இந்த உபயகாரணமான ஈஸ்வரனால் ஜெகத்துண்டாயிற்று.

ச-கை. எப்படியென்னில்,

உ-ம். ஈஸ்வரன் சத்துவகுணப் பிரதானமான மாயையுடனே கூடிக்கொண்டு தமோகுணப் பிரதானமான மாயையை வீக்ஷித்தபோது அந்தத் தமோகுணப் பிரதானமான மாயையோடு கூடின சைதன்யத்தினால் திரிகுணாத்மகமான ஆகாசமும், அந்த ஆகாசவிசிஷ்ட சைதன்யத்தினால் திரிகுணாத்மகமான வாயுவும், அந்த வாயுவின்விசிஷ்டசைதன்யத்தினால் திரிகுணாத்மகமான தேயுவும், அந்தத் தேஜோவிசிஷ்ட சைதன்யத்தினால் திரிகுணாத்மகமான ஜலமும், அந்த ஜலவிசிஷ்ட சைதன்யத்தினால் திரிகுணாத்மகமான பிருதிவியுமுண்டாயிற்று. இது அபஞ்சீகிருதபூதங்களென்றும், சூக்ஷ்மபூதங்களென்றும், தன்மாத்திரைகளென்றுஞ் சொல்லப்படும். இந்தப்பூதங்களினால் சமஷ்டி வியஷ்டியாத்மகமாகிற இலிங்க சரீரமுண்டாயிற்று. இந்தச் சமஷ்டி வியஷ்டி சொரூபத்தைமுன்னே நிரூபிக்கிறோம். இந்த இலிங்கசரீரமும் பதினேழு தத்துவங்களுடனே கூடியிருக்கும்.

ச-கை. அந்தப் பதினேழுதத்துவங்களாவதேதெனன்னில்,

உ-ம். ஞானேந்திரியம்-ரு, கன்மேந்திரியம்-ரு, வாயுக்கள்-ரு, மனம் புத்தி-உ, ஆக ௧௭.

ச-கை. இதுகளினுற்பத்தி யெப்படியென்னில்,

உ-ம். ஆகாசத்தினுடைய சாத்வீகாம்சத்தில் சுரோத்திரேந்திரியமும், வாயுவின் சாத்வீகாம்சத்தில் தொக்கிந்திரியமும், தேயுவின் சாத்வீகாம்சத்தில் சட்சு இந்திரியமும், அப்புவின் சாத்வீகாம்சத்தில் சிங்குவை யிந்திரியமும், பிருதிவியின் சாத்வீகாம்சத்தில் கிராணேந்திரியமுமாக

இந்தப்படி சாத்வீகாம்சத்தில் வியஷ்டியான ஞானேந்திரியங்கள்பிறந்தது. இந்தச் சாத்வீக சமஷ்டியினால் அந்தக்கரணங்கள் பிறந்தது. அது விருத்தி பேதத்தினால் மனம் புத்தி சித்தம் ஆங்காரமென்று நான்குவிதமாயிற்று. அந்தப் பதினேழுகணக்குக்கு மனமுஞ் சித்தமு மொன்றாயிற்று. புத்தியுமாங்காரமுமொன்றாயிற்று. ஆகாசத்தினுடைய ரஜோம்சத்தில் வாக்கும், வாயுவின் ரஜோம்சத்திற் பாணியும், தேயுவின் ரஜோம்சத்திற் பாதமும், அப்புவின் ரஜோம்சத்திற்குய்யமும், பிருதிவியின் ரஜோம்சத்திற் குதமும், இந்தப்படி ரஜோம்சத்தில் வியஷ்டியான கன்மேந்திரியங்கள் பிறந்தது. இந்த ராசத சமஷ்டியினால் பிராணவாய்வு பிறந்தது. அது விருத்தி பேதத்தினால் பிராண அபான உதான வியான சமான னென்கிற பஞ்சவாய்வுக்களாயிற்று. உபவாய்வுக்களும் இதுகளுக்குள்ளே அந்தர்ப் பூதமாகும். இந்தப் பதினேழுங் கூடிச் சமஷ்டி வியஷ்டியாகிற இலிங்கசரீரமென்று சொல்லப்படும். அந்தஈஸ்வரனே இந்த இலிங்க சரீரத்திலபிமானித்து இரணியகர்ப்பரானார். அவருக்கே சூத்திராத்மாவென்றும் பிராணனென்று மிரண்டுபெயர். இதுவே சூக்ஷ்மசரீர சிருஷ்டி.

ச-கை. இனி ஸ்தூலசரீர சிருஷ்டியாவ தேதென்னில்,.

உ-ம். அந்த மாயாசகித ஈஸ்வர வீக்ஷணியத்தினால்தமோம்சப் பிரதானமான அபஞ்சீகிருத பஞ்சபூதங்களிலாகாயமுதலிய ஸ்தூல பூதங்களுமுண்டாயிற்று. அவைகளவ்வொன்றும் இரண்டுபாகமாயிற்று, அதில் ஒருபாகநிற்கமற்றை ஒருபாகமும்ஒவ்வொன்று நன்னான்காகி அந்தந்தப்பாகங்களின் நிஜாம்சத்தைவிட்டு இதர பூதங்களுடனே கூடுகிறதுபஞ்சீகிருதஸ்தூலபூதங்களென்று சொல்லப்படும். இந்த ஸ்தூல பூதங்களினிடத்தில் ஈஸ்வரவீக்ஷண்யத்தினால் ஸ்தூலப்பிரபஞ்ச முண்டாயிற்று.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். பஞ்சீகிருத பஞ்சமகாஸ்தூல பூதங்களினால் அண்டமும், அந்த அண்டத்தில் கீழேழுலகமும், மேலேழுலகமும், அந்தந்த லோகங்களுக் குசிதமான நால்வகை யோனிகளும்பிறந்தன. இத்தனையுங்கூடிஸ்தூலப்பிரபஞ்சமென்

னப்படும். இதனிடத் தபிமானித்த ஈஸ்வரனுக்குவிராட்டென்றுபெயர். அவருக்கே வைஸ்வாநரன், வைராஜசனென் றிரண்டுபெயர். இதுவே சமஷ்டி.

ச-ளரு. இனி வியஷ்டிசொரூபமாவ தெப்படியென்னில்,

உ-ம். வியஷ்டியானது சமஷ்டியி லந்தர்ப்பூதமானாலும் அதையுஞ் சொல்லவேண்டும்; எப்படியென்றால் சாக்கிரவஸ்தையில் தூலசரீரத்தி லபிமானியாயிருக்கிற சீவனுக்கு விசுவனென்றுபெயர். அவனுக்கே வியவகாரிகன், சிதாபாசனென்றிரண்டுபெயர். சொப்பனவஸ்தையில்சூக்ஷ்ம சரீரத்தி லபிமானியாயிருக்கிற சீவனுக்குத் தைசதனென்றுபெயர். அவனுக்கேபிராதிபாதிகன், சொப்பனகற்பிதனென்றிரண்டுபெயர்சுழுத்தியவஸ்தையில்காரணசரீரத்தி லபிமானியாயிருக்கிற சீவனுக்குப் பிராக்ஞனென்றுபெயர். அவனுக்கேபாரமார்த்திகன், அவிச்சின்னனென்றிரண்டுபெயர். இதுவே வியஷ்டி. இந்தப் பிரபஞ்சத்தின் அவாந்திரசிருஷ்டி ஸ்திதிலயங்களுக்காகவே அவ்வீசுவரன் திரிமூர்த்தி சொரூபமாகினார்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். சத்துவகுணத்துடன்கூடி ரட்சிக்கிறதற்கு விஷ்ணுவாகவும், ராசதகுணத்துடன்கூடி சிருஷ்டிக்கிறதற்குப் பிரமாவாகவும், தமோகுணத்துடன்கூடி சங்கரிக்கிறதற்கு ருத்திரனாகவுமிருக்கிறார். இவர்களில் பிரம்மாவிராட்டிலந்தர்ப்பூதன்; விஷ்ணு இரணியகர்ப்பத்திலந்தர்ப்பூதன்; உருத்திரன் பிரபஞ்சகாரணமான அவ்வியாகிருதத்திலந்தர்ப்பூதன்; இதுவே யத்தியாரோபயுத்தி என்று சொல்லப்படும். இந்த அத்தியா ரோபத்திற்கு மூலமான அஞ்ஞானத்தை ஸ்ரீசற்குருகடாட்சத்தினால் சங்கையற எவனறிகிறானோ, அவனே ஜீவன்முத்தனென்று சுருதிஸ்மிருதியாதிகளிற் சொல்லுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

அத்தியாரோபநிருபகம்

முற்றிற்று.

இரண்டாவது,

அபவாதநிருபகம்.

சங்கை. சுருதியாதிகளிற் சொல்லுகிற அபவாதயுக்தியாவ தே தென்னில்,

உத்தரம். காரணத்துக்கன்னியமாய்க்காரியமில்லையென்றறிவது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். மண்ணினு லுண்டாக்கப்பட்ட கடமுதலிய பாண்டங் கள் மண்ணுக் கன்னியமா யெப்படி காணவில்லையோ, நூலினாலுண்டாக்கப்பட்ட புடவைகள் நூலுக்கன்னிய மா யெப்படி காணவில்லையோ, சொர்நத்தா லுண்டாக் கப்பட்ட ஆபரணங்கள் சொர்நத்திற் கன்னியமா யெப் படிகாணவில்லையோ, இரும்பினாலுண்டாக்கப்பட்டஆயு தங்களிரும்புக் கன்னியமா யெப்படி காணவில்லையோ அப்படிபோல, ஆத்மாவினா லுண்டாக்கப்பட்ட பிரபஞ் சங்கள் ஆத்மாவையன்றி வேறில்லையென் றறிவது.

ச-கை. அஃதறிகிறவித மெப்படியென்னில்,

உ-ம். பஞ்சீகிருத பஞ்சமகா ஸ்தூல பூதங்களினாற் பிறக்கப் பட்ட அண்டமும், அவ்வண்டத்தினு ளுண்டான பதி னாலு லோகமும், அந்தந்த லோகங்களுக் குசிதமான நால்வகை யோனிகளும், அவைகட்குக் காரணமாகிய பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களன்றி வேறில்லை யென் றும், அந்தப்பூதங்களும் சமஷ்டி வியஷ்டி யாத்மகமான இலிங்கசரீரமும், அவைகட்குக் காரணமாகிய அபஞ்சீ கிருத பஞ்சமகா பூதங்களன்றி வேறில்லையென்றும், அந் தப் பூதங்களும் அதன்காரணத்தையன்றி வேறில்லை யென்றும் அறியவேண்டியது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். அப்புவினா லுண்டாக்கப்பட்ட பிருதிவி அப்புவன்றி யெப்படி வேறில்லையோ, அக்கினியினா லுண்டாக்கப் பட்ட ஜலம் அக்கினியன்றி யெப்படி வேறில்லையோ, வாயுவினா லுண்டாக்கப்பட்ட அக்கினி வாயுவையன்றி

யெப்படி வேறில்லையோ, ஆகாசத்தினு லுண்டாக்கப்பட்ட வாயு ஆகாசமின்றி யெப்படி வேறில்லையோ, மாயையினாலுண்டாக்கப்பட்ட ஆகாசம் மாயையன்றி எப்படி வேறில்லையோ அப்படியே யாம்.

ச-கை. அந்த மாயாசொரூப மெப்படியென்னில்,

உ-ம். அது திரிகாலத்திலு மில்லாதபடியினால் சத்தென்றுஞ் சொல்லப்படாது; அகம் அஞ்ஞானியென் றனுபவமிருக்கிறபடியினால் அசத்தென்றுஞ்சொல்லப்படாது; விருத்தமானபடியினால் சதசத்தென்றுஞ் சொல்லப்படாது.

ச-கை. மற்றென்னவென்னில்,

உ-ம். அனிர்வசனீயமென்று சொல்லப்படும்.

ச-கை. அனிர்வசனீயமாவதேனென்னில்,

உ-ம். மித்தையாசொரூபம்.

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். சசவிஷாண வந்தியாபுத்-ககனாரவிந்த சுத்திகா ரசிதம் போலிருக்கிறபடியினால் சின்மாத்திரத்துக் கன்னியமாயொருவஸ்துவு மில்லையென்றறியவேண்டும். இவ்வகைப்பட்ட சின்மாத்திர சொரூபமே தானென்றுகொண்டு ஸ்ரீ சற்குருவினால் பிரதானாதி தோற்றமும், அஞ்ஞானமும் சங்கையறக்கேட்டு, அத்தியாரோப நீங்கிஅன்னிய பதார்த்த மில்லாமலபவாதமாய்த் தான் யாவுமென்று சாட்சாத்கரித்து எவனறிகிறானோ, அவனே சீவன்முத்தனென்று சுருதி ஸ்மிருதியாதிகளிற் சொல்லுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

அபவாத நிருபகம்

முற்றிற்று.

மூன்றாவது.

சாதனசதுஷ்டயநிருபகம்.

சங்கை. சுருதியாதிகளிற் சாதன சதுஷ்டயங்களை விசாரித்தறிய வேண்டுமென்பதனால் இந்த வேதாந்த விசாரத்திற் கதிகாரியாரெனில்,

உத்தரம். சாதனசதுஷ்டய முள்ளவனே யதிகாரி.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். பிரகஸ்பதி சவனமென்கிற யாகத்தில் பிராமண னெப்படியதிகாரியோ, க்ஷத்திரியர் வைசியர் எப்படி யதிகாரிகளல்லவோ, ராஜசூயயாகத்தில் க்ஷத்திரிய னெப்படி யதிகாரியோ, பிராமணர் வைசிய ரெப்படி யதிகாரிக ளல்லவோ, ஸ்தோமமென்கிற யாகத்தில் வைசியரெப்படி யதிகாரிகளோ, பிரம்மக்ஷத்திரிய ரெப்படி யதிகாரிக ளல்லவோ, அப்படிப்போல வேதாந்தவிசாரத்திற்குச் சாதன சதுஷ்டயசம்பன்னத்துவமுண்டானவனேயதிகாரியாம்.

ச-கை. சாதனசதுஷ்டயமாவ தேதெனென்னில்,

உ-ம். நித்தியாநித்தியவஸ்து விவேகம், இகவுத்திரார்த்த பலபோகவிராகம், சமாதிஷட்கசம்பத்தி, முமுக்ஷுத்துவம்.

ச-கை. இதில் நித்தியாநித்தியவஸ்துவிவேகமாவதேதெனென்னில்,

உ-ம். பிரமமே நித்தியமென்றும், பாஞ்சபூத பௌதிக முதலிய ஜகத்தெல்லாம் அநித்தியமென்றும் சுருதிஸ்மிருதிகளால் குருமுகமாய் விசாரித்தறிகின்றது.

ச-கை. இகவுத்திரார்த்த பலபோக விராகமாவ தேதெனென்னில்,

உ-ம். இந்தலோகத்திற் கன்மத்தினாற் ஜனித்து வரப்பட்ட அனித்தியமான சற்சந்தன வனிதாதி விஷயபோகத்தினிடத்திலும், பரலோகத்திற் கன்மஜன்னியத்தினால்வரப்பட்ட அனித்தியமான ரம்பாசம்போக அமிர்தாதிகளிடத்திலும் வாந்திசெய்த அசனமல மூத்திராதிகள் போல ஆசையில்லாமல் இந்தஜகத்திற்குக் காரணகர்த்தாவாகிய சுவாமியினிடத்திற் பிரீதியாயிருப்பது.

ச-கை. சமாதி ஷட்க சம்பத்தியாவ

உ-ம். சமை தமை உபரதி திதிக்ஷை சமாதி சிரத்தை என்றாறு வகை.

ச-கை. இதிற் சமையாவ தேதென்னில்,

உ-ம். பாகியவிஷயத்திற் செல்லவொட்டாமல் மனதைத் திருப்பிச் சிரவணத்தில் வைப்பது.

ச-கை. தமையாவ தேனென்னில்,

உ-ம். ஞானேந்திரிய கன்மேந்திரியங்களை விஷயத்திற் செல்லவொட்டாமற் றிருப்பிச் சிரவணத்தில் நிறுத்துவது.

ச-கை. உபரதியாவ தேதென்னில்,

உ-ம். விகிதமான கன்மங்களைப் புத்திபூர்வகமாய் விடுகிறதென்றும், அதைச் சன்னியாசமென்றுஞ் சொல்லுவார்கள். அப்படியல்ல. விகிதமான கன்மங்களில் கர்த்தத்துவாபிமான பலாபேஷையின்றிச் சகல பாவகன்மங்களையும் விட்டு, சகலபுண்ணியகன்மங்களைச்செய்து பகவத்பிரீதியாக்குகிறது.

ச-கை. திதிக்ஷையாவ தேதென்னில்,

உ-ம். சீதோஷ்ணங்களைப் பொறுப்பது அப்படியாகில் பனியிலிருந்து குளிரையும், வெய்யிலிலிருந்து சுடுகையையும், பொறுக்கிறதல்ல. பிராரத்தவசத்தினா லெந்தவேளைக்கு எதுவருமோ, அதையனுபவித்துத் தீரவேண்டுமென்று கருதி, சகலமும் போகிறதைப்பற்றி வாட்டமும், சகலமும் வருகிறதைப்பற்றி மகிழ்ச்சியுமில்லாமல் சமபுத்தியுடனே யிருப்பது.

ச-கை. சமாதியாவ தேதென்னில்

உ-ம். திருப்பினமனமு மிந்திரியங்களும் வாசனை வசத்தாய் வாப்பட்ட விஷயத்தினிடத்திற்போம். அதுகளைச் சிரவணத்திற்கு வெதிரித்தமான விஷயங்களிற் செல்லவொட்டாமற் றிருப்பிச் சிரவணத்தில் வைப்பது.

ச-கை. சிரத்தையாவ தேதென்னில்,

உ-ம். பூர்வம் யாதொன்றினிடத்திலிருந்த விசுவாசமெல்லாம் குருவேதாந்தவாக்கியத்தினிடத்தில் வைப்பது.

ச-கை. இனி முமுக்ஷுத்துவமாவ தேதென்னில்,

உ-ம். மோக்ஷத்தை யறிந்து அடையவேண்டுமென்கிற அதிதீவிரமாகிய மனதுடனே கூடியிருக்கிறது. அதற்கே மோக்ஷவிச்சையென்று பெயர்.

ச-கை. சகல பிராணிகளும் மோக்ஷம்வேண்டுமென்று சொல்லு கிறார்களே; அது மோக்ஷவிச்சை யல்லவாவென்னில்,

உ-ம். அல்ல.

ச-கை. மற்றெப்படி யென்னில்,

உ-ம். கிரகம் பற்றிக்கொண் டெரிகிறபோது அவ்வீட்டுக்கு ளகப்பட்டபுருஷன் தனதுபுத்திரமித்திர களத்திராதிக ளென்னமாய்ப் போனார்களோவென்ற விசாரத்துடன் கூடி, அக்கினியில் தபிக்கப்பட்டவனாய், அந்தப் புத்திர மித்திர களத்திராதிகளை விட்டுவிட்டு குளிர்ந்தஜலத்திற் பிரவேசித்ததுபோல, சம்சார தாபத்திரியமென்கிற அக் கினியில் தபிக்கப்பட்ட புருஷன் இந்தச் சம்சாரதாபத் தைப் போக்குகின்ற குருநாதன் எங்கேயிருக்கிறாரோ, இதற்கு என்னசாதனம் வேண்டுமோவென்று தாபங் கொண்டு தேடுகின்ற தேட்டரவாகிய சித்தவிருத்திக்கே மோக்ஷவிச்சையென்று பெயர். இந்நான்கு சாதனமும் ஆரிடத்திலுண்டோ, அவர்களே யதிகாரி. சிரவணத் திற்கு முன்பே சாதனசதுஷ்டயஞ் சம்பாதித்துக் கொண்டு சிரவணத்திற்கு ஆரம்பிக்கவேண்டும். அப்படி யன்றி ஞானங் கிடையாது. சற்குருவும் அனதிகாரி களுக்கு உபதேசிக்கமாட்டார்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். சூத்திரனுக்கு யாகம்பண்ணிவைத்தால் சொர்க்காதிபோ கங்கள் அவனுக்கெப்படிச் சித்தியாதோ, சூத்திரனுக்கு உபநயனம் பண்ணிவைத்தால் அவனுக்குப் பிராமணத் துவமெப்படி சித்தியாதோ, அப்படிபோல சாதனசதுஷ் டய மில்லாதவனுக்குச் சிரவணம்பண்ணிவைத்தா லவ னுக்கு ஞானபலஞ் சித்தியாது.

ச-கை. ஆனாலிந்தச் சிரவணம் வீணாய்ப்போமோ வென்னில்,

உ-ம். போகாது; அதினாலொரு அதிர்ஷ்டமுண்டாம். இந்தச் சாதனசதுஷ்டயஞ் சிரவணத்திற்கு முன்னில்லா திருந் தாலும் சிரவணகாலத்திலானாலுங் குருமுகமாய் அதை விசாரித்தறியவேண்டியது சித்தம்.

ச-கை. அதிகாரிகளுக்கு இந்நான்கு சாதனமும் வேண்டுமோ? ஒரு நித்தியாநித்தியவஸ்து விவேகமாத்திரம் போதாதோ

உ-ம். போதாது; லோகத்தில் சாஸ்திரிகளுக்கு நித்தியாநித்திய வஸ்து விவேகமுண்டாயிருந்தும் அவர்கள் விஷயத்தினிடத்தில் ஆசத்தியுண்டாய், காமியகன்மங்களைச் செய்கிறபடியினு லதிகாரிகளல்ல; ஆகையா லிரண்டாஞ்சாதனமும்வேண்டும்.

ச-கை. இந்த விரண்டு சாதனந்தான் போதாதோ வென்னில்,

உ-ம். போதாது; சிலர் நித்தியாநித்திய வஸ்துவிவேகமும், இகவுத்திரார்த்தபலபோகவிராகமுமுண்டாயிருந்தும்சமாதிஷட்க சம்பத்தியில்லாமையினுல் கோபாதிகளில் தபிக்கப்படுகிறபடியினுல் அதிகாரிகளல்ல. ஆகையால் மூன்றுஞ் சாதனமும் வேண்டும்.

ச-கை. இந்த மூன்றுசாதனந்தான் போதாதோ வென்னில்,

உ-ம். போதாது; சிலர் இம்மூன்றுசாதனங்க ளுண்டாயிருந்தும்கிருஷ்ணுசலத்தைக்கக்கத்திலிடுக்கிக்கொண்டு சடைமுடியுடையவர்களாய் யோகீஸ்வரரென்னும் பெயர்தரித்து, சம்சாரபந்தங்களைத்துறந்து விரத்தராய் உபசாந்தியுடையவர்களாய் ஒருவர்கையில் ஒருவஸ்துவும் வாங்காதவர்களா யிருக்கிறுர்கள். அவர்களும் சிரவணத்தினிடத்திற் சேராதபடியினு லதிகாரிகளல்ல. ஆகையால் நான்காஞ் சாதனமும்வேண்டும். இந்நான்குசாதனமு முடையவர்களே வேதாந்த சிரவணத்திற் கதிகாரிகள். இந்தச் சாதனசதுஷ்டய சம்பத்துக்குக் காயகவாசக இந்திரிய வியாபாரமின்றி மனேவியாபார ரூபமாத்திர மானபடியினுல் விஷயத்தினிடத்தில் தோஷதிருஷ்டி யுடையவர்கள் சுவயத்திற் சம்பாதித்துக் கொள்ளலாமென் றுசுருதிஸ்மிருதியாதிகளிற் சொல்லுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

சாதனசதுஷ்டயநிருபகம்

முற்றிற்று.

நான்காவது,

உபயபதார்த்தநிருபகம்.

சங்கை. சுருதியாதிகளிற் பிரபஞ்சமெத்தனை பதார்த்தமாயிருக்கிறதென்று விசாரிக்க வேண்டுமென்பதால் இந்தப் பிரபஞ்ச மெத்தனை பதார்த்தமா யிருக்கிறதென்னில்,

உத்தரம். இரண்டுபதார்த்தமா யிருக்கின்றது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஆத்மாவென்றும், அனாத்மாவென்றுமாம்.

ச-கை. பிரபஞ்சத்திற் கதீதராயிருக்கப்பட்ட ஆத்மாவைப் பிரபஞ்சத்திற்குள்ளாய்ச் சொல்லலாமோவென்னில்,

உ-ம். சொல்லலாம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். பிரபஞ்சஞ் சேதனாசேதனமாய்த் தோன்றுகையினால் பிரபஞ்சாதீதராகிய வாத்மாவைப் பிரபஞ்சத்திற் குள்ளாய்ச் சொல்லலாம்.

ச-கை. பிரபஞ்சஞ் சேதனாசேதனமாய்த் தோற்றப்பட்டாலும் பிரபஞ்சா தீதராகிய வாத்மாவைப் பிரபஞ்சத்திற் குள்ளாய்ச்சொல்லவேண்டுமோ வென்னில்,

உ-ம். சொல்லவேண்டும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஆத்மாவென்றாற் சேதனனாச்சுதே. அந்தச் சேதனனாகியவாத்மா பிரபஞ்சத்துடன் கூடாவிட்டால், பிரபஞ்சம் சேதனமென்றும் அசேதனமென்றும் தோற்றாது; தோற்றுகிறபடியினால் பிரபஞ்சாதீதராகிய ஆத்மாவைப் பிரபஞ்சந்தற்பாதியாய்ச் சொல்லலாம்.

ச-கை. அப்படியானால் பிரபஞ்சத்திற் சேதனமேது? அசேதனமேதென்னில்,

உ-ம். நடக்கிறது, ஓடுகிறது, பறக்கிறது, குதிக்கிறது, ஊருகிறது இதுமுதலானதுகள் சேதனம்; பிருதிவி, அப்பு, பர்வதம் விருக்ஷங்க ளிதுமுதலானதுகள் அசேதனம்.

ச-கை. பிரபஞ்சம் இப்படி யனேகபதார்த்தமாய்த் தோற்றிக்கொண்டிருக்க இரண்டுபதார்த்தமென்கிற தெப்படியென்னில்,

உ-ம். பிரபஞ்சத்தி லாத்மாவென்று மனாத்மா வென்றுமிரண்டு பதார்த்தம், இவற்றில் ஒரு அனாத்மாவே காரிய ரூபமாய்ப் பரிணமித்து அனேக பதார்த்தங்களாச்சுது. இதுகளோடுங்கூடி யாத்மாவும் அனேகமாகவே தோற்றப்

ச-கை. அனாத்மாக்களோடேகூடி தோற்றப்படுகிற ஆத்மா எத்தனைவிதமாய்த் தோற்றப்படுகிற தென்னில்,

உ-ம். சீவனென்றும், ஈஸ்வரனென்றும் இரண்டு விதமாய்த் தோற்றப்படுகின்றது.

ச-கை. இந்தச் சீவேஸ்வரா ளெத்தனைவிதமாய்த் தோற்றப்படுகிறார்களென்னில்,

உ-ம். சீவனு மனேகவிதமாய்த் தோற்றப்படுகின்றது ; ஈஸ்வரனும் அனேகவிதமாய்த் தோற்றப்படுகிறார்.

ச-கை. சீவர்க ளனேகவிதமாய்த் தோற்றப்படும்; ஒருவராயிருக்கிற ஈஸ்வர னெப்படி யனேகவிதமாய்த் தோற்றுகிறாரென்னில்,

உ-ம். புண்ணிய க்ஷேத்திரங்களிலும், பட்டணங்களிலும், கிராமங்களிலும், வீட்டு வீட்டுக்கும் ஈஸ்வர னனேகவிதமாய்த் தோற்றப்படுகிறார்.

ச-கை. அங்கங்கே தோற்றப்படுகிறதெல்லாம் மண் சிலை தாறு தாம்பிராதி பிரதமைகளல்லவோ? அதுகளை ஈஸ்வரனென் றெப்படி சொல்லுகிறதென்னில்,

உ-ம். அந்த மண் சிலை தாறு தாம்பிராதிப் பிரதமைகளிடத்தில் எல்லாருக்கும் ஈஸ்வரபுத்தியேயன்றி, பிரதமைபுத்தி சர்வாத்மனாயில்லை. அல்லாமலும் அதுகளில் பிரதமைபுத்திதோற்றி யீஸ்வரபுத்தி யில்லாவிட்டால் பூசை அபிஷேக நைவேத்திய நிமித்தம் லட்சம் லட்சமாய்ச் செலவு செய்யார்கள். இப்படிச் செலவுசெய்கிறபடியினால் பிரதமைகளிடத்திலு மீஸ்வரபுத்திவரலாம்.

ச-கை. அனாக் மகசொரூபமான பிரதமைகளிடத்தி லீஸ்வரபுத்தி வரலாமோ வென்னில்,

உ-ம். வரலாம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். மிருத்திய நிக்ஷேதமான தேகேந்திரியாதி சங்காதமே நானென்று தேகேந்திரிய சங்கத்தில் ஆத்மபுத்தி வந்தவனுக்கு அந்தப்பிரதமைகளிடத்திலு மீஸ்வரபுத்தி வரலாம்.

ச-கை. இந்தத்தேகேந்திரியம் நிஷேதபதார்த்தமோ வென்னில்,

உ-ம். ஆம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். சுக்கில சுரோணிதத்தினுலுண்டானபடியினுலும், மாமிச மல மூத்திரங்களினல் நிருமிக்கப்பட்டிருக்கிறபடியினுலும், சற்சந்தனங்களினல் அந்தச் சரீரத்தைச் சுகந்தப் படுத்துவோமாகில் அந்தச் சரீர பரிசத்தினலந்தச் சற்சந்தனமும் துர்க்கந்தமாய் நிஷேதமாய்ப் போகிறபடியினுலும், சரீர நஷ்டமாய்ப்போனபோது அழுகி நாறிக் கறைந்து போகையினுலும், இருக்கிறபேர்களுக்குத் திரவிய விரயமும், துக்கக் கிலேசமுங் கொடுக்கிறபடியினுலும், இந்தச் சரீரம் நிஷேத பதார்த்த மென்பதற்குச் சந்தேகமில்லை. இவ்வகைப்பட்ட தோஷங்கள் அந்தப் பிரதமைகளிடத்திலில்லை. அதுகளிடத்திற் சமர்ப்பித்த சற்சந்தனுதிகள் யாருக்கு முபயோகமாகிறபடியினுலும், அதுகளுக்கு ஒரு ஹானி வந்தபோதும் மற்றென்றுக் குபயோகமாகிறபடியினுலும் அந்தப்பிரதமைகளிடத்தி லீஸ்வரபுத்தி வருகிறது உசிதமேயாம்.

ச-கை. ஆனலொரு அனுத்ம பதார்த்தமே காரியரூபமாய்ப் பரிணமித்து அனேகம் பதார்த்தமாய்த் தோற்றப்படும். ஆத்மாவு மற்றொரு பதார்த்தத்தோடுகூடி யனேகமாய்த் தோற்றப்படு மென்பதற்குத் திருஷ்டாந்த முண்டோ வென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். பிருதிவி யொன்றே காரியரூபமாய்ப் பரிணமித்துப் பர்வதங்கள் விருக்ஷங்கள் வனங்கள் கோபுரங்கள் பிரகாரங்கள் மண்டபங்கள் சுவர்கள் முதலான கடசாரரூபமாய்த் தோற்றப்படுகின்றது ஆகாசமும் அதுகளிற்கூடி கடாகாசமென்றும், மடாகாசமென்றும், பர்வதாகாசமென்றும், விருக்ஷாகாசமென்றும், வனகாசமென்றும், கோபுராகாசமென்றும், பிரகாராகாசமென்றும், சுவராகாசமென்றும் இப்படி நானுவிதாகாசங்களா யெப்படி தோற்றப்படுகின்றதோ, அப்படிப்போல ஆத்மாவும் காரிய ரூபமாய்ப் பரிணமிக்கப்பட்ட அனுத்ம பதார்த்தத்துடன்கூடித் தேவதத்தனென்றும், எக்கியதத்தனென்றும், ராமனென்றும், கிருஷ்ணனென்றும், கோபாலனென்றும், கோவிந்தனென்றும் அனேகவிதமாய்த்தோ

ற்றப்படுகிறார். இந்தப் பிருதிவி ஆகாச திருஷ்டாந்தம் அவிச்சின்ன பக்ஷத்திற்குத் திருஷ்டாந்தமென்று சொல்லப்படும். இனிப் பிரதிபிம்ப பக்ஷ திருஷ்டாந்தமுஞ் சொல்லுகின்றோம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஒருஜலமே உபாதிவசத்தினால் சமுத்திரமென்றும், நதியென்றும், ஏரியென்றும், தடாகமென்றும், கால்வாயென்றும், நடவாவியென்றும், பாண்டஜலமென்றுஞ் சொல்லப்படும். அந்தச் சலத்திலொரு சூரியனே பிரதிபிம்பித்து அனேகவிதமா யெப்படி தோற்றப்படுகிறாரோ, அப்படிபோல ஆத்மாவும் அனாத்மகாரியமா யிருக்கப்பட்ட அந்தக்கரணங்களிற் பிரதிபிம்பித்து அனேகரூபமாய்த் தோற்றுகிறார். அப்படி தோற்றப்பட்டாலும் அனாத்மகாரியமான வந்தக்கரணதர்மங்கள் ஆத்மாவைக் காலத்திரயத்திலும் ஸ்பரிசிக்கவில்லை.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஜலத்துக் கதிதசீதளமும், ஜலவிகாரவலையும், அந்தச் சலத்தில் பிரதிபிம்பித்த சூரியனை யெப்படி ஸ்பரிசிக்கவில்லையோ, அப்படிபோல அந்தக்கரண விகாரங்களும் அந்தக்கரணத்திற் பிரதிபிம்பித்த சிதாபாசனையே ஸ்பரிசிக்கவில்லை, அவ்வந்தக் கரணத்திற் கதிஷ்டானமான பிரத்தியோகாத்மாவை ஸ்பரிசிக்காதென்பதற்குச் சந்தேகமேயில்லை. இதுமாத்திரமல்ல; பிருதிவிவிகாரங்களும் பிருதிவியின் காரியவிகாரங்களும் பிருதிவிக்காதார பூதமான ஆகாசத்தை எப்படி ஸ்பரிசிக்கவில்லையோ, அப்படிப்போல அனாத்மாவான அஞ்ஞானமும் அஞ்ஞானகாரியமான தேகேந்திரியாதிப் பிரபஞ்ச தர்மமும் அஞ்ஞானத்திற்கும் அஞ்ஞானகாரியத்திற்கு மாதாரபூதமான பிரத்தியோகாத்மாவை ஸ்பரிசிக்கவில்லை. இப்படி ஆத்மாநாத்ம விவேகம்பண்ணி ஆத்ம சொரூபமே நானென்று ஸ்ரீசற்குரு கடாட்சத்தினால் அனாத்ம வஞ்ஞானவகங்காரத்தை வேறுபடுத்தி, வேறுபடுத்தின வனாத்ம வஞ்ஞானவகங்காரமும் காரணமன்றி காரியமில்லாததுபோலச் சச்சிதானந்தமன்றி வேறில்லையென்று அனுபவ ரூபமாய்ச் சங்கையற வெவ னறிகிறானோ, அவனே சீவன் முக்தனென்று சுருதிஸ்மிருதியாதிகளிற் சொல்லுகின்றது. இதிற் சமசயமில்லை சித்தம்.

உபயபதார்த்தநிருபகம்

முற்றிற்று.

ஐந்தாவது,

துக்காரோகநிருபகம்.

ச-ங்கை. சுருதியாதிகளில் துக்கசொருபத்தை விசாரித்தறிய வேண்டுமென்பதனால் பிராணிகளுக்குத் துக்கம் ஆகுந்துகமோ சுபாவீகமோ வென்னில்,

உ-ம். ஆகுந்துகமென்றே சொல்லவேண்டும்.

ச-ங்கை. சுபாவீகமென்று சொல்லக்கூடாதோ வென்னில்,

உ-ம். சொல்லக்கூடாது.

ச-ங்கை. ஏன் சொல்லக்கூடாதென்னில்,

உ-ம். சுபாவீகமாகில் துக்கநிவிர்த்திக் கெவர்களு மெத்தனம் பண்ணாமலிருக்கவேண்டும். எத்தனம் பண்ணுகிறபடியினால் சுபாவீகமென்பது கூடாது.

ச-ங்கை. சுபாவீகமேயாகட்டும்; துக்கநிவர்த்திக் கெத்தனமும் பண்ணட்டுமே யென்னில்

உ-ம். சுபாவீகமென்றால் சொரூபமாகையினால் சொருபத்துக் கானிவரும்.

ச-ங்கை. வந்தால் வரட்டுமேயென்னில்,

உ-ம். துக்கநிவிர்த்தியானவர்க ளொருவரு மில்லாமற் போக வேண்டும். இருக்கிறபடியால் துக்கஞ் சுபாவீகமென்பது கூடாது.

ச-ங்கை. துக்கம் சுபாவீகமானாற் போகாதோவென்னில்

உ-ம். போகாது. திருஷ்டாந்தத்தில் வேப்பிலைக்குக்கசப்புசுபாவம். கசப்புபோய் வேப்பிலையுண்டென்பது கூடாது. ஏனெனில் கசப்பே வடிவமா யிருக்கையினால் கூடாது. அதுபோல ஆத்மாவி னிடத்திலுந் துக்கஞ் சுபாவீகமானாற்போகாது. ஆதலால் ஆத்மாவுக்குத் துக்கம்சுபாவீக மென்பது கூடாது ஆகுந்துகமென்றேசொல்லவேண்டும்.

ச-ங்கை. சுபாவீகமேயாகட்டுந் துக்க நிவர்த்தியும்வரட்டுமேஎனில்

உ-ம். அப்படி கூடாது.

ச-ங்கை. அக்கினிக்கு உஷ்ணம் சுபாவம். சுபாவமான உஷ்ணத் திற்குமணிமந்திரங்களால் நிவிர்த்தியும், சயித்தியத்துக் கபிவிர்த்தியுங் கண்டோம்; பின்னும் ஜலத்திற்கு சயித்

தியம் சுபாவம். சுபாவமான சயித்தியத்திற்கு அக்கினி கூட்டரவினுல் நிவிர்த்தியும், ஊஷ்ணத்திற்கு அபிவிர்த்தியுங் கண்டோம். அதுபோல ஆத்மாவுக்குத் துக்கஞ்சுபாவமானுலும் உக்ருஷ்டகர்மவுபாசனைகளால் துக்கநிவிர்த்தியும், சுகத்திற்கபிவிர்த்தியும் வருமென்று சொல்லப்படாதோ வென்னில்,

உ-ம். துக்கத்திற்குத் தற்காலம் உபசமனமேயல்லாமல் அத்தியந்தநிவிர்த்திகூடாது. அக்கினியாதிகளுக்கு மணிமந்திரங்களினுல் தற்காலம் உபசமனமாயிருந்து காலாந்தரத்தில் ஊஷ்ணுதிகளுக் கெப்படி யபிவிர்த்தியுண்டாகின்றதோ, அப்படிபோல ஆத்மாவுக்கு உக்ருஷ்ட கர்மவுபாசனைகளினுல் பலரூபமான சுகத்திற்குநாசம்வரும்போது திரும்பவும் துக்கத்துக் கபிவிர்த்தியுண்டாம். அத்தியந்த நிவிர்த்தியேயில்லை, இதுமாத்திரமல்ல; மோக்ஷத்திற்கு உற்பத்தியும், அனித்தியத்துவமும் வரும்.

ச-கை. வந்தால் வரட்டுமேயெனில்,

உ-ம். அந்த அர்த்த மெவர்களுக்குஞ் சம்மதமாகாது. ஆத்மானந்தசொரூபனென்றுசொல்லப்பட்டசுருதிஸ்மிருதி இதிகாச புராண ஆகமாதிகளுக்கும்விருத்தம்வரும். இது மாத்திரமல்ல; சுழுத்தி யவஸ்தையிலும் சகலபிராணிகளுக்கும் நான் துக்கத்தை யடைந்திருந்தேனென் றனுபவமில்லாமையினுலும், சுகமாயிருந்தேனென் றனுபவமிருக்கிறபடியினுலும் ஆத்மாவுக்குத் துக்கஞ் சுபாவிகமென் றங்கீகரிக்கக்கூடாது, அப்படியங்கீகரிப்போமாகில் இந்தசுவானுபவத்திற்கு விருத்தம்வரும். ஆதலால் ஆத்மாவுக்குத் துக்கஞ் சுபாவிகமென்பது கூடாது.

ச-கை. பின்னை யென்னவென்னில்,

உ-ம். துக்கம் ஆகுந்துகமென்றே சொல்லவேண்டும்.

ச-கை. துக்கமெதினுல் வந்ததென்னில்,

உ-ம். சரீர முண்டான படியினுல் வந்தது. ஆகையா லெங்கே யெங்கே சரீரமுண்டோ, அங்கேயங்கே துக்க வியாப்தியுண்டு.

ச-கை. இப்படிச் சொல்லலாமா? ராஜப் பிரபுக்கள் சுகமே யனுபவித்துக்கொண்டிருக்கச் சரீரமுண்டான விடங்கடோறுந் துக்கமுண்டென் வெப்படிச் சொல்லுகிறதென்னில்,

உ-ம். சொல்லலாம். ராஜப் பிரபுக்களிடத்திலுந் துக்கமேயனு பவமாகக் காணப்படுகின்றது.

ச-கை. அந்தத்துக்க மேதென்னில்,

உ-ம். ராஜப்பிரபுக்களுக்குத் தேகத்தினிடத்தில் ரோகத்தினு லும், சத்ருபலத்தினுலும், பிள்ளையில்லாமையினுலும், பிள்ளையுண்டாயிருந்தும் வித்தை புத்தி வரவில்லையென் பதினுலும், சொன்னசொற் கேளாமையினுலும், பிரிய மானபிள்ளை இறந்துபோவதினுலும், ராஜ்யத்தில் மழை யில்லாமையினுலும், அதிகமழையினுலும், ஸ்திரீகளொ ருத்தருக் கொருத்தர் செய்கிற விருத்தத்தினுலும், முது மையினுலும், நாம்கசித்துப்போவோ மென்கிறதினுலும், இதுமுதலிய வினைகதுக்கங்க ளிருக்கிறபடியினுல் அவர் களைச் சுகசொரூபரென்பது மோகத்தினுலன்றி வேறல்ல.

ச-கை. மோகத்தினுல் துக்கம் சுகமாய்த்தோற்றுமோவென்னில்,

உ-ம். தோற்றும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். மூட்டையெடுக்கிறவனுக்குக் கூலிகிடைத்தால் மூட்டை சுமக்கிற துக்கமவனுக்கில்லை. போயிகள் தங்கள் துரைக் குப்பிரயாணமுண்டானுல் சந்தோஷிக்கிருர்கள். இல்லா விட்டால் துக்கப்படுகிருர்கள். வேலைசெய்கிறவர்களுக்கு வேலையகப்பட்டால் சந்தோஷிக்கிருர்கள். இல்லாவிட் டால் துக்கப்படுகிருர்கள். வழிப் பிரயாணக்காரருக்குப் பிரயாண முண்டானுல் சந்தோஷப்படுகிருர்கள். இல்லா விட்டால் துக்கப்படுகிருர்கள் மாவுத்தர்களுக்குப்புதிதா யானை யகப்பட்டால் சந்தோஷிக்கிருர்கள். இல்லாவிட் டால் துக்கப்படுகிருர்கள். இதுமுதலான துக்கம் இவர் களுக்கெப்படி சுகமாய்த் தோற்றுகின்றதோ, அப்படி போல ராஜப் பிரபுக்களுக்குந் துக்கமே சுகமாய்த் தோ ற்றுகின்றது. மோகத்தினு லுண்டாகப்பட்ட துக்கமே சுகமாய்த் தோற்றப்பட்ட ராஜப்பிரபுக்களிடத்திற் சேர் ந்தபேருக்குந் துக்கவியாதியைக் குறித்துக் கேட்கவே வேண்டியதில்லை.

ச-கை. ஆனுல் விவேகிகளுக்குத் துக்கமுண்டோ வென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. விவேகியென்றால் சரீரமுண்டானவனோ இல்லாதவனோ வென்னில்,

உ-ம். சரீரமில்லாதவனுக்கு விவேகியென்ற விவகாரங்கூடாது. சரீரமுள்ளவனே விவேகியென்று சொல்லவேண்டும். ஆதலால் விவேகிக்குந் துக்கமுண்டு.

ச-கை. எப்படி யென்னில்,

உ-ம். பசியும் தாகமும் சீதோஷ்ணமுதலிய தொந்த துக்கங்களும், வயிற்றுநோய் தலைநோய் புலி பாம்பாதிகளினால் வரப்பட்டபயங் கிலேசநடுக்கமுதலானதுமுண்டாயிருக்கையினால் விவேகிக்குந் துக்கமுண்டு.

ச-கை. விவேகிக்கும், அவிவேகிக்கும் பேதமேதென்னில்,

உ-ம். பேதமுண்டு. விவேகியானவன் சர்வதுக்கங்களும் அந்தக்கரண சுபாவமென்றும், சாக்ஷியான தனக்கில்லையென்றும் விவகரிப்பன். அவிவேகியானவன் சர்வதுக்கங்களையுந் தன்னிடத்திற் சுமத்திக்கொண்டு, புத்திரன் சுகமாயிருந்தால் தான் சுகமாகவும், புத்திரனிறந்தால் தானிறந்துபோகிறதாகவும் நினைந்து தாபாக்கினியினால் தபிக்கப்படுவன். இந்த வகையினால் விவேகிக்கும் அவிவேகிக்கும் பேதமில்லையென்பது கூடாது.

ச-கை. ஆனால் தேவர்களுக்குந் துக்கமுண்டோ? வில்லையோ வெனில்,

உ-ம். உண்டு.

ச-கை. தேவர்களுக்குஞ் சரீரமுண்டோ? வில்லையோ? சரீரமுண்டென்று எதினாலறியப்படுகிறதென்னில்,

உ-ம். சாஸ்திரங்களாலறியப்படுகின்றது.

ச-கை. ஆனால் அவர்களுக்குந் துக்கமுண்டானதெப்படியென்னில்.

உ-ம். அன்னியோன்னிய வயித்தியத்தினாலும், குரூரமான அன்னியோன்னியசாபங்களினாலும், பலாபலத்தினாலொருவர் அயிசுவரியமொருவரபகரிக்கிறபடியினாலும், ஒருவர்பெண்சாதியை யொருவரபகரிக்கிறபடியினாலும், ராக்ஷதர் பட்டணத்தை பிடித்துக்கொண்டு துரத்துகிறபடியினாலும், ராக்ஷதர்பிடித்து விலங்குபூட்டி அடிமைத்தனஞ் செய்விக்கிறபடியினாலும், புண்ணிய கர்ம க்ஷயத்தினால் நாசம்வருமென்கிற கிலேசத்தினாலும், இதுமுத

லிய துக்கங்கள் தேவர்களுக்குமுண்டென்று சுருதி ஸ்மிருதி இதிகாச புராணாகமங்கள் சொல்லுகின்றது. இதிற் சம்சயமில்லை.

ச-கை. தேவர்களுக்குத் துக்கமுண்டாமேயானால அவர்கள் நமக்கெப்படி யுபாசகராவார்கள்? நமக்கிஷ்டசித்திகளை யெப்படி கொடுப்பார்களென்னில்,

உ-ம். கொடுப்பார்கள். ராஜப்பிரபுக்கள் தாங்கள் துக்கமுண்டானவர்களானாலும் ஐசுவரியசம்பத்தினால் நமக்கு உபாசகராயிருந்து இஷ்டபலன்களை யெப்படி கொடுக்கிறார்களோ, அப்படிபோலத் தேவர்களுந் தாங்கள் துக்கிகளானாலும் யோகாயிசுவரியாதி சம்பத்தினால் நமக்குஉபாசகரும் இஷ்டசித்திகளைக் கொடுக்கின்றவருமாவார்கள்.

ச-கை. தேவர்களானந்தசொரூபரென்று சாஸ்திரங்களிற்சொல்கின்றதே; அதற்குத் தாற்பரிய மேதென்னில்,

உ-ம். விவேகியானவன்சரீரத்தில் கூடியிருக்கிறபடியினால் துக்கமுண்டாயிருந்தாலும் துக்கம் அந்தக்கரண சுபாவமென்றெப்படிகாண்கிறானோ அப்படிபோல்உக்ருஷ்டமானதேவர்களும் துக்கத்தை அந்தக்கரண சுபாவமாய்க் காண்கிறார்கள். ஆதலா லவர்களை யானந்தசொரூபரென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றது.

ச-கை. தேவர்களுக்குந் துக்கமுண்டென்கிற சாஸ்திரங்களுக்குத் தாற்பரிய மேதெனில்,

உ-ம். எங்கேயெங்கே சரீரமுண்டோ அங்கேயங்கே துக்கமுண்டு. ஆனபடியினால் சரீரமுத்தியர்த்தமாயெத்தனஞ் செய்யக்கூடாது; அசரீரமுத்திக்கே எத்தனஞ் செய்யவேண்டுமென்றந்தச் சாஸ்திரங்களுக்குத் தாற்பரியம்.

ச-கை. சரீரமுத்திபோல அசரீரமுத்தியென் றொன்றுண்டானாலல்லவோ அசரீரமுத்தி நிமித்தமெத்தனம் பண்ணவேண்டும். அசரீரமுத்தியென்றொன் றுண்டோவெனில்,

உ-ம். உண்டு.

ச-கை. சரீரமுத்தி யுண்டென்றும், அசரீரமுத்தி யில்லையென்றும் பிரமாணமுண்டோ வென்னில்,

உ-ம். உண்டு. சரீரமுத்தியுடையபேர் நக்ஷத்திரரூபமாய்ப்பிரத்தியக்ஷமாய் தெரிகிறாப்போல் அசரீரமுத்தி யுடையபேர் தெரியவில்லை. அன்றியும் யோகீஸ்வராள் யோகமகிமை

யினால் லோகாந்தரங்களுக்குப்போய் சரீரமுத்தியுடைய வர்களைக் கண்டுவந்தார்களென்று சாஸ்திரங்களிற்சொல்லுகின்றபடி, அசரீரமுத்தியுடையவர்களைக்கண்டுவந்தோமென்று சொல்லாதபடியினாலும், சரீரமுத்தியுள்ளவர்கள் நான் அனேககாலமிருந்து வந்தேனென்று சாஸ்திரங்களிற் சொன்னதுபோல, அசரீர முத்தியுள்ளவர்கள் நான் அனேககாலம் அசரீர முத்தியா யிருந்து வந்தேனென்று சாஸ்திரங்களிற் சொல்லாமையினாலும் சரீர முத்தியுண்டு; அசரீரமுத்தியில்லையென்று சொல்லலாம். ஆனாலு மப்படி சொல்லக்கூடாது.

ச-கை. அதெப்படி யென்னில்,

உ-ம். சுழுத்திசுகம் சமஸ்தபிராணிகளுக்கு மெப்படி பிரத்தியக்ஷமோ, அதுபோல சரீரமுத்தியும் பிரத்தியக்ஷம்.

ச-கை. சுழுத்தி சுகந்தான் பிரத்தியக்ஷம்; முத்திசுகமும் பிரத்தியக்ஷமமாகுமோ வென்னில்,

உ-ம். அத்துவித சுகசொரூபமாயிருக்கப்பட்டது சர்வசுழுத்தியிலும் சமனாயிருக்கிறபடியினால், உனக்குச்சுழுத்திசுகம் பிரத்தியக்ஷமாகும்போது முத்திசுகமும் பிரத்தியக்ஷமாகும்.

ச-கை. சுகப்பிரத்தியக்ஷம்சுழுத்தியிற் சமனாயிருக்கிறபடியினால் சுழுத்தியே முத்தியென்று சொல்லலாமோவென்னில்,

உ-ம். சுழுத்தியினிடத்தி லஞ்ஞானமும், உற்பத்திக்குஸ்தானமுமாயிருக்கிறபடியினாலும், முத்தியிலஞ்ஞானமும் உற்பத்திக்குக் காரணபீசமு மில்லாதபடியினாலும் சுழுத்தியே முத்தியென்பதுகூடாது. ஆகையால்சுழுத்திசுகத்தைப்போல சுகமும்பிரத்தியக்ஷமானபடியினால்சரீரமுத்தியைப்பார்க்கிலும் அசரீரமுத்தியே பிரத்தியக்ஷம். யோகியானவன் அசரீரமுத்தனைக் கண்டுவந்து சொல்லாதபடியினாலும், அசரீரமுத்தியானவன் நான் அசரீரமுத்தியாயிருந்துவந்தேனென்று சொல்லாதபடியினாலும், அசரீரமுத்தி யுண்டென்று சொல்லப்பட்டது. சரீரமுத்தியுண்டென்றதில் எந்தநக்ஷத்திராதிகள் பிரமாணமாய்ச் சொல்லப்படுகின்றதோ, அதுகளெல்லாஞ்சொர்க்கலோக விஷயமாய் அனித்தியமாய்பிரத்தியக்ஷமாய்க்கண்டபடியினாலும், இதுபோல பிரம்மலோகாதிகள் விஷயமாகாத

படியினாலும் இந்தசூத்திரங்கள் சரீரமுத்தியுண்டென்றல் பிரமாணமாகாது, சாஸ்திரமாத்திரமே பிரமாணம். சாஸ்திரமன்றிப் பிரமாணாந்தர மில்லாமையினாலும், அசரீரமுத்தி யுண்டென்றதில் சாஸ்திரயுத்தி யனுபவமொத்திருக்கிறபடியினாலும் அசரீரமுத்தி நிமித்தமே யெத்தனம்பண்ணவேண்டும். சரீரமுத்தி நிமித்தமெத்தனம் பண்ணவேண்டியதில்லை. அப்படி எத்தனித்தாலும் துக்கம் போகாதென்று சாஸ்திரங்களாலும் யுத்தியினாலுந் தெரிகின்றது.

ச-கை. அதற்கு அனுபவ மேதென்னில்,

உ-ம். சுழுத்தியிற் சரீரமில்லாதபடியால் துக்கமில்லை; சாக்கிரசொப்பனத்தில் சரீரமில்லாதபடியால் துக்கமனுபவிக்கப்படுகின்றது. ஆதலால் சரீரமெங்கேயுண்டோ, அங்கேயெல்லாந் துக்கமுண்டு; சரீரமெங்கேயில்லையோ, அங்கே துக்கமில்லையென்று அன்வயவெதிரேக வியாபகத்தினால் சித்தம். இப்படியே ஆத்மாவுக்கு துக்கம் சரீரத்தினாலேயேவருகின்றபடியால், துக்கம்சுபாவிகமென்பதுகூடாது. ஆகந்துகமென்றே சொல்லவேண்டும்.

ச-கை. ஆனால் இந்தச்சரீரம் எதினால்வருகிறதென்னில்,

உ-ம். கர்மத்தோடுங் கூடிய பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களினால் வருவதாய்த் தோற்றுகின்றது.

ச-கை. அப்படியேன் சொல்லவேண்டும்? கேவலம் பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களினாலேயே சரீரம் வருகிறதென்று சொல்லக்கூடாதோ வென்னில்,

உ-ம். சொல்லக்கூடாது. எங்கும் பஞ்சீகிருதபஞ்சமகாபூதங்களிருக்கிறபடியினால் அங்கங்கே சரீரம் பிறக்கவேண்டும். அப்படி யில்லாதபடியினால், கேவலம் பஞ்சீகிருத பஞ்சமகாபூதங்களினால் சரீரம்வருமென்பது கூடாது.

ச-கை. அப்படி சொல்லவில்லை பஞ்சமகாபூதங்கள்சுக்கில சுரோணிதாகாரமாய் எங்கே பரிணமிக்கின்றதோ, அங்கே சரீரம்பிறக்குமென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். சொல்லக்கூடாது. நித்தியமும் ஸ்திரீபுருஷாளுக்குச் சையோகத்தினால் சுக்கிலசுரோணிதம் பிறக்கின்றது. அங்கேசரீரமுண்டாகவில்லை. ஆகையாலப்படியுஞ்சொல்லக்கூடாது.

ச-கை. அங்கே சுக்கில சுரோணித மில்லையென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். அப்படியானால் ஸ்திரீ புருஷாளுக்குரதியில்லாமற் போகவேண்டும். ஆகையால்சையோகமில்லையென்பதுகூடாது.

ச-கை. ஆனால் சுக்கிலசுரோணிதமேதேசகாலங்களையபேக்ஷித்து சரீராகாரமாகிறதென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். அப்படியுஞ்சொல்லக்கூடாது சொன்னால்பிராணிகளுக்கு வைசித்திரியமில்லாமற் போகவேண்டும்.

ச-கை. ஆனால்பிராணிகளுக்குவைசித்திரியமுண்டோவென்னில்,

உ-ம். ஒருசரீரத்தைப்போலொருசரீரமில்லாதபடியினாலுண்டு.

ச-கை. ஆனால்வைசித்திரியம்தேசகாலங்களினால்வருகிறதென்று சொல்லுவோமே யென்னில்,

உ-ம். தேசகாலங்கள் சர்வப்பிராணிகளுக்குஞ் சாதாரண காரணமா யிருக்கிறபடியினால், தேசகாலங்களினால் ஜகத்து வைசித்திரியம் வருகிறதென்பது கூடாது.

ச-கை. தேசகாலங்களுஞ் சாதாரணகாரணமாகட்டும்; அதுதள்ளினால் ஜகத்து வைசித்திரியமும் வரட்டுமே யென்னில்,

உ-ம். சாதாரணகாரணமான தேசகாலங்களால் கடாதி வைசித்திரியமில்லாதபடியினால் தேசகாலங்களால் வருமென்பது கூடாது.

ச-கை. எதையபேக்ஷித்துக்கடாதிவைசித்திரியம்வருகிறதெனில்,

உ-ம். சாதாரண காரணமான குலாலாதி வியாபார வைசித்திரியத்தினால் வந்ததென்றே தோற்றுகின்றது. அதுபோலப் பஞ்சீகிருத பஞ்சமகாபூதங்களும் சுக்கில சுரோணிதா காரமாகப் பரிணமித்துச் சாதாரண காரணமான தேசகாலங்களை யபேக்ஷித்திருந்தபோதும் அசாதாரண காரணமான காரணாந்தரத்தை யபேக்ஷித்து விசித்திரசரீராதி யாகாரமாகப் பரிணமிக்கப் படுகின்றதென்றே சொல்லவேண்டும்.

ச-கை. அந்தக் காரணாந்தரமாவ தேதென்னில்,

உ-ம். கர்மமே யாகவேண்டும்.

ச-கை. கர்மத்துக் கிவ்வகைப்பட்ட சாமர்த்தியமிருக்கிற படியினால், கேவலம் கர்மத்தினாலேயே சரீரம் வந்ததென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். கர்மம் நிராதாரமாய் ரூபமில்லாமையினாலும், அசைவு மாத்திரமானதாயினாலும், நிருவிகாரவஸ்தையா யிருக்கிற படியினாலும் அதனால் சரீரம் வந்ததென்பதுகூடாது.

ச-கை. மற்றெப்படி யென்னில்.

உ-ம். கர்மத்துடன் கூடிய பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களினாலேயே சரீரம்வந்ததென்று சொல்லவேண்டும். ஆகையினால் இரண்டு காரணத்தினாற் சரீரம் வந்ததென்றே சொல்லப்படும்.

ச-கை. இரண்டுகாரணமாவ தேதென்னில்,

உ-ம். கர்மமும் பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களுமாம் இவற்றில் நிமித்தகாரணமான கர்மவைசித்திரியத்தினாலேயே சரீர வைசித்திரியமும் வருகின்றது.

ச-கை இதற்குத் திருஷ்டாந்தமுண்டோ வென்னில்,

உ-ம். உண்டு. கடமுண்டாகுமிடத்தில் கேவலமுபாதானகாரணமான மண்ணினால் காரியமெப்படி பிறக்கவில்லையோ, கேவலநிமித்தகாரணமான குலாலவியாபாரத்தினால்காரியமெப்படிபிறக்கவில்லையோ குலாலவியாபாரமானமண்ணையாசிரித்தபடியினால் காரியமெப்படிபிறக்கின்றதோ, மண் ஏகரூபமாயிருந்தாலும் குலால வியாபாரத்தினால் காரியத்தில் எப்படி வைசித்திரியம்பிறக்கின்றதோ, அப்படி போல கேவலம் பஞ்சீகிருதபஞ்சமகாபூதங்களினாற் சரீரமுண்டாகவில்லை; கேவலம் கர்மத்தினாலுஞ் சரீரமுண்டாகவில்லை. கர்மத்துடன் கூடிய பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களினாலேயே சரீரமுண்டாகிறபடியால், கர்மவைசித்திரியத்தினாலேயே சரீரவைசித்திரியம் வருமென்றறிவது சித்தம், உபாதான காரணமான மண்ணிருந்தபோதும் நிமித்தகாரணமான குலால வியாபாரமில்லாவிட்டால் கடமெப்படி பிறக்கவில்லையோ, அதுபோல, உபாதான காரணமான ஈஸ்வர சிருஷ்டியான பஞ்சபூதங்களும் அதின்காரியமான பவுதிகப் பிரபஞ்சமும்எப்படி நிலைபெற்றிருந்தாலும். அத்துவிதமான ஆத்மாவேநானென்கிற ஞானத்தினால் யாருக்குக்கர்மநசிக்கின்றதோ, அவர்களுக்குச் சரீரம்வராது: பிரபஞ்சம் காலத்திரயத்திலுமில்லாமலிருந்துந் தோற்றுகின்றது. தோற்றினாலுமில்லையென்கிறநிச்சயம் ஆருக்குவருகின்றதோ, அவர்

களுக்குச் சரீரம் வராதென்பது அன்வயவெதிரேகத்தினால் சுதசித்தம்.

ச-கை. அன்வய வெதிரேகமாவ தேனென்னில்,

உ-ம். கர்மமுண்டானாற் சரீரமுண்டென்கின்றது அன்வயம்; கர்மமில்லாவிட்டாற் சரீரமில்லையென்கிறது வெதிரேகம்

ச-கை. அது எங்கே யனுபவிக்கப்படுகின்ற தென்னில்,

உ-ம். ஜாக்கிர சொப்பனத்தில்ஸ்தூலசூக்ஷமபோகப்பிரதானமான கர்மமிருக்கிறபடியினால் சரீரமிருக்கின்றது. சுழுத்தியில் ஸ்தூல சூக்ஷமப் பிரதானமான கர்மமில்லாதபடியினால் சரீரமுமில்லை. கர்மமுண்டானால் சரீரமுண்டு; கர்மமில்லாவிட்டாற் சரீரமில்லை யென்பது தெளிந்து ஸ்ரீசற்குருவினால் சுருதியுத்தி யனுபவமாய்ச் சங்கையில்லாமலெவன் அறிகிறானோ, அவனேசீவன்முத்தமென்று சுருதி ஸ்மிருதியாதிகளிற் சொல்லுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

துக்காரோபநிருபகம்
முற்றிற்று.

ஆறாவது,

கர்மத்திரயநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளிற்கர்மத்திரயங்களைவிசாரித்தறியவேண்டுமென்பதால் கர்மமெத்தனைவிதமா யிருக்கிறதென்னில்,

உ-ம். புண்ணியமென்றும், பாவமென்றும், மிசிரமென்றும் மூன்றுவிதம். இதில் உக்ருஷ்ட மத்திம சாமானியமென ஒவ்வொன்றுக்கு மூன்றுவிதமா யிருக்கின்றது.

ச-கை. புண்ணிய வுக்ருஷ்டபல மேதென்னில்,

உ-ம். இரணியகர்ப்பாதி சரீரபிராப்தி.

ச-கை. புண்ணிய மத்திமபல மேதென்னில்,

உ-ம். தேவேந்திராதி சரீரபிராப்தி.

ச-கை. புண்ணிய சாமானியபல மேதென்னில்,

உ-ம். யக்ஷ ராக்ஷச கின்னர கிம்புருஷபிசாசாதி சரீரபிராப்தி.

ச-கை. பாப வக்ருஷ்டபல மேதென்னில்,

உ-ம். பிராணிகளுக்குத் துக்கத்தை யுண்டாக்கப்பட்டதேள், பாம்பு, கொசுகு, மூடு, புலி, காடிமுதலியசரீரபிராப்தி.

ச-கை. பாப மத்திமபல மேதென்னில்,

உ-ம். புளியமரம், மாமரம், பலாமரம், தென்னமரம், எருமை, பருந்து முதலிய சரீரபிராப்தி.

ச-கை. பாப சாமானியபல மேதென்னில்,

உ-ம். பசு, ஆனை, குதிரை, அரசு, துளசிமுதலியசரீரபிராப்தி.

ச-கை. மிச்ரவுக்ருஷ்டபல மேதென்னில்,

உ-ம். நிஷ்காம புண்ணியகர்மபலத்தினால் சித்தசுத்திவந்து, சித்தசுத்தித் துவாரா சாதனசதுஷ்டய சம்பத்திவந்து, சாதனசதுஷ்டய சம்பத்தித்துவாரா சற்குருலாபமுண்டாகிச் சற்குரு லாபத்துவாரா சிரவணமனன நிதித்தியாசன முண்டாகிச் சிரவணமனனநிதித்தியாசனத்துவாரா அபரோக்ஷஞானம்வந்து, அபரோட்ச ஞானத்துவாரா சீவன்முத்தி சுகத்தைப் பெறப்பட்ட சரீரபிராப்தி.

ச-கை. மிச்ர மத்திமபல மேதென்னில்,

உ-ம். சுய ஆசிரமத்திற்கு உசிதமான காமியகர்ம்ம யோக்கியமான சரீரபிராப்தி.

ச-கை. மிச்ர சாமானியபல மேதென்னில்,

உ-ம். சண்டாள பாண்ட குஷ்ட பெருவியாதி முதலிய சரீரபிராப்தி. ஆகையால் விவேகியானவன் கர்மபல தாரதன்மியங்களை விசாரித் துணர்ந்து மிச்ர வுக்ருஷ்ட கர்மத்திற்கே யெத்தனம் பண்ணவேண்டும்.

ச-கை. இந்தப் புண்ணிய பாப மிச்ரமான மூன்றுகர்மமு மெதினாற் செய்யப்படுகின்றதென்னில்,

உ-ம். திரிவிதகரணங்களாற் செய்யப்படுகின்றது.

ச-கை. சமஸ்த பிராணிகளும் நானிந்தக் கர்மம் பண்ணினேனென்று சொல்லுகிறார்கள். அவர்க ளனுபவத்தினால் ஆத்மசுபாவமாய்க் கர்த்துருத்வந் தோற்றுகிறபடியினால் கர்த்துருத்வமும் ஆத்ம சுபாவமாகச் சொல்லலாமேயென்னில்,

உ-ம். ஆத்மா நிர்விகாரியாகையால் கர்த்ருத்வஞ் சொல்லக்கூடாது.

ச-கை. ஆனாலிந்தக் கர்த்ருத்வம் ஆத்மாவிடத்திற்றோற்றுகின்றதே; இதற்குக் கதியென்னவென்னில்,

உ-ம். அன்னியசுபாவமானகர்த்ருத்வம் ஆத்மாவிடத்திற்றோற்றுகிறபடியினால், ஆகுந்துகமென்றேசொல்லவேண்டும்.

ச-கை. அன்னிய சுபாவமான கர்த்ருத்வந் தோற்றுகிறதென் றேன்சொல்லவேண்டும்? ஆத்மாவுக்குச் சுபாவமென்றே சொல்லுவோமென்னில்,

உ-ம். அப்படி சொல்லக்கூடாது. ஏனெனில் கர்த்ருத்வம்போ கிறநிமித்தம் எவர்களு மெத்தனஞ்செய்யாம லிருக்க வேண்டும். முமுக்ஷுக்க ளெத்தனஞ்செய்கிறபடியினால் சுபாவமென்பது கூடாது.

ச-கை. கர்த்ருத்வமுஞ் சுபாவமாகட்டும்; போகிறநிமித்தம் எத் தனமும் பண்ணட்டுமேயென்னில்,

உ-ம். சுபாவமென்றால் சொரூபமாகையினால் சொரூப நாசத் திற்கெத்தனம் பண்ணுகிறதாயிருக்கும். சொரூபநாச மாக வெவரு மெத்தனம்பண்ணார்கள். ஆதலால்சுபாவீக கர்த்ருத்வ நிவிர்த்தியர்த்தமா யெத்தனிக்கிறார்களென்று சொல்லக் கூடாது. சுபாவமான கர்த்ருத்வத்துக்கு நிவிர்த்தி வருகிறபோது சொரூபமே நாசமாய்ப்போகிற படியினால் கர்த்ருத்வம் விட்டு அகர்த்தாவானவனுருமில் லாமற் போகவேண்டும். ஆதலால் கர்த்ருத்வஞ் சுபாவ மென்று சொல்லக்கூடாது.

ச-கை. ஆனால் கர்த்ருத்வமுஞ் சுபாவமாகட்டும்; நிவிர்த்தியும் வரட்டுமேயென்னில்,

உ-ம். அப்படிகூடாது.

ச-கை. அக்கினிக்கு ஊஷ்ணத்வஞ் சுபாவம்; சுபாவமான ஊஷ் ணத்திற்கு மணிமந்திர அவுஷதத்தினாலெப்படிநிவிர்த்தி வருகின்றதோ, அப்படிபோல ஆத்மாவுக்குக் கர்த்ருத் வஞ் சுபாவமென்றும், அஃது உக்ருஷ்டமான கர்மோ பாசனையினால் நிவிர்த்தியாமென்றும் சொல்லுவோமே யென்னில்,

உ-ம். ஆனால் அக்கினிக்கு மணிமந்திராதிகளால் ஸ்தம்பித்த ஊஷ்ணம் காலாந்தரத்தி லெப்படி யபிவிர்த்தியாகின்ற தோ, அதுபோல ஆத்மாவுக்கு நிவிர்த்தியானகர்த்ருத்வ வமும் உக்ருஷ்டகர்மவுபாசனபலத்துக்கு நாசம்வருகிற படியினால், திரும்பவு மபிவிர்த்தியாம். அதனால் கர்த் ருத்வநிவிர்த்தி ரூபமான முத்திக்கு ஜன்னியத்துவமும், அனித்தியத்துவமும் வரும். ஆத்மா அகர்த்தாவென்று சொல்லப்பட்ட சுருதிகளுக்கும் பேதம்வரும். சுழுத்தி

யிலும் ஆத்மாவிருக்கிறபடியினால் அவ்விடத்திலுங் கர்த்ருத்வந் தோற்றவேண்டும். தோற்றாமையினால் சுபாவமென்பதுகூடாது.

ச-கை. சுழுத்தியி லாத்மாவுக்குங் கர்த்ருத்வம் ஏன் தோற்றவேண்டும் வேண்டியதில்லை. ஏனெனில் தச்சர்முதலானவர்களுக்குச் சுயகாரியாதிகளைக் குறித்துக் கர்த்ருத்வமிருந்தாலும் ஸ்நானபோஜன சயன விவகார காலங்களில் வாச்சிமுதலிய கரணசையோக மில்லாமையினா லவர்களுக் கெப்படி கர்த்ருத்வந் தோற்றவில்லையோ, வாச்சிமுதலிய கரண சையோகம் வந்தபோது கர்த்ருத்வமெப்படி தோற்றுகின்றதோ, அதுபோல ஆத்மாவுக்குச் சுழுத்தியில் கர்த்ருத்வ மிருந்தாலும் திரிவிதகரண சையோக மில்லாமையினால் கர்த்ருத்வந் தோற்றவில்லை. சாக்கிற சொப்பனத்தி லிருக்கிறபடியினால் கர்த்ருத்வந்தோற்றுகிறதென்று சொல்வோமே யெனில்,

உ-ம். ஒன்றுந் தோற்றாவற்ற சுழுத்தி யவத்தையிலும் கரண சையோக மிருக்கிறபடியினால் அங்கேயுங் கர்த்ருத்வந் தோற்றவேண்டும். தோற்றாமையினால் சுபாவமென்பது கூடாது. ஆகுந்துகமென்றே சொல்லவேண்டும்.

ச-கை. ஆகுந்துகமென்ப தேதென்னில்,

உ-ம். அன்னியசுபாவமான தர்மம் தன்சுபாவமாகத் தோற்றுகிறது ஆகுந்துகமாம்.

ச-கை. அப்படிதோற்றுமாவென்னில்,

உ-ம். தோற்றும்.

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். ஓடத்திற்போகிற புருஷனுக்கு அஞ்ஞானத்தினால் ஓடத்தின் சஞ்சல சுபாவமாகிற வோட்டந் திரசுபாவமாகிற விருக்ஷத்தினிடத்திலும், கரையினுடைய விருக்ஷசுபாவமானநிலை யோடத்தினிடத்து மெப்படி தோற்றுகின்றதோ, அப்படிபோல, திரிவிதகரண சுபாவமான கர்த்ருத்வம் அஞ்ஞானத்தினால் ஆத்மசுபாவமாகவும், ஆத்மசுபாவமான அகர்த்ருத்வம் திரிவிதகரண சுபாவமாகவுந் தோற்றுகின்றது. இன்னமும்சந்திரனைப் பார்க்கப்பட்ட புருஷனுக்கு மேகசஞ்சலமான சுபாவம் சந்திர சுபாவமாகவும், சந்திரசுபாவமானநிலை மேகசுபாவமாகவும் எப்

படி தோற்றுகின்றதோ, அப்படிபோல திரிவிதகரண சுபாவமான கர்த்ருத்வமும் ஆத்மசுபாவமாய்த் தோற்றுகின்றது ஆதலால் கர்த்ருத்வம் ஆத்மாவுக்கு ஆகுந்துகமென்றே சொல்லப்படும்.

ச-கை. ஆனால் திரிவித கரணங்களுக்குங் கர்த்ருத்வமிருந்தாலல்லவோ ஆத்மாவினிடத்திற் றோன்றுமென்று சொல்லலாம் அவை அசேதனமான ஜடமாகையினால் அவைகளுக்குக் கர்த்ருத்வங் கூடாது. உலகத்திற் சேதனமானவர்களுக்கே கரண சாபேட்சையாகக் கர்த்ருத்வங்காண்கிறபடியால், அசேதனமான திரிவிதகரணங்களுக்குக் கர்த்ருத்வஞ்சொல்லக்கூடாது. அப்படி சொன்னால் சேதனத்துவமும் கரணாந்தரமுங் கற்பிக்கவேண்டும். அப்படி கூடாமையினால் திரிவிதகரணங்களுக்குங் கர்த்ருத்வங் கூடாதென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். கூடாது. உலகத்தில் அசேதனத்துக்கே கர்த்ருத்வங் காணுகின்ற படியினால் திரிவித கரணங்களுக்குங் கர்த்ருத்வஞ் சொல்லலாம்.

ச-கை. எப்படி சொல்லலாமென்னில்,

உ-ம். அசேதனமான வாய்வு கரணமுஞ் சேதனத்துவமும் அபேக்ஷியாமல் விருக்ஷாதிகளையொடிக்கிற கிரியைகளைக் குறித்தும்; அசேதனமான பிரவாகஜலம் கரணமுஞ் சேதனத்துவமும் அபேக்ஷியாமல் விருக்ஷாதிகளைப் பிடுங்குகிற கிரியைகளைக்குறித்தும் கர்த்ருத்வங் காணுகின்றது. ஆதலாலசேதனமான திரிவிதகரணங்களுக்குஞ்சேதனத்துவமுங் கரணாந்தரமுங் கற்பியாமல் திரிவித கர்மத்தைக்குறித்துக் கர்த்ருத்வமுண்டு.

ச-கை. ஆனால் திரிவிதகரணங்களினாற் செய்கின்ற புண்ணிய பாவமிச்சர கர்மங்களில் மனதினாற்செய்கிற புண்ணிய கர்மமாவதேதெனில்,

உ-ம். சகுணப் பிரயோசன சிந்தை, நிற்குணப் பிரயோசன சிந்தை, பரலோகப் பிரயோசனசிந்தை, பிறருக்கு இதப் பிராப்தியானசிந்தை, பத்திஞான வயிராக்கிய சிந்தை இது முதலானதுகளுமாம்.

ச-கை. மனதினாற்செய்கிற பாபகர்மமாவ தேதென்னில்,

உ-ம். சார்வதாவிஷயசிந்தை, பிறருக்கு அகிதசிந்தை, வேத சாஸ்திரங்களுக்கு அப்பிரமாணமானசிந்தை, பரலோக அபாவசிந்தை, தர்மஅபாவசிந்தை இதுமுதலானதுகளு மாம்.

ச-கை. மனதினாற்செய்கிற மிச்ரகர்மமாவதேதென்னில்,

உ-ம். சகுணநிற்குணப் பிரயோசன தியானகாலங்களிற் செய்கின்ற வியாதிசிந்தைமுதலியவைகளாம்.

ச-கை. வாக்கினாற்செய்கிற புண்ணியகர்மமாவதேதென்னில்,

உ-ம். வேதாத்தியயனம், சாஸ்திரபாடம், காயத்திரி, பஞ்சாட்சர முதலியஜபங்கள், பகவந்நாமகீர்த்தனைகள், பரோபகார வார்த்தைகளிதுமுதலியவைகளாம்.

ச-கை. வாக்கினாற்செய்கிற பாபகர்மமாவதேதென்னில்,

உ-ம். சார்வதா பெரியோர்களைத் தூஷிக்கிறது, பிறரைச்சொல்லாதவார்த்தை சொல்லுகிறது, அசத்தியஞ் சொல்லுகிறது, ஒன்றைச்சாட்டி யொன்றைச் சொல்லுகிறது இது முதலியவைகளாம்.

ச-கை. வாக்கினாற்செய்கிற மிச்ரகர்மமாவதேனென்னில்,

உ-ம். வேதாத்தியயன சாஸ்திரபாட ஜபாதி காலங்களில் லவுகீகவார்த்தை பேசுகிறது முதலியவைகளாம்.

ச-கை. காயத்தினாற்செய்கிற புண்ணியகர்மமாவதேதென்னில்,

உ-ம். புண்ணியதீர்த்தஸ்நானம், குருதேவதாதரிசனம், அங்கப்பிரதக்ஷணம், பிறரை வருத்தாமை இதுமுதலியவைகளாம்.

ச-கை. காயத்தினாற்செய்கிற பாபகர்மமாவதேதென்னில்,

உ-ம். சார்வதா பிறரை வருத்துகிறது, பரஸ்திரீகளைக் கூடுகிறது, பரதிரவியந்திருடுகிறது, துஷ்டசாவகாசமாய்த்திரிகிறது இதுமுதலானதுகளாம்.

ச-கை. காயத்தினாற்செய்கிற மிச்ரகர்மமாவதேதென்னில்,

உ-ம். பிராமண போஜன நிமித்தம் பிராமணரைப்பிடிக்கிறது, பரதிரவியத்தை யபகரித்துத் தண்ணீர்ப்பந்தல் வைக்கிறது, பரதிரவியத்தைக் கிரகித்துக் கோயில் குளம் மட முதலானதுகள் கட்டுகிறது, அமஞ்சியாள் பிடித்துக் குளம் வெட்டுகிறது, பிறருடையபூமியைக் கிரகித்துக் கோயிலுக்கு மடத்துக்கு விடுகிறது இது முதலானதுகளாம்.

ச-கை. இந்தவிசாரத்திற்குப் பலமெத்தனைவகை யென்னில்,

உ-ம். முக்கியமென்றும், அவாந்தரமென்றும் இரண்டுவகை.

ச-கை. முக்கியபலமாவ தேதென்னில்,

உ-ம். இந்தத் திரிவிதகர்மங்களையுந் திரிவிதகரணங்களே செய்கின்றதென்றும், அகர்த்தாவாகிய ஆத்மசொரூபமேயா தொருகிரியையுஞ்செய்யவில்லையென்றுங்கொண்டு, அந்த ஆத்மாவை நானென்றுந் திடநிச்சயம் வருவதே முக்கியம்.

ச-கை. அவாந்திரபலமாவ தேதென்னில்,

உ-ம். அப்படிப்பட்ட நிச்சயம்வந்தும் திரிவித கரணங்களைப் புண்ணியகர்மத்தில்விடவேண்டுமென்றும், பிரமாதவசத்தினால் புண்ணியகர்மத்தில் விடக்கூடாமற் போனாலும், மிச்ரகர்மத்திலாகிலும் விடவேண்டுமென்றும், சர்வதா பாபகர்மத்தில் விடக்கூடாதென்றும் சிந்திக்கின்றதே அவாந்திரம்.

ச-கை. ஒன்றில்தானேயிரண்டுபல முண்டோவென்னில்,

உ-ம். உண்டு. வாழை வைத்தவன் தனக்கு வேண்டியமட்டும் வாழைப்பழம் விநியோகமாக்கிக்கொள்ளுகிற தெப்படியோ, அப்படியே முக்கியபலமும்; இலை பூ தண்டு கட்டைகள் கொண்டுவந்து உபயோகமாக்கிக் கொள்ளுகிற தெப்படியோ, அப்படியே அவாந்திரபலமுமாம்.

ச-கை. ஆனால் திரிவிதகரணங்களு மொன்றினாற் பிரேரிக்கப்பட்டுத் திரிவிதகர்மங்களைச் செய்கின்றதோ? தானே செய்கின்றதோவெனில்,

உ-ம். தானேசெய்கின்றதென்பது கூடாது. பரசுவாதிகளும் ஆயுதகரணங்களாகையினால் அதுகளுக்கும் பிரேரணையபேட்சியாமல் கர்த்ருத்வம் வரவேண்டும். அப்படியில்லாமையினால் ஒன்றினால் பிரேரிக்கப்பட்டுச் செய்கின்றதென்றே சொல்லவேண்டும்.

ச-கை. ஆனால் சேதனனாற் பிரேரிக்கப்பட்டுச் செய்கிறதென்று சொல்லுவோமே யென்னில்,

உ-ம். சேதனனான ஆத்மாநிர்விகாரியானதையால் அப்படி சொல்லக்கூடாது. அசேதனத்தாலேயே பிரேரிக்கப்பட்டுச் செய்கிறதென்று சொல்லவேண்டும்.

ச-கை. அசேதனத்தினாலே பிரேரிக்கப்பட்டதென்று சொல்லலாமோவென்னில்.

உ-ம். கூடாது. அப்படிசொன்னால் கடமானது கடத்தினுற் பிரேரிக்கப்பட்டுச் சலமெடுக்கவேண்டும். அப்படி காணா வில்லையே. நான் கோயில்கட்டுவித்தேன், மடங்கட்டுவித் தேன், சகஸ்ரபோஜனம். பண்ணுவித்தேனென்னுமிடத் திற் கர்த்ருத்வம் ஆத்மசுபாவமாகத் தோற்றுகின்றது. அப்படி சொல்லுவோமென்றாலும் ஆத்மா நிர்விகாரியா கையினால் ஆத்மாவுக்கு கர்த்ருத்வங்கூடாது.

ச-கை. ஆனால் இந்தக் கர்த்ருத்வ வனுபோகத்திற்குக் கதிதா னென்னவெனில்,

உ-ம். அன்னிய சுபாவமான கர்த்ருத்வம் ஆத்மாவினிடத்தில் தோற்றுகின்றபடியினால் ஆகுந்துகமென்றே சொல்ல வேண்டும்.

ச-கை. ஆனால் அப்படியேன் சொல்லவேண்டும்? ஆத்ம சுபாவ மென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். அப்படி ஆத்ம சுபாவமென்று சொன்னால் கர்த்ருத்வம் போகிறநிமித்தம் எவர்களு மெத்தனம்பண்ணாம லிருக்க வேண்டும். முமுக்ஷுக்கள் மெத்தனம் பண்ணுகிறபடி யினால் அப்படிசொல்லக்கூடாது.

ச-கை. கர்த்ருத்வமும்சுபாவமாகட்டும்; போகுநிமித்தம் எத்தன மும் பண்ணட்டுமே யென்னில்,

உ-ம். சுபாவமென்றால் சொரூபமாகையினால் சொரூபநாசார்த் தமாய் எவர்களு மெத்தனம் பண்ணார்களென்று முன் னமே சொல்லியிருக்கின்றோமே. அதுவுமன்றி ஆத்மா அகர்த்தாவென்கிற சுருதியாதிகளுக்கும் விருத்தம்வரும் சுழுத்தியிலும் ஆத்மாவிருக்கிறபடியினா லவிடத்திலுங் கர்த்ருத்வந் தோற்றவேண்டும்.

ச-கை. அப்படி வேண்டியதில்லை. உபாத்தியாயரிடத்திற் கல்வி யிருந்தாலும் கற்கப்பட்ட பிள்ளைகளில்லாமையினால் அந்தக்கல்வி பிரகாசிக்காது, பிள்ளைகளிருந்தாலெப்படி பிரகாசிக்குமோ, அப்படிபோலவும், ராஜப்பிரபுக்களிட த்தில் ஆக்கினை சுபாவமாயிருந்தாலும் மந்திரி பிரதானி முதலான சேனைசமுகங்களில்லாமையினால் அந்த ஆக் கினை பிரகாசிக்காது, அவர்களிருந்தா லெப்படி பிரகா சிக்குமோ அப்படிபோலவும் ஆத்மாவுக்குக் கர்த்ருத்வம் சுபாவமாயிருந்தாலும், சுழுத்தியவத்தையில் நியமித

மான திரிகரண கூட்டரவில்லாதபடியினால் தோற்றவில்லை. சாக்கிர சொப்பனங்களி லதுகளிருக்கின்றபடியினால் கர்த்ருத்வம் தோற்றுகின்றதென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். அப்படியானால் தோற்றரவற்ற சுழுத்தியவத்தையிலுங் கரணக்கூட்டர விருக்கிறபடியினால் அங்குங்கர்த்ருத்வந் தோற்றவேண்டும். தோற்றாமையினால் கர்த்ருத்வம் ஆத்ம சுபாவமென்பது கூடாது. ஆகுந்துகமென்றே சொல்லவேண்டும்.

ச-கை. ஒருவஸ்துவின் சுபாவந் தற்சுபாவமாகத் தோற்றுமாவெனில்,

உ-ம். குசுமப் புஷ்பத்தின் சிவப்புநிறம் படிகத்திற் றோன்றுவது போலவும், அக்கினியின் ஊஷ்ணமும் பிரகாசமும் இரும்பினிடத்திலும், இரும்பினளவு நிகளங் கனமுதலியவிடத்திலுந் தோன்றுவதுபோலவும், ராகத்துவேஷ சுபாவமான கர்த்ருத்வம் ஆத்மசுபாவமாகவும், ஆத்ம சுபாவமான அகர்த்ருத்வம் ராகத்துவேஷ சுபாவமாகவும் அஞ்ஞானத்தினால் தோற்றுகின்றது. ஆனாலும் அசேதனங்களுக்குக் கர்த்ருத்வங்கூடுமென்பதுகூடாது.

ச-கை. கூடுமென்று சொல்லுவோமே யென்னில்,

உ-ம். அப்படியானால் கடமுங் கடத்தினாற் பிரேரிக்கப்படுமென்று முன்னமே சொல்லியிருக்கின்றோமே; அப்படி சொல்வது கூடாது.

ச-கை. அதற்கு உத்தரவுதா னெதெனில்,

உ-ம். அங்கே யோக்கிதையில்லாமையினால் பிரேரகத்வங் கூடாது. எங்கே யோக்கிதையுண்டோ, அங்கே பிரேரகத்வ முண்டென்று தோற்றுகின்றது.

ச-கை. யோக்கிதையான விடத்தில் எங்கே பிரேரகங் காணப்படுகிறதென்னில்,

உ-ம். அக்கினியானது மருந்தோடு கூடினபடியால் பீரங்கி குண்டுகளினால் சதுரங்க சேனைகளையுஞ் சங்கரிக்கப்பட்டது.

ச-கை. அசேதனமான அக்கினி அசேதனமான மருந்துடன் கூடி அசேதனமான கல்லுகளைக்குறித்துப் பிரேரகத்துவங் காணப்படுகின்றது; அல்லாமலும் பிணமான சரீரத்துக்குச் சுபபந்துக்களாற் செய்யப்பட்டகிரியைகளைக்கு

றித்துக் கர்த்ருத்தந் தோற்றுகின்றது. அதுபோலஅசே தனமான ராகத்துவேஷாதிகளுக்கும் திரிவித கரணங்க ளாற்செய்கின்ற திரிவிதகர்மங்களைக் குறித்துக் கர்த்ருத் வஞ் சொல்லவேண்டுமே. அப்படி சொன்னால் ஆத்மா வுக்குச் சர்வாந்திரியாமித்வஞ் சொல்லப்பட்ட சுருதி ஸ்மிருதியாதிகளுக்குத் தாற்பரிய மேதென்னில்,

உ-ம். ஆத்மா நிர்விகாரியானதையினால் அஸ்மதாதிகளைப்போலக் கர்த்ருத்வஞ் சொல்லக்கூடாது.

ச-கை. மற்றெப்படி யென்னில்,

உ-ம். ஆதித்த சந்நிதானத்தில் சமஸ்தபிராணிகளுஞ் சர்வகாரி யத்திலு மெப்படி பிரவிர்த்திக்கிறார்களோ, காந்த சந்நி தானத்தி லிரும்புகளெப்படி சேஷ்டிக்கின்றதோ; அப் படிபோல ஆத்ம சந்நிதானத்திலும் சமஸ்தமான ஜகத் துஞ்சேஷ்டிக்கிறதென்றேசுருதிஸ்மிருதியாதிகளுடைய தாற்பரியம்.

ச-கை. இப்படிசொன்னால் ஆத்மாவுக்கு நிர்விகாரஞ் சித்தித்த தாவென்னில்,

உ-ம். சித்தித்தது.

ச-கை. எப்படியென்னில்,

உ-ம். ஆதித்த சந்நிதானத்தில் சமஸ்தபிராணிகளும்விவகாரம் பண்ணினபோதும் பிராணிகள் சுபாவமான விவகாராதி கள் ஆதித்தனை எப்படி ஸ்பரிசிக்கவில்லையோ, காந்த சந்நிதானத்தி லிரும்புகள்சேஷ்டித்தபோதும்இரும்பின் விகாரங்கள் காந்தத்தை எப்படி ஸ்பரிசிக்கவில்லையோ அப்படிபோல ஆத்மசந்நிதானத்தில் சேஷ்டிக்கப்பட்ட ஜகத் சுபாவமான விகாரங்கள்ஆத்மாவைப்பரிசிக்கமாட் டாது. ஆதலால் நிர்விகாரத்வங்கூடும்.

ச-கை. ஆனாலிந்த விசாரத்திற்குப் பலமேதென்னில்,

உ-ம். தேரோட்டி வைக்குமிடத்திலும் அதற் கதிகாரிகளால் செய்யப்பட்டுத் தேரோட்டிவைக்கிறோமென்கிற வியா பார வபிமானத்தினால் அவர்கட்கு நியமிக்கப்பட்டுச் சொஸ்தனாயிருக்கிற பிரபுவினிடத்தில் நானிரண்டுநாழி கையில் தேரோட்டிவைத்தேனென் றெப்படி தோற்று கின்றதோ அப்படிபோல, ராகத்துவேஷசுபாவமான கர்த் ருத்வமும் அத்திபாசத்தினால் ஆத்மசுபாவமாய்த்தோற்

றுகின்றது. விசாரிக்குமிடத்தில் ஆத்மாவுக்குச் சர்வாத்மனுயில்லை. ஆகையால் நிராகாரமாய் நிர்விகாரனுன ஆத்மாவே தானென்று ஸ்ரீசற்குருகடாக்ஷத்தினுல்தெளிந்து ஆத்மசந்நிதானத்தில் திரிவிதகரணத்துண்டானகர்த்தவ்வியமும் அதனுல்விளைகிறவினையும் முக்கியபலமும் அவாந்தரபலமும் சுவபக்ஷமாய் சங்கையற வெவனறிகிருனே அவனே ஜீவன்முத்தனென்று சுருதிஸ்மிருதியாதிகளிற் சொல்லுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

கர்மத்திரயநிருபகம்

முற்றிற்று.

ஏழாவது,

இராகத்துவேஷநிருபகம்.

ச-கை. திரிவிதகரணங்களும் எந்தராகத்துவேஷாதிகளால்பிரேரிக்கப்பட்டுத் திரிவித கர்மங்களைச்செய்கின்றது? அதுகளெத்தனைவிதமா யிருக்குமென்னில்,

உ-ம். இராகம். துவேஷம். காமம். குரோதம். லோபம், மோகம், மதம், மச்சரம், இரிஷை, அசூயை டம்பம், தர்ப்பம், அகங்காரம்; இச்சை, பத்தி, சிரத்தை எனப் பதினுறுவிதமாயிருக்கும்.

ச-கை. அவை யெவ்வாறென்னில்,

உ-ம். ஸ்திரீவிஷயமான சித்தவிருத்திக்கு ராகமென்றும், ஒருவனபகாரம்பண்ணினுல் அவ் வபகாரத்திற்குப் பிரிதியபகாரம்பண்ணவேண்டுமென்கிற சித்தவிருத்திக்குத்துவேஷமென்றும், கிரகக் கிராமக்ஷேத்திர தனதான்யாதிகள் மேலுமேலுஞ் சம்பாதிக்க வேண்டுமென்று வருகிறசித்தவிருத்திக்குக் காமமென்றும், தான் சம்பாதிக்கின்ற ஒருவஸ்துவினிடத்தில் எவனெருவன் விக்கினம்பண்ணுகிருனே அவன்பேரில் வியாக்கிரமரூபமாய்ச் சீறிவருகிற சித்தவிருத்திக்குக் குரோதமென்றும், அங்ஙனம் பிரயாசையடைந்து சம்பாதித்த பொருள்களை எந்தவிஷயத்திலுஞ் செலவுபண்ணப்படாதென்று வருகிற சித்தவிருத்திக்கு லோபமென்றும், தான்சம்பாதித்த பதார்த்தத்தினிடத்தில் பிரியமோதப் பிரமோதமாய் வருகிற

சித்தவிருத்திக்கு மோகமென்றும், ஐசுவரியகோலாகலத்திறற் கொர்வித்து கிர்த்தியாகிர்த்தியங்க ளறியாமல்விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு மதமென்றும் ஒருவன் தன்னிலும் அதிகபாக்கியவந்தனுயிருந்தால் அவன்செல்வத்தைப் பார்க்கச் சகிக்காமல்வருகிற சித்தவிருத்திக்கு மச்சரமென்றும், பிறருக்குத் துக்கம் வரவேண்டுமென்றும் தனக்கு வரக்கூடாதென்றும் எண்ணுகிற சித்தவிருத்திக்கு இரிஷையென்றும் நனக்குச் சுகம்வந்தது போல மற்றொருத்தருக்கு வரக்கூடுமாவென்றுவிகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு அசூயையென்றும், தான் செய்யப்படுகிற தானதர்மங்களைப் பலபேரு மறிந்துதன்னைச் சபாசென்று மெச்சவேண்டுமென்று வருகிற சித்தவிருத்திக்கு டம்பமென்றும், நானேதொட்டவான்மற்றவர்களெல்லாம் எனக்குச்சரியாவார்களாவென்றெண்ணுகிறசித்தவிருத்திக்குத் தர்ப்பமென்றும், ஆ! என்னையறியாயா! நீயா என்னைத்தெண்டிக்கிறவன்! நான்பிடித்தகாரியத்தை விடுகிறதில்லையென்று விகற்பித்துவருகிறசித்தவிருத்திக்கு அகங்காரமென்றும், அநிர்வாச்சியமானசவுசாதிகிரியைகளைச் செய்யவேண்டுமென்றுவருகிற சித்தவிருத்திக்கு இச்சையென்றும், குருதேவதைகளிடத்தில் வருகிறபிரீதிக்குப் பத்தியென்றும், குரு வேதாந்த வாக்கியாதி கிரிகைகளிடத்தில்வருகிற விவகாரத்திற்குச் சிரத்தை யென்றுஞ் சொல்லப்படும்.

ச-கை. இங்ஙனம் விசாரிக்கு முறைமையேதென்னில்,

உ-ம். இந்தராகத்துவேஷாதிகள் நிரேதுகமாய்யெத்தனம்பண்ணுமலேவரும். ஆயினும் இராகமுத லகங்கார மீறன பதின்மூன்றின் வசத்தனுய் ஒருபுருஷன் திரிவிதகரணங்களினுல் திரிவிதகர்மங்களைச் செய்வானுகில் அவனுக்கு நரகத்திலிருந்து நிவர்த்தி யெந்தக்காலத்திலு மில்லவேயில்லை. ஆதலால் இராகத் துவேஷாகாரமான சித்தவிருத்திகளைத்திருப்பிச் சர்வப்பிரகாரத்தினலேயுஞ் சிரத்தாபத்தி ரூபமாகச்செய்வானுகில், அவன் கிரமத்தினுல் சீக்கிரமாகச் சமுசாரபந்தத்திலிருந்து விடுபட்டு முத்தனுவான். ஆகையினுல் சிரத்தாபத்திகளே யவசியஞ் சம்பாதிக்கவேண்டும். இச்சையினுற் செய்யப்பட்ட பசி

தாகநிவர்த்தியும், மலமூத்திர விசர்ச்சனமுஞ் செய்யாமற்போனால், தற்காலத்திற்கு வாதைவரும்; செய்ததேயுண்டானால் தற்காலத்திற்கு உபாதிநிவர்த்தியாம். இதுகளால் சொர்க்கநரகப் பிராப்தியில்லையென் றறியவேண்டியது.

ச-கை. இப்படி விசாரித்ததற்குப் பலமேதென்னில்,

உ-ம். சுழுத்தியவஸ்தையிலும், தூஷணீம்பூதாவஸ்தையிலும் சமாதியவஸ்தையிலும் இராகத்துவேஷாதிக ளில்லாதபடியினால் கர்மமில்லை; சாக்கிரசொப்பனங்களில் அதுகளுண்டாயிருக்கிறபடியினால் கர்மமுண்டு. ஆதலால் இராகாதிகணீங்கினவிடத்திற் கர்மமில்லை. அதுகளுண்டானவிடத்திற் கர்மமுண்டென்று அன்வயவெதிரேகத்தினாலறியவேண்டியது.

ச-கை. இந்த ராகத்துவேஷாதிக ளெதினால் வருகிறதென்னில், அபிமானத்தினால் வருகின்றது.

ச-கை. சமஸ்தமானபேர்களுக்கும் அபிமான பூர்வகமாகப் பிரவிர்த்தி வருமாவென்னில்,

உ-ம். வரும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஸ்திரீஜனங்களுக்கு நான் ஸ்திரீயென்று எப்போ தபிமானம்வருகின்றதோ, அப்போதே ராகாதிபூர்வகமாய் புருஷனிடத்தில் சிசுரூஷைகளிலும், கிரகசவரக்ஷணைகளிலும், பாகாதிக்கிரியைகளிலும், தனதான்யாதியார்ச்சிதங்களிலும் பிரவிர்த்திகாணப்படுகின்றது. அதுபோல புருஷாளுக்கும்நான் புருஷனென்றெப்போ தபிமானம்வந்ததோ, அப்போதேராகாதிபூர்வகமாய்தாராதிகிர்கக்கிருஷியாதிகளிலும், தனதான்யாதியார்ச்சனைகளிலும் பிரவிர்த்திகாணப்படுகின்றது. அப்படியேசமஸ்த பிராணிகளுக்கும் வர்ணாச்சிரம தர்மாபிமானத்தினாலும்சுயவுசித வியாபாரங்களினாலும்ராகாதிகளுண்டாகின்றது. இதுகளுண்டாகிறதற்கு அபிமானமேகாரணம். ஆகையினால் முமூக்ஷுவானவர்கள் சாதியாசிரம நாமரூபக்கிரியைகளாகிற விஷயங்கள் தானல்லாதபடியினால் சகலவஸ்துக்களினிடத்திலும் ரூடமான அபிமானத்தைவிடவேண்டும். அப்படிவிட்டால் துக்கத்தினிடத்திலிருந்துவிடுபடுவார்களெ

ன் றறிகிறதே இந்தவிசாரத்திற்குப்பலம். ஆனபடியினால் அபிமான முண்டானால் ராகாதிகளுண்டு; இல்லாவிட்டால் ராகாதிகளில்லையென்று சுழுத்தி சமாதிமூர்ச்ஷணீம் பூதாவஸ்தைகளிற் பார்த்துக்கொள்ளவேண்டியது.

ச-கை. ஆனாலபிமானமெதினால்வருகிறதென்னில்,

உ-ம். அவிவேகத்தினால் வருகிறது.

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். சமஸ்தமானபேர்களுக்கும் நான் பிராமணன், நான்க்ஷத்திரியன், நான்வைசியன், நான்சூத்திரனென்றுபிராமணத்வாதியபிமானம் அவிவேகமாய் வருகின்றது. இவ்வபிமானமெதைப்பற்றிவருகிறதென்றுயாரும் விவேகிக்காதபடியினால், அவ்வபிமானமே மேலீடாய்வருகின்றது.

ச-கை. இதற்கு ஆசிரயமில்லையா வென்னில்,

உ-ம். இல்லை.

ச-கை. சரீரத்தைப்பற்றி வருகிறதென்று சொல்லுவோமே னெில்,

உ-ம். க்ஷத்திரியருக்குஞ் சரீரஞ்சாதாரணமாயிருக்கிறபடியினாலவர்களுக்கும் நான் பிராமணனென்று அபிமானம் வரவேண்டும். அப்படி வராமையினால், பிராமணத்வம் சரீரத்தைப்பற்றி வருகிறதென்று சொல்லப்படாது.

ச-கை. சிகை பூணநூலைப்பற்றி வருகிறதாவென்னில்,

உ-ம். சிகை பூணநூல் குசவனுக்குஞ் சாதாரணமாயிருக்கிறபடியினாலவர்களுக்கும் பிராமணத்வம் வரவேண்டும். அங்ஙனமின்மையால் சிகை பூணநூலைப்பற்றி வருகிறதென்று சொல்லப்படாது.

ச-கை. அவயவங்களுக்குப் பிராமணத்வஞ் சொல்லுவோமே எனில்,

உ-ம். ஒவ்வொரு அவயவங்களுக்கும் பேர் வெவ்வேறாயிருக்கிறபடியினாலவயவங்களுக்கும் பிராமணத்துவமில்லை.

ச-கை. ஆனால் விசிட்டமான மாதாபிதாக்களுக்குப் பிறந்த அவயவங்களுக்குப்பிராமணத்துவங்கற்பிக்கலாமே என்னில்.

உ-ம். விசிட்டமான மாதா பிதாக்களினாற் கழிக்கப்பட்ட கேசநகதந்த மலமூத்திராதிகளுக்கும் பிராமணத்துவம் வரவேண்டும். அப்படிவராதபடியினால் ஒன்றுக்கும் பிராம

ணத்துவம் வரவேண்டும். அப்படி வராதபடியினால் ஒன்றுக்கும் பிராமணத்துவ மொருவராலுஞ் சொல்லக்கூடாது.

ச-கை. ஆனாலிந்தப் பிராமணத்துவத்திற்குக் கெதிதானென்னவெனில்,

உ-ம். சோபனமென்று முச்சவமென்றுஞ் சந்தையென்றும் அனேகவஸ்து சமுகத்திற் கந்தந்தப் பெயரெப்படி வந்ததோ, அதுபோல அசர்வஜன்னியமான தேகேந்திரியாதி சங்கத்திற்குத் தொழில் விவகாரத்தினிடத்தில் ஐதீகமே பிராமணனென்றபெயர். அதுபோல க்ஷத்திரியனென்றும், வைசியனென்றும், சூத்திரனென்றும், ஸ்திரியென்றும், புருஷனென்றும், தீட்சதனென்றும், சாஸ்திரீயென்றும், புராணிகனென்றும், அவதானியென்றும், ஜீயரென்றும், பாகவதனென்றும், தமிழனென்றும், கர்னாடகனென்றும், தத்துவாதியென்றும், மாறுவஷ்டகனென்றும், குச்சிலியனென்றும் இதுமுதலான சமஸ்த நாமங்களுந் தேகேந்திரியாதி சங்க விஷயத்தினாலே ஐதீகமாய் வருகிறபடியினால் பிராமணத்துவம் தேகேந்திரியாதி சங்கத்திற்கேயல்லாம லாத்மாவுக்குக் காலத்திரயத்திலுமில்லை. இப்படி பகுத்தறியாமலிருக்கிறதே யவிவேகம். இந்த வவிவேகத்தினா லபிமானம் வருகின்றது.

ச-கை. இப்படி விசாரித்ததற்குப் பலமேதென்னில்,

உ-ம். ஆத்மாவுக்குக் காலத்திரயத்திலும் பிராமணத்வாதிகளில்லையென்றும், தேகேந்திரியாதிகளுக்கே ஐதீகபிராமணத்வாதிகளென்று மறிவதே பலம்.

ச-கை. இந்த அவிவேக மெதினால் வந்ததென்னில்,

உ-ம். அஞ்ஞானத்தினால் வந்தது.

ச-கை. அஞ்ஞானசொரூப மேதென்னில்,

உ-ம். தன்னைத் தானறியாமலிருக்கிறதே யஞ்ஞானம்.

ச-கை. தன்னைத்தானறியார்களென்றசொல்லலாமாவென்னில்,

உ-ம். சொல்லலாம். எப்படியென்றால் நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான்சூத்திரன், நான் இந்தக்குலத்திற்பிறந்தவன், நான் இன்னகோத்திரனென்று இந்தச்சரீரத்தையே யாத்மாவாக வறிகிறார்களல்லாமல் சரீரவன்னியரான ஆத்மாவை யாரு மறியமாட்டார்கள்

ச-கை. சாஸ்திரிமார்கள் சரீர வன்னியமான ஆத்மா வுண்டென்றுசொல்லியிருக்க, யாருமறியார்களென் றெப்படிசொல்லலாமெனில்,

உ-ம். சொல்லலாம். எப்படியென்றால் கர்த்தா போக்தாவாய், பரிச்சின்னனாய் காலாந்தரத்திலும் பிறந்திறக்கப்பட்ட ஜீவனையாத்மாவாகவறிகிறார்களேயல்லாமல்; அகர்த்தா, அபோக்தா, அபரிச்சின்னன், அசங்கன், அசம்சாரி, அத்துவிதனென்னப்பட்ட வேதாந்த வேத்தியனானபிரத்தியேகாத்மாவை யாரும் அறியார்கள் அதையறியாமலிருந்ததே யஞ்ஞானம். அவ்வஞ்ஞானத்தினால்தான் அவிவேகம் வருகிறது.

ச-கை. அந்த அஞ்ஞான மெதினால் வருகிறதென்னில்,

உ-ம். அஞ்ஞானம் அநாதியாகையால் ஒன்றினால்வருகிறதென்றுசொல்லக்கூடாது.

ச-கை. அதின்சொருபந்தா னேதென்னில்,

உ-ம். சத்து, அசத்து; சதசத்து; சாவயம், நிரவயம்; சாவயநிரவயம், பின்னம், அபின்னம், பின்னா பின்னமென்றென்பதுபிரகாரமாயிருக்கும்.

ச-கை. ஆனால் சத்தென்று சொல்லலாமே யென்னில்,

உ-ம். ஞானத்தினா லழிகிறபடியால் சத்தென்னப்படாது.

ச-கை. ஆனால் அசத்தென்று சொல்லலாமே யென்னில்,

உ-ம். சசவிஷாணாதிகள்போ லில்லாமற் போகவேண்டும். நானஞ்ஞானியென்னு மனுபவ மிருக்கிறபடியினால் அசத்தென்னக்கூடாது.

ச-கை. சதசத்தென்று சொல்லலாமே யென்னில்,

உ-ம். ஒருவஸ்துவுக் கிரண்டுபட்சங் கூடாதபடியினால் விருத்தம்வரும். ஆதலாற் சதசத்தென்னப்படாது.

ச-கை. சாவயமென்று சொல்லலாமேயென்னில்,

உ-ம். மூலகாரணமான அத்துவிதவஸ்து இல்லாமற்போகவேண்டும். இருக்கிறபடியினால் சாவயமென்றுஞ் சொல்லப்படாது.

ச-கை. நிரவயமென்று சொல்லலாமே யென்னில்,

உ-ம். ஜகதாகாரமாய்ப் பரிணமிக்காம லிருக்கவேண்டும். பரிணமிக்கிறபடியினால் நிரவயமென்றுஞ் சொல்லப்படாது.

ச-கை. சாவயநிரவயமென்று சொல்லலாமே யென்னில்,

உ-ம். விருத்தமானபடியால் அந்தபட்சமுங்கூடாது.

ச-கை. பின்னமென்று சொல்லலாமே யென்னில்,

உ-ம். அத்துவிதத்திற் கானிவரும்.

ச-கை. வந்தால் வரட்டுமேயென்னில்,

உ-ம். ஆத்மா அத்துவிதனென்று சொல்லப்பட்ட சுருதிகளுக்குப் பேதம்வரும், அதுமாத்திரமல்ல; மாயைக்கு ஆத்மசத்தையல்லாமல் வெதிருத்தமான சத்து வேறில்லாதபடியினால், ஆத்மாவையன்றி வேறே பின்னமான பதார்த்தமென்று சொல்லக்கூடாது; அன்றியும் ஆத்மசத்தியில்லாமற் போகவேண்டும்.

ச-கை. போனால் போகட்டுமேயென்னில்,

உ-ம். ஆத்மசத்தியைப் பிரதிபாதிக்கிற சுருதிகளுக்குப்பேதம் வரும்.

ச-கை. ஆனால் அபின்னமென்று சொல்லலாமேயென்னில்.

உ-ம். மாயைக்குச் சேதனத்துவமுண்டாகி அசேதனத்துவ நீங்கிவிடும். ஆத்மாவுக்குஞ் சேதனசேதன சொரூபம் வரும். அப்போது மாயையென்று சொல்லாமல் ஆன்மாவென்று சொல்லவேண்டும்.

ச-கை. அப்படி சொல்லுவோமே யென்னில்,

உ-ம். மாயை, பிரகிருதி, பிரதானம், அவித்தை, பிரளயம், தமசு, மகாசுழுத்தி, அஞ்ஞானமென்று ஆத்மப் பிரதிபாதகத்திற் கன்னியமான சத்தத்தினாற் சொல்லுகிறபடியாலாத்மாவென்று சொல்லக்கூடாது.

ச-கை. ஆனால்பின்னாபின்னமென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். அப்படியுஞ் சொல்லப்படாது.

ச-கை. எப்படிதான் சொல்லலாமென்னில்,

உ-ம். அநிர்வசன்யமென்றே சொல்லவேண்டும். அந்த அநிர்வசன்யமான அஞ்ஞானத்தின லவிவேகமும், அதனலபிமானமும், அதனால் ராகத்துவேஷாதிகளும், அதனாற் கன்மமும், அதனாற் சரீரமும், அந்தச் சரீராபிமானத்தினால் துக்கமும் வருகின்றது.

ச-கை. அந்தத் துக்கத்திற்கு அத்தியந்தநிவிர்த்தி யெப்போது வருமென்னில்,

உ-ம். சர்வாத்மனாய் சரீரபரிக்கிரகமில்லாமற்போனால் வரும்.

ச-கை. சரீரபரிக்கிரகஞ்சர்வாத்மனாயெப்போது போமென்னில்,

உ-ம். ராகத்துவேஷங்கள் போறற் போம்.

ச-கை. அவை யெப்போது போமென்னில்,

உ-ம். அபிமானம் போறற்போம்.

ச-கை. அஃதெப்போது போமென்னில்,

உ-ம். அவிவேகம் போறற் போம்.

ச-கை அஃதெப்போது போமென்னில்,

உ-ம். அஞ்ஞானம் போறற்போம்.

ச-கை. அஃதெப்போது போமென்னில்,

உ-ம். சர்வாத்மனுய் அத்துவிதப் பிரமாயிக்கப் பிரத்தியக்ஷ ஞானம்வந்தாற் போமன்றி, மற்றோ ருபாயத்தினுலும் போகாது.

ச-கை. கன்மத்தினு லஞ்ஞானம் போமென்று சொல்லலாமே யெனில்,

உ-ம். கன்மத்திற்கு மஞ்ஞானத்திற்கும் விரோதமில்லாதபடியி ஞற் போகாது. மேலுமேலும் அஞ்ஞானத்தையே விரு த்திபண்ணும்.

ச-கை. எப்படி விருத்திபண்ணுமென்னில்,

உ-ம். திருஷ்டாந்தமாகக்கேள்; அமாவாசையிருளுக்குவிரோத மின்றிய மேகாவரணம் அந்தகாரத்தைக் கெடாமல் மேலுமேலும் அபிவிர்த்திசெய்விப்பதுபோல கன்மமு மஞ்ஞானத்தைக்கெடாமல் மேலுமேலும் அபிவிர்த்தியே செய்விக்கும் அதுவுமல்லாமல் அந்தகாரவிரோதமான சூரியப்பிரகாசத்தினுல் அந்தகாரங் கெடுவதுபோல, அ ஞ்ஞான விருத்தமான அத்துவிதப்பிரமாயிக்கப் பிரத்தி யக்ஷஞானப் பிரகாசத்தினுல் அஞ்ஞானங்கெடுமன்றிப் பின்னரெதினுலுங்கெடாது.

ச-கை. இந்தப் பிரமாயித்ய ஞானமெதினுல் வருமென்னில்,

உ-ம். ஆத்மானத்ம விசாரத்தினுல் வருமேயன்றி மற்றென்றி னுலும் வாராது.

ச-கை. கன்மவுபாசனையினுலுங் கிரியாயோகங்களினுலும் வரு மென்று சுருதியாதிகள் சொல்லுகின்றதேயென்னில்,

உ-ம். அந்தக்கருத்து அப்படியல்ல. புருஷதந்திரமான கன்ம வுபாசனைகளாலும், ஜபதப தியானங்களாலும், யோகங் களாலும் அந்தக்கரணசுத்தி வருமன்றி, ஞானம்வஸ்து தந்திரமாயிருக்கிறபடியினுல் ஞானம்வராது. மானசங்

கிரியைகளான வுபாசனைகளாலும், ஒன்றையு நினையாம லிருக்கிறதினாலும், ஏகாக்கிரசித்தம் வருமேயன்றி, அப்பிரமாண ஜன்னியமான ஞானம்வராது. யோகமும் மானசக், கிரிகைரூபமானபடியினால், அணிமாதி யயிஸ்வரியஞ் சம்பாதித்து ஞானபலமாகிய கிருதகிருத்தியங்களுக்கு விக்கினம்பண்ணுவிக்குமேயன்றி ஞானமுண்டுபண்ணாது.

ச-கை. ஞானமெதினால்தான் வருமென்னில்,

உ-ம். ஆத்மானாத்ம விசாரத்தினா லாசாரிய ரறிவிக்கவரும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். காயத்திரி சாளக்கிராமம் ரத்தினாதிகளுடைய தத்துவக்கியானம், அது அதுகளுக்குத்தக்க வுசிதமான பரிட்சை நிஷ்கரிஷை யறிந்தவன் சொல்லக்கேட்ட விசாரத்தினாலெப்படி தெரியப்படுகின்றதோ, ஸ்நான சந்தியானுஷ்டான ஜபதபஹோம பிராணாயாமங்களினாலெப்படிதெரியப்படவில்லையோ, அப்படியே ஆத்மஞானமுங்குருசந்நிதானத்திற்செய்கிற ஆத்மானாத்ம விசாரத்தினாலேயே யுண்டாகுமன்றிக் கன்மவுபாசனைகளினா லுண்டாகாது. ஆதலால் முமுக்ஷுவானவர்கள் சர்வப்பிரகாரத்தினாலும் அனுபவியான ஞானாசிரியரிடத்திற் பழகிச்சார்வதா ஆத்மானாத்ம விசாரம்பண்ணவேண்டும். அப்படியில்லாமல் சம்சயவிபரீத பாவனைநீங்காத வாசாஞான ஆசிரியரும் தத்துவத்தைப் பிரித்து ,நிர்க்குணபாவத்தை அறிவிக்க மாட்டாதவரும், நிஷ்களத்திற் செல்லவுமடையவும் வழிகாட்டமாட்டாதவரும், டம்பவேஷமுடையவரும், கொக்கைப்போ லசையாதிருந்து காரியநிமித்தியம் பரிசம் பண்ணுகிறவரும், மந்திர லய அடயோகங்களி லொரு லக்ஷியத்தைச்சொல்லி அதிற்பழகப்பழக அந்தக்கரணவிருத்திசூனியமும் உபசாந்திமயக்கமுமுண்டாவதையே பொருளென் றறிவிக்கப்பட்டவருமாகிய அனாசிரியரை நம்பினால், கழுதைவாலைப்பிடித்துக் காவேரிக்கரையேறக்கூடாதுபோலவும், செல்லாதநாசு நோட்டக்காரருக்குச் செல்லாதுபோலவும், சித்திரசூரியனாலந்தகாரம் போகாதுபோலவும், அனுபவமே திருமேனியாகாத குருசேவையினா லஞ்ஞானம் போகாது, சம்சயமு நீங்காதென்று சதலவேதாந்தங்களுஞ் சொல்லப்படுகின்றது. ஆகையி

னுல் சொப்பிரகாசசொரூபமே திருமேனியாகிய காரண குருவைநம்பினுல் அப்படிநம்பின சிஷனைவீட்சித்து அவனுடைய அஞ்ஞானமும் அதனுல்வரும் அவிவேகமும் அதனுல்வரும் கன்மமும் அதனுல்வருஞ் சரீரமும் அதனுல்வருந்துக்கமும் அத்தியாசத்தினு லாரோபிதமானதென்று சந்தேகவிபரீதமற உள்ளங்கை நெல்லிக்கனி போ லனுபவமா யெடுத்தறிவிப்பார். அப்படியறிவித்த விடத்தில் அவன்சமுசாரத்திலிருந்து விடுபட்டுச் சீக்கிரமாகச் சீவன்முத்தி சுகத்தைப்பெறுவானென்று சகல சுருதி ஸ்மிருதியிதிகாச புராணுதிகளிலுஞ்சொல்லப்படுகின்றது. இதிற்சம்சயமில்லை சித்தம்.

இராகத்துவேஷநிருபகம்

முற்றிற்று.

எட்டாவது,

ஆத்மானுத்மவிசாரநிருபகம்.

ச-கை. ஆத்மானுத்ம விசாரம் பண்ணவேண்டுமென்று சுருதியாதிகளிற் சொல்லுகின்றபடியால் ஆத்மாவாவதேதென்னில்,

உ-ம். சரீரத்திரயத்திற்கும் பஞ்சகோசத்திற்கு மன்னியமாய் அவஸ்தாத் திரயத்திற்குச் சாட்சியாயிருக்கிற சச்சிதானந்தசொரூபமே யாத்மாவென்று சொல்லப்படும்.

ச-கை. அனுத்மாவாவ தேதென்னில்,

உ-ம். சமஷ்டி வியஷ்டி யாத்மகமாகிய சரீரத்திரயங்களையனுத்மாவென்று சொல்லப்படும்.

ச-கை. அதற்கு லட்சண மேதென்னில்,

உ-ம். அசத்து, சடம் துக்கமென்று சொல்லப்படும்.

ச-கை. சமஷ்டி வியஷ்டியாவ தேதென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் வெகுஜனமென்பதுசமஷ்டி; ஒருபுருஷனென்பது வியஷ்டி. தோப்பென்கிறது சமஷ்டி; ஒரு விருக்ஷமென்கிறது வியஷ்டி. கிராமமென்பது சமஷ்டி; ஒருகிரகமென்பது வியஷ்டி. இப்படியே யனேகபதார்த்தங்கள் கூடினது சமஷ்டி; ஒரு பதார்த்தமென்பது விய

ஷ்டி அப்படிபோல தார்ஷ்டாந்தத்திலும் சமஸ்தபிராணி களுடைய சரீரங்கள் சமஷ்டி; ஒரு பிராணியுடைய சரீரம் வியஷ்டி. அதுகளும் ஸ்தூல சூட்சுமகாரணமென்று மூன்றுவிதமாயிருக்கும். அவற்றுள் சகல பிராணிகளுடைய ஸ்தூலசரீரம் சமஷ்டி ஸ்தூலசரீரம்; சகல பிராணிகளுடைய சூட்சுமசரீரம் சமஷ்டி சூட்சுமசரீரம்; சகலபிராணிகளுடைய காரணசரீரம் சமஷ்டி காரணசரீரம். ஒவ்வொரு பிராணிகளுடைய ஸ்தூல சூட்சுமகாரணசரீரம் வியஷ்டியென்று சொல்லப்படும்.

ச-கை. இப்படி சமஷ்டி வியஷ்டிகளா யேன்சொல்ல வேண்டுமென்னில்,

உ-ம். ஆத்மாவுக்கு ஈஸ்வரத்துவமுஞ் சீவத்துவமுஞ்சொல்லுகிற நிமித்தியஞ் சொல்லவேண்டும்.

ச-கை. ஈஸ்வரத்துவமுஞ் சீவத்துவமும் இனிமேலா வரப்போகிறதென்னில்,

உ-ம். ஈஸ்வரத்வமும் சீவத்துவமு முபாதியினு லனுதியாய்வந்திருக்கிறது. ஆனபோதிலும் ஈஸ்வரத்வமும் சீவத்வமு முபாதியினுல் வந்ததென்று எவருமறியார்கள்.

ச-கை. பின்னை எப்படி யறிகிறுர்களென்னில்,

உ-ம். ஈஸ்வரத்வமுஞ் சீவத்வமும்நித்யமென்றே யறிகிறுர்கள்.

ச-கை. அப்படியறிந்தால் தோஷமேதென்னில்,

உ-ம். எந்தமட்டும் இப்படிநித்தியமென்றறிகிறுர்களோ, அந்தமட்டும் அவர்களுக்குச் சமுசாரத்திலிருந்து நிவிர்த்தி வராது. ஆகையினுல் சர்வப்பிராணிகளுக்குந்தாயாயிருக்கப்பட்ட சுருதிக ளீஸ்வரத்வமுஞ் சீவத்வமு முபாதியினுல் வந்ததென்றுசொல்லுகிறநிமித்தியம் சமஷ்டிவியஷ்டிகளாகப் பகுத்துச் சொல்லுகின்றது.

ச-கை. ஆனுல் எந்தவுபாதியினு லீஸ்வரத்வமு மெந்தவுபாதியினுற் சீவத்வமும் வருகிறதென்னில்,

உ-ம். சமஷ்டி சரீரவுபாதித்திரயத்தினு லீஸ்வரத்துவமும், வியஷ்டிசரீரவுபாதித்திரயத்தினுற் சீவத்துவமும் வருகின்றது.

ச-கை. ஈஸ்வரனுக்குச் சமஷ்டி காரணசரீரமாத்திரம் போதாதோவென்னில்,

உ-ம். போதும்.

ச-கை. சமஷ்டி ஸ்தூல சூட்சும சரீரங்களேன் சொல்லவேண்டுமென்னில்,

உ-ம். உபாசனை நிமித்தியமாய்ச் சொல்லப்படுகிறது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். முக்கிய அதிகாரியானவர்களுக்குச் சமஷ்டி. காரணசரீரவுபாசகரான ஆத்மாவையே யுபாசிக்கப்படுமென்றுசொல்லப்படும். இவருக்கே ஈஸ்வரனென்றும், அந்தரியாமியென்றும், அவ்வியாகிருதனென்று மூன்றுபெயர்.

ச-கை. இவருக்குச் சமஷ்டிகாரணசரீரத்தி லபிமானமுண்டோ வில்லையோ வென்னில்,

உ-ம். அபிமான மகங்கார தர்மமானபடியினா லவ்வவஸ்தையி லகங்காரமில்லை. ஆகையா லபிமானமுண்டென்றுசொல்லக்கூடாது.

ச-கை. பின்னை எப்படியென்னில்,

உ-ம். ஆத்மாவுக்குச் சமஷ்டிகாரண சரீரவிசிட்டமாத்திரத்துவமே யீஸ்வரத்வமென்று சொல்லவேண்டும். இந்தவீஸ்வரனையுபாசிக்க வல்லமையில்லாதவர்களுக்கு அவ்வீஸ்வரனுக் கந்தர்க்கதமான சமஷ்டிசூட்சுமசரீரவுபாதிக்கே யீஸ்வரனென் றுபாசிக்கும்படி சுருதி சொல்லுகின்றது. அவ்வீஸ்வரனுக் கிரணியகர்ப்பனென்றுஞ்சூத்திராத்மாவென்றும் பிராணனென்று மூன்றுபெயர்.

ச-கை. இவருக்குச் சூட்சுமசரீரத்தி லபிமானமுண்டோ வில்லையோவென்னில்,

உ-ம். அபிமானத்திற் காசிரயமான ஸ்தூலசரீர மில்லாதபடியினால் அபிமானமுண்டென்று சொல்லக்கூடாது.

ச-கை. பின்னை என்னவென்னில்,

உ-ம். சமஷ்ட சூட்சுமசரீர விசிட்டமாத்திரத்துவமே இரணியகர்ப்பத்துவமென்று சொல்லவேண்டும். இவரையுபாசிக்க வல்லமையில்லாதவர்களுக்கு அந்த ஈஸ்வரனுக்கவஸ்தாந்தர்க்கதமான சமஷ்டி ஸ்தூலசரீரவுபாதிகரேயீஸ்வரனென் றுபாசிக்கும்படி சுருதிசொல்லுகின்றது. அந்த ஈஸ்வரனுக்கு விராட்டென்றும் வைஸ்வானரனென்றும் வைராசசனென்று மூன்றுபெயர்.

ச-கை. இருவருக்குச்சமஷ்டிஸ்தூலசரீரத்திலபிமானமுண்டோ வில்லையோவென்னில்,

உ-ம். நிர்ணயமான ஒரு சரீரமில்லாதபடியினு லபிமானமுண் டென்று சொல்லப்படாது.

ச-கை. பின்னை யெப்படியென்னில்,

உ-ம். சமஷ்டி ஸ்தூலசரீர விசிட்டமாத்திரத்துவமே யீசுவரத் துவமென்றுசொல்லப்படும். அந்த அந்தரியாமியே சாத் துவீகாதி குணங்களிற்கூடி, சிருஷ்டி திதி சங்காரகர்த் தாவாய், பிரம விஷ்ணு ருத்திரனென்று பேர்வந்தவிடத் திலும் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலன நிமித்தியமாய் ராமகிருஷ்ணவதாரங்க ளெடுக்குமிடத்திலும் அந்த ஈஸ் வரனுக் கந்தந்தச் சரீரங்களிடத்திற் சிருஷ்டித்துவாரா அபிமானங்களுண்டு.

ச-கை. அவ்வபிமானமு மில்லையென்று சொல்வோமேயெனில்,

உ-ம். அப்படியானாற் சிருஷ்டி திதி சங்காரங்கள் நடக்காது. ஆகையால் அபிமானமுண்டென்றே சொல்லவேண்டும்.

ச-கை. ஆனாற் சீவர்களுக்கு மீஸ்வானுக்கும் பேதலக்ஷண மே தெனில்,

உ-ம். ஜீவர்களுக்குத் தானென்றவபிமானவகமுண்டாயிருக்கிற படியினாலும், சுயசரீரங்களி லபிமான மிருக்கிறபடியினா லும், ஈஸ்வரனுக்கிப்படிப்பட்டவபிமான மில்லாதபடியி னாலும்,லோகசம்ரட்சணார்த்தமாகவேயபிமானமிருக்கிற படியினாலும், சீவர்களுக்கு மீஸ்வரனுக்கும் பேதலட் சணமுண்டு. இந்த ஈஸ்வரனையே பிரதமாதிகளிடத்தி லுபாசிக்கப்படுமென்று வேதஞ்சொல்லுகின்றது.

ச-கை. அப்படியேன் சொல்லவேண்டு மென்னில்,

உ-ம். விராட்டை யுபாசிக்கப் பக்குவமில்லாதவர்கள் திரிமூர்த் திகளையுபாசிக்கவேண்டும்; அந்தத்திரிமூர்த்திகளை யுபா சிக்கப் பக்குவமில்லாதவர்கள் ராமகிருஷ்ணவதாரங்களை யுபாசிக்கவேண்டுமென்று சுருதியாதிகள் சொல்லுகின் றது. சர்வஜனங்களும் எந்தெந்தமூர்த்திகளை யுபாசிக் கின்றார்களோ, அந்தந்த மூர்த்திவழியாக அந்தரியாமி யான ஈஸ்வரனையே யுபாசிப்பதாகும்.

ச-கை. இந்தமூர்த்திகளை யுபாசிக்கவேண்டுமென்று சொல்லு கிற சுருதிகளுக்குத் தாற்பரியமேதென்னில்,

உ-ம். துவாராத் துவாரா அந்தரியாமியான சொரூபத்தையே யறியவேண்டுமென்று தாற்பரியம். இப்படியேயாத்மா

வுக்குச் சமட்டி சரீரத்திரய வுபாதியினா லீஸ்வரத்துவமும், வியட்டி சரீரத்திய வுபாதியினாற் ஜீவத்துவமும் வந்தது.

ச-கை. ஜீவத்துவத்துக்குச் சரீரத்திரயம்வேண்டுமா வென்னில்,

உ-ம். வேண்டும். ஜீவன் அந்தக்கரண பிரதிவிம்பனாகையினால் சூட்சுமசரீரம் வேண்டும். ஸ்தூலசரீர மில்லாவிட்டால் கர்த்துருத்வங்கூடாதபடியினால்ஸ்தூல சரீரம்வேண்டும். காரியமான ஸ்தூல சூட்சுமசரீரங்கள் காரணத்தைவிட்டிராதபடியினால் இவ்விரண்டுக்குங் காரணமான காரண சரீரமும் வேண்டும்.

ச-கை. ஜீவனுக்குச் சரீசத்திரயத்தி லபிமானமுண்டோ வில்லையோவென்னில்,

உ-ம். அபிமானமில்லாமற்கர்த்ருத்வங்கூடாதபடியினால்உண்டு.

ச-கை. ஆனால் இந்தச் ஜீவனுக் கெத்தனைபே ரென்னில்,

உ-ம். சாக்கிராவஸ்தையில் வியஷ்டி ஸ்தூலசரீரத்தி லபிமான கர்த்தாவான ஜீவனுக்கு விசுவன், வியவகாரிகன், சிதாபாசனென்றுமூன்றுபெயர். சொப்பனாவஸ்தையில்வியட்டிசூட்சுமசரீரத்தி லபிமானகர்த்தாவான ஜீவனுக்குத் தைசதன், பிராதிபாதிகன், சொப்பன கற்பிதனென்று மூன்றுபெயர். சுழுத்தியவஸ்தையில் வியஷ்டிகாரணசரீரத்தி லபிமான கர்த்தாவான ஜீவனுக்குப் பிராஞ்ஞன், பாரமார்த்திகன், அவிச்சின்னனென்று மூன்றுபெயர்.

ச-கை. ஒரு ஆத்மாவுக்கே யீஸ்வரத்வமென்றும். ஜீவத்துவமென்றும் இரண்டுரூப மெப்படி கூடுமென்னில்,

உ-ம். கூடும். திருஷ்டாந்தத்தில் ஒரு தேவதத்தனுக்கே புத்திரனை யபேட்சித்துத் தகப்பனென்றும், பேரனை யபேட்சித்துப் பாட்டனென்றும் பெயர்வந்ததுபோல,ஒருஆத்மாவுக்கே வியட்டி யுபாதியை யபேட்சித்துச் ஜீவனென்றுஞ் சமட்டியுபாதியை யபேட்சித்து ஈஸ்வரனென்றுஞ் சொல்லப்படும்.

ச-கை. தகப்பன் பாட்டனென்று சொல்லுகிற தர்மத்தையுடைய தேவதத்தனிடத்திற் கிஞ்சிக்ஞத்வ சர்வக்ஞத்வவுபாதிகள்காணோம். ஜீவத்வ வீஸ்வரத்வ தர்மங்களுடன் கூடியிருக்கிற ஆத்மாவினிடத்தில் கிஞ்சிக்ஞத்வசர்வக்ஞத்வவுபாதிகள் காணப்படுகிறபடியினால், அந்தத்திருஷ்டாந்த மெப்படி கூடுமென்னில்,

உ-ம். ஒரு ஆத்மாவுக்கே யிரண்டுபாதியினா லீஸ்வரத்வமுஞ் சீவத்துவமும் வருமென்பதற்காகத் வேதத்த திருஷ்டாந்தஞ்சொன்னோம். இனி மகத்வவுபாதியினால் ஆத்மாவுக்குச் சர்வக் ஞத்துவமும் அணுத்வ வுபாதியினால் கிஞ்சிக் ஞத்துவமும் வரலாமென்பதற்கு வேறொருதிருஷ்டாந்தஞ் சொல்லுகிறோம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். விஸ்தாரமான ஜலத்திற்கு ஏரியென்ற வுபாதியினாலனேகதானியமுதலானதுகளை விளைவிப்பதற்கும், சமஸ்த பிராணிகளுக்கும் ஸ்நானபானாதிக் கிரியைகளைச் செய்விப்பதற்குஞ் சாமர்த்தியமுண்டு. அற்பமான ஜலத்திற்குக் கடமென்ற வுபாதியினால் தாகபாகாதி முதலானகிரியைகளுக்குமாத்திரம் உபயோகப்படுஞ் சாமர்த்தியமுண்டு பின்னும் ஒருஅக்கினிக்கே தீவட்டியென்றவுபாதியினால் தூரமாயிருக்கிற பதார்த்தங்களைத் தெரியச்செய்கிறசாமர்த்தியமும், விளக்கென்ற வுபாதியினால் சமீபத்திலிருக்கிற பதார்த்தங்களைத் தெரியச்செய்கிற சாமர்த்தியமுமுண்டு. அதுகளைப்போல ஒரு ஆத்மாவுக்கே மகத்வமாகிய சமஷ்டி சரீரவுபாதியினால் சர்வக்ஞத்வமும், அணுத்வமாகிய வியஷ்டி சரீரவுபாதியினால் கிஞ்சிக்ஞத்வமும்வரும். அதனால் ஈஸ்வரத்வம் ஜீவத்வமென்று பேதம்வந்தது. பாரமார்த்திகத்தில் சீவேஸ்வரனுக்கு அபேதமேயன்றிப் பேதமில்லையென்று சுருதியாதிகளிற் சொல்லுகின்றது.

ச-கை. விருத்ததர்மத்திற் கூடியிருக்கிற சீவேஸ்வரனுக் கெப்படி யபேதங் கூடுமென்னில்.

உ-ம். கூடும். பூர்வதிருஷ்டாந்தத்தில் விருத்ததர்மத்துடன் கூடிய ஏரியென்ற வுபாதியோடு சேர்ந்திருக்கிற ஜலத்திற்குங் கடமென்ற வுபாதியோடு சேர்ந்திருக்கிற ஜலத்திற்கும் விருத்தாமிசைகளான ஏரி கடமென்ற வுபாதிகளை விட்டு, அவிருத்தாமிசைகளானஜலத்தினால்ஏகத்துவஞானம்வருகிறதுபோலும், விருத்ததர்மத்துடன்கூடிய தீவட்டியென்ற வுபாதியோடு சேர்ந்திருக்கிறஅக்கினிக்கும், விளக்கென்ற வுபாதியோடுசேர்ந்திருக்கிறஅக்கினிக்கும் விருத்தாமிசைகளான பெரியவத்தி சின்னவத்தியென்ற

வுபாதிகளைவிட்டு, அவிருத்தாமிசைகளான அக்கினி மாத்திரத்தினால் ஏகத்துவஞானம் வருகிறதுபோலும் விருத்ததர்மமான சர்வக்ஞத்வாதிகளுடன்கூடியிருக்கிற ஈஸ்வரனுக்கும் விருத்ததர்மமான கிஞ்சிக்ஞத்வாதிகளுடன்கூடியிருக்கிற ஜீவனுக்கும் விருத்தாமிசைகளான சர்வக்ஞத்வ வுபாதிகளைவிட்டு, அவிருத்தா மிசைகளான சைதன்யமாத்திரத்திற்கு ஏகத்துவஞானங்கூடும். இந்த அர்த்தமே சகலசாஸ்திரங்களிலும் சுயங்தேவதத்தா என்கிற திருஷ்டாந்த பூர்வகமாய் மகாவாக்கியத்திற்கு ஜகர்லட்சணை, அஜகர்லட்சணை, ஜகத்ஜகர்லட்சணைளால் சுருதியாதிகளி லர்த்தஞ்சொல்லப்படுகின்றது. ஆதலால் இந்தப்படி சொப்பிரகாசமே திருமேனியான சற்குருவினால் விசாரித்து நானே பிரமமென்றும் நானே யீஸ்வரனென்றும் சம்சயமில்லாமலும் உபாதியான வகம்பாவமில்லாமலும் எவரறிகிறார்களோ அவர்களே ஜீவன்முத்தரென்று சுருதி ஸ்மிருதியாதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

ஆத்மானாத்மவிசாரநிருபகம்

முற்றிற்று.

ஒன்பதாவது,

சரீரத்திரயவிலக்ஷணநிருபகம்.

ச-கை. ஆத்மா சரீரத்திரயவிலக்ஷணனென்று சுருதிகளிற்சொல்லுகிறபடி, சரீரத்திரய விலக்ஷணனான ஆத்மாவைச் சரீரத்திரயங்களையறியாமல் அறியப்படாது. ஆகையினால் சரீரத்திரய சொரூபமேதென்னில்,

உ-ம். ஸ்தூலசூட்சும காரணமென மூன்று சரீரங்களாம்.

ச-கை. இவற்றுள் ஸ்தூலசரீரமாவ தேதென்னில்,

உ-ம். கரசரண வவயவங்களாய் ஸ்தம்பம்போற் றோற்றப்பட்டது.

ச-கை. சூட்சுமசரீரமாவ தேதென்னில்,

உ-ம். பதினேழு அவயவங்களுடன் கூடியிருக்கப்பட்டது.

ச-கை. காரணசரீரமாவ தேதென்னில்,

உ-ம். அஞ்ஞானமே காரணசரீரம்.

ச-கை. இதுகளுக்குச்சரீரமென்றுபெயரேதினால்வந்ததென்னில்,

உ-ம். சீரணித்துபம்பாகிறபடியினுல்சரீரமென்றும்பெயாவந்தது.
ச-கை. சீரணித்துப்போகின்றதாவென்னில்,
உ-ம். போகின்றது. அதைவிருத்திபூர்வகமாய்ச் சொல்லவேண்டும்.
ச-கை. அஃதெப்படி யென்னில்,
உ-ம். இந்த ஸ்தூலசரீரம் இளமையினுலும், நோயின்மையினுலும், அன்னஞ்சமமானதினுலும் விருத்தியாகின்றது; அன்னமில்லாமையினுலும், அன்னமதிகமானதினுலும், வியாதியினுலும், முதுமையினுலும் சீரணமாகின்றது.
ச-கை. சூட்சுமசரீர மெப்படியென்னில்,
உ-ம். ராகத்துவேஷாகாரமாய்ப் பரிணமிக்கிறதுவிருத்தி; அவற்றின் சங்கோசமே சீரணத்துவம்.
ச-கை. ஆனல் காரணசரீர மெப்படியென்னில்,
உ-ம். அக மமதாதியானெனதென்கிற வபிமானத்தினுற்பரிணமிக்கிறதுவிருத்தி; அவற்றின்சங்கோசமேசீரணத்துவம்.
ச-கை. சூட்சுமகாரண சரீரத்திற்கு விருத்தி சீரணத்துவம் எங்கே காணப்படுகிறதென்னில்,
உ-ம். அஞ்ஞானிகளிடத்தில் விருத்தியும், முமூட்சுக்களிடத்திற்சங்கோசமுங் காணப்படுகின்றது. ஆகையினுலிதுகளுக்குஞ் சரீரமென்று பேர்வந்தது.
ச-கை. தேகமென்றுபெயர் ஏன்வந்ததென்னில்,
உ-ம். தகிக்கப்படுகின்றபடியினுல் தேகமென்றுபேர்வந்தது.
ச-கை. தகிக்கப்படுகின்றதா வென்னில்,
உ-ம். தகிக்கப்படுகின்றது.
ச-கை. எப்படி யென்னில்,
உ-ம். அக்கினியில் பஸ்மாகாரமாகத் தகிக்கப்படுகின்றது.
ச-கை. இது சரீரமல்லவோ தகிக்கப்படுகின்றது ஆனுலும் சூட்சுமகாரணசரீரங்கள் தகிக்கப்படுகிறதாவென்னில்,
உ-ம். அதுகளுந் தகிக்கப்படுகிறது.
ச-கை. அஃதெப்படி யென்னில்,
உ-ம். சார்வதா தாபத்ரயங்களினுல் தகிக்கப் படுகிற சூட்சுமகாரணசரீரம்ஞானக்கினியினுல்தகிக்கப்படுகிறது. ஆகையினுலிம்மூன்றுசரீரத்திற்குந்தேகமென்று பெயர்வந்தது
ச-கை. முன் சரீரத்திற்கு ஸ்தூல சரீரமென்று பேர் ஏன்வந்ததென்னில்,

உ-ம். மயிர் தோல் நரம்பு தசை எலும்பு கொழுப்பு இந்த ஆறும் ஸ்தம்பம்போற் பிரத்தியக்ஷத்தில் ஸ்தூலமாய்த் தோற்றுகிறபடியினால்ஸ்தூலசரீரமென்றுபெயர்வந்தது.

ச-கை. மத்தியசரீரத்திற்குச் சூட்சுமசரீரமென்றுபேர் ஏன்வந்ததென்னில்,

உ-ம். பூர்வசரீரம்போல் ஸ்தூலமாய்த்தோற்றாதபடியினால்சூட்சும சரீரமென்று பேர்வந்தது.

ச-கை. இதற்கு இலிங்கசரீரமென்றுபேர் ஏன்வந்ததென்னில்,

உ-ம். ஈனமான சத்தாதிவிஷயங்களை யறியப்பண்ணுகிறபடியினாலும், ஆத்மாவைலக்ஷணத்தினா லறியப்பண்ணுகிறபடியினாலும் இலிங்கசரீரமென்று பேர்வந்தது.

ச-கை. பச்சிம சரீரத்திற்குங் காரணசரீரமென்றுபேர் ஏன்வந்ததென்னில்,

உ-ம். இவ்விரண்டு சரீரங்களையும் பிறப்பிக்கிறபடியினா லதற்குங் காரணசரீரமென்று பேர்வந்தது.

ச-கை. ஸ்தூலசரீரம்பிரத்தியக்ஷமாய்த்தெரிகிறபடியினால் உண்டென்று சொல்லலாம். அதுபோல்சூட்சுமசரீரம்பிரத்தியட்சமாய்த் தெரியாதபடியினால் ஸ்தூலத்திற்கன்னியமான சூட்சும சரீரத்தை எப்படியுண்டென்று சொல்லுகிறதென்னில்,

உ-ம். பதினேழுவிதமான காரியத்தைக்குறித்துச் சூட்சும சரீரமு முண்டென்று சொல்லலாம்.

ச-கை. இந்தப் பதினேழுவிதமான காரியங்களும் ஸ்தூலசரீரத்தினாலேயே செய்யப்படுகிறதென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். சுழுத்தி மூர்ச்சை மரணம் வந்தபோது இந்த ஸ்தூலசரீரத்தினாற் பதினேழுவித காரியமும் பண்ணவேண்டும். பண்ணாதபடியினால் ஸ்தூலசரீர காரியமென்று சொல்லக்கூடாது.

ச-கை. மற்றெதினுடைய காரியமென்னில்,

உ-ம். ஸ்தூலத்திற் கன்னியமான சூட்சுமசரீர காரியமென்றே சொல்லவேண்டும்.*

ச-கை. ஸ்தூலத்தைவிட்டுச் சூட்சுமசரீரஞ் சுதந்தரமா யொரு காரியமுஞ் செய்யாதபடியினால் சூட்சுமசரீரகாரியமென்றெப்படி யறிகிறதென்னில்,

உ-ம். அறியலாம். எப்படியென்றால்திருஷ்டாந்தத்தில்அக்கினியானது கட்டையையனுசரித்துச் சுட்டுத் தன்னுருவமாக்கிக்கொண்டு தாகபாகாதிக்கிரியைகளைப் பண்ணினாலும் அந்தத் தாகபாகாதிக்கிரியைகள் கட்டையின் காரியமல்லாதுபோல சூட்சுமசரீரமும் ஸ்தூலத்தையாசிரயித்துப் பதினேழுவிதமான காரியங்களைப் பண்ணினபோதும் கேவலமான ஸ்தூலத்திற் கன்னியமான சூட்சும சரீரத்தின் காரியமென்றே யறியவேண்டும்.

ச-கை. ஆனால் பதினேழுவிதமான காரியமேதென்னில்,

உ-ம். காரணமுன்னிலையா யறியவேண்டும்.

ச-கை. காரணமாவதேதென்னில்,

உ-ம். பதினேழுவித அவயவங்களான சூட்சுமசரீரமேகாரணம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஞானேந்திரிய பஞ்சகமும், கன்மேந்திரிய பஞ்சகமும், பிராணாதிபஞ்சகமும், சித்தத்தோடுங் கூடினமனதும், அகங்காரத்துடன்கூடின புத்தியுமாகிய இந்தப் பதினேழுங்கூடிச் சூட்சுமசரீரமென்னப்படும்.

ச-கை. ஞானேந்திரிய பஞ்சகமாவதேதென்னில்,

உ-ம். சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் ஆ-ரு.

ச-கை. சுரோத்திராதிகளுக்கு ஞானேந்திரியமென்று பேரேன் வந்ததென்னில்,

உ-ம். சத்தாதி விஷயங்களைக் கிரகிக்கிறபடியினால் ஞானேந்திரியமெனப் பேர்வந்தது.

ச-கை. இதற்கு ஞானோற்பத்தி யெப்படி வந்ததென்னில்,

உ-ம். சாத்துவித குணத்தி லுற்பத்தி யானபடியினால் ஞானம் வந்தது.

ச-கை. கன்மேந்திரிய பஞ்சகமாவதேதென்னில்,

உ-ம். வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் ஆ-ரு.

ச-கை. இதற்குக்கன்மேந்திரியமென்றுபேரேன்வந்ததென்னில்,

உ-ம். வசனாதிக்கிரியைகளைப் பிறப்பிக்கிறபடியினால் கன்மேந்திரியமென்னப்பட்டது.

ச-கை. இதற்குக் கிரயாவுற்பத்தி யெப்படி வந்ததென்னில்,

உ-ம். ராசதகுணத்தி லுற்பத்தியானபடியினால் கிரியாவுற்பத்தி வந்தது.

ச-கை. பிராணுதிபஞ்சகமாவ தேதென்னில்,
உ-ம். பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் ஆக ௫.
ச-கை. இதற்குப் பிராணுதியென்று பேரேன்வந்ததென்னில்,
உ-ம். ஸ்தூலசரீரத்தைச் சேஷ்டிக்கப் பண்ணுகிறபடியால்பிராணுதியெனப் பேர்வந்தது.
ச-கை. மனம் புத்தியாவ தேதென்னில்,
உ-ம். அந்தக்கரணவிருத்தி விசேஷங்களே மனம் புத்தி யென்னப்படும்.
ச-கை. ஆறுற்சுரோத்திரேந்திரிய மெவ்வகைப்பட்டதென்னில்,
உ-ம். சத்தங்களெல்லா மெதினுற் கிரகிக்கப்படுகிறதோ அதுவே சுரோத்திரேந்திரியம்.
ச-கை. அந்தச்சத்த மெத்தனைவகைப்படு மென்னில்,
உ-ம். லௌகீகம் வைதீகமென் றிரண்டுவகைப்படும்.
ச-கை. லௌகீகமாவதேதென்னில்.
உ-ம். பிராகிருதரூபமான பதினெண்யாஷைகளும் லௌகீகம்.
ச-கை. வைதீகமாவ தேதென்னில்,
உ-ம். அப்பிராகிருதரூபமான வேதசாஸ்திரங்க ளனைத்தும் வைதீகம்.
ச-கை. இந்த லௌகீக மெத்தனைவித மென்னில்,
உ-ம். அனந்தவிதமா யிருக்கும்.
ச-கை. வைதீக மெத்தனைவித மென்னில்,
உ-ம். அதுவு மனந்தவிதமாயிருக்கும். அன்றியில் பஞ்சீகிருத பேதத்தில் சத்த மிருபத்தைந்துவிதம். இத்தனைவித சத்தங்களு மெதினுற் கிரகிக்கப்படுகிறதோ, அஃதே சுரோத்திரேந்திரியம்.
ச-கை. இந்தச் சுரேத்திரேந்திரிய மெங்கேயிருக்கிற தென்னில்,
உ-ம். கர்ண ஷட்குள்ய வச்சின்ன நபோதேசத்தை யாசிரத்திருக்கின்றது.
ச-கை. அந்த நபோதேசமே சுரோத்திரேந்திரியமென்று சொல்லலாமே யென்னில்,
உ-ம். சுழுத்தி மூர்ச்சை மரணமடைந்த சரீரங்களிலுமிருக்கிற நபோதேசத்தினுலுஞ் சத்தத்தைக் கிரகிக்கவேண்டும். அங்ஙன மில்லாதபடியினுல் அந்த நபோதேசத்திற் கன்னியமாய்சத்தக்கிராகிய சத்திமத்தாய் சூட்சுமமான ஒரு

வஸ்து நபோதேசத்தை யாசிரயித்துக் கொண்டிருக்கிறது. அதற்கே சுரோத்திரேந்திரியமென்றுபெயர். அதற்கதிட்டானதேவதைதிக்கு அவ்வதிட்டான தேவதையிஞற் பிரேரிக்கப்பட்ட சுரோத்திரேந்திரியஞ் சத்தமெல்லாமறிந்து பஞ்சீகிருத பேதசத்த மிருப்பதையு மறிந்துக்கொண்டேயிருக்கும்.

ச-கை. தொக்கிந்திரியமாவ தேதென்னில்.

உ-ம். பரிசமெல்லா மெதினுற் கிரகிக்கப் படுகிறதோ, அதுவே தொக்கிந்திரியம்.

ச-கை. அந்தப்பரிச மெத்தனைவித மென்னில்,

உ-ம். சீத உஷ்ண சீதோஷ்ண மிருது கடினமென் றைந்துவிதம்; அவற்றுள் ஒவ்வொன் றனந்தவிதமா யிருக்கும்.

ச-கை. இந்தத் தொக்கிந்திரிய மெங்கே யிருக்குமென்னில்,

உ-ம். தொக்கைச் சர்வத்திரா வியாபித்துக்கொண்டிருக்கும்.

ச-கை. ஆனுல் தொக்கையே தொக்கிந்திரியமென்று சொல்லலாமே யென்னில்,

உ-ம். சுழுத்தி மூர்ச்சை மரண சரீரத்திலிருக்கிற தொக்கினுற் பரிசத்தைக் கிரகிக்கவேண்டும். அங்ஙனங் கிரகியாதபடியினுல் அந்தத்தொக்குங் கன்னியமான ஸ்பரிசக்கிராகிய சத்திமத்தாய்சூட்சமமான ஒருவஸ்துசிரசுநடுவில்நபோதேசத்திலிருந்திரண்டு கவராய்த் தொக்கைப்பரிசித்துக் கொண்டிருக்கிறது. அதற்கேதொக்கிந்திரியமென்றுபெயர். அதிற்கதிட்டானதேவதை வாய்வு. அவ்வதிட்டான தேவதையினுற் பிரேரிக்கப்பட்ட தொக்கிந்திரியம் பரிசத்தை யெல்லாமறிந்து பஞ்சீகிருதபேத பரிசமிருப்பதையு மறிந்துக்கொண்டிருக்கும்.

ச-கை. சட்சு விந்திரியமாவ தேதென்னில்,

உ-ம். ரூபமெல்லா மெதினுற் கிரகிக்கப்படுகிறதோ, அஃதே சட்சு விந்திரியம்.

ச-கை. அந்தரூப மெத்தனைவகைப்படு மென்னில்,

உ-ம். வெள்ளை சிவப்பு பச்சை மஞ்சள் கறுப்பு ஊதா மிசிரம் அகலம் நிகளம் உயர்ச்சி தாழ்ச்சி இவற்றுள் ஒவ்வொன்றனேகவிதமாயிருக்கும். இத்தனை ரூபங்களு மெதினுல் தெரியப்படுகிறதோ, அதுவே சட்சுவிந்திரியம்.

ச-கை. அது எங்கே யிருக்குமென்னில்,

உ-ம். கருவிழியை யாசிரயித்துக்கொண்டிருக்கும்.

ச-கை. ஆனால் கருவிழியே சட்சுவிந்திரியமென்றுசொல்லலாமே யென்னில்,

உ-ம். சுழுத்தி மூர்ச்சை மரணசரீரங்களி லிருக்கிற கருவிழியினால் ரூபத்தை யறியவேண்டும். அங்ஙன மறியாதபடியினால், கருவிழிக் கன்னியமான ரூபத்தைக்கிரகிக்கிற சத்திமத்தாய் சூட்சுமமாய் ஒருவஸ்து சிரசுநடுவே நபோதெசத்திலிருந்து இரண்டுகவராய்க் குவளைமுன்னிலையிலந்தக் கருவிழியை யாசிரயித்துக்கொண்டிருக்கிறது. அதற்கே சட்சுவிந்திரிய மென்றுபெயர். அதற்கதிட்டான தேவதை சூரியன். அவ்வதிட்டான தேவதையினாற் பிரேரிக்கப்பட்ட சட்சு விந்திரியம் ரூபமெல்லாமறிந்து பஞ்சீகிருதபேத ரூபமிருப்பதையுங் கிரகித் தறிந்துக் கொண்டிருக்கும்.

ச-கை. சிங்குவை யிந்திரியமாவ தேதென்னில்,

உ-ம். ரசமெல்லா மெதினாற் கிரகிக்கப்படுகிறதோ, அதற்கே சிங்குவையென்று பெயர்.

ச-கை. அந்த ரசமெத்தனைவிதமா யிருக்குமென்னில்,

உ-ம். உப்பு புளிப்பு கார்ப்பு கசப்பு துவர்ப்பு தித்திப்பு என்றாறுவிதம். அவற்றுளொவ்வொன் றனேகவிதமாயிருக்கும். இத்தனையு மெதினாற்கிரகிக்கப்படுகிறதோ, அதுவே சிங்குவேந்திரியம்.

ச-கை. அது எங்கே யிருக்குமென்னில்,

உ-ம். நுனிநாவை யாசிரயித்துக்கொண்டிருக்கும்.

ச-கை. ஆனால் நுனிநாவையே சிங்குவேந்திரியமென்று சொல்லலாமே யென்னில்,

உ-ம். சுழுத்தி மூர்ச்சை மரண சரீரங்களிலிருக்கிற நுனிநாவினால் ரசங்களெல்லாங் கிரகிக்கவேண்டும். அப்படிகிரகிக்காதபடியினால் அந்த நுனிநாவுக்கன்னியமாய் ரசகிராஹ்ய சத்திமத்தாய் சூட்சுமமாய் ஒருவஸ்து கபாலநடுவில் நபோதெசத்திலிருந்து இரண்டுகவராய் தந்ததாலோஷ்டத்தைப்பற்றி அந்த நுனிநாவை யாசிரயித்துக்கொண்டிருக்கும் அதற்கேசிங்குவேந்திரியமென்றுபெயர். அதற் கதிட்டானதேவதை வருணன். அவ்வதிஷ்டான தேவதையினாற் பிரேரிக்கப்பட்ட சிங்குவேந்திரியம் ரசங்க

ளையெல்லாமறிந்து பஞ்சீகிருதபேதரசங்களையுங் கிரகித்துக்கொண்டிருக்கும்.

ச-கை. ஆக்கிராணேந்திரியமாவ தேதென்னில்,

உ-ம். சுகந்த துர்க்கந்தமெல்லா மெதினுற் கிரகிக்கப் படுகிறதோ, அதற்கே ஆக்கிராணேந்திரியமென்று பெயர்.

ச-கை. அது எத்தனை விதமா யிருக்குமென்னில்,

உ-ம். சுகந்த துர்க்கந்த மிசிரகந்தமென மூன்றுவிதம். அவற்றுளொவ்வொன்றனேகவிதமாயிருக்கும். இத்தனையுமெதினுற்கிரகிக்கப்படுகிறதோ, அதுவேஆக்கிராணேந்திரியம்.

ச-கை. அது எங்கேயிருக்கு மென்னில்,

உ-ம். நுனிமூக்கை யாசிரயித்துக்கொண்டிருக்கும்.

ச-கை. ஆனல் நுனிமூக்கையே கிராணேந்திரியமென்றுசொல்லலாமே யென்னில்,

உ-ம். சுழுத்தி மூர்ச்சை மரண சரீரங்களிலிருக்கிற நுனிமூக்கினுற் கந்தமறியவேண்டும். அங்ஙன மறியாதபடியினல் நுனிமூக்குக் கன்னியமாய் கந்தகிராஹ்ய சத்திமத்தாய் சூட்சுமமாய் ஒருவஸ்து கபாலத்திலிருந்து மூகாரவிந்த வழியாய் இரண்டுகவராய் மூக்குத்தண்டெலும்பைப்பற்றி அந்த நுனிமூக்கை யாசிரயித்துக் கொண்டிருக்கும். அதற்கே ஆக்கிராணேந்திரியமென்றுபெயர். அதற் கதிஷ்டானதேவதை அசுவினி. அவ்வதிஷ்டான தேவதையாற் பிரேரிக்கப்பட்ட ஆக்கிராணேந்திரியம் கந்தங்களையெல்லாங் கிரகித்து பஞ்சீகிருதபேதகந்தங்களையு மறிந்துக்கொண்டிருக்கும்.

ச-கை. கன்மேந்திரியங்களில் வாக்கிந்திரியமாவ தேதென்னில்,

உ-ம். சத்தமெல்லா மெதினுலுச்சரிக்கப்படுகிறதோ, அதுவே வாக்கிந்திரியம்.

ச-கை. அது எங்கேயிருக்கிறதென்னில்,

உ-ம். நுனிநா தாலுமூலம் மேலுதடு கீழுதடு பல் கண்டம்இருதயம் பிரமாந்திரமென்கிற அஷ்டதானங்களையு மாசிரயித்துக்கொண்டிருக்கும்.

ச-கை. ஆனலந்த அஷ்டதானங்களையே வாக்கிந்திரியமென்று சொல்லலாமே யென்னில்,

உ-ம். சுழுத்தி மூர்ச்சை மரணசரீரங்களிலிருக்கிற அஷ்டதானங்களினுற் சத்தங்க ளுச்சரிக்கப்படவேண்டும். அங்ங

மில்லாதபடியினால் அவ் வஷ்டதானங்களுக்கு மன்னிய மாய் சத்த முச்சரிக்கிற சத்திமத்தாய் சூட்சுமமாய் ஒரு வஸ்து முகாரவிந்தத்திலிருந்து அஷ்டதானங்களையு மாசிரயித்துக்கொண்டிருக்கும். அதற்கே வாக்கிந்திரியமென்றுபெயர். அதற் கதிஷ்டானதேவதை அக்கினி. அவ் வதிஷ்டான தேவதையினாற் பிரேரிக்கப்பட்ட வாக்கிந்திரியஞ் சத்தமெல்லா முச்சரித்துக்கொண்டிருக்கும்.

ச-கை. பாணீந்திரியமாவ தேதென்னில்,

உ-ம். கொடுக்கல் வாங்கல் முதலான கிரிகைக ளெதினாற்செய்யப்படுகிறதோ, அதற்குப் பாணீந்திரியமென்று பெயர்.

ச-கை. அது எங்கே யிருக்குமென்னில்,

உ-ம். உள்ளங்கையி லாசிரயித்துக்கொண்டிருக்கும்.

ச-கை. ஆனால்உள்ளங்கையேபாணீந்திரியமென்னலாமேயெனில்

உ-ம். சுழுத்தி மூர்ச்சை மரணசரீரங்களி லிருக்கிற வுள்ளங் கையினாலுந் தானதிக்கிரியைகளைப் பண்ணவேண்டும். பண்ணாதிருக்கிறபடியால் உள்ளங்கைக்கன்னியமாய் தானதிக்கிரியாசத்திமத்தாய் சூட்சுமமாய் ஒருவஸ்து முகாரவிந்தத்திலிருந்து உள்ளங்கையையாசிரயித்துக்கொண்டிருக்கும். அதற்கே பாணீந்திரிய மென்றுபெயர். அதற் கதிஷ்டானதேவதை இந்திரன். அவ் வதிஷ்டான தேவதையினாற் பிரேரிக்கப்பட்ட பாணீந்திரியங் கொடுக்கல் வாங்கலாகிற கிரியைகளைச் செய்யும்.

ச-கை. பாதேந்திரியமாகிற தேதென்னில்,

உ-ம். கமனாதி கிரியைகளையெதினாற்செய்யப்படுகிறதோ, அதற்குப் பாதேந்திரியமென்றுபெயர்.

ச-கை. அது எங்கே யிருக்குமென்னில்,

உ-ம். உள்ளங்காலை யாசிரயித்துக்கொண்டிருக்கும். அதுவே பாதேந்திரியம்.

ச-கை. ஆனா லுள்ளங்காலையே பாதேந்திரியமென்று சொல்லலாமேயென்னில்,

உ-ம். சுழுத்தி மூர்ச்சை மரண சரீரங்களிலிருக்கிற வுள்ளங்காலினால் கமனாதிக்கிரியைகளைப் பண்ணவேண்டும். பண்ணாதபடியினால் உள்ளங்காலுங் கன்னியமாய்கமனாதிக்கிரியாசத்தி மத்தாய் சூட்சுமமாய் ஒருவஸ்து முகாரவிந்தத்திலிருந் திரண்டுகவராய் உள்ளங்காலை யாசிரயித்துக்

கொண்டிருக்கும். அதற்கே பாதேந்திரியமென்றுபெயர். அதற் கதிஷ்டானதேவதை உபேந்திரன். அவ்வதிஷ்டானதேவதையினாற் பிரேரிக்கப்பட்ட பாதேந்திரியங் கமனாதிக் கிரியைகளைப் பண்ணும்.

ச-கை. பாயு ரிந்திரியமாவ தேதென்னில்,

உ-ம். மலவிசர்க்கனாதிக் கிரியைக ளெதினாற் செய்யப்படுகின்றதோ, அதற்குப் பாயு ரிந்திரியமென்றுபெயர்.

ச-கை. அது எங்கே யிருக்குமென்னில்,

உ-ம். குதத்தை யாசிரயித்துக் கொண்டிருக்கும். அதுவேபாயு ரிந்திரியம்.

ச-கை. ஆனாற்குதத்தையேபாயுரிந்திரிய மென்னலாமேயெனில்,

உ-ம். சுழுத்தி மூர்ச்சை மரண சரீரங்களி லிருக்கிற குதத்தினாலும் விசர்க்கனாதிக் கிரியைகளைச் செய்யவேண்டும். அப்படிக்கில்லாதபடியினால் குதத்திற் கன்னியமாய் மலவிசர்க்கனாதிக் கிரியாசத்தி மத்தாய் சூட்சுமமாய் ஒருவஸ்து முகாரவிந்தத்திலிருந்து குதத்தையாசிரயித்துக் கொண்டிருக்கும். அதற்கேபாயு ரிந்திரியமென்றுபெயர். அதற் கதிஷ்டானதேவதை மிருத்திவு. அவ்வதிஷ்டானதேவதையினாற் பிரேரிக்கப்பட்ட குதேந்திரியமலவிசர்க்கனாதிக் கிரியைகளைப் பண்ணும்.

ச-கை. உபஸ்தேந்திரியமாவ தேதெனென்னில்;

உ-ம். சுக்கில மூத்திர விசர்க்கனாதிக் கிரியைக ளெதினாற் செய்யப்படுகிறதோ; அதற்கு உபஸ்தேந்திரியமென்றுபெயர்.

ச-கை. அது எங்கே யிருக்குமென்னில்,

உ-ம். யோனி லிங்கங்களையாசிரயித்துக்கொண்டிருக்கும். அதுவேயுபஸ்தேந்திரியம்.

ச-கை. யோனி லிங்கங்களையேயுபஸ்தேந்திரியமென்று சொல்லலாமே யென்னில்,

உ-ம். சுழுத்தி மூர்ச்சை மரண சரீரங்களிலிருக்கிற யோனி லிங்கங்களினாலும் சுக்கில மூத்திர விசர்க்கனாதிக்கிரியைகள்பண்ணவேண்டும். பண்ணாதபடியினால் யோனி லிங்கங்களுக் கன்னியமாய் சுக்கிலமூத்திரவிசர்க்கனாதிக்கிரியாசத்தி மத்தாய் சூட்சுமமாய் ஒருவஸ்துமுகாரவிந்தத்திலிருந்து யோனிலிங்கங்களையாசிரயித்துக்கொண்டிருக்கும். அதற்கு உபஸ்தேந்திரியமென்றுபெயர். அதற்க

திஷ்டானதேவதை பிரஜாபதி. அவ்வதிஷ்டான தேவதையினுற் பிரேரிக்கப்பட்ட உபஸ்தேந்திரியம் சுக்கில மூத்திர விசர்க்கனுதி கிரியைகளைப் பண்ணும்.

ச-கை. பிராணுதி பஞ்சகத்தில் பிராணவாயுவாவ தேதென்னில்,

உ-ம். உசுவாச மெதினுற் பண்ணப்படுகின்றதோ, அதற்குப் பிராணவாய்வென்று பெயர். அதற்கு ஸ்தானம் இருதயம் அதிற்கதிஷ்டானதேவதை விசிட்டன். அவ்வதிஷ்டான தேவதையினுற் பிரேரிக்கப்பட்ட பிராணவாய்வு உசுவாசம் பண்ணிக்கொண்டிருக்கும்.

ச-கை. அபானவாயுவாவ தேதென்னில்.

உ-ம். நிசுவாச மெதினுற் பண்ணப்படுகிறதோ அதற் கபான வாயுவென்று பெயர். அதற்கு ஸ்தானங் குதம். அதற் கதிஷ்டானதேவதைவிசுவகர்த்தா. அவ்வதிஷ்டானதேவதையினுற் பிரேரிக்கப்பட்ட அபானவாய்வு நிசுவாசம் பண்ணிக்கொண்டிருக்கும்.

ச-கை. வியானவாயுவாவ தேனென்னில்,

உ-ம். சரீரத்தைப்பலப்படநிறுத்தியிந்திரியங்களுக்குப்பலனைக் கொடுத்துக்கொண்டிருக்கிற தெதுவோ. அதற்குவியான வாயுவென்றுபெயர். அதற்கு ஸ்தானம் சர்வசரீரம். அதிற்கதிஷ்டான தேவதை விசுவயோனி. அவ்வதிஷ்டான தேவதையினுற் பிரேரிக்கப்பட்ட வியானவாய்வு இந்திரியங்களுக்குப் பலனைக்கொடுத்துச் சரீரமெல்லாம் வியாபித்திருக்கும்.

ச-கை. உதானவாயுவாவ தேனென்னில்,

உ-ம். சுழுத்திகாலம் வந்தபோது சகலவிந்திரியங்களையு மொடுக்கிக்கொண்டு தனக்குக் காரணமான அஞ்ஞானத்திலெதுலயிக்கப்பண்ணுகிறதோ; சாக்கிராவஸ்தையி லந்தந்த இந்திரியங்களை யந்தந்தவிடத்தி லெது நிறுத்துகிறதோ, மரணகாலம் வந்தபோது சகல விந்திரியங்களையுங் கிரகித்துக்கொண்டு லோகாந்தரத்திற் கெதுபோகிறதோ; அஃதே யுதானவாய்வு. அதற்கு ஸ்தானங் கண்டம். அதற்கதிஷ்டானதேவதைபிரமதேவன். அவ்வதிஷ்டான தேவதையினுற் பிரேரிக்கப்பட்ட உதானவாய்வு இத்தியாதி தொழில்களை நடத்தும்.

ச-கை. சமானவாயுவாவ தேதென்னில்,

உ-ம். உண்டல் குடித்தல் உறிஞ்சல் நக்கலென்கிற நாலுவித வுண்டிகளைச் சாடராக்கினியோடுகூடி யுபசமனம்பண்ணிச் சரீரத்திற்கெது புஷ்டிசெய்விக்கிறதோ, அதற்குச் சமானவாயுவென்று பெயர். அதற்கு ஸ்தானம் நாபி. அதற் கதிஷ்டான தேவதை சூர்யன். அவ்வதிஷ்டான தேவதையினாற் பிரேரிக்கப்பட்ட சமானவாயுவு மேற்சொல்லிய கிரியைகளைச்செய்யும். இதுவன்றி உபவாயுக்களைந்தும் இதற்குள் அந்தர்ப் பூதமாயிருக்கின்றது. தொழில்மாத்திரம் வேறு. அதிதேவதையும் ஸ்தானமு மொன்றாகவிருக்கும்.

ச-கை. அந்த வாயுக்களாவ தேதென்னில்,

உ-ம். நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்று பஞ்சவாயுக்கள். அவற்றுள் வாந்திசெய்விப்பது நாகன்; விக்கல் ஏப்பம் இமைப்புவிழிப்புகளைச் செய்விப்பது கூர்மன்; தும்ம லிருமலைச் செய்விப்பது கிரிகரன்; சிரித்தல் வசனித்தலைச் செய்விப்பது தேவதத்தன்; துர்க்கந்தமாக்கிச் சரீரம் வீங்கப்பண்ணி தலைவெடிக்கச் செய்வது தனஞ்சயன் என்று சொல்லப்படும்.

ச-கை. அந்தக்கரண சதுஷ்டயத்தில் மனமாவ தேதென்னில்,

உ-ம். சங்கற்ப விகற்ப மெதினாற் பண்ணப்படுகிறதோ, அதுவேமனம்.

ச-கை. அது எங்கேயிருக்குமென்னில்,

உ-ம். கண்டத்தின் கீழிருக்கும். அதற் கதிஷ்டான தேவதை சந்திரன், அவ்வதிஷ்டான தேவதையினாற் பிரேரிக்கப்பட்டமனஞ் சங்கற்ப விகற்பம் பண்ணிக்கொண் டிருக்கும்.

ச-கை. புத்தியாவ தேதென்னில்,

உ-ம். நிச்சயமெல்லா மெதினாற் பண்ணப்படுகிறதோ, அதுவே புத்தி.

ச-கை. அது எங்கே யிருக்குமென்னில்,

உ-ம். முகத்திலிருக்கும். அதற் கதிஷ்டான தேவதை சதுர்முகன். அவ்வதிஷ்டான தேவதையினாற் பிரேரிக்கப்பட்ட புத்தி நிச்சயமெல்லாம் பண்ணிக்கொண்டிருக்கும்.

ச-கை. அகங்காரமாவ தேதென்னில்,

உ-ம். அபிமானமெல்லா மெதினாற் செய்யப்படுகிறதோ, அதுவேயகங்காரம்.

ச-கை. அது எங்கே யிருக்குமென்னில்,

உ-ம். இருதயத்திலிருக்கும். அதற்கதிஷ்டான தேவதை ருத்திரன். அவ்வதிஷ்டான தேவதையினுற்பிரேரிக்கப்பட் அகங்காரம் அபிமானமெல்லாம் பண்ணிக்கொண்டிருக்கும்.

ச-கை. சித்தமாவ தேதென்னில்,

உ-ம். சிந்தனையெல்லா மெதினுற் செய்யப்படுகிறதோ, அது வேசித்தம்.

ச-கை. எது எங்கே யிருக்குமென்னில்,

உ-ம். நாபிப் பிரதேசத்திலிருக்கும். அதற் கதிஷ்டான தேவதை விஷ்ணு. அவ்வதிஷ்டான தேவதையினுற் பிரேரிக்கப்பட்டசித்தம் சிந்தனையெல்லாம் பண்ணிக்கொண்டிருக்கும். அதுவுமன்றி இந்த இலிங்கசரீரம் ஷோடசாத்மகமென்று ஒருசுருதியிற்சொல்லுகிறது. அந்தப்பக்ஷத்தில் அந்தக்கரண மஞ்சுளொன்றுமாத்திரமே யாகும். பதினேமென்று ஒருசுருதியிற் சொல்லுகின்றது. அந்தப் பக்ஷத்தில் மனமுஞ்சித்தமும் ஒன்றென்றும், புத்தியுமகங்காரமுமொன்றென்றுகும்.பத்தொன்பதென்று ஒரு சுருதியிற்சொல்லுகின்றது. அந்தப்பக்ஷத்தி லந்தக்கரணங்கள் நாலையுஞ்சொல்லுவதாகும். அப்படிஎத்தனை விதமாகச் சொன்னுலும் விரோதமில்லை. இப்படி பதினேழுவித காரியங்களினுற்பதினேழு அவயவமான இலிங்கசரீரமுண்டென்று நிச்சயிக்கப்பட்டது.

ச-கை. காரணசரீர முண்டென் றெப்படி யறிகிறதென்னில்,

உ-ம். காரியமான ஸ்தூலசூட்சுமமாகிய இரண்டு சரீரங்கள் காணப்படுகிறபடியினுல், இதுகளுக்குக் காரணமொன்றுண்டென்று யுத்திபண்ணவேண்டியது.

ச-கை. காரியத்தினுல் காரணத்தை யூகித்தறியலாமாவென்னில்,

உ-ம். காரியமான புகையினுற்காரணமான அக்கினியுண்டென்று யூகித்தறிவதுபோலக் காரியமான ஸ்தூலசூட்சுமசரீரங்களினுற் காரணமான சரீரமுண்டென்று யூகித்தறியலாம். அல்லாமலும் அகமஞ்ஞானியென்றுபிரத்தியக்ஷமாயனுபவிக்கிறபடியினுற் காரணசரீர முண்டென்று நிச்சயிக்கலாம். இப்படி நிச்சயம்பண்ணினபிறகு ஆத்மாவுக்குச் சரீரத்திரய விலக்ஷணத்துவ மெப்படி யென்றுவிசாரிக்கவேண்டும்.

ச-கை. ஆத்மாவுக்குச் சரீரத்திரய விலக்ஷணமாவதேதென்னில்,

உ-ம். ஆத்மலக்ஷணஞ் சரீரத்திரயத்திலும், சரீரத்திரயலக்ஷண மாத்மாவிலு மில்லாதிருக்கிறதே சரீரத்திரயவிலக்ஷணம்.

ச-கை. ஆனால் ஆத்மலக்ஷண மேதென்னில்,

உ-ம். சத்து சித்து ஆனந்தமே யாத்மலக்ஷணம்.

ச-கை. அனாத்மலக்ஷண மேதென்னில்,

உ-ம். அசத்து சடம் துக்கமே யனாத்மலக்ஷணம்.

ச-கை. இந்த லக்ஷணங்களுக் கன்னியோன்னிய விலக்ஷணமுண் டோவென்னில்,

உ-ம். உண்டு. திருஷ்டாந்தத்தில் ஸ்திரீலக்ஷணம் புருஷனிடத்திலும், புருஷலக்ஷணம் ஸ்திரீயினிடத்திலு மில்லாதுபோற் சத்துலக்ஷணமசத்திலும், அசத்துலக்ஷணஞ் சத்திலுமில்லை. பிரகாசலக்ஷணம் அந்தகாரத்திலும், அந்தகாரலக்ஷணஞ் பிரகாசத்திலு மில்லாததுபோலச் சித்துலக்ஷணஞ் சடத்திலுஞ் சடலக்ஷணஞ்சித்திலுமில்லை. சந்திரலக்ஷணஞ் சூரியனிலும், சூரியலக்ஷணஞ்சந்திரனிலு மில்லாததுபோல ஆனந்தலக்ஷணந் துக்கத்திலும், துக்கலக்ஷண மானந்தத்திலுமில்லை. இப்படி சச்சிதானந்தத்துக்கும், அசத்துசடந்துக்கத்துக்கும் அன்னியோன்னியவிலக்ஷணத்துவமாகச் சத்துலக்ஷணமும், அசத்துலக்ஷணமும், சித்துலக்ஷணமும், சடலக்ஷணமும், ஆனந்தலக்ஷணமும், துக்கலக்ஷணமுமுண்டு. இதுகளை விசாரித்தறியாமல் ஆத்மாவின் அன்னியோன்னிய விலக்ஷத்துவமறியக்கூடாது.

ச-கை. சத்துலக்ஷணமாவ தேதென்னில்,

உ-ம். ஒன்றினாலும் வாதிக்கப்படாமல் பூத பவிஷ்ய வர்த்தமானகாலத்திலும் ஏகரூபமாயிருக்கிற தெதுவோ அதுவே சத்துலக்ஷணம்.

ச-கை. அசத்துலக்ஷமாவ தேனென்னில்

உ-ம். காலத்திரயத்திலு மில்லாததாயிருந்துந் தோற்றிக்கொண்டு, ஒன்றினால் வாதிக்கப்பட்டுப் போகிற தெதுவோ, அதுவே அசத்துலக்ஷணம்.

ச-கை. இதற்குத் திருஷ்டாந்தமுண்டோ வென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அது எப்படியென்னில்,

உ-ம். பழுதையும், பழுதையினிடத் தாரோபிக்கப்பட்ட பாம்புமே திருஷ்டாந்தம்.

ச-கை. பழுதையினிடத்தில் சத்துலக்ஷணமும், அசத்து லக்ஷணமு முண்டோவென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அது எப்படியென்னில்,

உ-ம். பழுதையினிடத்தி லாரோபிக்கப்பட்ட சர்ப்பமுதலான பயபீதிகளாகிற ஒன்றினலும் அந்தப்பழுதை வாதிக்கப் படாமல், பிராந்திகாலத்திலும் பிராந்திக்குப் பூர்வகாலத்திலும் பிராந்திபோன பிற்காலத்திலும் ஏகரூபமாயிருந்த தேசத்துலக்ஷணம். தானில்லாதிருந்துந் தோற்றிக்கொண்டு ஒன்றினல் வாதிக்கப்பட்டுப் போகிறதே அசத்துலக்ஷணம். இது சர்ப்பத்தினிடத்திலுமுண்டு. பழுதைலக்ஷணம் பாம்பினிடத்தில்லாதபடியினலும், பாம்புலக்ஷணம்பழுதையினிடத்தில்லாதபடியினலும் அந்தப்பாம்பு பழுதைகளுக்குச் சத்தத்தினலும் அர்த்தத்தினலும் லக்ஷணத்தினலும் உபமானத்தினலும் விவகாரத்தினலும் பேதலக்ஷணமுண்டாயிருப்பதுபோலச் சத்துலக்ஷணம் தேகேந்திரியாதிப் பிரபஞ்சத்தினிடத்தி லில்லாதபடியினலும், அசத்துலக்ஷணஞ் சத்தான ஆத்மாவினிடத்திலில்லாதபடியினலும் சத்துக்கும் அசத்துக்கும் சத்தத்தினலும் அர்த்தத்தினலும் லட்சணத்தினலும் உபமானத்தினலும் விவகாரத்தினலும் பேதமுண்டு.

ச-கை. இதினலென்ன சித்தித்ததென்னில்,

உ-ம். சத்தென்ற சத்தம் அசத்தென்ற சத்தமாகாது; அசத்தென்ற சத்தம் சத்தென்றசத்தமாகாது. சத்தினுடைய சத்தார்த்தம் அசத்தினுடைய சத்தார்த்தமாகாது. அசத்தினுடைய சத்தார்த்தம் சத்தினுடைய சத்தார்த்தமாகாது. சத்தினுடைய லக்ஷணம் அசத்தினுடையலக்ஷணமல்ல; அசத்தினுடையலக்ஷணம் சத்தினுடைய லக்ஷணமல்ல சத்தினுடைய வுபமானம் அசத்தினுடைய வுபமானமல்ல; அசத்தினுடைய வுபமானம் சத்தினுடைய வுபமானமல்ல. சத்தினுடையவிவகாரம் அசத்தினுடைய விவகாரமல்ல; அசத்தினுடைய விவகாரஞ் சத்தினுடைய விவகாரமல்ல. ஆகையினல் சத்துரூபமான ஆத்மாவுக்

கும், அசத்துரூபமான தேகேந்திரியாதிப் பிரபஞ்சத்திற்கும் பழுதையும் பாம்பும்போல ஐந்துவகையினாலும் காலத்திரயத்திலும் அன்னியோன்னிய பேதலக்ஷணஞ் சித்தித்தது.

ச-கை. சித்துலக்ஷண மேதென்னில்,

உ-ம். ஒருசாதனமு மபேக்ஷியாமல் தானுந்தோற்றிக்கொண்டு, தன்னிடத்தி லாரோபிக்கப்பட்ட பதார்த்தங்களையுந் தோற்றிவைக்கிற தெதுவோ, அதுவேசித்துலக்ஷணம்.

ச-கை. சடலக்ஷண மேதென்னில்,

உ-ம். தானுந் தோற்றாமல் அன்னியவஸ்து வையுந்தோற்றிவையாம லிருக்கிறதெதுவோ, அதுவே சடலக்ஷணம்.

ச-கை. இதற்குத் திருஷ்டாந்த முண்டோவென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். சூரியப்பிரகாசத்தினால் விளங்குகிற கடங்களும் சூரியப் பிரகாசமுந் திருஷ்டாந்தம்.

ச-கை. ஆதித்தனிடத்திற் சித்துலக்ஷண முண்டோவென்னில்,

உ-ம். திருஷ்டாந்தமெல்லா மேகதேசமாகையினால் ஏகதேசதிருஷ்டாந்தமான ஆதித்தனிடத்திற்சித்துலக்ஷணமுண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஆதித்தன் பிரகாசாந்தரங்களை யபேக்ஷியாமல் தானுந் தோற்றிக்கொண்டு, தற்பிரகாசத்தைச் சம்பந்தித்திருக்கிற கடங்களையுந் தோற்றிவைக்கிறபடியா லாதித்தனிடத்திற் சித்து லக்ஷணமுண்டு.

ச-கை. கடத்தினிடத்திற் சடலக்ஷண முண்டோவென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். தானுந் தோற்றாமல் அன்னியவஸ்துவையுந்தோற்றிவைக்கமாட்டாதபடியினால், சடலக்ஷணமுண்டு. ஆகையால் ஆதித்தலக்ஷணங் கடத்திலில்லாதபடியினால் கடலக்ஷணம் ஆதித்தனிலில்லாதபடியினாலும் ஆதித்தனுக்குங்கடத்துக்குஞ் சத்தம் அர்த்தமலக்ஷணம் உபமானம். விவகாரமென்கிறஐவகையினாலும்பேதலக்ஷணமுண்டானதுபோலச் சித்துலக்ஷணம் சடமான தேகேந்திரியாதிப் பிரபஞ்சத்தினிடத்திலும், சடலக்ஷணம் சித்தாகிற ஆத்மாவினி

டத்திலுமில்லை. ஆனபடியினால் சித்துக்குஞ்சடத்துக்கும் முன்சொன்ன ஐவகையினாலும் பேதலக்ஷமுண்டு.

ச-கை. இதனாலென்ன சித்தித்ததென்னில்,

உ-ம். அப்பிரகாச சுபாவமான சடவிகாரத்தினால் சொப்பிரகாசமான சித்தாகிய வாத்மாவுக்குங் காலத்திரயத்திலுஞ்சம்பந்த மில்லையென்று அன்னியோன்னிய பேதலக்ஷணஞ் சித்தித்தது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். பிரகாசத்தினால்விளங்கப்பட்ட கடசுபாவமானவிகாரங்களாகிற சித்திர அசித்திரத்தினாலும், நஷ்டலாபத்தினாலும், உற்பத்தி அனுற்பத்தியினாலும், அற்புதம் அனற்புதத்தினாலும், பிரத்திவாய அப்பிரத்தி வாயங்களினாலும், உத்தமமத்திமங்களினாலும், இன்ப துன்பத்தினாலும், சமானம், அசமானத்தினாலும், அதிசயம் அனதிசயத்தினாலும் பிரகாசனான ஆதித்தனை யெப்படி பரிசிக்கவில்லையோ அப்படிபோல அப்பிரகாச தேகசுபாவமான விகாரங்களும், குண தர்மசாதி நாம வர்ணாசிரமாதிக் கிரியைகளும், கர்த்துருத்துவபோக்த்ருத்வங்களும், காமக்குரோதங்களுந் தேகேந்திரியாதிகளுக்கே யல்லாமல் சர்வப்பிரகாசனாய் தேகேந்திரியாதிகளுக்குச் சாட்சியாய் சித்துரூபனான ஆத்மாவை லேசமும் பரிசிக்க வில்லையென்று சித்தித்தது.

ச-கை. ஆனால் ஆனந்தலக்ஷண மேதென்னில்,

உ-ம். நிருபாதிகமாய் நிரதிசயமாய் நித்தியமான சுகசொரூபமே யானந்தலக்ஷணம்.

ச-கை. துக்கலக்ஷண மேதென்னில்,

உ-ம். தாபத்திரயாத்மகமே துக்கலக்ஷணம்.

ச-கை. இதற்குத் திருஷ்டாந்தமுண்டோ வென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். புதுப்பானையிலிருக்கிற குளிர்ந்தஜலமும் வெங்கலப்பானையிலிருக்கிற புளியநெருப்புமே திருஷ்டாந்தம்.

ச-கை. ஜலத்தி லானந்தலக்ஷண மிருக்கின்றதா வென்னில்,

உ-ம். இருக்கின்றது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். வெய்யிலி லடிபட்டுத் தபிக்கப்பட்ட புருஷன் அந்தக்குளிர்ந்த நீர்ப்பானையைத்தொட்டுக் கண்ணிலொற்றிக்கொண்டமாத்திரத்தில் அவனுடையதாபம் நிவிர்த்தியாகின்றது. அது சாக்ஷாத் ஜலமல்ல. அந்தஜலத்தின் ஆவேசமாத்திரத்துக்கே தாபநிவிர்த்தியிருப்பது பிரத்தியக்ஷமாகக்கண்டோம். அந்த ஜலத்தையே பானம்பண்ணினாற் சகலதாபங்களும் போமென்பதிற் சந்தேகமில்லை. ஆகையினால் அந்தஜலத்தினிடத்திலானந்தலக்ஷணமுண்டு.

ச-கை. புளியநெருப்பில் துக்கலக்ஷண முண்டோவென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். தாகதாபாதிக ளில்லாதவன் புளியநெருப்போடு கூடியிருக்கிற வெங்கலப்பானையைத் தொட்டமாத்திரத்தில் அந்தப்பானையின் ஊஷ்ணம் சுபாவத்தினால் அதைத்தொட்டவனுக்குத்தாபாதிகளைக்கொடுத்துக்கையெல்லாங்கொப்புளிக்கச்செய்கின்றது. அது சாக்ஷாத் நெருப்பல்ல. நெருப்பினுடைய ஆவேசமாத்திரமே தாபாதிகளைக்கொடுக்கின்றதென்று பிரத்தியக்ஷமாகக் கண்டோம். அந்த நெருப்பையேதொட்டாற் சமஸ்தத்தையும் பஸ்பமாக்குமென்பதற்குச் சர்வானுபவ சித்தமாகையினால் அந்தப் புளியநெருப்பினிடத்தில் துக்கலக்ஷணமுண்டு. இதுவுமன்றியில் வேறு திருஷ்டாந்தமு மிருக்கின்றது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். அமிர்தமும் காளகூடவிஷமுமே திருஷ்டாந்தம்.

ச-கை. அமிர்தத்தி லானந்தலக்ஷண முண்டோவென்னில்,

உ-ம். தான் சுகசொரூபமா யிருந்துக்கொண்டு தன்னைப்பானம் பண்ணவர்களுக்கு நிரதிசயமான சுகத்தைக் கொடுக்கிறபடியினா லமிர்தத்தினிடத்தில் ஆனந்தலக்ஷணமுண்டு.

ச-கை. காளகூடவிஷத்தில் துக்கலக்ஷண முண்டோவென்னில்,

உ-ம். தான் தாபாத்மகமா யிருந்துக்கொண்டு தன் சமீபத்தில் வந்தவர்களை மிகுந்த துக்கரூபமான பிராணஹானிசெய்கிறபடியினால் காளகூடவிஷத்தினிடத்தில் துக்கலக்ஷணமுண்டு. அமிர்தலக்ஷணங் காளகூடவிஷத்தி லில்லாதபடியினாலும், காளகூட விலக்ஷணம் அமிர்தத்தி லில்லாதபடியினாலும், அமிர்தத்திற்குங் காளகூட விஷத்திற்கும்

முன்சொன்ன ஐந்துவித லக்ஷணத்தினலும்பேதலக்ஷண மிருக்கிறதுபோலும், ஜலலக்ஷணம் நெருப்பினிடத்தில் லாதபடியினலும், நெருப்பு லக்ஷணம் ஜலத்தினிடத்தி லில்லாதபடியினலும், ஜலத்துக்கும்நெருப்புக்கும் முன் சொன்ன ஐவகை லக்ஷணத்தினலும் பேதலக்ஷணமிருக் கிறதுபோலும், ஆனந்தலக்ஷணம் துக்காதமகமான தே கேந்திரியாதி புத்திர பாரியாதிப் பிரபஞ்சத்தினிடத்தி லில்லாதபடியினலும், துக்கலக்ஷணம் சுகசொரூபமான ஆத்மாவினிடத்தி லில்லாதபடியினலும், ஆனந்தத்திற் குந் துக்கத்திற்கும் முன்சொன்ன ஐவகையினலும்பேத லக்ஷணமுண்டு.

ச-கை. இதின லென்னசித்தித்ததென்னில்,

உ-ம். காளகூட சுபாவமானதாபங்க ளமிர்தத்தைப் பரிசியாது போலும் அக்கினிசுபாவமான தாபங்கள் ஜலத்தைப் பரி சியாதுபோலும் தேகேந்திரியாதி பிரபஞ்ச சுபாவமான தாபத்திரயங்கள் சுகசொரூபமான ஆத்மாவைப்பரிசிக்க வில்லையென் றன்னியோன்னிய பேதலக்ஷணஞ் சித்தித் தது.

ச-கை. ஆன லிந்தவிசாரந்திற்குப் பலமேதென்னில்,

உ-ம். பழுதையைப்போற் சத்துரூபனும் ஆதித்தனைப்போற் சித்துரூபனும் ஜலாமிர்தத்தைப்போ லானந்த சொரூப னுமான தான் பாம்பைப்போல் அனுர்தமும்கடத்தைப் போற்சடமும் அக்கினிகாளகூடவிஷத்தைப்போல்துக்க சொரூபமுமானதேகேந்திரியாதிப் பிரபஞ்சத்திற்கு வில க்ஷணனென் றறிகிறதே பலம். இது வல்லாமல் முன் சொன்ன சரீரத்திரயத்தினிடத்தில் ஈசுவரனிருந்து கன் மத்தை யசைப்பிக்கிறவிதமுந் தெரிந்து தன்னுடைய அஞ்ஞானத்தையும்போக்கடித்து,அருளே திருமேனியா யெழுந்தருளியசற்குருவினல் சகலவுபாதிகளையுங்கழித் துத் தன்னை யெப்போதும் நிருமலனய் சர்வோபாதிரகி தனய் சகலவுபாதிகளுக்குஞ் சாட்சிமாத்திரமாய் எவன் விசாரித்தறிகிருனே, அவனே சீவன் முத்தனென்றும் பரமுத்தனென்றும் சகலசுருதி ஸ்மிருதியிதிகாச புரா ணகமங்களிற் சொல்லப்படுகின்றது. இதிற்சம்சயமில்லை சித்தம்.

சரீரத்திரயவிலக்ஷணநிருபகம்

முற்றிற்று.

பத்தாவது,

அவஸ்தாத்திரயசாட்சித்வநிருபகம்.

ச-கை. ஆத்மா அவஸ்தாத்திரயசாட்சியென்றுசுருதிகளிற்சொல்லுகிறபடியினால் அவஸ்தாத்திரயத்தையறியாமல் அவஸ்தாத்திரயசாட்சியையறியக்கூடாது. ஆகையினால் அவஸ்தாத்திரயமாவ தேதென்னில்,

உ-ம். சாக்கிர சொப்பன சுழூத்தியென்று மூன்றவஸ்தைகளாகும்.

ச-கை. சாக்கிராவஸ்தையாவ தேதென்னில்,

உ-ம். சகல விந்திரியங்களிலும் கர்த்ருத்வ போக்ருத்வ பாகியார்த்தஞான மெம்மட்டிருக்கிறதோ, அம்மட்டுஞ் சாக்கிரமென்றுபெயர்.

ச-கை. சொப்பனவஸ்தையாவ தேதென்னில்,

உ-ம். இந்திரியங்களினால் பாகியார்த்த ஞானம்வராமல் மனதே விஷயாகாரமாகப் பரிணமித்துக்கர்த்ருத்வாகாரமா யெந்தமட்டுந் தோற்றுகிறதோ அந்தமட்டுஞ் சொப்பனமென்றுபெயர்.

ச-கை. சுழூத்தியவஸ்தையாவ தேதென்னில்,

உ-ம். இந்திரியங்களினாற் பாகியார்த்தஞானமும் வராமல்,மனது கர்த்ருத்வாகாரமாய்ப் பரிணமித்து விஷயாகாரமாய்த் தோற்றாமல் புத்தி காரணாத்மகமா யெந்தமட்டு மிருக்கிறதோ அந்தமட்டுஞ் சுழூத்தியென்றுபெயர்.

ச-கை. ஆத்மாவுக் கவஸ்தாத்திரய சாட்சித்வமாவ தெப்படியென்னில்,

உ-ம். அவஸ்தாத்திரயங்களிற் கூடியிருந்துங் கூடாமலும் அவஸ்தாத்திரயத்தையும், அவஸ்தாத்திரய வியாபாரத்தையும், அவஸ்தாவாசரையு மறிந்துகொண் டிருப்பதே சாட்சித்வம்.

ச-கை. இந்தச் சாட்சித்வத்திற் கித்தனை விசேஷம் வேண்டுமாவெனில்,

உ-ம். வேண்டும்.

ச-கை. இது எங்கே கண்டோமென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்திற் கண்டோம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஸ்தலமடாதி கோயிலிற் ஜபம்பண்ணிக்கொண்டிருப்பவருடைய சந்நிதானத்தில் கடன்கொடுத்து வாங்கிக்கொண்டபுருஷரிருவரும்வந்துஒருமுகூர்த்தஞ்சபம்பண்ணிக்கொண்டிருந்து, பிற்பாடு சற்றுநேரங்கழித்து அவ்விருவரில் கடங்கொடுத்தவன்வாங்கினவனைக்கேட்க, அவன் காலாந்தரங் கொடுக்கிறேனென்றுசொல்ல, இப்படியன்னியோன்னியமாயொரு முகூர்த்தமட்டுஞ் சம்வாதம் பண்ணி, பிற்பாடு அந்தகடன்கொடுத்தவன், வாங்கினவனைக் கடினமாய்க்கேட்க, அவனில்லையென்று சொல்ல, இப்படிவொரு முகூர்த்தமட்டுமன்னியோன்னிய கலகம் பண்ணிப் பிற்பாடு அவர்களிருவருமா யரசனிடத்திற் போய்க் "கடன்கேட்டாலடித்தா" னென்று பிரியாது சொல்ல, "அவனே யடித்தான்" என்று கடன்வாங்கினவன் சொல்ல, இந்த வன்னியோன்னிய வெதிருத்தவாக்கியங்களை யரசன்கேட்டு, இதற்குச் சாட்சியுண்டோவென்றும் இவரிருவர் சம்வாதத்திற் கெவன் சாட்சியாயிருந்தானோ லவனுலிவர்கள் சம்வாதம்வெளிப்படுமென்றுங் கண்டிருந்ததுபோல பூர்வஞ் சொல்லப்பட்ட சாட்சித்வலக்ஷண மிருக்கின்றது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். அந்தச் சம்வாதிகளிருவரு மெந்தமட்டு மவுனமாயிருந்தார்களோ, அந்தமட்டுஞ் சுழுத்தியவஸ்தைக்குத்திருஷ்டாந்தம். அவ்வவஸ்தையில் வியாபாரத்திரயங்களில்லை, மௌனமாயிருந்த விருவரும் அவஸ்தாவாசிகளாயெந்தமட்டுஞ் சவுசன்னியமாய் சம்வாதம் பண்ணினார்களோ, அந்தமட்டுஞ் சொப்பனவஸ்தைக்குத் திருஷ்டாந்தம். அவ்வவஸ்தையில் வியாபாரத் திரயங்களுண்டு.

ச-கை. வியாபாரத்திரயமாவ தேதென்னில்,

உ-ம். அஸ்த சலனங் காயகவியாபாரம், அன்னியோன்னியசம்பாஷணை வாசக வியாபாரம், உத்தரப்பிரத்யுத்தர சிந்தனையே மானச வியாபாரம், மிருது பாஷிகளாகிய விருவருமே யவஸ்தாவாசிகள். இவர்களெந்தமட்டுங் கலகம் பண்ணிக்கொண்டிருந்தார்களோ, அந்தமட்டுமே சொப்பனவஸ்தை.

ச-கை. ஆனாற்சாக்கிராவஸ்தைக்குத் திருஷ்டாந்தமேதென்னில்,

உ-ம். அன்னியோன்னிய வடிகள் காயக வியாபாரம். அன்னியோன்னிய பவுருஷவசனங்கள் வாசகவியாபாரம். அன்னியோன்னிய மர்மசிந்தைகள் மானசவியாபாரம். இப்படி கலகம்பண்ணின விருவருமே யவஸ்தாவாசிகள். மத்தியஸ்தனுகிய தேவதத்தனிவர்கள் கலகத்தைப்பார்த்துக்கொண்டிருந்தவனுகையால் அவஸ்தாத்திரயங்களுடன் கூடியுங் கூடாமலிருந்துக்கொண்டு அவஸ்தாத்திரயத்தையும் அவஸ்தாத்திரய வியாபாரத்தையும் அவஸ்தாத்திரய வாசரையு மறிகிறபடியால் அந்தமத்தியஸ்த தேவதத்தனிடத்திற் சாக்ஷித்வ மிருக்கின்றது.

ச-கை. சாக்ஷித்துவத்திற்கித்தனை விசேஷம்வேண்டுமாவென்னில்

உ-ம். வேண்டும்.

ச-கை ஆனுல் தாஷ்டாந்தத்தில் சாக்ஷியான வாத்மாவினிடத்திலுமித்தனை விசேடமுண்டோவென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். அவஸ்தாத்திரயத்துடன் கூடியுங் கூடாம லிருப்பதும், அவஸ்தாத்திரய வியாபாரமும், அவஸ்தாத்திரய வாசரையறிந் திருப்பதுமாகிய விசேடம் சாக்ஷியாகிய ஆத்மாவினிடத்திலிருக்கின்றது.

ச-கை. தாஷ்டாந்தத்தி லவஸ்தாத்திரய மேதென்னில்,

உ-ம். சாக்கிரசொப்பன சுழுத்திகளே யவஸ்தாத்திரயம்.

ச-கை. சாக்கிரமாவ தேதென்னில்,

உ-ம். நித்திரைவிட் டெழுந்ததுமுதல் நித்திரைவருகிற பரியந்தமுஞ் சாக்கிரமென் றுசொல்லப்படும்.

ச-கை. இதற்குத் திருஷ்டாந்த முண்டோவென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். விசாலமாகிய பட்டணத்தைப்போற் சாக்கிராவஸ்தை. அந்தப் பட்டணத்திற் பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திர வீதிகள்போற் காயக வாசகமானசவியாபாரங்கள்; அப்பட்டணத்தில்வரப்பட்ட ஆனிவிருத்திகளுக்கு அபிமானியாகிய பிரபுவைப்போற் சுகதுக்கத்திற் றபிக்கின்ற சாக்கிராவஸ்தாவாசனுன விசுவன்.

ச-கை. சொப்பனமாவ தேதென்னில்,

உ-ம். நித்திரைகாலத்திற் சாக்கிரவாசனை மயமாகிய மனதினாற் கற்பிக்கப்பட்ட பிரபஞ்சத்தினிடத்திற் பிரதிபாதிக சீவனெம்மட்டும் விவகரித்திரானே அம்மட்டுஞ் சொப்பன மென்னப்படும்.

ச-கை. இதற்குத் திருஷ்டாந்த மெப்படியென்னில்,

உ-ம். மேற்சொல்லிய பட்டணத்திலிருக்குங் கோட்டையைப் போற்சொப்பனம்; அக்கோட்டையிலிருக்கும்பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திர வீதிகள்போல் காயக வாசக மானசவியாபாரம்; அக்கோட்டையில் வரப்பட்ட ஆனிவிருத்திகளுக்கபிமானியாகிய பிரபுவைப்போல் சுகதுக்கத்திற்றபிக்கின்றசொப்பனவஸ்தாவாசனாகியதைசதன்.

ச-கை. சுழுத்தியாவதேதென்னில்,

உ-ம். பாகியவியாபாரமும், அந்தர்வியாபாரமும், தேகேந்திரிய வியாபார பிரஞ்ஞையு மில்லாமல் சீவன் நிர்ச்சேஷ்டிதனாகி யெந்தமட்டும் நித்திரைசெய்கிறானோ, அந்தமட்டுஞ் சுழுத்தி யவஸ்தையென்று சொல்லப்படும்.

ச-கை. இதற்குத் திருஷ்டாந்த முண்டோவென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். கோட்டையிலிருக்கிற வீட்டைப்போற் சுழுத்தியவஸ்தை; அந்தவீட்டில் பிரமக்ஷத்திரியாதிவீதிகளெப்படியில்லையோ, அப்படிபோல்காயகவாசகமானச வியாபாரங்களில்லை. அந்தவீட்டில்வருகிற ஆனிவிருத்திகளுக்கபிமானியாகிய பிரபுவைப்போல் நிசானந்தத்தையனுபவிக்கப்பட்ட சுழுத்தியவஸ்தா வாசனாகிய பிராஞ்ஞன்.

ச-கை. ஆனாலிவ்வவஸ்தைகளைக்குறித்துஆத்மாவுக்குச் சாட்சித்துவ மெப்படியென்னில்,

உ-ம். நேற்றைய ஜாக்கிராவஸ்தையும், அதிற்செய்யுங் காயக வாசக மானச வியாபாரங்களும், அவ்வவஸ்தா வாசனையும், நேற்றைய சொப்பனவஸ்தையும், அதிற்செய்யுங் காயக வாசக மானச வியாபாரங்களும், அவ்வவஸ்தா வாசனையும், நேற்றைய சுழுத்தி யவஸ்தையும், அதிற் சர்வாத்மனா யொருவியாபாரமும் பண்ணவில்லை யென்பதும், அவ்வவஸ்தா வாசனையும் இன்றைக்கு நாம் காணுகிறபடியினால், ஆத்மாவுக்குச் சாட்சித்வ முண்டென்பதிற் சந்தேகமில்லை.

ச-கை. ஆனலிது ஸ்மரணையோ அல்லது அனுபவமோவென்னில்

உ-ம். ஸ்மரணையென்றே சொல்லவேண்டும்.

ச-கை. அனுபவமென்று சொல்லக்கூடாதோ வென்னில்,

உ-ம். இப்போ தந்த விஷய ஜன்னீகரிஷ்ண மில்லாதபடியின லனுபவமென்று சொல்லக்கூடாது. ஸ்மரணையென்றே சொல்லவேண்டும்.

ச-கை. ஆனல் இந்த ஸ்மரணை அனுபூத வஸ்துவிஷயமாய் வருகிறதோ, அனனுபூத வஸ்துவிஷயமாய் வருகிறதோ வென்னில்,

உ-ம். அனுபூதவஸ்து விஷயமாகவே வருகிறது.

ச-கை. அனனுபூதவஸ்து விஷயமாய்வருகிறதென்னலாமே யென்னில்,

உ-ம். பிரபஞ்ச வியாபாரமெல்லாம் நம்மாலேயே ஸ்மரிக்கப் படவேண்டும்; அங்ஙனமில்லாமையினல் ஸ்மரணையெல் லாம் அனுபூதவஸ்து விஷயமென்றேசொல்லவேண்டும்.

ச-கை. ஆனலிது ஆராலனுபவிக்கப்படுகிற தென்னில்,

உ-ம். நம்மாலனுபவிக்கப்படுகிறது.

ச-கை. ஆனல் நாம் கூடியிருந் தனுபவித்தோமோ? கூடாதிருந் தனுபவித்தோமோ வென்னில்,

உ-ம். கூடியிருந்தே யனுபவித்தோம்.

ச-கை. கூடாதிருந் தனுபவித்தோ மென்னலாமே யென்னில்,

உ-ம். சொர்க்காதிகளிலிருக்கும் விஷயத்தையும் நாமெப்போ து மனுபவிக்கவேண்டும். அங்ஙனமில்லாதபடியால் அப் படி சொல்லக்கூடாது. கூடியிருந்தேயவஸ்தைகளையும்; அவஸ்தா வியாபாரங்களையும், அவஸ்தாவாசரையு மனு பவித்தோமென்றே சொல்லவேண்டும்.

ச-கை. ஆனற் கூடாமலிருப்ப தெப்படியென்னில்,

உ-ம். நேற்றைய ஜாக்கிர சொப்பன சுழுத்திகளும், அவ்வவ் வவஸ்தாவியாபாரங்களும், அவஸ்தாவாசிகளும் நசித் துப்போயும் நாமிருப்பதினல் நாம் அவ்வவஸ்தைகளிற் கூடவில்லை. கூடினேமேயானல் நாமும் நசித்துப்போக வேண்டும்.

ச-கை. கூடியிருந்தால் நசித்துப்போக வேண்டுமென்றே நியம முண்டோவென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். வஸ்திராதிகளிற் கூடியிருக்கிற சித்திராதிகள்வஸ்திராதிகள் நசித்துப்போனாற் சித்திராதிகளும் நசித்துப்போவதுபோல, நாமுங் கூடியிருந்தால் நசித்துப்போகவேண்டும். ஆகையால் நா மவஸ்தாத்திரயங்களுடன் கூடாமலிருந்து அவ் வவஸ்தைகளையும், அவஸ்தா வியாபாரங்களையும், அவஸ்தாவாசிகளையும் அறிகிறோம். ஆதலால் சாக்ஷித்துவம் நம்மிடத்தி லிருக்கின்றது.

ச-கை. ஆனால் நாமே யவஸ்தாத்திரயங்களுக்குச் சாட்சியானால் தேவரீர் வாக்கியப்படியே யவஸ்தாதிகளை யறிகிறவன் சாட்சியாமே. அவஸ்தாவாசனல்லவோ அவஸ்தாதிகளையு மவஸ்தாவியாபாரங்களையு மறிகிறான். ஆதலா லவ்வவஸ்தாவாசனுக்கே சாட்சித்வஞ் சித்தித்திருக்கிறது. இப்படியிருக்க அவஸ்தாவாசனுக்குச் சாட்சித்வமில்லை, அவனுக் கன்னியவெதிருத்தனுக்கே சாட்சித்வமுண்டென்றெப்படி சொல்லலாமென்னில்,

உ-ம். அவஸ்தாவாசனுக்குச் சாட்சித்வ மின்றென்பதும் அவனுக் கன்னியமான வாத்மாவுக்கே சாட்சித்வமுண்டென்பதுமே கூடும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். பாகியமான விருட்சாதிகளைப்போலும், அந்தரான தேகாதிகளைப்போலும் அவஸ்தாவாசன் விகாரியாயிருக்கிறான். ஆதலால் விருக்ஷாதிகளுக்குந் தேகாதிகளுக்குமன்னியபதார்த்த அவபாசகரூபமாகிய சாட்சித்துவமில்லாததுபோல விகாரியாகிய அவஸ்தாவாசனுக்கும் அவஸ்தைக்கும் அவஸ்தா வியாபாரங்களுக்கும் அவபாசகரூபமான சாட்சித்வமில்லை.

ச-கை. ஆனா லிவன் விகாரியாயிருக்கிறானோ வென்னில்,

உ-ம். ஆம். விகாரியாகவே நேற்றைக்கெய்த சுகதுக்கத்துடன் தபித்தானே, அப்படியேயின்றைக்கிராமல்அதைப்பார்க்கிலும் அதிகங் குறைச்சலாகியசுகதுக்கங்களுடன்கூடித் தபிக்கிறானதலால் விகாரத்துவ மிருக்கிறதேயன்றி சாட்சித்வமில்லை.

ச-கை. இவனுக் கன்னியமானசாட்சியென்றொன்றையுங்காணோமே எப்படி யுண்டென் றறிகிறதென்னில்,

உ-ம். அறியலாம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். இந்த வவஸ்தாவாசன் நேற்றைக் கெந்தச் சுகத்துடன் கூடி யிருந்தானோ அப்படி யிராமல், இன்று நானாதிகமாகிய சுகதுக்கத்துடன் கூடி யனுபவித்தானென்றாளவன் அந்தஅவஸ்தாவாசன்விகாரங்களையறிகிறானோ, அவனே அவஸ்தாவாசனுக்கன்னியமான சாட்சியென்றறியலாம்.

ச-கை. ஆனால் நிர்விகாரனாகிய ஆத்மா நான் சாட்சியென்றறியவில்லையே; விகாரியான அவஸ்தாவாசனல்லவோ வறிகிறான்? ஆதலால் நிர்விகாரனாகிய ஆத்மாவே சாட்சியென்றெப்படியறிகிறதென்னில்,

உ-ம். திருஷ்டாந்தமாகக்கேள் கண்ணாடியிற் பார்க்கிறபோது சுபாவமாகிய முகம் அதிற் பிரதிபிம்பித்து அந்தப்பிரதிபிம்ப வழியாகவே தனது சுபாவமுகத்தின் சவுந்தரியரூபாதிகளை யறிவதுபோல; நிர்விகாரமாகிய ஆத்மாவும்அந்தக்கரணத்திற் பிரதிபலித்துஅந்தப்பிரதிபலன் வழியாகவே கர்த்தாவாயிருந்து சுருதி சாஸ்திராதி விசாரம்பண்ணி, விகாரமாகிய பிரதிபலனந் தானல்லவென்று நிச்சயித்து, அந்தப் பிரதிபலன்வழியே தானிருவிகாரனாகிய பரிபூரணனென்றும், தான் பிரமமென்றும், தான் சாட்சியென்றும், தனது விலட்சணாதிகளை யறிகிறான். இந்தத் திருஷ்டாந்தத்திற் றிரிசியமான கண்ணாடியு மதிற்றிரிசியமாய்ப் பிரதிபலித்த ஆபாசமுகமும் சுபாவமுகத்தின் சவுந்தரியரூபாதிகளை எப்படி யறியவில்லையோ, அதுபோல திரிசிய விகாரமான அந்தக்கரணமும் அதிற்பிரதிபலித்த திரிசியவிகாரியாகியசிதாபாசனுந்தனது சொரூபமான அதிஷ்டான வாத்ம சுபாவ சாட்சித்வ நிர்விகார பரிபூரணத்வ சொரூபத்தை யறியவில்லை. ஆகையினால் நிர்விகார வாத்மா சுதாவாய் நான் சாட்சியென்றறியாதிருந்தபோதும் விகாரவவஸ்தாவாசன் நான் சாட்சியென் றறிந்தவனைப்போ னிருந்தபோதும் விகாரியாகியவவஸ்தா வாசனுக்குச் சாட்சித்வங்கூடாது. நிர்விகார வாத்மாவுக்கேசாட்சித்வங்கூடும். அந்தச்சாட்சித்வலட்சணம் நம்மிடத்திருப்பதால் நாம் சாட்சியென்பதிற் சந்தேகமே யில்லை.

ச-கை. நமக்கு இந்தச் சாட்சித்வம் பூர்வமே சித்தித்திருக்கிறதோ? இப்போது சாதனங்களினாற் சித்தித்ததோ வென்னில்,

உ-ம். பூர்வம் விவாதகர்த்தாக்களுக்குச் சாட்சியாயிருந்தவருடைய சாட்சித்வம் சாதனங்களினாற் சித்தியாமற் பூர்வமே சித்தித்திருப்பதுபோல, நம்மிடத்தி லிருக்கப்பட்டவருடைய சாட்சித்வமுஞ் சாதனங்களாற் சித்தித்ததல்ல; பூர்வமே சித்தித்திருக்கிறது.

ச-கை. ஆனால் ஏன் தோற்றவில்லையென்னில்,

உ-ம். விசாரியாமையினால் தோற்றவில்லை. ஆகையினாற் சிரவணமே முக்கியமென் றுபநிஷார்த்தங்களிற் சொல்லுகின்றது. மலபரிபாகத் தெல்லையிற்றெளிந்த சற்குருவினால் விசாரித்தபோது நமதுசாட்சாத்கார வனுபவத்திற்கும் நாமே சாட்சித்வமென்று நித்திமாயிருக்கின்றது. அப்படிக்கு நித்தியமாயிருப்பது அவானுபவத்திற்குச் சித்தி வராமல் விபரீதசந்தேகமிருக்குமானால் அந்தக்கரணநிருமலமாய் ஏகாக்கிரசித்தம் வரப்பண்ணிச் சாட்சாத்கார சாட்சித்வம்வரப் பயிற்றுவிக்கவேண்டும்.

ச-கை. இந்த விசாரத்திற்குப் பலமேதென்னில்,

உ-ம். பூர்வ விவாதகர்த்தருடைய சாட்சியாகிய தேவதத்தனுக்கு அன்யமான விவாதிகளுடைய வவஸ்தைகளும், அவஸ்தா வியாபாரங்களும். அவஸ்தா வியாபாரிகத்வமும், அவனையெப்படி பரிசிக்கவில்லையோ, அவன் இவ்வவஸ்தாதிகளையெல்லா முதாசினமாகப் பார்த்துக்கொண்டேயிருந்தவன் வவஸ்தாதிகளுக்குச் சாட்சியாயெப்படியிருக்கிறனோ, அதுபோல நமக்கன்னியமான அகங்காராதியவஸ்தாத்திரயங்களும், அவஸ்தா வியாபாரங்களும்நமக்கில்லை. இவ்வவஸ்தாவிகாராதிகள் சாட்சியாகிய நம்மைப்பரிசிக்கவில்லை. இந்த வவஸ்தாதிகளையெல்லாம் நாமுதாசினமாகப் பார்த்துக்கொண்டு காலத்திரயத்திலும் இந்தவவஸ்தாதிகளுக்குச் சாட்சியாயிருக்கிறோமென்றறிகிறதே இந்தவிசாரத்திற்குப்பலம். ஆகையினால்,

ஆனந்தமே திருமேனியாகிய ஸ்ரீசற்குருவினால் நன்றாய் விசாரித்துத் தானே சாட்சியென்றெவனறிகிறானோ, அவனேகிருதகிருத்தியனாகிய சீவன்முத்தனென்று சுருதியாதிகளிற்சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

அவஸ்தாத்திரயசாட்சித்வநிருபகம்

முற்றிற்று.

பதினோராவது,

பஞ்சகோசவிலக்ஷணநிருபகம்.

ச-கை. ஆத்மா பஞ்சகோசத்துக் கன்னியமென்று சுருதிசொல்லுகிறபடி பஞ்சகோசங்களையறியாம லவைக்கன்னியமாகியசொரூபத்தை யறியக்கூடாதாகையினால் பஞ்சகோசமாவதேதென்னில்;

உ-ம். அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயமென் றைந்துகோசங்களாகும்.

ச-கை. அன்னமய கோசமாவ தேதென்னில்,

உ-ம். அன்னத்தினாற் பிறப்பாய் ஸ்தம்பம்போல் தூலமாய் கரசரண வவயவாகாரமாய் ஷட்பாவ விகாரமத்தாய் ஷட்கோசத்துவமாய் தோற்றப்படுகிற தூலசரீரமே யன்னமயகோசம்.

ச-கை. பிராணமய கோசமாவ தேதென்னில்,

உ-ம். கர்மேந்திரிய பஞ்சகமும், பிராணாதிபஞ்சகமுங்கூடினது பிராணமயகோசம்.

ச-கை. மனோமய கோசமாவ தேதென்னில்,

உ-ம். மனதும் ஞானேந்திரிய பஞ்சகமுங் கூடினது மனோமய கோசம்.

ச-கை. விஞ்ஞானமய கோசமாவ தேதென்னில்,

உ-ம். புத்தியும் ஞானேந்திரிய பஞ்சகமுங்கூடினது விஞ்ஞானமயகோசம்.

ச-கை. ஆனந்தமய கோசமாவ தேதென்னில்,

உ-ம். பிரியம் மோதம் பிரமோதமாகிய விருத்திமத்தாய்ப் பிரதானமாகிய அஞ்ஞானமானந்தமயகோசம்.

ச-கை. பிரியமோதப் பிரமோதமாவதேதென்னில்,

உ-ம். இஷ்டமான வஸ்துவைப் பார்த்தமாத்திரம் வருகிற சந்தோஷத்திற்குப் பிரியமென்றும், அந்தவஸ்து லபித்த பிறகு வருகிறசந்தோஷத்திற்கு மோதமென்றும், அந்த வஸ்துவையனுபவித்தபிறகுவருகிற சந்தோஷத்திற்குப் பிரமோதமென்றும்பெயர்.

ச-கை. இதுகளுக்குக்கோசமென்று பெயரேன்வந்ததென்னில்

உ-ம். கோசம்போலவேயாத்மாவை யறியவொட்டாமல் மறைகிறபடியாற் கோசமென்று பேர்வந்தது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். திருஷ்டாந்தமாகக்கேள். உறையானது கத்தியை மூடிக்கொண்டதுபோலும், கௌசினையானதுவீணையைமூடிக்கொண்டதுபோலும், பசரிக்காய்பையானது புழுவை மூடிக்கொண்டதுபோலும், புளியமோடானதுபழத்தை மூடிக்கொண்டதுபோலும், சட்டையானது புருஷனை மூடிக்கொண்டதுபோலும், பஞ்சகோசங்களும் ஆத்மாவைமூடிக்கொண்டிருக்கிறபடியினு லிதுகளுக்குக் கோசமென்றேசொல்லப்படும்.

ச-கை. திருஷ்டாந்தத்தி லுறையுங் கத்தியும் கௌசினையும் வீணையும் பசரிக்காயும் புழுவும்புளியமோடும் பழமும் சட்டையும் புருஷனுமாகிய இதுகள் பரிச்சின்னமாகையினு லொன்றையொன்று உபசீவித்துக்கொண் டிருக்கவில்லை. ஆனதால்உறைமுதலியபதார்த்தங்கள் கத்திமுதலியபதார்த்தங்களை மூடுகிறதற்குச் சாமர்த்தியமுண்டு. தார்ஷ்டாந்தத்தில் சமானசத்தல்லாதபடியினுல் ஆத்மசத்தையையுபசீவித்துக்கொண்டுதோற்றப்பட்ட பஞ்சகோசங்களுக் கவ்வாத்மாவை மூடும்படிக்கெப்படி சாமர்த்தியமுண்டென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஆதித்தகிரண பரிணமவிசேஷாதிமேகங்கள் அவ்வாதித்தன் சத்தையை யுபசீவித்துக்கொண்டே தோற்றினபோதும் அவ்வாதித்தனைமூடிக்கொள்வதுபோலும், அக்கினியினுடைய சத்தையை யுபசீவித்துக் கொண்டே தோற்றப்பட்டபுகை அவ்வக்கினியை மூடிக்கொள்வது

போலும், பழுதையின் சத்தையை யுபசிவித்துக்கொண் டேதோற்றப்பட்ட பாம்பு அந்தப்பழுதையை மூடிக் கொள்வதுபோலும், மண்ணின்சத்தையை யுபசிவித்துக் கொண்டே தோற்றப்பட்டகடம் அந்த மண்ணைமூடிக் கொள்வதுபோலும், பொன்னின்சத்தையை யுபசிவித் துக்கொண்ட தோற்றப்பட்டவாபரணம் பொன்னைமூ டிக்கொள்வதுபோலும், ஆத்மசத்தையை யுபசிவித்துக் கொண்டே தோற்றப்பட்ட பஞ்சகோசங்களுக்கும் ஆத் மாவை மூடும்படியான சாமர்த்தியமுண்டு.

ச-கை. ஆனு லாத்மாவுக்குப் பஞ்சகோச வெதிருத்வ மெப்படி யெனில்,

உ-ம். பூர்வ திருஷ்டாந்தத்திற் கத்தியு முறையும் கவுசினையும் வீணையும் பசரிக்காய்பையும் புழுவும்புளியமோடும் பழ மும் புருஷனுஞ்சட்டையுமாகிய இதுகளேகமாய் விவக ரிக்கப்படத் தோற்றினும் அந்தக்கத்திமுதலானதும் உறைமுதலானதுகளுக்கு வேறாகத் தோற்றுவதுபோல ஆத்மாவும் பஞ்சகோசங்களுமேகமாய்விவகரிக்கப்படத் தோற்றினும் அந்த ஆத்மாகாலத்திரயத்திலும் பஞ்ச கோசங்களுக் கன்னியமாகத் தோற்றப்பட்டதே வெதி ருத்வம்.

ச-கை. பஞ்சகோசங்களுடன் சேர்ந்திருக்கு மாத்மாவுக் கல் லவோ வெதிருத்வஞ் சொல்லவேண்டும்? அப்படியாத்மா வுக்குப் பஞ்சகோசங்களுடன் கூட்டர வுண்டோவென் னில்,

உ-ம். உண்டு

ச-கை. அந்தக் கூட்டர வெதினுல்வந்ததென்னில்,

உ-ம். அன்னியோன்னிய வத்தியாசத்தினுல் வந்தது.

ச-கை. அந்த அன்னியோன்னிய வத்தியாசமாவ தேதென்னில்

உ-ம். இந்த வஸ்துவின் தர்மம் அந்தவஸ்துவினிடத்தும், அந்த வஸ்துவின் தர்ம மிந்தவஸ்துவினிடத்துமாகத் தோற் றப்பட்டதேயன்னியோன்னியவத்தியாசமென்றுசொல் லப்படும்.

ச-கை. இந்த அன்னியோன்னிய வத்தியாசங்களினுலாத்மாவுக் கும்பஞ்சகோசங்களுக்குங் கூட்டரவுண்டோவென்னில்

உ-ம். உண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். சம்க்ஷேபமாகக்கேள். அன்னமய கோசத்திற்கு மாத்மாவுக்குஞ் சீவத்துவாரா, சாமானிய ஜாதித்துவாரா, விகாரத்துவாரா, அங்கத்துவாரா, வர்ணத்துவாரா, விஷேஜாதித்துவாரா, ஆசிரமத்துவாரா, நாமத்துவாரா, சமஸ்காரத்துவாரா, வேஷத்துவாரா, கிரியையாதித்துவாராகூட்டரவுவந்தது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். நான்சீவன், நான்மனுஷனென்பது சீவத்துவாராசாமானியவத்தியாசம்; நான்பிறந்தேன், நான் இருக்கிறேன், நான் வளர்ந்தேன், நான்பருத்தேன், நான் இளைத்தேன், நான் நசித்துப்போகிறேன். என்பது விகாரத்துவாரா விசேஷ அத்தியாசம்; நான்புருஷன், நான்ஸ்திரீ, நான்அலியென்பது அங்கத்துவாரா அத்தியாசம்; நான்பிராமணன், நான்க்ஷத்திரியன், நான் வைசியன், நான்சூத்திரனென்பது வர்ணத்துவாரா அத்தியாசம்; நான்தெலுங்கன், நான்தமிழன், நான் கணங்கன், நான்வேலநாட்டி, நான்வேகிநாட்டி, நான்முழுக்குநாட்டி, நான்காசுலநாட்டி, நான்போகி, நான்குச்சிப்பியன், நான்மாராஷ்டகன், நான்காசிபகோத்திரன், நான்பாரத்துவாசகோத்திரன், நான் ஆஸ்வலாயசூத்திரன், நான் ஆபஸ்தம்பசூத்திரன், நான்போதாயனசூத்திரன், நான்காத்தியாயனசூத்திரன்என்பது விசேஷ சாதித்துவாரா அத்தியாசம்; நான் பிரமசாரி, நான்கிரகஸ்தன், நான்வானப்பிரஸ்தன், நான் சந்நியாசியென்பது ஆசிரமத்துவாரா அத்தியாசம்; நான் கிருஷ்ணன், நான் ராமன், நான் எல்லாபட்டன், நான்திப்பாபட்டன், நான்கறுப்பன், நான்சிவப்பன்என்பது நாமத்துவாரா அத்தியாசம்; நான்தீக்ஷதன், நான்சோமயாகி, நான்மகாவிரதயாகி, நான்பவுண்டரீகயாகி என்பது சமஸ்காரத்துவாரா அத்தியாசம்; நான்மாயாவாதி, நான்தந்துவாதி, நான்பாகவதன், நான்சைவன், நான்வீரசைவன், நான்சாஸ்திரி, நான்புராணிகன், நான்யோகீசுவரன் என்பது வேஷத்துவாரா அத்தியாசம்; நான் உபாத்தியாயன், நான்சிஷன், நான்பத்தன், நான்சுரோத்திரிகன் நான்ஞானி, நான் கலியாணமாப்பிள்ளை, நான்தச்சன், நா

ன் தருமான், நான் தட்டான், நான் குசவன், நான் அம்பட்டன், நான்வண்ணான், நான்கூலிக்காரன், நான் இடையன், நான்குதிரைக்காரன், நான்மணியக்காரன், நான் கணக்கப்பிள்ளையென்பது கிரியாத்துவாரா அத்தியாசம்; இதுமுதலான அன்னமயகோச சுபாவதர்மங்கள் ஆத்மாவினிடத்திலும், ஆத்மாவினுடைய சச்சிதானந்தசுபாவ தர்மமானது என் தூலசரீரமென்றைக்கு மிருப்பதுபோலுநன்றாய் தோற்றுகிறதென்றும் இன்பமாயிருக்கிறதென்றும் அன்னமய கோசத்தினிடத்துந் தோற்றப்படுவதால், இந்த அன்னியோன்னிய வத்தியாசத்தினால் அன்னமயகோசத்திற்கும் ஆத்மாவுக்கு மித்தியாத்தியாசங் கூட்டரவுவந்தது.

ச-கை. பிராணமயகோசத்திற்கு மாத்மாவுக்குங் கூட்டரவெப்படியென்னில்,

உ-ம். அத்தியாச பூர்வகமாய் நான் பசியையுடைத்தானவன், நான் தாகமுண்டானவன், நான் சத்தியுண்டானவன், நான்வீரியமுண்டானவன், நான்பலமுண்டானவன், நான் கிரியையுண்டானவன், நான்வாயுண்டானவன், நான் தாதா, நான் ஊமை, நான் கையில்லாதவன், நான்சப்பாணி, நான் கூனன், நான்காலுண்டானவன் என்கிற இதுமுதலான பிராணமயகோச தர்மங்க ளாத்மசுபாவமாகவும், ஆத்மசுபாவமாகிய சச்சிதானந்தங்கள் என்பிராணனன்றாய்த் தோற்றப்படுகிறதென்றுபிராணமயசுபாவமாகவுந் தோற்றுகிறபடியினால் ஆத்மாவுக்கும் பிராணமயகோசத்திற்கும் அன்னியோன்னியாத்தியாசத்தினால் இதராத்தியாசக் கூட்டரவுவந்தது.

ச-கை. மனோமய கோசத்திற்கு மாத்மாவுக்குங் கூட்டர வெப்படியென்னில்,

உ-ம். நான் சங்கற்பவான், நான்விகற்பவான், நான்சோகி; நான்மோகி; நான்ரோகி, நான்போகி, நான்குரோதி, நான் துவேஷி, நான் இச்சாவந்தன், நான்பிரஷ்டன், நான்சற்சனன், நான்கிராதகன், நான்செவிடன், நான்குருடன் என்கிற இதுமுதலான மனோமயகோச சுபாவங்களான சங்கற்பாதி தர்மங்கள் ஆத்மாவினிடத்தும், ஆத்மதர்மமாகிய சச்சிதானந்தங்கள் என்மனது நன்றாய்த்தோற்

றப்படுகிறதென்றுமனோமயகோசத்தினிடத்திலுந்தோற்றுகிறபடியினால் மனோமயகோசத்திற்கும், ஆத்மாவுக்கு மன்னியோன்னியாத்தியாசத்தினால் இதரேதராத்தியாசங் கூட்டரவுவந்தது.

ச-கை. விஞ்ஞானமய கோசத்திற்கும், ஆத்மாவுக்குங் கூட்டரவெப்படியென்னில்,

உ-ம். நான்கர்த்தா, நான்நிச்சயவான், நான்பத்திவான், நான்யுத்தியுத்தி சாதுரியமுண்டானவன், நான் யோகசாதகன், நான்விரதன், நான்பண்டிதன், நான்லோகாந்தரத்திற்குப் போகிறவனென்கிற இதுமுதலான விஞ்ஞானமயகோச சுபாவதர்மங்கள் ஆத்மசுபாவமாகவும், ஆத்மதர்மமான சச்சிதானந்தங்கள் என்புத்திநன்றாய்த்தோற்றப்படுகிறதென்று விஞ்ஞானமயகோச தர்மமாகவுந்தோற்றுகிறபடியினால் விஞ்ஞானமயகோசத்துக்கு மாத்மாவுக்கும் முன்போலவே இதரேதராத்தியாசங் கூட்டரவுவந்தது.

ச-கை ஆனந்தமயகோசத்திற்கு மாத்மாவுக்குங் கூட்டரவெப்படி யென்னில்,

உ-ம். நான்போந்தன், நான்சந்துருஷ்டன், நான்சுகி, நான்சாந்தன், நான்ராசதன், நான்தாமதன், நான்சடன், நான் அனுர்தன், நான்துங்கன், நான் அசந்துருஷ்டன், நான் மூடன், நான் அஞ்ஞானி, நான்துஷ்டன், நான்குண்டன், நான்மோகிதன், நான்விவேகி, நான்பிராந்தனென்கிற இதுமுதலான அஞ்ஞான சுபாவதர்மங்கள், ஆத்மாவினிடத்திலும் ஆத்மசுபாவதர்மமான சச்சிதானந்தங்கள் என் அஞ்ஞானம் நன்றாய்த்தோற்றப்படுகிறதென்றானந்தமயகோச சுபாவமாகவும் தோற்றுகிறபடியினால், ஆனந்தமயகோசத்துக்கு மாத்மாவுக்கு மன்னியோன்னியவத்தியாசத்தினாற் சத்தியாத்தியாசங் கூட்டரவுவந்தது. ஆகையினாற் பஞ்சகோசங்களுங் கன்னியமாயாத்மாவை வேறுபடுத்தி யறியவேண்டியது.

ச-கை. வேறுபடுத்தி யறியும்விதமெப்படியென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில்என்பசு, என்கன்று, என்பிள்ளை, என் பெண், என்பெண்சாதியென்று தன்னைச் சம்பந்தித்துக்கொண்டு தோற்றப்பட்ட பசுமுதலானதுகள் தானல்லா

துபோல, தார்ஷ்டாந்தத்திலும் என்சரீரம், என்பிராண ன், என்மனம், என்புத்தி, என் அஞ்ஞானமென்று தன் னைச்சம்பந்தித்துங்கொண்டு தோற்றுகிற பஞ்சகோசங் களுந்தானல்ல. அந்தப் பஞ்சகோசங்களுக்கு விலக்ஷண மான ஆத்மாவே தானென்றறியலாம். இன்னமும் பசு வுரத்திருக்கிறதென்றும், கன்று இளைத்துப்போச்சென் றும், பிழைக்கமாட்டாதென்றும்,பிள்ளை துர்ப்பலனென் றும், சொற்படி கேட்கவில்லையென்றும், குமாரத்திமூட மாயிருக்கிறுளென்றும், தெண்டித்தாலசல்வீட்டுக்குப் போகிறுளென்றும், என்பிள்ளை, என்குட்டி, என்வீடு, என்னுடைமை, என்னுப்பாரிகையென்றும், என்பெண்சா திவீட்டுக்குச் சுதந்தரமுடையவளாயிருக்கவில்லையென் றும், பத்திரமாயொன்றுஞ் சிலவழிக்காம லிருவென்று சொன்னுலுங் கேட்கவில்லையென்றும், எனக்கிதமாயொ ருகாரியமுஞ் செய்யவில்லையென்றுஞ் சொல்வதுபோல வே, அன்னமயகோசமாகிய ஸ்தூலதேகவிகாரங்களும், பிராணமயகோச சுபாவமாகிய பசிதாகவிகாரங்களும், ம னேமயகோசமான சங்கற்பாதி விகாரங்களும், விஞ்ஞா னமயகோசமான கர்த்ருத்வாதி விகாரங்களும், ஆனந்த மயகோச சுபாவமாகிய போக்த்ருத்வாதி விகாரங்களும் உண்டாகின்றது. ஆதலால் இந்தப் பஞ்சகோச தர்மங்க ளும் சாட்சியாகிய நம்மைப்பரிசிக்கவில்லையென்று வேறு படுத்தி யறிகிறதே பஞ்சகோச வெதிருத்வஞானம்.

ச-கை. ஆனுல் திருஷ்டாந்தத்திற் பசுவாதிகள் தன்னுடன்கூடா மல் தனக்கன்னியமா யிருப்பதினுல் அப்பசுவாதிகளுக் குத்தான்வேறென்று வெதிருத்தஞானம் வரலாம்; தார்ஷ் டாந்தத்திற் பஞ்சகோசங்கள் தன்னுடன்கூடியிருப்பதா ல்பஞ்சகோசங்களுக்குத் தான் அன்னியனென்று வெ திருக்கஞானம் எப்படிவருமென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் அத்தியயனகாலத்தில் அத்தியயனம் பண்ணப்பட்ட புருஷர்களாலுச்சரிக்கப்பட்டுங் கூடப்பி றந்த சப்தங்களைக்கேட்டுஇதுஇன்னசப்தம், இது இன் னுர்சப்தமென்று பிரத்தியேகிக்க வசமில்லாதிருந்தபோ திலும்விசாரித்து விவேகயுக்தமாகிய புத்தியினுல் இது இன்னசப்தம்,இதுஇன்னுர்சப்தமென்று பிரத்தியேகித்

தறிவதுபோலும், சலத்தோடுங் கூடியிருக்கிற சுடுகை யைப்பகுக்க வசமில்லாமற்போனாலும், தொக்கிந்திரியத் தினாற் பரிசித்து விவேகயுத்தமாகிய புத்தியினால் சலத் தையும் ஊஷ்ணத்தையும் பிரத்தியேகித் தறிவதுபோ லும், சுவரிலெழுதியிருக்கிற சித்திரங்கள் கறுப்பு வெ ள்ளை சிவப்புரூபத்தினாற் பகுக்கவசமில்லாமற்போனாலும் கண்ணினாற்பார்த்து விவேகயுத்தமாகிய புத்தியினால் இ து சுவர், இதுசித்திரம், இதுகறுப்பு, இதுவெளுப்பு, இதுசிவப்பென்று பிரத்தியேகித்தறிவதுபோலும் ஜலத் திற்கலந்திருக்குந் தித்திப்புமுதலான ருசியைப்பகுக்க வசமில்லாதிருந்தபோதிலும் ரசேந்திரியத்தி லனுபவி த்து விவேகமாகிய யுக்தி புத்தியினால் இதுதித்திப்பு, இ து புளிப்பு, இதுகசப்பு, இது துவர்ப்பு, இது கார்ப்பு, இது உவர்ப்பென்று பிரத்தியேகித்தறிவதுபோலும், வ ஸ்திரத்தை யாசிரயித்திருக்குங் கந்தவிசேஷங்களைப் ப குக்க வசமில்லாதிருந்தபோதிலும் கிராணேந்திரியத்தா லாக்கிராணித்து விவேகபுத்தியினால் இது துர்க்கந்தம், இதுசுகந்தம், இதுமிசிரகந்தமென்று பிரத்தியேகித் தறிவதுபோலும் தாஷ்டாந்தத்தில் பஞ்சகோசங்களை யும், பஞ்சகோசங்களுடன் கூடியிருக்கு மாத்மாவையும் பகுக்கவசமில்லாதிருந்தாலும் நன்றாய் விசாரித்தறிந்து விவேகயுக்தமாகிய புத்தியினால் அனுபூதி விசாலமுள்ள ஸ்ரீசற்குரு சந்நிதானத்தில் பஞ்சகோசஸ்வரூப மிப்படிப் படடதென்றும்,ஆத்மஸ்வரூபமிப்படிப்பட்டதென்றும், பஞ்சகோசங்களுக்கும் ஆத்மாவுக்கும் சம்பந்தமில்லையெ ன்றும், பிரத்தியேகமாய்ப் பகுத்தறியலாம். இந்தமட் டும் விவகாரநிமித்தியமாகப் பஞ்சகோசங்களை யொரு பொருட்படுத்தி ஆத்மாவைப்பஞ்சகோசங்களுக்கன்னிய மென்று விவேகித்தறியும்படி சொன்னோம். இனிவஸ்து வாகவே விசாரிக்கும்போது பழுதையினிடத்தி லாரோ பித்த சர்ப்பாதிகள் பழுதையன்றி வேறில்லாததுபோல ஆத்மாவினிடத்தி லாரோபித்த பஞ்சகோசங்களும் அதி ஷ்டானமாகிய ஆத்மாவையன்றி வேறில்லை.

சஙகை. திருஷ்டாந்தத்திற் பழுதையென்ற ஞானம் வந்தபிறகு சர்ப்பாதி யுபாதிகள் தோற்றாததுபோல, தாஷ்டாந்தத்

திலும் ஆத்மஞானம் வந்தபிறகு பஞ்சகோசங்களின் பிரவர்த்தி வாராமற் போகவேண்டும். அப்படி போகாதபடியினால் ஆரோபமான பஞ்சகோசங்கள் அதிஷ்டானமான ஆத்மாவையன்றி வேறில்லையென் றெப்படி புத்தியிலேறுமென்னில்,

உ-ம். கானலினிடத்திற் ஜலப்பிராந்தி வந்தபிறகு அந்தச்சலத்தில் ஸ்நானபானாதிக்கிரிகை பண்ணவேண்டுமென்றுபோன புருஷன், விசாரித்து இது ஜலமல்லவே, நாம் கானலென்றறியாமல் பிரமித்தோமேயென்று ஞானம்வந்த பின்பும் அந்தஜலப்பிரவர்த்தியே காணப்படுவதுபோல, ஆத்மாவினிடத் தாரோபிக்கப்பட்ட பஞ்சகோசங்களு மதிஷ்டானமாகிய வாத்மாவையன்றி வேறில்லையென் றறிந்தபோதிலும் பஞ்சகோசங்களின்பிரவர்த்திவரலாம்.

ச-கை. திருஷ்டாந்தமான கானலினிடத்திற் ஜலப்பிரவர்த்தி தோற்றமாத்திரமேயன்றி ஸ்நான பானாதிக் கிரிகைகள் காணோம். தாஷ்டாந்தத்தில் அதிஷ்டானமான ஆத்மாவையன்றிப் பஞ்சகோசங்களில்லையென் றறிந்தபோதிலும் பிறகு பஞ்சகோசங்களின்பிரவர்த்தியும் அவற்றின் விவகாரங்களும் வருகிறபடியால், அதிஷ்டானமாகிய வாத்மாவையன்றிப் பஞ்சகோசங்க ளில்லையென்ற ஞானம் புத்தியிலெப்படி யேறுமென்னில்,

உ-ம். ஏறும். எப்படியென்றால், மிருத்திகையி லாரோபிக்குங் கடம் மண்ணையன்றி வேறில்லையென் றறிந்தபின்னுங் கடாதிகளுடைய பிரவர்த்தியும், விவகாரங்களும் வருகிறதுபோலும், சுவர்ணத்தி லாரோபிக்குங் கடக மகுடாதியாபரணங்கள் சுவர்ணத்திற் கன்னியமில்லையென் றறிந்த பின்னும் ஆபரணங்களின் பிரவர்த்தியும் விவகாரங்களும் வருகிறதுபோலும், ஆத்மாவினிடத்தி லாரோபிக்கும் பஞ்சகோசங்க ளதிஷ்டானமாகிய வாத்மாவையன்றி வேறில்லையென் றறிந்தபோதிலும் பஞ்சகோசங்களின் பிரவர்த்தியும் விவகாரங்களும் வரலாம். அல்லாமலும் திருஷ்டாந்தத்திற் கடமுதலானது தோற்றிக்கொண்டே விவகாரத்திற்கு வந்தபோதிலுஞ் சூட்சுமபுத்தியுடையவர்களுக்கு மண்ணையன்றியன்னியமாய்க்கடாதிகளில்லையென்று புத்தியிலேறுவதுபோல; தாஷ்டாந்தத்

திலும், பஞ்சகோசங்கள் தோற்றிக்கொண்டேவிவகாரத் திற்குவந்தபோதிலும் சூட்சுமபுத்தி யுடையவர்களுக்கு இந்தப் பஞ்சகோசங்க ளாத்மாவுக்கு வெதிருத்தமாயில் லையென்று புத்தியிலும் யுத்தியிலுமேறும். இந்தப்படி பிரத்தியேகித் தறிவதே பஞ்சகோச விலக்ஷண ஞான மென்று சொல்லப்படும்.

ச-கை. இந்த விசாரத்திற்குப் பல மேதென்னில்;

உ-ம். ஆத்மா அவஸ்தாத்திரயத்தி லனுசூதனு யிருக்கிறான், பஞ்சகோசங்க ளவஸ்தாத்திரயத்தி லனுசூதமா யிருக்க வில்லை, வியா விருத்தங்களாகிய பஞ்சகோசங்கள்தோற் றிக்கொண்டே விவகாரத்திற்கு வந்தபோதிலும் இந்தப் பஞ்சகோசங்க ளாத்மாவுக் கன்னியமாயில்லையென் றறி வதே யிந்த விசாரத்திற்குப் பலம். இப்படி யாத்மாவை யும், பஞ்சகோசங்களையும் அபின்னமாய் அதினதின் றொழில்களைப்பகுத்து விசாரித்தறிந்த பிறகு பஞ்சகோ சங்கள் தோற்றினுலு மாத்மாவுக் கன்னியமல்லவென்று ஆசாரியரறிவிக்க வெவன றிகிறானோ, அவனே கிருதார்த் தனுகிய சீவன்முத்தனென்று சுருதி ஸ்மிருதி இதிகாச புராணுகமங்களிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சய மில்லை சித்தம்.

பஞ்சகோசவிலக்ஷணநிரூபகம்
முற்றிற்று.

பன்னிரண்டாவது,

சச்சிதானந்தலக்ஷணநிரூபகம்.

ச-கை. சுருதியாதிகள் ஆத்மாவுக்குச் சச்சிதானந்த சொரூப மென்பதில் சத்துரூபமாவ தெப்படியென்னில்,

உ-ம். எந்தவஸ்து வொன்றினுலும் வாதிக்கப்படாமற் காலத்தி ரயத்திலு மேகரூபமாயிருக்கிறதோ அதுவேசத்துரூபம்.

ச-கை. அது ஆத்மாவினிடத்தி லுண்டோவென்னில்,

உ-ம். காலத்திரயத்திலுமொன்றினுலும் வாதிக்கப்படாமலிருக் கிறபடியால் ஆத்மாவினிடத்தில் சத்ரூபத்வமுண்டு.

ச-கை. ஆனுல் காலத்திரயத்திலு மாத்மா வுண்டென்பதற்குப் பிரமாண மேதென்னில்,

உ-ம். சர்வஜனங்களுடைய வனுபவமே பிரமாணம்.

ச-கை. சர்வஜனங்களாவ தாரென்னில்,

உ-ம். தரித்திரன், மகாராஜன், கர்மி, பக்தன், முமூட்சு இவர்களேயாம்.

ச-கை. இவர்களனுபவ மேதென்னில்,

உ-ம். தரித்திரன் நான்சென்மாந்தரத்தில் யாருக்குமொன்றுங் கொடாமற் போனபடியால் இந்தஜன்மத்திற் றரித்திரத்தையனுபவிக்கிறேன்; இந்தச் சன்மத்திலும் கொடுப்பதற்கு வகையில்லாதபடியினால் மேல்வருஞ்ஜன்மத்திலுந் தரித்திரனாகவே பிறப்பேனென்கிறவசனத்தினாலும், மகாராஜனும் நான்ஜன்மாந்தரத்திற் பெரியோர்களுக்குபகாரம்பண்ணினபடியினால் இந்த ஜன்மத்தில் ஐசுவரியமேயனுபவிக்கிறேன்; இந்தஜன்மத்திலு மொருவருக்குபகாரம் பண்ணுவேனாகில் மேல்வருஞ்சன்மத்திலு மகாராஜனாய்ப் பிறப்பேனென்கிறவசனத்தினாலும், கர்மியும்நான் அநேகஜன்மத்திற் சற்கருமமேசெய்தபடியினால் அந்தச் சற்கருமவாசனையால் இந்தஜன்மத்திலும் சற்கருமமே செய்யும்படிவந்தது; இந்தச்சற்கருமத்தினால் மேல்வரும் ஜன்மத்திலும் பரலோகமுண்டென்கிறவசனத்தினாலும், பக்தனும் நான் அனேகஜன்மத்திற் பகவானையுபாசித்தவனாகையால் அந்தவுபாசனைவழியே இந்தசன்மத்திலும் நிரதிசயமானபக்தியுண்டாயிருக்கிறது; இதனால்மேலைக்குப்பகவத்கடாக்ஷமுண்டாகுமென்கிற வசனத்தினாலும் முமூட்சுவும் நான் அனேகஜன்மத்திலீஸ்வரார்ப்பணமாகச் சற்கர்மங்களைச் செய்தபடியினால் இந்த ஜன்மத்தில் சித்தசுத்தியும் சற்குருலாபமும் சிரவணாதிங்கியமுமுண்டாயிற்று. நானே கிருதார்த்தன் எனக்கினிமேற் ஜனனமில்லையென்கிற வசனத்தினாலும் திடவிவேகமுடையவர்களுக்கு ஆத்மா காலத்திரயத்திலு மிருக்கிறானென்றேயனுபவம். மேலும் சமஸ்தஜனங்களும் இந்த ஐவகைக்குள் அந்தர்ப்பூதமா யடங்கியபடியினால் இவர்களுடைய வனுபவப் பிரமாணத்தினாலாத்மாவுக்குச் சத்ரூபஞ் சித்தித்திருக்கின்றது. நாமும் இவர்களுக்குள் அந்தர்ப்பூதமாகையால் நமக்குஞ் சித்தித்தது.

ச-கை. அநுபவத்தினால் நமக்குச் சத்ரூபஞ் சித்தித்தது; இனியுத்தியினா லெப்படியென்னில்,

உ-ம். நாம் மூன்றுகாலத்திலு மிருக்கிறபடியினால் நமக்கு யுத்தியினாலுஞ் சத்ரூபஞ் சித்தித்தது.

ச-கை. அந்த யுத்தியாவ தேதென்னில்,

உ-ம். பகுத்து விசாரிப்பதே யுத்தியாகும்.

ச-கை. நாமிப்போ திருக்கிறோமோ? வில்லையோ வென்னில்,

உ-ம். இருக்கிறோம்.

ச-கை. சரீரியாயிருக்கிறோமோ? வசரீரியா யிருக்கிறோமோ வென்னில்,

உ-ம். அசரீரியாயிருப்பவனுக்குவிவகாரங் கூடாதாதலால், நாம் இப்போது விவகரிக்கிறபடியினாற் சரீரியாகவே யிருக்கிறோம்.

ச-கை. நமக்கிந்தச்சரீர மெதினால் வந்ததென்னில்,

உ-ம். கன்மத்தினால் வந்தது.

ச-கை. ஆர்செய்த கன்மத்தினால் வந்ததென்னில்,

உ-ம். நாம்செய்த கன்மத்தினால் வந்தது.

ச-கை. ஒருவன்செய்த கன்மத்தினால் வந்ததென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். அன்னியன்செய்த சோதிஷ்டோம யாகாதி பலன்களும் நமக்குவரவேண்டும். வாராதபடியினா லொருவன்செய்த கன்மத்தினாற் சரீரம்வந்ததென்று சொல்லக்கூடாது; நாம்செய்த கன்மத்தினாலேயே நமக்குச்சரீரம் வந்ததென்று சொல்லவேண்டும்.

ச-கை. ஆனாலிந்தச் சன்மத்திற்செய்த கன்மத்தினாற் சரீரம்வந்ததோ? சென்மாந்தரத்திற்செய்த கன்மத்தினாற் சரீரம் வந்ததோவெனில்,

உ-ம். சென்மாந்தரத்திற்செய்த கன்மத்தினாலேயே சரீரம்வந்தது.

ச-கை. இந்தச் சென்மத்திற்செய்த கன்மத்தினாற் சரீரம் வந்ததென்று சொல்லுவோமே யென்னில்,

உ-ம். அப்படிசொல்லப்படாது. விருக்ஷத்தையுண்டாக்கப்பட்ட பீஜந் தனக்குக் காரணமாகிய விருக்ஷத்தை யெப்படி ஜெனிப்பிக்கமாட்டாதோ, அப்படிபோல இந்தச்சரீரத்தினாற்செய்யப்பட்ட கன்மம் மேலைக்குச் சரீரங் கொடுக்குமன்றி, இந்தச்சரீரத்தைப் பிறப்பிக்கமாட்டாது. ஆகையா லிந்தச் சன்மத்திற்செய்த கன்மத்தி லிச்சரீரம் வந்ததென்று சொல்லக்கூடாது.

ச-கை. பின்னை யெப்படியென்னில்,

உ-ம். பூர்வ ஜன்மாந்திரத்திற்செய்த; கன்மத்தினால் நமக்குச் சரீரம் வந்ததென்றே சொல்லவேண்டும்.

ச-கை. ஜன்மாந்தரத்தில் சரீரியாயிருந்து கன்மஞ் செய்தோமோ, அசரீரியாயிருந்து கன்மஞ் செய்தோமோ வென்னில்,

உ-ம். அசரீரியாயிருந்து கன்மஞ் செய்யக்கூடாதபடியினால், சரீரியாயிருந்தே கன்மஞ்செய்தோம்.

ச-கை. அந்தச்சரீர மெதினால் வந்ததென்னில்,

உ-ம். அதற்குப் பூர்வ ஜன்மத்திற்செய்த கன்மத்தினால் வந்ததென்கிற யுக்தியினால், நாமுமனேகங்கோடி கற்பகாலத்திலிருந்து சரீரத்துட னனேக கர்மங்களைச்செய்து, அந்தக்கர்மத்தினால் வரப்பட்ட அனேக சரீரமுந்தரித்து, அந்தந்தச்சரீர சுபாவமான சுகதுக்கங்க ளனுபவித்து, அனேககோடி கற்பாந்திரத்திலுஞ் சரீரியா யிருந்ததாகவே தோற்றுகின்றது. இந்த யுக்தியினால் பூதகாலத்திலு மிருந்தோமென்பது சித்தித்தது.

ச-கை. ஆனால் நமக்குப் பவிஷியகாலத்தில் வித்தியமானத்வமெப்படியென்னில்,

உ-ம். இந்தச் சன்மத்தி லிப்போது சிரவணமனன நிதித்தியாசனாதிகளைப்பண்ணி ஞானத்தைச் சம்பாதிக்காவிட்டால், பூர்வஜன்ம கர்மத்துக்குப் பலபூதமாகிய இந்தச் சரீரம் வந்ததுபோல, இந்தச் சரீரத்திற்செய்கிற கர்மபல பூதமாகிய அனேக சரீரங்களினிமேலும் வரும். இந்தச் சரீரத்தைத் தரித்துக்கொண் டிப்போ தனேகவித கர்மங்களை எப்படிசெய்கிறோமோ, அப்படியே மேல்வருகிறசரீரத்தையுந் தரித்துக்கொண்டு, அனேகவித கர்மங்களைச் செய்யப்போகிறோம். அந்தக்கர்மங்களுக்குப் பலபூதமாகிய சரீரங்களும் வரப்போகின்றது. அதுகளையும் நாம் தரித்துக்கொண்டு அனேகவித கர்மங்களைச்செய்து அந்தந்தக் கர்மங்களுக்குப் பலபூதமாகிய சுகதுக்கங்களை யனுபவித்துக்கொண்டு அனேககோடி கற்பங்களிலுமிருப்போமென்பது யுக்தியினாலறிகின்றபடியால், நாம்காலத்திரயத்திலு மிருக்கிறோமென்கிறது யுக்தியினாற் சித்தித்தது. பிரளயங்களில் ஜகத்து வாதிக்கப்பட்டாலும் நாம்

வாதிக்கப்படவில்லை. அன்றியும் நமக்கு உற்பத்தியாதி விகாரங்களில்லாதபடியினால் சத்ரூபஞ்சித்தித்தது. இப்படிப்பட்ட சத்ரூபம் நம்மிடத்திலிருப்பதால் சத்துலட்சணஞ் சித்தித்தது.

ச-கை. ஆனால் சித்ரூபமாவ தேதென்னில்,

உ-ம். எந்தவஸ்து ஒருசாதனாந்தரங்களை யபேட்சியாமல் தானுந்தோற்றிக்கொண்டு, தன்னிடத்தி லாரோபிக்கின்ற சர்வபதார்த்தங்களையுந் தோற்றுவிக்கின்றதோ, அது வேசித்தென்று சொல்லப்படும்.

ச-கை. இந்தச் சித்ரூபம் ஆத்மாவினிடத்தி லுண்டோவென்னில்,

உ-ம். நம்மிடத்தில் பாலியமுத விருத்வரையிலு மெந்தெந்த வியாபாரஞ் செய்யப்பட்டதோ, அந்தந்த வியாபாரத்துக்குள் சிறிது தோற்றுமற்போனாலும் மற்றைய வியாபாரங்களெல்லாம் பிரகாச சாதனங்களாகிய ஆதித்த சந்திர அக்கினிநட்சத்திர மின்னல் நேத்திரமென்கிற இதுகளிலொருசாதனமு மபேட்சியாமல் காடாந்தகாரத்திலும் மூலையில் முக்காடிட்டுப் படுத்திருந்தாலும் எல்லாருக்குந் தோற்றுகின்றது. ஆனபடியால், ஆத்மசொரூபமாகிய நம்மிடத்திலுஞ் சித்ரூபமிருக்கின்றது.

ச-கை. பாலியமுத விருத்வரையி லாரோபிக்கப்பட்ட சர்வபதார்த்தங்களிற் சிறிது தோற்றப்படுகின்றதன்றிச் சமஸ்த பதார்த்தங்களுந் தோற்றவில்லை. ஆகையினால் சர்வபதார்த்த அவபாசகத்வமாகிய சித்ரூபத்வம் நமக்கெப்படி கூடுமென்னில்,

உ-ம். அந்தர்ப்பிரபஞ்சமும் பாகியப்பிரபஞ்சமுஞ் சர்வபதார்த்தமென்று சொல்லப்படும். இவ்விரண்டு பிரபஞ்சமும் நம்மாலேயே தோற்றப்படுகின்றது.

ச-கை. இவ்விரண்டினுள் பாகியப்பிரபஞ்சம் நம்மாலெப்படி தோற்றுகிறதென்னில்,

உ-ம். பிருதிவி அப்பு தேய்வு வாய்வு ஆகாயமென்றும், சத்த பரிச ரூப ரச கந்தமென்றும், பஞ்சீகிருத பூதமென்றும், பிரமாண்டமென்றும், சதுர்த்தசபுவனமென்றும், சதுர்வித பூதக்கிராமங்களென்றும், இதுகளுக்குக் காரணம் மாயையென்றும் அனேக நாமரூபகுணத்வவிகார சத்தி

யாசிரயமாகிய பாகியப்பிரபஞ்சமெல்லாம் நம்மாலறியப் படுகின்றது.

ச-கை. இப்படி நம்மாலறியப்படுகின்றதோ? அல்லது நாம் பாகியப் பிரபஞ்சத்தினு லறியப்படுகிறேமோ வென்னில்,

உ-ம். பாகியப்பிரபஞ்சத்திற்கு நாமறியப்படாதபடியினாலும், நம்மாலேயே பாகியமாகிய சமஸ்த பிரபஞ்சங்களு மறியப்படுகிறபடியினாலும், பாகியப்பிரபஞ்சத்தை யறிந்துக் கொண்டிருக்கிற நமக்குப்பாகியமாகிய சர்வபதார்த்த அவபாசகத்வஞ் சித்தித்தது.

ச-கை. இனியந்தர்பதார்த்த அவபாசகத்வ மெப்படியென்னில்,

உ-ம். அஞ்ஞானமென்றும், அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயகோசமென்றும், தூல சூட்சும காரணசரீரமென்றும், சட்பாவ விகாரமென்றும், சட்கோசமென்றும், ஷடூமியென்றும், ஞானேந்திரிய கன்மேந்திரியமென்றும், பிராணுதி பஞ்சகமென்றும், அந்தக்கரண சதுஷ்டயமென்றும், சங்கற்பவிகற்பாதி யபிமான தாரணையென்றும், சாக்கிரசொப்பன சுழூத்தியென்றும், அவஸ்தாவியாபாரங்களென்றும், அவஸ்தாவாசிகளென்றும், சமாதிமூர்ச்சையென்றும், மனோவாக்குக் காயங்களென்றும், காமக் குரோத லோப மோக மத மாச்சரியாதிகளென்றும், மயித்திரி கருணை முதிதை யுபேட்சைகளென்றும், இயம நியம ஆசன பிராணுயாம பிரத்தியாகார தியான தாரணை சமாதியஷ்டாங்க யோக்கங்களென்றும், பிரத்தியட்சம் அனுமானம் ஆகம மருத்தாபத்தி உபமானம் அபாவம் ஐதீகம் சம்பவமாகிய எட்டுப்பிரமாணங்களென்றும், ரோக ஆரோக்கியமென்றும் விபிதநாமரூப குண தர்ம விகார சத்தியாசிரயமாகிய அந்தர்ப்பிரபஞ்சமெல்லாம் நம்மாலறியப்படுகின்றது.

ச-கை. இப்படி நம்மாலறியப்படுகின்றதோ; அல்லது அந்தர்ப்பிரபஞ்சத்தினுல் நாமறியப்படுகிறேமோ வென்னில்,

உ-ம். அந்தர்ப் பிரபஞ்சத்தினுல் நாமறியப்படவில்லை, நாமேயந்தர்ப்பிரபஞ்சமாகிய சர்வபதார்த்தங்களையு மறிகிறேமாகையால், நமக்கு அந்தராகிய சர்வபதார்த்த அவபாசகத்வஞ்சித்தித்தது, அன்றியும் நம்மிடத்தி லாரோபிக்

கப்பட்ட சர்வபதார்த்த அவபாசகத்வம் ஒருசாதனாந் தரங்களையு மபேட்சிக்காமல் நமக்குச்சித்தித்திருக்கிறது.

ச-கை. ஆனால் மனத்தினாலல்லவோ சர்வமு மறியப்படுகின்றது? நாமுமனதினாலேயல்லவோ வறியப்படுகிறோம்? ஆதலால் சாதனாந்தர நிரபேட்சையாகிய சொப்பிரகாசத்வமும் சர்வபதார்த்த அவபாசகத்வமும் நமக்கெப்படி கூடு மென்னில்,

உ-ம். மனமானது உற்பத்தி நாசவத்தாய் சாவயமாய் பரிச்சின்னமாய் திரிசியமாய் கடத்தைப்போலவே பூதகாரியமா யிருக்கிறபடியினால், அந்தமனம் சடத்வமேயன்றிச் சேதனத்வமன்று; ஆதலாலந்தச் சடமான மனம் ஒரு பதார்த்தத்தையுந் தோற்றுவிக்கமாட்டாது. ஏனெனில் ஆத்மாவினாலேயே தோற்றப்பட்ட மனம் ஆத்மாவைத் தோற்றுவிக்க மாட்டாதென்பதிற் சந்தேகமில்லை.

ச-கை. ஆனாற் பின்னரென்னவென்னில்,

உ-ம். ஆத்மாவே மனதையுஞ் சர்வபதார்த்தங்களையுந் தோற்றுவிக்கின்றது. ஆகையினால் மனது உபாதிமாத்திரமே யாகும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். அகலிலிருக்கு மெண்ணெய்யினால் நனைக்கப்பட்ட வத்தி தானுந் தோற்றுமலந்த எண்ணெய் முதலானதுகளையுந் தோற்றுவிக்கவில்லை. அதில் அக்கினி யென்கிற தேஜசு திரியென்ற உபாதியுடன் கூடிக்கொண்டு சாதனாந்தரங்களையபேட்சியாமல் தானுந்தோற்றி அந்தத் திரி தயிலங் கலசமென்கிற பதார்த்தங்களையுந் தோற்றுவிக்கிறது. அதுபோல அகலென்ற தூலசரீரத்தில் தயிலமாகிய கர்மத்தினால் தாபிதமாகிய திரியென்னு மனது தான் தோற்றுமலு மிருந்துங்கொண் டன்னியபதார்த்தங்களையுந் தோற்றுவிக்கமாட்டாது. ஆத்மா அந்தமனதுடன்கூடி சாதனாந்தரங்களை யபேட்சியாமல் தானும் விசேஷமாகத் தோற்றிக்கொண்டு, அந்த மனதையுந் தேகேந்திரியங்களையும் அந்தர்ப்பாகியமாகிய சர்வபதார்த்தங்களையுந் தோற்றுவிக்கின்றது. அந்தக்கரணமும் அந்தக்கரண விருத்திகளை யறியுமிடத்தில் ஆத்மாவே நிருபாதிகமா யிருந்தறிகின்றது. அந்த ஆத்மசொரூபமே நாமாகையி

ளுல், சாதனுந்தர நிரபேட்சையாய் சுவயம்பிரகாசமா யிருக்கப்பட்ட நமக்கே சர்வபதார்த்த அவபாசகத்வஞ் சித்தித்தது. ஆதலால் நாமே சித்ரூபமென்பதிற் சந்தேகமில்லை.

ச-கை. ஆனுல் ஆனந்தரூபமாவ தெப்படியென்னில்,

உ-ம். நித்தியமாய் நிருபாதிகமாய் நிரதிசயமாகிய சுக சொரூபமே யானந்தரூபம.

ச-கை. இந்த ஆனந்தரூபம் ஆத்மாவினிடத்தி லுண்டோவென்னில்,

உ-ம். சற்சந்தனுதிகளைப் பரிசிக்கும் புத்திக்குச் சர்வோத்கிருஷ்டமாய் சர்வதுக்கநிவர்த்தகமாய் நித்தியமாகிய சுகமே யானந்தம். எந்தவானந்தஞ் சமஸ்தமானபேர்களினுலுஞ் சுழுத்திகாலத்தில் அநுபவிக்கப்படுகின்றதோ, அவ்வானந்தத்திலு மிந்தலட்சண மிருக்கின்றது.

ச-கை. சுழுத்திக்காலத்தி லந்தவானந்த மிருக்குமானு லவ்வானந்தத்திலு மிந்த லட்சணங்களுண்டென்று சொல்லலாம். துக்காபாவமாத்திரமேயன்றி யானந்தமில்லையே. இப்படியில்லாதிருக்குமானந்தத்திற்கு நிருபாதிகத்துவமும் நிரதிசய சுகசொரூபத்வமு மெப்படி வந்ததென்னில்,

உ-ம். சுழுத்தியிற் புருஷனைவன் சுகமனுபவியாவிட்டால் அவ்வவஸ்தையைவிட் டெழுந்தபிறகு நான்சுகமாய் நித்திரைசெய்தேனென்று சொல்லாதிருக்கவேண்டும். துக்காதிகளுயிருந்து நித்திரைசெய்தேனென்று சொல்லவேண்டும். அங்ஙன மில்லாதபடியினுற் சுழுத்தியவஸ்தையிற் சமஸ்தமானபேர்களாலு மனுபவிக்கப்படுகிற வானந்தத்தில் நித்தியமாய் நிருபாதிகமாய் நிரதிசயமான சுகசொரூபத்வலட்சண மிருக்கின்றது.

ச-கை. அந்தச் சுகத்திற்கு நிருபாதிகத்வ மெப்படியென்னில்,

உ-ம். சுகஜன்னியமாகிய சற்சந்தனுதி விஷயங்கள் சுழுத்தியவஸ்தையி லில்லாதிருந்தபோதும் சமஸ்தமானபேர்களுஞ் சுகமனுபவிக்கிறபடியால் அதற்கு நிருபாதிகத்வமுண்டு.

ச-கை. அதற்கு நிரதிசயத்வ மெப்படியென்னில்,

உ-ம். சமஸ்த விஷய ஜன்னியமாகிய சுகங்களிலும் உக்ருஷ்டஸ்திரீசம்போக சுகத்திலும் விரசம்பிறந்து சமஸ்தபிராணிகளுமந்தச் சுகங்களைவிட்டுப் பிரதிதினமும் இந்தச் சுழுத்தி சுகத்தையேயபேட்சித்து அந்தச் சுகத்திற்கு

விக்கினம்பண்ணினவர்களைத் தண்டித்து அந்தச் சுகத்தையே மேலுமேலும் விரும்புகிறபடியினாலும் அதற்கு நிரதிசயத்வமுண்டு. இதுமாத்திரமல்ல, சாக்கிரசொப்பனங்களிற் றோற்றப்பட்ட ஆதியாத்மீகம் ஆதிதெய்வீகம் ஆதிபவுதீகமாகிய தாபத்திரய துக்கங்களையும்போக்கினபடியாலும் நிரதிசயத்வமுண்டு.

ச-கை. அதற்கு நித்தியத்துவ மெப்படியென்னில்,

உ-ம். சாக்கிர சொப்பனங்களி லனுபவிக்கப்பட்ட சமஸ்தவிஷய சுகங்களை யனேகவிதரூபமா யனுபவியாமல் பிரதினஞ் சமஸ்தமானபேர்களு மேகரூபமாகவேயனுபவிப்பதாலதற்கு நித்தியத்துவமுண்டு.

ச-கை. சுழுத்திசுகம் நித்தியமென்றால் சாக்கிர சொப்பனங்களிலுந் தோற்றவேண்டுமே. அங்ஙனந்தோற்றாத சுழுத்திசுகத்திற்கு நித்தியத்துவ மெப்படியென்னில்,

உ-ம். சுழுத்திசுகம் நித்தியமா யிருந்தபோதிலும் துக்கரூபமாகிய தேகேந்திரியாதி கூட்டரவினுல் திரோதானப்பட்டிருக்கிறபடியால் தோற்றவில்லை.

ச-கை. ஆத்மகாரியங்களாகிய தேகேந்திரியங்களினுற் காரணபூதமாகிய ஆத்ம சுகத்திற்குத் திரோதான மெப்படி கூடுமென்னில்,

உ-ம். அக்கினிக்குப் பிரகாசம் சுதசித்தமாயிருந்தாலுஞ் சுயகாரியமாகிய தூமசம்பிரசத்தினுல் திரோதானம் வருகிறதுபோலும் ஆதித்தனுக்குப் பிரகாசம் சுதசித்தமாயிருந்தாலும் சுயகாரியமாகிய மேகாதிகளால் அவ்வாதித்தப் பிரகாசத் திரோதானம் வருகிறதுபோலும் ஆத்மாவுக்குஞ் சார்வதா சுகசொரூபம் சுதசித்தமாயிருந்தாலும் ஆத்ம காரியமாகிய தேகேந்திரியாதி சம்பிரசத்தினுல் சாக்கிர சொப்பனங்களிலந்தச் சுகத்திற்குத் திரோதானம் வரும். பகிர்முகமானவனுக்கு இந்தச்சுகம் ஆத்மசுகமென்று சாக்கிரசொப்பனங்களிற் றோற்றுமற்போனுலும். அந்தர்முகமானவனுக்குச் சார்வதா தோற்றிக்கொண்டிருக்கும் ஆதலாலிந்தச் சுழுத்திசுகமே காலத்திரயத்திலு மிருக்கிறபடியால் இதற்கே நித்தியத்துவமும் நிருபாதிகத்துவமும், நிரதிசயத்துவமுமாகிய சுகசொரூபஞ் சித்தித்திருக்கின்றது, இப்படியே சாக்கிரசொப்பனசுழு

த்திகளிலும் விஷயகாலங்களிலும் ஆத்மானந்தமே பிரதிபலித்து விளங்கின்றது. இதைச் சற்குருவினால் விசாரித்துத் தெளிந்தறியவேண்டும்.

ச-கை. இப்படி தெளிந்தவிசாரத்திற்குப் பலமேதென்னில்,

உ-ம். இப்போதுசொல்லிய சத்ரூபவமுஞ் சித்ரூபத்வமுமானந்தரூபத்வமும் நம்மிடத்திற் சித்தித்திருக்கிறபடியால் அந்தச்சச்சிதானந்த ஸ்வரூபமாகிய வாத்மா நாமேயென்கிற திடப்பிரஞ்ஞை வருகிறதே இந்தவிசாரத்திற்குப் பலமென்று சகல சுருதிஸ்மிருதி யிதிகாச புராணாகமங்களிற் சொல்லப்படுகின்றது. இதிற்சம்சயமில்லை சித்தம்.

சச்சிதானந்தலக்ஷணநிருபகம்

முற்றிற்று.

பதின்மூன்றாவது,

அகண்டத்வநிருபகம்.

ச-கை. சச்சிதானந்த சொரூபமாகிய ஆத்மாவுக்கு அகண்டத்வமாவதேதென்னில்,

உ-ம். தேசத்தினாலுங் காலத்தினாலும் வஸ்துவினாலும் வரும் அபரிச்சின்னத்துவமே யகண்டத்துவம்.

ச-கை. அகண்டத்வத்துக் கிந்தமூன்றுவிசேஷமு மேன்சொல்லவேண்டும்? ஒரு விசேஷமாகிலு மிரண்டு விசேஷமாகிலும் போதாதோவென்னில்,

உ-ம். போதாது.

ச-கை. ஆத்மாவுக்குத் தேசத்தினால் வருகிற அபரிச்சின்னத்வமே யகண்டத்வமெனச் சொல்வோமேயென்னில்,

உ-ம். ஆகாசமும் வியாபகமாயிருக்கிறபடியால் அவ்வாகாசத்திற்ககண்டத்வம் வரும் ஆதலாலவ்வாகாசத்திற்கு அகண்டத்வ நிராகரிக்கிற நிமித்தமாய் காலத்தினாலும் அபரிச்சின்னத்வமே யகண்டத்வமென்றுஞ் சொன்னோம்.

ச-கை. ஆகாசத்திற்குக் காலத்தினா லபரிச்சின்னத்வ மில்லையாயெனில்,

உ-ம். ஆகாசம் உற்பத்திநாசவஸ்தா யிருக்கிறபடியால் அதற்குக் காலத்தினா லபரிச்சின்னத்வஞ் சொல்லக்கூடாது.

ஆனபடியினால் காலத்தினாலு மபரிச்சின்னத்வமென றிர ண்டாம் விசேஷமுஞ் சொல்லவேண்டிற்று.

ச-கை. இவ்விரண்டு விசேஷமும் போதுமேயென்னில்,

உ.-ம். காலம் விபுவாய் தேசத்தினாலும் ஆகாசத்தினாலும் அப ரிச்சின்னமா யிருக்கிறபடியினாலும், தனக்குப் பரிச்சே தங் கூடாதிருப்பதினாலும் அபரிச்சின்னத்வமாய் அகண் டத்வம்வரும். ஆகலால் காலத்திற் ககண்டத்வ நிரா கரிக்கிற நிமித்தம் ஸ்வரூபத்திற்கு வஸ்துவினாலும் அப ரிச்சின்னத்வமென்று மூன்றும் விசேஷமுஞ் சொல்ல வேண்டிற்று.

ச-கை. காலத்திற்கு வஸ்துவினால் அபரிச்சின்னத்வ மில்லையா யெனில்,

உ.-ம். காலம் ஆகாசாதிகளல்லாதபடியினால் அதற்கு வஸ்துவி னால் அபரிச்சின்னத்வ முண்டானாலும் ஆத்மாவையன் றிக் காலாதிகளுக்குத் திரிவித பரிச்சேத சூனிய ரூபமா கிய வகண்டத்வங் கூடாது.

ச-கை. ஆனால் நானிந்தத் தேசத்திலிருக்கிறேன், அந்தத்தேசத் தி லில்லையென்று தேசத்தினாலும், நான் முன்வருஷத் திற் பிறந்தேன், கொஞ்சநாளைக்குப்பின் யில்லாமற்போ கிறேனென்று காலத்தினாலும் பிருதிவியாதிக ளல்லவெ ன்று வஸ்துவினாலும் அபரிச்சின்னத்வமாகிய ஆத்மாவு க்குப் பரிச்சின்னத்வ முண்டாயிருக்கத் திரிவித பரிச் சேத சூனியமெப் படி கூடுமென்னில்,

உ.-ம். நானிந்தத் தேசத்திலிருக்கிறேன், இந்தக்காலத்திற்பிறந் தேன், இந்தவஸ்து நானல்லவென்கிற திரிவிதபரிச்சேத மும் அத்தியாசமாய் தேகத்தை யபேட்சித்துக்கொண் டே வருகிறபடியால், அத்தேகத்திற் கன்னியமானவாத் மாவுக்குத் தேசகாலவஸ்துக்களினாலும்அபரிச்சின்னத்வ முண்டு.

ச-கை. ஆனா லாத்மாவுக்குத் தேசத்தினா லபரிச்சின்னத்வ மெப் படி யென்னில்,

உ.-ம். கடஜன மடஜன குட்டியஜன குசுவுலஜன பிருதிவிசதி அப்புசதி தேயுசதி வாய்வுசதி ஆகாசசதியென்றும், பூத பௌதிகமாகிய சமஸ்த பிரபஞ்சத்திலுஞ் சத்ரூபனாகிய ஆத்மாவுக்கனுவிர்த்தியிருக்கிறபடியால்ஆத்மாவியாபகனா

யிருக்கிறான். அப்படிவ்யாபகனாயிருக்கிற ஆத்மாவுக்குத் தேசத்தினாலும் அபரிச்சின்னத்வ மிருக்கின்றது.

ச-கை. ஆனாலாத்மாவுக்குக் காலத்தினா லபரிச்சின்னத்வ மெப்படியென்னில்,

உ-ம். ஆத்மா அனாதியாயிருக்கிறபடியினாற் பூதகாலத்தினாலும், நித்தியனா யிருக்கிறபடியினால் பவுஷிய காலத்தினாலும், தேகாதி வெதிருத்தனாயிருக்கிறபடியினால் வர்த்தமான காலத்தினாலும் பரிச்சின்னமில்லாதபடியா லாத்மாவுக்குக் காலத்தினாலும் அபரிச்சின்னத்வ மிருக்கின்றது.

ச-கை. ஆனாலாத்மாவுக்கு வஸ்துவினா லபரிச்சின்னத்வமெப்படியென்னில்,

உ-ம். சர்வாத்மனா யிருக்கிறபடியா லாத்மாவுக்கு வஸ்துவினாலும் பரிச்சின்னமில்லை.

ச-கை. வஸ்துவாவ தேதென்னில்,

உ-ம். சசாதிக விசாதிக சுவகத பேதமென மூன்றுவிதமாயிருக்கும்.

ச-கை. மூன்றுவித ஜாதிபேதங்க ளேதென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் விருட்சத்திற்கு விருட்சாந்தரம் சுசாதிகம், பாஷாணாதிகள் விசாதிகம், பத்திர புஷ்ப பலாதிகள் சுவகதபேதமென்று சொல்லப்படும் இந்த மூன்று பேதமுமில்லாதபடியினால் ஆத்மா சசாதிக விசாதிக சுவகதபேதரகிதமென்று சுருதியிற் சொல்லப்படுகின்றது.

ச-கை. கடஜன மடஜன குட்டியஜன குசுவுலஜன தேவதத்த யெக்கியதத்த சயித்திராத்மா மயித்திராத்மா என்கிற சுசாதிகமும், சுசாதிகபேதமும், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசகட மடகுட்டிய குசுவுலவென்கிற விசாதிகமும், விசாதிகபேதமும், இச்சாதுவேஷ சுகதுக்க சத்துவ ராசத தாமசமென்கிற சுவகதமும், சுவகதபேதமுமாத்மாவுக் கிருக்கிறபடியினால் சுசாதிக விசாதிக சுகத பேதரகிதமென் றெப்படி சொல்லலாமென்னில்,

உ-ம். ஆத்மாவுக்குச் சுசாதிகாதிபேதங்கள் உபாதியினால் வந்ததே யல்லாமல் பாரமார்த்தீகமாய் விசாரிக்குமிடத்தில்லையென்றே சொல்லவேண்டும்.

ச-கை. இல்லையென்று சொல்லுகிற தெப்படியென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் ஒரு ஆகாசமே கடமட குட்டிய குசுவுலவன விருக்ஷாதியுபாதியினுல் கடாகாச மடாகாச குட்டியாகாச குசுவுலாகாச வனுகாச விருக்ஷாகாசமென்றனேகமாக விவரிக்கப் படுகிறதுபோல், ஆத்மாவும் நாமரூபக்கிரிகை முன்னிலையாதிகளாகிய சரீரவுபாதிகளினுல் தேவதத்த யெக்கியதத்த விஷ்ணுமித்திர கிருஷ்ணராமனென் றனேகமாய் விவகரிக்கப்படுகின்றது. பாரமார்த்தீகமாய் விசாரிக்குமிடத்தில் அவ்வாகாசத்தைப்போலுமாத்மாவுக்குச் சுசாதிகமும் சுசாதிகபேதமுமில்லை.

ச-கை. விசாதிகபேத மில்லையென்ப தெப்படியென்னில்,

உ-ம். சத்ரூபனுகிய வாத்மாவுக்கு விசாதிகமாகிய பிரபஞ்சமெல்லாம் சசவிஷாண வந்தியா புத்திர ககனுரவிந்தம்போல் அசத்தாயிருக்கிறபடியினுல், விசாதிகமும் விசாதிகபேதமுமில்லை.

ச-கை. சுவகத பேதமில்லையென்ப தெப்படியென்னில்,

உ-ம். இச்சை துவேஷ சுகதுக்காதிகளெல்லாம் அந்தக்கரண சுபாவமன்றி யாத்மசுபாவமல்லாதபடியினுல் சுவகதமும் சுவகதபேதமுமில்லை.

ச-கை. ஆனுற் பின்னமாகிய சச்சிதானந்தத்தினு லாத்மாவுக்குப் பேதமில்லையாவென்னில்,

உ-ம். சச்சிதானந்தங்கள் அன்னியோன்னியமும், பின்னமுமாகுமாகுற் பேதமுண்டு; அங்ஙனமில்லாதபடியினுற் பேதமில்லை.

ச-கை. ஆனுல் சத்து சித்து ஆனந்தமென்று சப்தபேதமும், அர்த்தபேதமுமிருப்பதினுலும், அஸ்தகரபாணிசப்தத்தைப்போற் பரியாயசப்தமல்லாமற் போனபடியினுலும் ச்சிதானந்தத்திற் கெப்படி யேகார்த்தங் கூடுமென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் தீபமானது சிவப்பு ஊஷ்ணம் பிரகாசமென்று சப்தத்தினுலும் அர்த்தத்தினுலும் பின்னம்போல விவகரிக்கப்பட்டாலும் அஸ்த கர பாணிசப்தம்போலும் பரியாய சப்தமல்லாத படியினுலும், ரோகிதோஷணப் பிரகாசம் தீபத்திற்கு ஸ்வரூபமா யிருக்கிறபடியினுலும் பரஸ்பர பின்னமின்றி யேகார்த்தங் கூடுவதுபோலத் தாஷ்டாந்தத்திற் சச்சிதானந்தங்கள் சப்தத்தினுலு மர்த்தத்தினுலும் பின்னம்போல விவகரிக்கப்பட்

டாலும் ஆத்மசுபாவமாயிருக்கிறபடியால் பரஸ்பரபின்ன மின்றி ஏகார்த்தங்கூடும்.

ச-கை. அப்படி பேதமில்லாவிட்டால் சுருதியாதிகள் ஆத்மா சத்ரூபனென்று ஒன்றுமாத்திரஞ் சொல்லவேண்டும். அப்படியில்லாமற் சித்ரூபனென்று மானந்தரூபனென்று மெதைப்பற்றிச் சொல்லுகின்றது? பேதமில்லாவிட்டாலிப்படி சொல்லுமாவெனில்,

உ-ம். சுருதியாதிகள் சச்சிதானந்தங்களுக்குப் பேதஞ் சொல்லுமிடத்தில் தாற்பரியமேயில்லை.

ச-கை. பின்னை யெப்படி தாற்பரியமென்னில்,

உ-ம். ஆத்மசுபாவமாகிய சத்து அசத்தாகிய ஜக சுபாவமாகவும், ஆத்மசுபாவமாகிய சித்து ஜடமாகிய புத்தியாதி சுபாவமாகவும், ஆத்மசுபாவமாகிய ஆனந்தம் துக்கரூபமாகிய புத்திரபாரியாதி சுபாவமாகவுந் தோற்றிக்கொண்டு, ஜகசுபாவமாகிய அசத்ரூபமும் புத்தியாதி சுபாவமாகிய ஜடரூபமும் புத்திரபாரியாதி சுபாவமாகிய துக்கரூபமுமாய் நான்செத்துப்போகிறேன், நான்சடன் நான்துக்கியென் றுத்மசுபாவமாய்த் தோற்றுகிற இந்தவிபரீதபிராந்தியை நிராகரிக்குநிமித்தம் ஆத்மா சத்ரூபன், சித்ரூபன், ஆனந்தரூபனென்று சுருதியாதிகள் சொல்லுகிற தாற்பரியமன்றி, ஆத்மசொரூபமாகிய சச்சிதானந்தத்திற்கு அன்னியோன்னியபேதஞ் சொல்லுமிடத்தில் தாற்பரியமேயில்லை. இன்னமும் சில சமயிகள் ஆத்மா ஜடரூபனென் றங்கீகரித்து அவனுக்குச் சத்து தர்மமென்றுஞ் சிற்சுகங்கள் குணங்களென் றுஞ்சொல்லுகிறபடியாலவர்களை நிராகரிக்கு நிமித்தமு மாத்மா சச்சிதானந்த சொரூபமென்று சுருதியாதிகள் சொல்லுகின்றது. ஆகையால் சத்தே சித்து, சித்தேயானந்தமென்று சுருதி தாற்பரியம் தீர்க்கமாகச் சித்தித்தது.

ச-கை. சுருதியினுற் சித்தித்ததுபோல் புத்தியினுலுஞ் சித்திக்கவில்லையே யென்னில்,

உ-ம். யுத்தியினுலுஞ் சித்தித்திருக்கின்றது.

ச-கை. அதெப்படி? சத்தானது தானே தோற்றுகின்றதா? மற்றொன்றினுல் தோற்றுவிக்கப்பட்டுத் தோற்றுகின்றதா வென்னில்,

உ-ம். தானே தோற்றப்படுகிறதென்றே சொல்லவேண்டும். அப்படிசொன்னால் சத்தே சித்தென்று யுத்தியினாலும் சித்திக்கின்றது. மற்றொன்றினால் தோற்றுவிக்கப்பட்டுத் தோற்றுகிறதென்று சொல்லுவோமானால், சத்து விலட்சணத்தினால் தோற்றுவிக்கப்பட்டுத் தோற்றுகின்றதா, சுதந்தரத்தினால் தோற்றுவிக்கப்பட்டுத் தோற்றுகிறதாவென்று சங்கைவரும்.

ச-கை. சத்துவிலட்சணத்தினால் தோற்றுவிக்கப்பட்டுத் தோற்றுகிறதென்று சொல்லலாமாவென்னில்,

உ-ம். அப்படியானால் சத்துவிலட்சணம் அசத்தானபடியினால் அவ்வசத்தான சத்துவிலட்சணத்தினால் சத்து தோற்றப்படுகிறதென்று சொல்லக்கூடாது. அப்படிசொன்னால் அசத்தாகிய சசவிஷாணாதிகளாலும் சத்தாகிய கடாதிகள் தோற்றவேண்டும். அப்படி தோற்றாதபடியினால் சத்துவிலட்சணமாகிய வசத்தினாற் சத்து தோற்றுகிறதென்று சொல்லவேகூடாது.

ச-கை. ஆனால் சுதந்தரத்தினாலேயே சத்து தோற்றுவிக்கப்படுகிறதென்று சொல்லலாமாவென்னில்,

உ-ம். சொல்லலாம்.

ச-கை. அந்தச் சுதந்தரம் தானுந் தோற்றிக்கொண்டு சத்தைத் தோற்றுவிக்கின்றதா? தான்தோற்றாமற் சத்தைத்தோற்றுவிக்கின்றதாவென்னில்,

உ-ம். சுதந்தரம், சுதாவாகத் தோற்றியிருந்துக்கொண்டு அந்தச் சத்தைத் தோற்றுவிக்கிறதென்று சொல்வோமானால், அந்தச் சத்தெதினால் தோற்றப்படுகிறதென்று அனவஸ்தாதோஷம்வரும். ஆதலால் சுதந்தரம் தன் சுதாவாகவே தோற்றாமல் தோற்றிக்கொண்டிருந்து அந்தச் சத்தைத் தோற்றுவிக்கிறதென்று சொல்லவேண்டும்; மேலும் வேதாந்தபட்சத்தில் இரண்டுசத்து இல்லாதபடியினால், எந்தச்சத்து சுதாவாகத் தோற்றப்படுகின்றதோ அதற்கே சித்துத்வமென்று யுத்தியினாலுஞ் சித்தித்தது.

ச-கை. ஆனால் சித்தாகிய சத்துக்கு ஆனந்தத்வஞ் சித்திப்பதெப்படியென்னில்,

உ-ம். சத்நித்யத்தினாலானந்தமுஞ் சித்தித்திருக்கின்றது.

ச-கை. சித்தாகிய சத்துக்குச் சுதந்தரத்தினால் சத்நித்யத்வம்.

வருகின்றதோ? சத்து விலட்சணத்தினால் வருகின்றதா வென்னில்,

உ-ம். சுதந்தரத்தினால் வருகின்றதென்று சொல்லக்கூடாது.

ச-கை. ஏனென்னில்,

உ-ம். சத்துக்குச் சுதந்தரத்வ முபாதிமாத்திரமன்றிச் சுதாவா யில்லை.

ச-கை. சத்வித்தியவிலட்சணத்தினால் சத்துக்குச் சுத்வித்தியத்வம் வருகிறதென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். சத்வித்தியவிலட்சணமும் ரச்சுசர்ப்பத்தைப்போல சத்தானபடியினால் அவ்வசத்தான சத்வித்தியவிலட்சணத்தினால் சித்தாகிய சத்துக்குச் சத்வித்தியதவம் வருகிறதென்று சொல்லக்கூடாது. ஆகையினால் அந்தச் சத்துக்குச் சுதந்தரமும் சத்வித்தியலட்சணமும் சத்வித்தியத்வஞ் சம்பாதிக்கப்பட்ட பதார்த்தங்களாயில்லாதபடியினால், அந்தச் சத்வித்தியத்துக்கு அத்வித்தியத்வஞ்சித்தித்தது. அந்த அத்வைதமே யானந்த ரூபத்வமானபடியால், எப்போது அத்வைதஞ் சித்தித்ததோ, அப்போதே ஆனந்தரூபத்வமுஞ் சித்தித்தது. இந்தப்படி யுத்தியினாலும் சத்தே சித்து, சித்தே யானந்தமென்றுஞ் சித்தித்தது.

ச-கை. சுருதி யுத்திகளினாலல்லவோ சித்தித்தது? அனுபவத்தினாற் சித்திக்கவில்லையே யென்னில்,

உ-ம். அனுபவத்தினாலுஞ் சித்தித்திருக்கின்றது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். சுழுத்தியிற் சர்வப்பிராணிகளாலும் அனுபவிக்கப்பட்டதாய் ஒருசுகந் தோற்றுகின்றதே; அந்தச்சுகஞ் சாக்கிர சொப்பனத்திற் தோற்றப்பட்ட சுகம்போல நானாரூபமாயிருக்காமல் சர்வப்பிராணிகளுடைய சுழுத்தியிலும் ஏகரூபமாயிருக்கிறபடியினால் அந்தச்சுழுத்தி சுகமே சத்தாயிற்று.

ச-கை. அந்தச் சத்தாகிய சுழுத்தி சுகத்திற்குச் சித்துத்வமெப்படியென்னில்,

உ-ம். தானுந் தோற்றிக்கொண்டு தன்னிடத்தி லாரோபிக்கப்பட்ட சர்வபதார்த்தங்களையுந்தோற்றுவிக்கிறபடியினால் சித்துத்வமுமுண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். சுழுத்தியிலிருந்தெழுந்த புருஷனால் நான் சுகமாய்நித்திரைசெய்தேன், ஒன்றையு மறியாதிருந்தேனென்றுஒரு சுகமும் அஞ்ஞானமுந் தோற்றப்படுகின்றது. இந்த நினைவு அனுபவமில்லாமல் வராதாகையினால் இந்தச்சுகமும் அஞ்ஞானமும் சுழுத்திகாலத்தி லனுபவிப்பதாகத் தோற்றுகின்றது. அந்தச்சுகம் சுவரூபமானபடியினால் சுகமனுபவிக்கப்படுகிறதென்பது மோகமே. அஞ்ஞான மாத்திரமே யனுபவிக்கப்படுகின்றது.

ச-கை. இப்படியனுபவிக்கப்பட்ட அஞ்ஞானம் எவரால் தோற்றப்படுகிறதென்னில்,

உ-ம். சுழுத்தியவத்தையில் பிரகாசசாதனங்களாகிய ஆதித்த சந்திர நட்சத்திர மின்னல் அங்கினி சட்சுவாதிகளில்லாமற் சுகமாத்திரந் தோற்றிக்கொண்டிருக்கிறபடியால், அந்தச் சுகத்தினா லஞ்ஞானந் தோற்றப்படுகிற தென்றே சொல்லவேண்டும்.

ச-கை. அஞ்ஞானத்தினாற் சுகந்தோற்றப்படுகிறதென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். அஞ்ஞானஞ் சடமாகையினால் அதனாலந்தச் சுகந்தோற்றப்படுகிறதென்று சொல்லப்படாது.

ச-கை. அந்தச்சுகம் தான் தோற்றிக்கொண் டஞ்ஞானத்தையுந் தோற்றுவிக்கின்றதோ? தான் றோற்றாம லஞ்ஞானத்தைத்தோற்றுவிக்கின்றதோ வென்னில்,

உ-ம். தான் தோற்றாமலஞ்ஞானத்தையுந் தோற்றுவிக்க மாட்டாது; ஆகையால் தான்தோற்றிக்கொண்டே யஞ்ஞானத்தையுந் தோற்றுவிக்கின்றது. அவ்வஞ்ஞானத்தினாற் சமஸ்தபிரபஞ்சமு மலினமாயிருக்கிறபடியினாலும், அஞ்ஞானத்தையுந் தோற்றுவிக்கின்றபடியினாலும் அந்தச்சுகத்திற்கே சகலபதார்த்த அவபாசகத்வஞ் சித்தித்தது. இதுவே யாத்மாவுக்குச் சர்வஞ்ஞத்வமாகையினாற் சுழுத்தியவத்தையிற் சத்தாகிய சுகத்திற்குச் சித்ரூபத்வமுஞ் சித்தித்தது.

ச-கை. இதற்கு ஆனந்தரூபத்வ மெப்படியென்னில்,

உ-ம். இந்தச் சுழுத்திசுகத்திற்கு நிருபாதிக நிரதிசய சுகசொரூபத்வ மிருக்கிறபடியா லானந்தரூபத்வமுஞ் சித்தித்தது. ஆதலா லனுபவத்தினாலுஞ் சத்தே சித்து; சித்தே

யானந்தமென்று சித்தித்தது. இந்தப்பிரகாரத்தினுலாத்மாவுக்குச் சச்சிதானந்தங்கள் சுவரூபமாகையினுல் சுவகதபேதமும், விசாதிகமாகியவனுத்மா அசத்தாகையினுல் விசாதிகபேதமும், ஆத்மாந்தர மில்லாதபடியினுல் சுசாதிக பேதமுமில்லை. இப்படி சர்வாத்மனுயிருக்கிறவாத்மாவுக்குச் சுசாதிகவிசாதிக சுவகதபேத ரூபமாகியவஸ்துவினுற் பரிச்சேதபேயில்லை. மேலும் ஆத்மா விபுவாயிருக்கிறபடியால் தேசத்தினுலும்; நித்தியனுயிருக்கிறபடியால் காலத்தினுலும், சர்வாத்மனுயிருக்கிறபடியினுல் வஸ்துவினுலும் பரிச்சேதமில்லா திருக்கின்றபடியினுல் சச்சிதானந்த சொரூபமாகிய வாத்மாவுக்கு அகண்டத்வஞ்சித்தித்தது. இவ்வகண்டத்வ சொரூபமாகிய சச்சிதானந்த லக்ஷணத்தைத் தெளிந்த சுவானுபவ ஞானுசாரியரிடத்தில் விசாரித்தறியவேண்டும்.

ச-கை. இந்த விசாரத்திற்குப் பலமேதென்னில்,

உ-ம். சமஸ்த பிராணிகளுந தேகமேநானென்று திடப்பிரக்ஞையாயிருப்பதுபோலத் தேகத்தினிடத்தில் நானென்கிற ஆத்மபுத்திவாராமல் அகண்ட சச்சிதானந்தசொரூபமாகிய ஆத்மாவே நானென்கிற திடப்பிரக்ஞை பெறுவதே இந்த விசாரத்திற்குப்பலம். இப்படி சற்குருமுன்னிலையில் விசாரித்து ஆத்மசுவரூபமே நானென்றறிகிறவனெவனே, அவனே சர்வ சமுசாரத்திலுமிருந்துவிடுபட்டவனும் பரிபூரண ஞானியுமென்று சுருதி ஸ்மிருதியாதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

அகணடத்வநிருபசம்
முற்றிற்று.

பதினுன்காவது,

அஞ்ஞானசொரூபநிருபகம்.

ச-கை. எந்த அஞ்ஞானத்தினுல் சமஸ்தபிராணிகளும் ஜனனமரண துக்க பரம்பரையைப் பெறுகிறுர்கள். அந்த அஞ்ஞான சொரூப மேதென்னில்,

உ-ம். தன்னைத்தா னறியாதிருக்கிறதே யஞ்ஞானம்.

ச-கை. எவர்களுந் தன்னைத்தா னறியார்களாவென்னில்,

உ-ம். அறியார்கள்.

ச-கை. யாருந் தன்னைத்தானறியாதிருக்கிறார்களென்று சொல்லலாமாவென்னில்,

உ-ம். அப்படியிருக்கிறபடியினாற் சொல்லலாம்.

ச-கை. ஆனால் தன்னை மற்றெப்படி யறிகிறார்களென்னில்,

உ-ம். நான்மனுஷன், நான்ஸ்திரீ, நான்புருஷன், நான்பிராமணன், நான்க்ஷத்திரியன், நான்வைசியன், நான்சூத்திரன், நான்பிரமசாரி, நான்கிரகஸ்தன், நான்வானப்பிரஸ்தன், நான்சந்நியாசி, நான்மூரிகநாட்டான், நான்வேலிநாட்டான், நான்வேரிநாட்டான், நான்யோகி, நான்தெலுங்கன், நான்தமிழன், நான்கர்னாடகன், நான்மாராஷ்டகன், நான்தத்துவாதி, நான்வைஷ்ணவன், நான்சைவன், நான்வீரசைவன், நான்பாகவதன், நான்பத்தன், நான்புராணிகன், நான்சாஸ்திரி, நான்கிருஷ்ணன், நான்ராமன், நான்நாராயணன், நானின்னாருக்குத்தகப்பன், நான் இன்னானுக்குப் பிள்ளையென்றிப்படியறிகிறார்களே யல்லாமல் வேறில்லை.

ச-கை. எவர்களுந் தங்களைத் தாங்களறியார்களென்று முன்னே சொல்லி, இப்போது இப்படியே யறிகிறார்களென்று சொன்னால் பூர்வவசனத்திற்கும் இந்த வசனத்திற்கும் விரோதமில்லையாவெனில்,

உ-ம். இல்லை. தான் மனுஷனல்லாததினால் தன்னை மனுஷனென்றறிந்ததும், தான் ஸ்திரீயல்லாததினால் ஸ்திரீயென்றறிந்ததும், புருஷனல்லாததினால் புருஷனென்றறிந்ததும், பிராமணனல்லாததினால்பிராமணனென்றறிந்ததுந் தன்னையறிந்ததல்லவே. ஆகையினா லெவர்களுந் தன்னைத்தானறியார்களென்று சொல்லலாம்.

ச-கை. மனுஷனாகிய தன்னை மனுஷனென் றறிந்தானேயன்றி, எருதென்றறியவில்லை; ஸ்திரீயாகிய தன்னை ஸ்திரீயென்றறிந்தானேயன்றிப் புருஷனென்றறியவில்லை; புருஷனாகிய தன்னைப் புருஷனென் றறிந்தானேயன்றிப் பசாசென்றறியவில்லை; பிராமணனாகிய தன்னைப் பிராமணனென்றறிந்தானேயன்றிச் சூத்திரனென் றறியவில்லை.

இந்தப்படி சமஸ்தமானபேர்களும் யதார்த்தமாய் தங்களைத் தாங்களறிந்திருக்கிறபோது யாருந் தங்களைத்தாங்களறியார்களென்றெப்படி சொல்லுகிறதென்னில்,

உ-ம். சொல்லலாம். தாங்கள் மனுஷரேயானாற் பூர்வஜன்மத்தில் மனுஷனாகவே யிருக்கவேண்டும். இனிவருகிற ஜன்மத்திலு மனுஷனாகவே பிறக்கவேண்டும்; அப்படியில்லையே. பூர்வஜன்மத்தில் தான் யக்ஷனோ, தேவதையோ, கந்தருவனோ, தாபரமோ, பசாசோ, எருதோ, கடாவோ, நாயோ, நரியோவென் றறியப்படவில்லையே. தனக்கு மனுஷத்வஞ் சுதசித்தமானால் மேலைக்குத் தேவாதி சரீரம் பெறவேண்டுமென் றிந்தச்சரீரத்தில் விரும்பி யாகோபாசனாதிக் கிரியைகள் பண்ணாதிருக்கவேண்டும். பண்ணுகிறபடியால் தன்னை மனுஷனென்றறிந்த தறிவல்ல; இந்தப்பிரகாரமே பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திராதிகளென்று தங்களையறிந்த தறிவல்லவென்றே யறியவேண்டும்.

ச-கை. எல்லாரு மிந்தப்பிரகார மறியார்களாவென்னில்,

உ-ம். சிலபேர்களில் லௌகிகமானவர்கள் சீவனென்றறிவார்கள். அந்தச் சீவசொரூப மேதென்றுகேட்டால், அதை யறிந்துசொல்லத் தெரியாது. ஆகையாலிவர்களு மறிந்தவர்களல்ல.

ச-கை. எப்படி யறிந்தவர்க ளல்லவென்னில்,

உ-ம். மனுஷனல்லாத தன்னை மனுஷனென்றறிந்தவ னெப்படி யறிந்தவனல்லவோ, அதுபோலச் சீவனல்லாத தன்னைச் சீவனென்றறிந்தது மறிவல்ல.

ச-கை. சிலபேர்களிற் சாஸ்திரிகளானவர்க ளறியார்களா வென்னில்,

உ-ம். அவர்களு மறியாதவர்களே.

ச-கை. சாஸ்திரிகள் ஆத்மசொரூபமின்னதென்று நிச்சயித்துக்கொண்டிருக்க, அவர்களு மறியார்களென்று சொல்லுவதெப்படி யென்னில்,

உ-ம். சாஸ்திரிகளிற் சாருவாகர் அனாத்மரூபமாகிய தூலதேகத்தையே யாத்மாவென்றும், பிராணோபாசகர் பிராணனையே யாத்மாவென்றும், பவுத்தரிற் சிலர் அனாத்மாவாகிய நாசமாகிற புத்தியையே யாத்மாவென்றும், சிலரு

டர் சசவிஷாணமாகிய சூனியத்தையே யாத்மாவென்று ஞ்சொல்லுகிறார்கள். அவர்கள் சாஸ்திரிகளானாலுந் தன்னையறிந்தவர்களல்ல. இன்னமும் மீமாஞ்சரும், சைவர்களும், ராமானுஜரும்; மாத்துவரும்,பரிபூரணமாகிய வாத்மாவை யணுப்பிரமாணமென்று சொல்லுகிறார்கள். இன்னுந் தார்க்கிகர் ஆத்மாவை விபுத்வமென் றங்கீகரித்த போதிலும் அவர்களும் ஆத்மாவை யறிந்தவர்களல்ல வென்றே சொல்லவேண்டும்.

ச-கை. அதேனென்னில்,

உ-ம். தார்க்கிகர் ஆத்மாவுக்கு விபுத்வமங்கீகரித்தபோதிலும், ஆத்மா அனேகமென்றும், சடமென்றும், சடமாகிய வாத்மாவுக்குச் சிற்குணமென்றும், அந்த ஆத்மாவுக்கு இச்சையாதிகுணங்க ளுண்டென்றும், நிருக்காகியவாத்மாவைத் திரிசியமா யங்கீகரித்தபடியினாலவர்கள் சாஸ்திரிகளானாலு மாத்மாவை யறிந்தவர்களல்ல.

ச-கை. சாங்கியயோகிகளு மாத்மாவையறியார்களோவென்னில்,

உ-ம். அவர்களிற் பேதமாகிய சிலபட்சத்தார் ஆத்மாவுக்கு விபுத்வமும் சச்சிதானந்த சொரூபத்வமும், அசங்கத்வமு மங்கீகரித்தபோதிலும் ஆத்மாவை நானாவாகவும், ஜகத்து நித்தியமென்றும், ஈசுவேஸ்வராதிகளுக்குப் பேதமுமங்கீகரித்தபடியினா லவர்கள் சாஸ்திரிகளானாலு மாத்மாவை யறிந்தவர்களல்ல.

ச-கை. ஆனால் இந்தச்சாஸ்திரிகளெல்லாமறியாமற்போனால்போகட்டும்; வேதாந்தசாஸ்திரிகளாகிலு மாத்மாவையறியார்களாவெனில்,

உ-ம். அவர்களில்அமுமூட்சுவென்றும்முமூட்சுவென்றுமிரண்டுவிதம். அவற்றுள் முமூட்சுக்களிரண்டுவிதமும், அமுமூட்சுக்கள் நாலுவிதமுமா யிருப்பார்கள்.

ச-கை. அந்த நாலுவிதமானவர்க ளாரென்னில்,

உ-ம். திரவியாதி விஷயப் பிரயோசன நிமித்தம் வேதாந்தம் படித்தபேர்களும், பிரசித்திநிமித்தம்படித்தபேர்களும், தமக்குப் பூஜார்த்தவந்தன மறியாதைநிமித்தம் படித்தபேர்களும், இதர மதத்திலிருந்துக்கொண்டுபிரதிஷ்டையாக வேதாந்தசாஸ்திரத்தின் மர்மத்தையறிந்து தூஷிக்கவேண்டுமென்று படித்தபேர்களுமாம். இவர்கள் வேதாந்தசாஸ்திரிகளானாலு மாத்மாவை யறிந்தவர்களல்ல.

ச-கை. ஆனால் இந்த நாலுவகையானவர்களுக்கும் பலமேதென்னில்,

உ-ம். வேதாந்தத்தைத் தூஷிக்கவேண்டிப் படித்தவனுக்குநரகமும், மிருகாதிஜந்து பிராப்தியும் உண்டு. மற்றமூவர்களுக்கோவென்றால், இந்தச் சரீரத்தில் திரவியாதிகீர்த்தியாதி பூஜாதிபலமும் தேகாந்தத்திற்பக்குவத்துக் கீடாய் சொர்க்காதிலோகப் பிராப்திபலமும் வரும்.

ச-கை. இனி முமூட்சுக்களி லிரண்டுவகை யெப்படியென்னில்,

உ-ம். பிரதிபந்த நீக்கிப் படித்தவர்கள், பிரதிபந்தத்துடன் கூடிப்படித்தவர்களென் றிரண்டுவிதமா யிருப்பார்கள்.

ச-கை. பிரதிபந்தமாவ தேதென்னில்,

உ-ம். பூர்வகாரியமும் இனிமேல் நடக்குங்காரியமும்இப்போது நடக்குங்காரியமும், பூர்வாதிபழக்கம் விடாமற் சிந்தனை வருகிறதே பிரதிபந்தம். இதனோடுகூடி வேதாந்தம்படித்தால்; காலாந்தரத்திற் பிரதிபந்தந் தீர்ந்தபிறகு ஆத்மசொரூபத்தையறிந்துமுத்தராவார்கள். பிரதிபந்தமின்றி வேதாந்தம் படித்தவர்க ளிந்தச் சரீரத்திற்றானே யாத்மசொரூபத்தை யறிந்து முத்தியடைவார்கள்.

ச-கை. பூர்வம் யாருந் தன்னைத்தா னறியார்களென்றுசொல்லி, இப்போது பிரதிபந்தமின்றிப் படித்தவர்க ளாத்மாவை யறிவார்களென்றுஞ் சொன்னால், பூர்வவசனத்திற்குமிந்தவசனத்திற்கும் விரோதமில்லையாவென்னில்,

உ-ம். பிரதிபந்தநீக்கிப்படித்து ஆத்மாவை யறிந்தவர்கள் ஆத்மாவேயாகையினால் யாரு மாத்மாவை யறியார்களென்று சொன்னதில் விரோதமில்லை.

ச-கை. பூர்வம் தன்னைத்தானறியார்களென்று சொல்லிப் பிறகு ஆத்மாவை யறியார்களென்று சொன்னதற்கு விரோதமில்லையாவெனில்,

உ-ம். தானே யாத்மாவாகியபடியினால் யாருந்தன்னைத்தானறியார்களென்று சொன்னதற்கும், ஆத்மாவையாருமறியார்களென்று சொன்னதற்கும் விரோதமில்லை.

ச-கை. ஆனால் தன்னையறியாமலிருக்கப்பட்டவஞ்ஞானமெதினாற்போமென்னில்,

உ-ம். ஆத்மஞானத்தினாலன்றி மற்றொன்றினாலும் போகாது.

ச-கை. கர்மத்தினாற் போமென்று சொல்லுவோமே யென்னில்,

உ-ம். கர்மம் அஞ்ஞான விரோதியல்லாதபடியினு லஞ்ஞானத்தைப்போக்கமாட்டாது.

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் கடம் கடாந்தரத்திற்கு விரோதமில்லாதபடியினால் கடத்தைக் கடாந்தரமெப்படிபோக்க மாட்டாதோ அப்படிபோல, கர்மமும் அஞ்ஞானத்திற்கு விரோதமல்லாதபடியா லஞ்ஞானத்தைப் போக்கமாட்டாமல் மேலுமேலும் விருத்தியே செய்விக்கும்.

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். அமாவாசை நிசியிருட்டில்வந்த மேகாவரணம் அவ்வமாவாசை நிசியிருட்டுக்கு விரோதமல்லாதபடியினுல், அவ்விருட்டைப் போக்காமல் பின்னும் விருத்திசெய்விப்பது போலக் கன்மமும் அஞ்ஞானத்தைப் போக்காமல் பின்னும் விருத்தியேசெய்விக்கும். அல்லாமலும் அமாவாசை நிசியிருளில் மார்க்கமறிந்து செல்லும் புருஷனுக்கெதிரே யொருமனுஷன்வந்தால், அவன்பிராமணனென்றுஞ் சூத்திரனென்றுந் தோற்ருமல், யாரோ புருஷன் வருகிறுனென்று சாமானியமாகத் தோற்றப்படுகிறதுபோலும், ஒருமாடெதிர்ப்பட்டால் ரிஷபம் எருமை பசுவெனத் தோற்ருது சாமான்னியமாகத் தோற்றப்படுகிறதுபோலும், அந்தச்சமயத்தில் மேகாவரணமு முண்டானுல், அவ்வந்தகாரத்திற்கு அதிக விருத்தியுண்டாக்கிச் சாமானியமாகத் தோற்றிய மனுஷாதிகளையும் பரிச்சிதந் தோற்றவொட்டாமற் செய்கிறதுபோலக் கர்மமுமஞ்ஞான விருத்திசெய்து ஆத்மாவைப் பரிசிதந்தோற்றவொட்டாமற் செய்விக்கும்.

ச-கை. திருஷ்டாந்தத்தில் மேகாவரணமு மந்தகாரவிருத்தி செய்வித்து மனுஷாதிகளைப் பரிச்சிதந்தோற்ருமற்செய்வது பிரத்தியட்சமாகக் கண்டோம். தாஷ்டாந்தத்தில் கன்மம் அஞ்ஞானவிருத்தி செய்வித்து நித்தியமாய் லபித்திருக்கிற ஆத்மாவை எப்படிதெரியவொட்டாமற்செய்யுமெனில்.

உ-ம். அஞ்ஞானமான இருளுடன் கன்மமான மேகமுங் கூடினல் மூடுபட்ட அந்தகாரத்தில் ரத்தினம், புத்தகம், சாளக்கிராமம், உருத்திராட்சமுதலிய பதார்த்தங்கள்கையி

லகப்பட்டிருந்தாலும் இது வளையற்கல்லோ, ரத்தின மோ; இது வேதமோ, சாஸ்திரமோ; இதுசீதாராமமோ, லட்சுமி நாராயணமோ; இது சண்முகமோவென்றுள்ள படி யிருந்ததை யறியக்கூடாமல் மறைப்பிக்கிறதுபோல், அந்தக்கர்மத்தோடுங்கூடிய வஞ்ஞானமும் நித்தியமாய் லயித்திருக்கிற வாத்மாவைத் தோற்றவொட்டாமற்செய் விக்கும்.

ச-கை. அந்தகாரத்தில் கையிலகப்பட்ட ரத்னாதிகளுடைய பதா ர்த்தஞானம் எப்படிவருமென்னில்,

உ-ம். சூரியோதயமாய் அந்தகார நசித்தபிறகு கையிலிருக்கிற ரத்னாதிகளுடைய யதார்த்தஞானந் தோற்றப்படுகிறது போல, தாஷ்டாந்தத்திலும் கன்மத்தினால் விருத்தியாகி ய ஆவரணமான வஞ்ஞான சத்தாவரணமுஞ் சித்தாவர ணமும் பிரமஞான விசார சூரியோதயத்தினால் நசித்த பிறகு ஆத்மாயதார்த்தமாகத் தோற்றும்.

ச-கை. திருஷ்டாந்தத்தில் சூரியோதயத்தினால் போனபொரு ளெது? இருக்கிறபொருளெதுவென்னில்,

உ-ம். சூரியோதயத்தினால் ரத்னாதி ரூபத்தைத் தெரியாது மறைத்த அந்தகாரமாத்திர நசித்துப்போய் மேகாவர ணமாத்திர மிருக்கும்.

ச-கை. அந்த மேகாவரண மென்னசெய்யுமென்னில்,

உ-ம். சிலருக்குச் சுகமுஞ் சிலருக்குத் துக்கமுஞ்செய்விக்கும்.

ச-கை. யாருக்குச்சுகமும் யாருக்குத் துக்கமுஞ் செய்விக்குமெ ன்னில்,

உ-ம். வழிநடப்போர் கிருஷிபண்ணுகிறவர்களாகிய க்குச் சுகமும், நெல்லுலர்த்துகிறவர், வைக்கோலுலர்த்து கிறவர், ஸ்நானம்பண்ணினவர், வாய்வு சரீரக்காரர்களா கிய விவர்களுக்குத் துக்கமுஞ்செய்விக்கும்.

ச-கை. தாஷ்டாந்தத்திற் போகிறதெது? இருக்கிறதெது வென் னில்,

உ-ம். ஞானோதயத்தினால் அஞ்ஞான நசித்துப்போம். அஞ்ஞா ன காரியமாகிய தேகேந்திரியாதிகளிருக்கும்.

ச-கை. அப்படியிருக்கப்பட்ட தேகேந்திரியாதிக ளஞ்ஞானிக ளுக்கென்னசெய்விக்குமென்னில்,

உ-ம். சுகதுக்கங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கும்.

ச-கை. மேகாவரண மந்தகாரகாரிய மல்லாதபடியினு லந்தகார நசித்துமிருக்கலாம்; தேகேந்திரியாதிக ளஞ்ஞானகாரிய மாகையினுல், காரணமான அஞ்ஞானநசித்தபிறகுமெப் படி யிருக்குமெனில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் கற்ருழையும் புகையும் அம்புவேகமு மிருப்பதுபோலிருக்கும்.

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். கற்ருழையின் காரணமான வேர்போயும் காரியமாகிய கற்ருழையிருப்பதுபோலுங், காரணமான அங்கினிபோ யும் காரியமாகிய புகையிருப்பதுபோலும், காரணமான வில்லொடிந்தும் அதனுல்விடுபட்ட காரியமாகிய அம்பு வேகமிருப்பதுபோலும், தேகேந்திரியாதிகளின் காரண மான அஞ்ஞான நசித்துப்போனுலும் காரியமாகிய தே கேந்திரியாதிகளிருக்கும்.

ச-கை. தேகேந்திரியாதிகளுக் கெப்போது நாசம்வருமென்னில்,

உ-ம். மேகாவரணத்தி னுசத்திற்கொரு நியமமில்லாதுபோலத் தேகேந்திரியாதிகளுடைய நாசத்திற்கு நியமமில்லை. பிரா ரத்தநாசத்தில் தேகேந்திரியாதிகளும் நாசப்படும்.

ச-கை. மேகாவரணம்அந்தகாரவிருத்திபண்ணுவிக்கிறதுபிரத்தி யட்சமாகக்கண்டோம்; கன்மம் அஞ்ஞானவிருத்திபண் ணுவிக்கிறது பிரத்தியட்சமாகக் காணேமேயென்னில்,

உ-ம். திரிவிதகரணங்களினுற்செய்யப்படுகிறகன்மம் அகர்த்தா வாகிய வாத்மாவைக் கர்த்தாவாகவும், அபோக்தாவாகிய வாத்மாவைப் போக்தாவாகவும், சுகதுக்கமின்றிய வாத் மாவைச் சுகதுக்கியாகவும் செய்கிறபடியால், அஞ்ஞான விருத்திபண்ணுகிறதென்று பிரத்தியட்சமாய்க்காணலா ம். இந்தக்கன்மம் அஞ்ஞானத்தைப் போக்கமாட்டாது.

ச-கை. பின்னை யெதினுற் போமென்னில்;

உ-ம். ஆத்மஞானத்தினுல்தான் போகவேண்டுமல்லாமல், வே ருென்றினுலும் போகாது.

ச-கை. இந்த ஆத்மஞான மெதினுல் வருமென்னில்,

உ-ம். விசாரணையினுல் வரவேண்டும்.

ச-கை. அப்படியேன் சொல்லவேண்டும்? திருஷ்டாந்தத்தில்அக் கினியானது பசியைப் போக்காமல் விருத்தி பண்ணின போதிலும், அரிசியை யன்னுகாரமாய்ப் பரிணமிக்கப்ப

ண்ணி பசியைப் போக்கடிப்பதுபோல, தாஷ்டாந்தத்தில் கன்மமானது அஞ்ஞானத்தைப் போக்காமல் விருத்திபண்ணினபோதிலும் சித்தவிருத்தியாகிய வஞ்ஞானத்தைப்போக்கிற ஞானகாரமாய்ப் பரிணமிக்கப் பண்ணி, யஞ்ஞானத்தைப் போக்குமென்று சொல்லலாமேயென்னில்,

உ-ம். ஆனால் அக்கினியானது அரிசியையன்னாகாரமாகப்பரிணமிக்கப்பண்ணி பசியைப் போக்குமென்பது பிரத்தியட்சமாகக் கண்டோம்; தாஷ்டாந்தத்தில் கன்மமானது அஞ்ஞானநிவிர்த்தியாகிற ஞானத்தை யுண்டுபண்ணி, அந்த வழியினா லஞ்ஞானத்தைப் போக்குமென்பது கூடாது. ஏனென்றால் சித்தவிருத்தியைக் கர்த்தத்வாகாரமாகப்பரிணமிக்கப்பண்ணுகிற கன்மம் அஞ்ஞானத்தைப்போக்கிச் சித்தவிருத்தியை அகர்த்தத்வாகாரமாகப்பரிணமிக்கப்பண்ணுகிறஞானத்தைக்கொடுக்கமாட்டாது ஆதலால் கன்மத்தினால் ஞானம்வராது. விசாரணையினாலேயே வரவேண்டும்.

ச-கை. எந்தவிசாரணையினால் வரவேண்டுமென்னில்,

உ-ம். ஆத்மானாத்ம விசாரணையினாலேயே வரவேண்டும்.

ச-கை. அதற்குத் திருஷ்டாந்த மெப்படியென்னில்,

உ-ம். அர்த்தத்துடன் கூடியிருக்குங் காயத்திரியைப் புருஷராலுச்சரித்தாலும் அதனருத்தம் விசாரிக்காமையினால்தெரியவில்லை. அந்த அர்த்தந் தெரியவேண்டிச்சேதுஸ்நானமும், கங்காசாகரத்தினி லாயிரம்வருஷம் அகமருஷ்ணஸ்நானமும், லட்சம் பிராமணபோஜன முதலானதுகளுஞ் செய்தாலும், பஞ்சாக்கினிமத்தியிலிருந்து பதினாயிரம்வருஷந் தபசுபண்ணினாலும், நூறு அசுவமேதயாகம் லட்சங்காயத்திரி ஜபம் இதுமுதலானதுகளை அனேகநாள் செய்தாலும் அந்தக்காயத்திரிக்கர்த்தந்தெரியாது; அந்தஅர்த்தம் அறிந்தவர்களிடத்திற்போய்அவர்களை வழிபட்டு விசாரிக்க அவர்கள் மனமிரங்கி அதனருத்த மின்னதென்றுசொல்ல அதைக்கேட்டு மனதினால்யூகித்தால் தெரியவரும். அதுபோலத் தாஷ்டாந்தத்தில் மிருத்திகா ஸ்நானமுதலான கர்மங்கள்பண்ணினதினாலும் ஆசாரநியம நிஷ்டைகளினாலும் ஆத்மஞானம் வராது ஆத்மானாத்ம விசாரணையினாலேயே வரவேண்டும்.

ச-கை. இதற் கனுபவ முண்டோவென்னில்,

உ-ம். சர்வானுபவ சுதசித்தமா யுண்டாயிருப்பதைக் கர்மத்து வாரா எடுத்துச் சொல்லுகிறோம்.

ச-கை. அந்தக் கர்மமாவ தேதென்னில்,

உ-ம். ஸ்நான சந்தியாவந்தன அனுஷ்டான ஜபதபாதி யுபாசனைகளும், தேவபூசை அதிதி பூசார்ச்சனைகளும், வைசுவதேவதீர்த்த ஸ்நானமுதலானதுகளுங் கர்மமென்று சொல்லப்படும். இந்தக் கன்மங்களில் இதுவரைக்கும்நாமெம்மாத்திரமானாலுஞ் செய்துகொண்டு வந்தோமல்லவா? அப்படிசெய்துவந்த கன்மங்களினால் இதுவரையில் நமது ஸ்வரூபந்தெரியாதபடியினால், எவர்களுக்கும்கன்மத்தினா லாத்மஞானம் வரமாட்டாது. விசாரஞானத்தினாலேயே யாத்மஞானம் வரவேண்டியது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஒருபுருஷ னொருவனை இன்றைக்குத் திதி வாரநட்சத்திரயோக கரணங்களென்னவென்றுகேட்டால், அவன்விசாரித்திருந்தால் இன்றைக் கின்னவாரம், இன்னதிதி, இன்னநட்சத்திரம்; இன்னயோகம், இன்னகரணமென்றுசொல்லுவான். விசாரியாதிருந்தால்நான் விசாரிக்கவில்லை, ஆதலால் நானறியேனென்று சொல்லுவானேயல்லாமல்நான்ஸ்நானம்பண்ணவில்லை,சந்தியாவந்தனம்பண்ணவில்லை யாசாரமாயிருக்கவில்லை, காஷாயந் தரிக்கவில்லை, பூசைபண்ணவில்லை யாகையால் நானறியேனென்றுசொல்லமாட்டான். மேலும் கோவிலில் தேவதைகளுக்குப்பூசை நிவேதனமாச்சுதா வென்றுகேட்டால், அவன் விசாரித்திருந்தால் ஆச்சுது, ஆகவில்லையென்று சொல்லுவான். இல்லாவிட்டா லெனக்குத்தெரியாது, நான் விசாரிக்கவில்லையென்று சொல்லுவானேயல்லாமல் நான்ஸ்நானசந்தியாவந்தன அனுஷ்டான சபதபங்கள்பண்ணுதபடியினாலறியேனென்று சொல்லமாட்டான். இப்படியே உலகத்திலுள்ள சர்வப்பிராணிகளினாலும், எந்தெந்தவஸ்து விசாரிக்கப்படுகின்றதோ, அந்தந்தவஸ்து ஞானம் வருமன்றி விசாரியாதவஸ்து ஞானம்வரமாட்டாது. அதுபோலத் தாஷ்டாந்தத்திலும் ஆத்மஞானம் சமஸ்தபிராணிகளுக்கும் அனுபவசொரூபமாகிய ஆசாரியர் கமு

மாய் விசாரித்தறிவதனால் வாவேண்டுமென்றிக் கர்மவுபா சனைகளினால் வரமாட்டாது.

ச-கை. கன்மத்தினால் ஞானம்வருமென்று சுருதியாதிகள்சொல் லியிருக்க, அந்தச்சுருதியாதிகளுக்கு விரோதமாய்கன்ம த்தினால்ஞானம்வராதென்றெப்படிசொல்லலாமென்னில்

உ-ம். ஏகதேசமாகிய நிஷ்காமகர்மமே ஞானத்திற்குப் பரம்ப ராசாதனமன்றி நானாவிதகன்மமுஞ் சாதனமாகாது. ஆ கையினால் அப்படிசொன்ன சுருதியாதிகளுக்கும் விரோ தமில்லை.

ச-கை. ஆனால் கன்மமெத்தனை விதமென்னில்,

உ-ம். லௌகீகமென்றும், வைதீகமென்று மிரண்டுவிதம். இவ் விரண்டினுள் லௌகீககர்மஞ் சீவனத்துக்கேதுவாகும ன்றி யதனால் ஞானம் பிறவாது. ஏனைய வைதீக கர்மமு மைந்துவிதமாயிருக்கும்.

ச-கை. அது எப்படியென்னில்,

உ-ம். நித்திய நைமித்திய காமிய நிஷேத்த பிராயச்சித்தமென் றைந்துவிதம். அவற்றுள் காமியகன்மத்தினால் ஞானம் வராது? சொர்க்க மாத்திரம் வரும். நிஷேத்தகன்மத்தி னால் காலசூத்திராதி நரகங்கள்வரும். பிராயச்சித்த கன் மத்தினால் புருஷனுக்குக் கர்மத்திலதிகாரத்துவமுண்டா க்கிப் பிரத்தியவாயத்தையும் போக்கடிக்கும். ஆதலாலி ம்மூன்றுகன்மமும்ஞானசாதகமல்லாமற்போயிற்று.

ச-கை. நித்தியநைமித்திய கன்மங்களோ வென்னில்,

உ-ம். அதுகளும் சாத்துவித ராசத தாமதமென மூன்றுவித கன்மங்களாயிருக்கும். அவற்றுள் ராசததாமதகர்மங்க ளிரண்டுஞ் ஜன்மஜன்மங்களையுந்துக்கசுகங்களையுங்கொ டுக்குமன்றி யவ்விரண்டினாலும் ஞானம்வராது. சாத்து விதகர்மமாத்திரத்தினால் சித்தசுத்திவரும். அந்த சித்த சுத்தித்துவாரா, ஞானத்திற்குப் பரம்பரா சாதனமென் று சொல்லப்படும். இதுவேசுருதியாதிகளின் சம்மதமு மென்றறியவேண்டியது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். நித்திய நைமித்திய ரூபமாகிய சாத்துவித கர்மத்தினால் தன்னைவிசாரிக்கச் சித்தசுத்திவரும். சித்தசுத்தித்துவா ரா நித்தியாநித்திய வஸ்துவிவேகம்வரும். நித்தியாநித்

தியவஸ்து விவேகத்துவாரா, இகமுத்திரார்த்த பலபோக விராகம்வரும் இகமுத்திரார்த்த பலபோக விராகத்துவாரா, சமாதிஷட்க சம்பத்திவரும். சமாதிஷட்க சம்பத்தித்துவாரா, முமூட்சுத்வம்வரும் முமூட்சுத்வத்துவாரா, சற்குருலாபமுண்டாம். சற்குருலாபத்துவாரா சிரவணமும், சிரவணத்துவாரா மனனமும், மனனத்துவாரா நிதித்தியாசனமும், நிதித்தியாசனத்துவாரா உள்ளபடியிருக்கிற ஆத்மஞானமும்வரும். இந்தப்படி ஏகதேசமான கன்மம் ஞானத்திற்குப் பரம்பராசாதனமென்றும், விசார முண்டாவதுவே சாட்சாத் சாதனமென்றுஞ் சொல்லவேண்டியது.

ச-கை. இந்தத் திருஷ்டாந்தத்திற் கனுபவமுண்டோவென்னில்,

உ-ம். பசித்தவர்களுடைய பசியைப்போக்கித் திருப்தியாக்குவதற்குப் பக்குவமாகிய அன்னமே சாட்சாத் சாதனமும், உழவுமுதலிய பயிர்களே பரம்பராசாதனமுமா யிருப்பதுபோல, அஞ்ஞானத்தைப்போக்கி யாத்மானுபவதிருப்தியாக்குவதற்கு நிஷ்காமகன்மமே பரம்பரா சாதனமும், விசாரஞானமே சாட்சாத் சாதனமுமா யிருக்கின்றது. இந்தப்படி அஞ்ஞான சொரூபத்தை அருளே திருமேனியான வாசிரியர் முன்னிலையிற் சந்தேக விபரீதமற விசாரித்தறிகிறவனெவனோ அவனே கிருதகிருத்தியனாகிய பிரமவித்தென்று சுருதிஸ்மிருதியாதிகளிற்சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

அஞ்ஞானசோரூபநிருபகம்
முற்றிற்று.

பதினைந்தாவது,

ஞானஞ்ஞானசொரூபநிருபகம்.

ச-கை. ஞானஞ்ஞான சொரூபத்தை விசாரிக்க வேண்டுமென்று சுருதியாதிகள் சொல்லுகின்றபடியால் ஞானமாவதேதது? அஞ்ஞானமாவ தேதென்னில்,

உ-ம். தன்னை யதார்த்தமா யறிகிறதே ஞானம்? தன்னையதார்த்தமா யறியாததே யஞ்ஞானம். இன்னமும் நானே பிரமமென்றறிகிறதே ஞானம்; நான் மனுஷனென்;

கிறதே யஞ்ஞானம். இன்னமும் அத்துவிதியனாகிய வாத்மாவைத் துவிதியனாகவும், அபரிச்சின்னனாகிய வாத்மாவைப்பரிச்சின்னனாகவும், அசங்கனாகிய வாத்மாவைச் சங்கனாகவும், அகர்த்தா அபோக்தாவாகிய வாத்மாவைக் கர்த்தாபோக்தாவாகவுந் தோற்றுவிக்கிறதே அஞ்ஞானம். அத்விதியனாகிய வாத்மாவை யத்விதியனாகவும், அபரிச்சின்னனாகிய வாத்மாவை யபரிச்சின்னனாகவும், அசங்கனாகிய வாத்மாவை யசங்கனாகவும், அகர்த்தா அபோக்தாவாகிய ஆத்மாவை அகர்த்தா அபோக்தாவாகவும் தன்னை யுள்ளபடி தோற்றுவிக்கிறதே ஞானம்.

ச-கை. அத்விதியனாகிய வாத்மாவைத் தொய்தனாகத் தோற்றுவிக்கிறது அஞ்ஞானமென்றால் ஆத்மா தொய்தனாகத் தோற்றுகிறதோ வென்னில்,

உ-ம். நீ நான் அவன் இவன் தேவதத்தன் எக்கியதத்தன் விஷ்ணுமித்திரனென் றிப்படி யனேகவிதமாகத் தோற்றப்படுகின்றது.

ச-கை. அபரிச்சின்னனாகிய வாத்மாவைப் பரிச்சின்னனாகத்தோற்றுவிக்கிறது அஞ்ஞானமென்றால் ஆத்மா பரிச்சின்னனாகத் தோற்றுகின்றதோ வென்னில்,

உ-ம். இந்த வீட்டிலிருந்து யிந்தவீட்டிலில்லை; இந்ததேசத்திலிருந்து மிந்ததேசத்திலில்லையென் றிப்படி யனேகவிதமாகத் தோற்றப்படுகின்றது.

ச-கை. அசங்கனாகிய வாத்மாவைச் சங்கனாகத் தோற்றுவிக்கிறது அஞ்ஞானமென்றால், ஆத்மா சங்கனாகத் தோற்றுகின்றதோவெனில்,

உ-ம். அவர்களுடன் கூடிக்கொண்டிருந்தேன், இவர்களுடன் கூடிக்கொண்டிருந்தேன், தாயுடன் கூடிக்கொண்டிருந்தேன், தகப்பனுடன் கூடிக்கொண்டிருந்தேன், தமையன் தம்பியுடன் கூடிக்கொண்டிருந்தேனென் றிப்படி யனேகவிதமாகத் தோற்றப்படுகின்றது.

ச-கை. அகர்த்தாவாகிய வாத்மாவைக் கர்த்தாவாகத் தோற்றுவிக்கிறது அஞ்ஞானமென்றால், ஆத்மா கர்த்தாவாகத் தோற்றுகின்றதோ வென்னில்,

உ-ம். நான் ஸ்நானம்பண்ணினேன், சந்தியாவந்தனம் பண்ணினேன், அவுபாசனம் பண்ணினேன், அக்கினிஷ்டோம

பண்ணினேனென் றிப்படி யனேகவிதமாகத் தோற்றப் படுகின்றது.

ச-கை. அபோக்தாவாகிய வாத்மாவைப்போக்தாவாகத்தோற்று விக்கிறது அஞ்ஞானமென்றால்; ஆத்மா போக்தாவாகத் தோற்றுகின்றதோ வென்னில்,

உ-ம். நான்போசனம்பண்ணினேன், பால்புசித்தேன்,வாழைப் பழஞ் சாப்பிட்டேன், மாம்பழம் பட்சித்தேனென்றிப் படியனேகவிதமாகத் தோற்றப்படுகின்றது.

ச-கை. அத்துவிதனாகிய வாத்மாவை அத்விதியனாகத் தோற்று விக்கிறது ஞானமென்றாலப்படி யத்துவிதியனாகத்தோற் றுகின்றதோ வென்னில்,

உ-ம். தோற்றுகின்றது. ஆனாலும் ஆத்மாவுக்கு அத்விதியமறிந் தாலல்லவோ அத்விதியனாகத் தோற்றுகிறதென்ப தறிய லாம்.

ச-கை. ஆனால் அத்துவிதியமாவ தேதென்னில்,

உ-ம். சுசாதிக விசாதிக சுவகத பேத ரகிதத்வமே அத்துவிதி யம்.

ச-கை. அதற்குத் திருஷ்டாந்த மெப்படியென்னில்,

உ-ம். விருட்சத்திற்கு விருட்சாந்தரம் சுசாதிகம், சிலாதிகள் விசாதிகம், பத்திர புஷ்ப பலம் சுவகதம். ஆகிய இம் மூன்றுவிதமுஞ் ஜடசொரூபமாகிய பதார்த்தங்களுக் கெல்லாமுண்டு தாஷ்டாந்தமாகிய ஆத்மாவினிடத்தில் இம்மூன்றுபேதங்களு மில்லையென்று சுருதியாதிகள் சொல்லுகின்றது.

ச-கை. ஆத்மாவினிடத்தில் சுசாதிகவிசாதிகசுவகதமும், அதின் பேதமும்பிரசித்தியாய்த் தோற்றப்பட்டாலல்லவோ ஆத் மாசுசாதிகவிசாதிகசுவகதபேதரகிதமென்று சுருதியாதி கள் சொல்லலாம். அப்படி பிரசித்தியாய்த் தோற்று கின்றதா வென்னில்,

உ-ம். வஸ்துத்வ சாமானியத்தினால் பிரசித்தியாய்த் தோற்று கின்றது.

ச-கை. வஸ்துத்வ சாமானியமாவ தேதென்னில்,

உ-ம். ஒருவஸ்து இருக்கிறதென்பதும், ஒரு வஸ்துவென்று தோற்றப்படுவதுமே வஸ்துத்வ சாமானியம்.

ச-கை. ஆனால் அனாத்மவஸ்துவினிடத்தில் சுசாதிகவிசாதிகசுவ கதமும், அதின்பேதமுங்கண்டோம். அப்படியே ஆத்

மாவும் ஒருவஸ்துவாகையினால், அவ்வாத்மாவினிடத்தி லும் சுசாதிக விசாதிக சுவகதமும், அதின்பேதமுமுண் டென்று பிரசித்தியாச்சுது. ஆதலால் சுசாதிக விசாதிக சுவகதபேதரகிதமென்று சுருதிகள் சொன்னமாத்திரத் தினாலந்த அர்த்தம் நமக்குப் புத்தியிலேறுவ தெப்படி யென்னில்,

உ-ம். விசாரித்தா லேறும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஆத்மா சத்ரூபம்; அப்படி சத்ரூபமாகியவாத்மாவுக்குச் சுதந்தரமில்லையல்லவா? ஆகையினால் சுசாதிக விசாதிக சுவகதபேதரகிதமென்றுபுத்தியில்யூகித்தறிந்தாலேறும்.

ச-கை. அதெப்படி? நீ நான் அவன் இவன் தேவதத்தன்எக்கிய தத்தன் ராமன் கிருஷ்ணனென்கிற விவர்களிருக்கிறார்க ளென்றும், பிருதிவிசதி அப்புசதிவாய்வுசதி தேய்வுசதி ஆகாசசதியென்றும் சத்துக் கனேகபேதங் காணப்படு கிறபடியினால், ஆத்மா சுசாதிக விசாதிக சுவகத பேத ரகிதமென்றெப்படி யறியலாமென்னில்,

உ-ம். எல்லாவற்றிலும் சதி சதி யென்றும்சத்து ஏகரூபமாய்க் காணப்படுகிறபடியினால், ஆத்மா சுசாதிக விசாதிக சுவ கத பேத ரகிதமென்றே சொல்லலாம்.

ச-கை. அப்படிசொல்லப்படாது; பூர்வம்சத்து ஏகரூபமாயிருக் கிறபடியாலதற்குப்பேதமில்லையேயென்று சொல்லியபடி கடகடவென்கிறது மேகரூபமா யிருக்கிறபடியால் அங் கும்பேதமில்லாமற் போகவேண்டும். அதற்குப் பேதமி ருப்பதால், சத்துக்கு ஏகரூபத்தினாற் சுசாதிகமுஞ் சுசா திக பேதமுமில்லை யென்பது கூடாதேயென்னில்,

உ-ம். அந்தக் கடாதிகளினிடத்தில் ஆகாரவைலட்சணியமிருக் கிறபடியினால் அங்கே சுசாதிகமும், சுசாதிக பேதமு மிருக்கின்றது; சத்தினிடத்தில் ஆகாரவைலட்சணிய மில்லாதயடியினால் சுசாதிகமும் சுசாதிக பேதமுமில்லை. ஆதலாற் சத்தாகிய வாத்மாவுக்குச் சுசாதிகமும் சுசா திகபேதமுமில்லையென்று சித்தித்தது.

ச-கை. சத்தாகிய வாத்மாவுக்கு விசாதிகமும் விசாதிகபேதமு முண்டோ வில்லையோவென்னில்.

உ-ம். சத்ரூபமாகையாலில்லை.

ச-கை. ஆத்மாவுக்கு விசாதிகமாவதேதென்னில்,

உ-ம். அசத்தாகிய பிரபஞ்சமே விசாதிகம். இவ் வசத்தாகிய பிரபஞ்சம் சத்தாகிற வாத்மாவுக்குத் தொய்தபட்சஞ் சம்பாதிக்கமாட்டாது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் அசத்தான மலடி பிள்ளை தாயைப் புத்திரவதி யாக்காததுபோல அசத்தான பிரபஞ்சமும் ஆத்மாவுக்குத் தொய்தபட்சஞ் சம்பாதிக்க மாட்டாது. ஆதலால் சத்தாகிய வாத்மாவுக்கு விசாதிகமும் விசாதிகபேதமு மில்லையென்று சித்தித்தது.

ச-கை. சச்சிதானந்தத்தி லாத்மாவுக்குச் சுவகதமும் சுவகத பேதமுமுண்டோ? வில்லையோவென்னில்.

உ-ம். திருஷ்டாந்தத்தில் விருட்சத்திற்குப் பத்திர புஷ்பபலாதிகளினால் வரப்பட்ட சுவகதமும், சுவகதபேதமு மெப்படியிருக்கின்றதோ, அப்படியே யாத்மாவுக்குச் சச்சிதானந்தத்தினாற் சுவகதமுஞ் சுவகதபேதமுமில்லை.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். விருட்சத்திற்குப் பத்திர புஷ்ப பலாதிகளினால் சுவகதமும் சுவகதபேதமும் பிரத்தியட்சமாகத் தோற்றுகிறதினாலுண்டு, சச்சிதானந்தங்கள் ஆத்மாவினிடத்தில் சுவரூபமாகையினால் சப்தமாத்திரத்திற் பேதந்தோற்றினாலும் பிரத்தியட்சத்திற் பேதந்தோற்றப்படவில்லை. ஆதலாற் சச்சிதானந்தத்தி லாத்மாவுக்குச் சுவகதபேதமு மில்லையென்பது கூடும்.

ச-கை. அப்படி சொல்லுவது கூடாது. ஏனெனில் சப்தபேத மிருப்பதினாலும், அஸ்தகரபாணி சப்தத்தைப்போற்பரியாய நாம சப்தமல்லாதபடியினாலும்,சப்தபேதத்தினால், அர்த்தபேத முண்டான படியினாலும், சச்சிதானந்தத்தி லாத்மாவுக்குச் சுவகதமும் சுவகதபேதமு முண்டென்று சொல்லலாமேயென்னில்,

உ-ம். சச்சிதானந்தத்தில் *சப்தபேதம் அர்த்தபேத முண்டாயிருந்தாலும் அது பேதமல்ல.

ச-கை. எப்படியென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் அக்கினியினிடத்தில் சிவப்பு ஊஷ்ணம்பிரகாச மிருக்கின்றது. இம்மூவிதமான சப்தபேத

மும், அர்த்தபேதமுந் தோற்றினாலும்அஸ்தகரபாணிசப்தத்தைப்போற் பரியாய நாம சப்தமாகாமல் ஏகார்த்தமாய் விளங்குவதுபோலச் சச்சிதானந்தமும் ஏகார்த்தமாகிய வாத்ம சொரூபமாகப் பிரகாசிக்கின்றது.

ச-கை. அக்கினிக்குச் சொரூபமாகிய ரோகிதோஷ்ணப் பிரகாசத்திற் கொருசமயத்திற் பிரத்தியட்சமாய் பிரதிபந்தங் காணப்படுகிறபடியினாலெப்படி சுவரூபமாகுமென்னில்,

உ-ம். அதுகளுக்குத் தர்மத்வமும் குணத்வமும் சொன்னாலுஞ் சொல்லலாம். ஆத்மாவினிடத்தில் சச்சிதானந்தத்திற்குச் சர்வாத்மனாகப் பேதஞ்சொல்லக்கூடாது.

ச-கை. எதினாற் சொல்லக்கூடாதென்னில்,

உ-ம். சுருதிக்கு விரோதம்வருகிறபடியினாலும் ஆத்மா நிரவயவனாகையாலுஞ் சொல்லக்கூடாது. ஆதலாற் சச்சிதானந்தங்கள் அகண்டமே; அகண்டமாகையினால் அத்வைதமே யாகும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். சத்தே சுவயந்தோற்றுகிறபடியினாற் சித்தாயிற்று. அந்தச்சித்தாகிய சத்தே யிரண்டாம் வஸ்துவல்லாதபடியினா லதுவே யானந்தமாயிற்று. ஆதலாற் சச்சிதானந்தத்திற்குப் பேதமின்றி யாத்மாவுக்கு அத்விதியத்வஞ் சித்தித்தது.

ச-கை. யுத்தி யுத்தமாகிய வனுபவமின்றி யிப்போது சொன்ன வசனமாத்திரத்தினா லாத்மா அத்விதியனென்பது புத்தியிலெப்படி யேறுமென்னில்,

உ-ம். விசாரிக்குமிடத்திற் புத்தியிலேறும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். இல்லாதவஸ்து இருக்கிறதென்று சொல்லக்கூடாது. ஆகையினால் சத்து இருக்கிறதென்பதிற் சந்தேகமில்லை.

ச-கை. அசத்து தோற்றப்படுகிறதே யென்னில்,

உ-ம். தோற்றுதவஸ்து இருக்கிறதென்பது விவேகித்தால்விஷயமாகாதபடியினால் சத்து தோற்றுகிறதென்றே சொல்லவேண்டும்.

ச-கை. அப்படி தோற்றிக்கொண்டிருக்கிற சத்து தானேதோற்றுகிறதா? மற்றொன்றினாற் றோற்றுகிறதாவென்னில்,

உ-ம். தானே தோற்றப்படுகிறதென்றே சொல்லவேண்டும். அப்படிசொன்னால் சத்தே சித்தாகச் சித்திக்கது. அன்னியத்தினால் தோற்றுகிறதென்றுசொன்னால் சுதந்தரத்தினால் தோற்றுவிக்கப்பட்டுத் தோற்றுகின்றதா? சத்துவிலட்சணத்தினல்தோற்றுகிறதாவென்றுசங்கிக்கவரும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். சுதந்தரமென்றால் அந்தச் சுதந்தரம் நிக்ருஷ்டமாயிருந்துகொண்டு அந்தச் சத்தைத் தோற்றுவிக்கின்றதா? அல்லது சமானமா யிருந்துகொண்டு தோற்றுவிக்கின்றதா? அல்லது ஒன்றினாற்றான் பிரகாச வதிசயம்பெற்றுத் தோற்றுவிக்கின்றதா? அல்லது தானே தோற்றிக்கொண்டு அந்தச்சத்தையுந் தோற்றுவிக்கின்றதாவென்று விசாரிக்கவரும்.

ச-கை. ஆனால் ஆத்ம சொரூபமாகிய சத்தைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கிறசுதந்தரம் நிக்ருஷ்டமாயிருந்துகொண்டு தோற்றுவிக்கிறதென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். சூரியப்பிரகாசத்திற்கு நிக்ருஷ்டமாகிய தீபமுஞ் சூரியனைத் தோற்றுவிக்கவேண்டும். அங்ஙன மில்லாதபடியினால் அந்தச் சத்துக்குச் சுதந்தரம் நிக்ருஷ்டமா யிருந்துக்கொண்டு சத்தைத் தோற்றுவிக்கிறதென்று சொல்லக்கூடாது.

ச-கை. சுதந்தரம் சத்துக்குச் சமானமாயிருந்துக்கொண்டு சத்தைத் தோற்றுவிக்கிறதென்று சொல்லலாமேயென்னில்,

உ-ம். தீபத்திற்குச் சமானமாகிய தீபாந்தரமு மந்தத்தீபத்தைத் தோற்றுவிக்கவேண்டும். அங்ஙன மில்லாமையால் சுதந்தரஞ் சமானமாயிருந்துகொண்டு சத்தைத் தோற்றுவிக்கிறதென்பது கூடாது.

ச-கை. ஒன்றினால் தான் பிரகாசவதிசயம்பெற்றுக்கொண்டு சத்தைத்தோற்றுவிக்கிறதென்று சொல்லுவோமேயெனில்,

உ-ம். அந்தச் சுதந்தரத்திற்குப் பிரகாச வதிசயங்களைச் சம்பாதிக்கிறவஸ்து சத்தோ, வசத்தோவென்று நிரூபிக்கக்கூடாது. அன்றியும் சத்தென்றால் சொப்பிரகாசமோ? அப்பிரகாசமோ; வென்று நிரூபிக்கக்கூடாது.

ச-கை. சொப்பிரகாசமென்று சொல்லலாமே யென்னில்,

உ-ம். சொப்பிரகாசமாகிய சத்தே சித்தாகியபடி சத்துக்குச் சொப்பிரகாசத்வமும் அத்விதியத்தமும் வேதாந்திகளுக் கன்னியரா லங்கீகரிக்கப்படவில்லை. ஆதலால் ஆத்மசொரூபமாகிய சத்தைத் தோற்றுவிக்கிற சுதந்தரத்திற்குப் பிரகாசவதிசயமுஞ் சம்பாதிக்கிற சத்து சொப்பிரகாசமென்பது கூடாது.

ச-கை. அப்பிரகாசமென்று சொல்லுவோமே யென்னில்,

உ-ம். அப்பிரகாசமாகிய வஸ்து பிரகாசமாகிய வஸ்துவுக்குப் பிரகாச வதிசயத்தைச் சம்பாதிக்கக் காணோம். ஆகையால் அப்பிரகாச மென்பது கூடாது.

ச-கை. சுதந்தரம் அன்னிய வஸ்துவினு லதிசயத்தைப் பெற்று ஆத்மாவைத் தோற்றுவிக்கிறதென்று சொல்லுவோமே யென்னில்,

உ-ம். அன்னியவஸ்து அசத்தானைபினு லப்படியுஞ் சொல்லக் கூடாது. ஆத்ம சொரூபமாகிய சத்துக்குப் பிரகாச வதிசயங்களைச் சம்பாதிக்கிற சுதந்தரத்திற்குப் பிரகாச வதிசயங்களைச் சம்பாதிக்கிற சத்து வேறொன்றுண்டென்று சொல்லவரும்.

ச-கை. அப்படி சொல்லலாமே யென்னில்,

உ-ம். அப்படி சொன்னால் அதற்கொன் றுண்டென்றும், இந்தப்படி யனவஸ்தாதோஷமும், சத்துக்கு அப்பிரகாசத்வமும், தொய்தத்வமும் சொல்லுகிறவர்களுக்கு அபரிகாரமாக இடிவிழுவதுபோலச் சங்கையும்வரும். மேலும் உலகத்தில் ஒன்றுக் கதிசயங்களைச் சம்பாதிக்கிறவஸ்து தானதிசயமா யில்லாதிருப்பது காணோம்.

ச-கை. பின்னையெப்படியென்னில்,

உ-ம். அவ்வஸ்து, தானும் அதிசயமாகிய வஸ்துவாயிருந்துக் கொண்டு மற்றொரு வஸ்துவுக்கு அதிசயங்களைச் சம்பாதிக்குமென்பது அக்கினியாதிகளிடத்திற் கண்டோம். ஆதலால் முற்சொன்ன பட்சத்திரயங்களுங் கூடாதபடியினுற் சத்தைத்தோற்றுவிக்கிற சுதந்தரந் தானேசொப்பிரகாசமா யிருந்துக்கொண்டு தோற்றுவிக்கிறதென்றே சொல்லவேண்டும். இப்படி சொன்னால் சொப்பிரகாசமாகிய சுதந்தரமே சித்தாகச் சித்தித்தது.

சீ-கை. ஆனாலுலகத்தி லாகாசாதிகளைப்போல வுபாதிவினாவாய் சத்தாத்விதியமும் நிருபிக்கக் கூடாதேயென்னில்,

உ-ம். நிருபாதிகமாகிய சத்தே யத்விதியமென்று சுருதியாதிக ளிற் சொல்லுகிறபடியினால், சத்து பிரகாசமாகிய சுதந் தரத்தினால் தோற்றப்படுகிறதென்று சொல்லக்கூடாது. ஆத்மசொருபமாகிய சத்தே பிரகாசமாயிருக்கிறபடியி னால், அதுவே சித்தென்று சொல்லலாம்.

ச-கை. கடாதிகளுக்கு விலட்சணமாகிய தீபாதிகளினால்கடாதிக ள்தோற்றுகிற தென்பதுபோலச் சத்துக்கு விலட்சண மாகிய வஸ்துவினாற் சத்து தோற்றப்படுகிறதென்றுசொ ல்லுவோமேயெனில்,

உ-ம். கடாதிகளுந் தீபாதிகளும் சமானசத்தாகாரமாயிருக்கிற படியால் அந்தக்கடாதிகளைப்பார்க்கிலுந்தீபாதிகள் கடா திகளுக்குப் பிரகாசங்கள்பிரத்தியட்சமாய்க் கொடுத்துக் காண்பிக்கிறதினால் தீபாதிகளினாற் கடாதிகள் தோற்ற லாம்; தாஷ்டாந்தத்தில் சத்துக்குவிலட்சணமானவஸ்து அசத்தானபடியினா லது வஸ்துத்வமாயிருந்து விளங்கிற தர்மஞ் சொல்லக்கூடாது. ஆதலாற் சத்துவிலட்சணமா கிய அசத்தினாற் சத்து தோற்றுகிறதென்பது கூடாது. அகலினிடத்தில்லையென்கிற தீபாதிகளினாலும், பிராந்தி களாற் றோற்றுகிறவுபாதிகள் அனேகமானதினாலும், க டாதிகள் தோற்றப்படுகிற தென்று சொல்லக்கூடாது போல், சத்து விலட்சணமாகிய வசத்தினால் சத்து தோற்றுகிறதென்று சொல்லக்கூடாது மேலும் சத் தைத் தோற்றுவிக்கிற பதார்த்தங்களொன்றாகிலுமில்லை. சமஸ்த பதார்த்தங்களுஞ் சத்தி லாரோபிக்கப்படுகிற படியினாலும், அந்தப்பதார்த்தங்களைத்துஞ்சத்தையுப சீவித்துக்கொண்டு தோற்றுகிறபடியினாலும்சத்து சொப் பிரகாசமே. அந்தச்சத்தேசித்து; அந்தச் சித்தானசத் துக்கு திரிசியமாயிருக்கப்பட்ட வஸ்து அசத்தாயிருக்கி றபடியினாலும், அந்தச்சத்தே யிரண்டாம்வஸ்து வுண் டாகிறதில்லாமற் போனதினாலும் அந்தச் சித்தான சத் தே யானந்த ரூபமாயிற்று.

ச-கை. உலகத்திலிரண்டாம்வஸ்து வுண்டாகிறதில்லாமற்போன வஸ்துவே யானந்தமாயிருக்கிற துண்டாவென்னில்,

உ.-ம். சுழுத்தியில் இரண்டாம்வஸ்துவில்லாதபடியினு லதுவே யானந்தமாச்சுது சாக்கிரசொப்பனத்தி லிரண்டாம்வஸ் துவிருக்கிறபடியினுல் துக்கமே தோற்றுகிறது. சாக்கிர த்திலு மேகாந்தமா யிருக்கிறசமயத்தில் இரண்டாம்வ ஸ்துவையனுசந்திக்காதபோது சமஸ்த பிராணிகளுக்கு மானந்தமாய்தோற்றப்படுகின்றது. ஏகாந்தமாயிருக்கிற புருஷன் இரண்டாம்வஸ்துவை ஸ்மரிக்காமற் சுகமாயிரு ந்தாலும் அவசியமாய் ஸ்மரிக்கப்பண்ணுகிற ஒரு சப்த சிரவணத்தினுலும் ரூபதரிசனத்தினுலும் எழுந்தபோது பயரூபமாய்துக்கமே தோற்றுகின்றது. இரண்டாம்வஸ் துதோற்றினுல் ஐயமுண்டென்றே சுருதிகள் சொல்லு கிறபடியால் இரண்டாம்வஸ்து தோற்ருத சுழுத்தியிலா னந்தமாயிற்று. அவ் வானந்தத்தில்கற்பனைபிறந்தபடியி னுல் ரச்சுவாதிகளிற் கற்பிக்கப்பட்ட சர்ப்பாதிகளைப் போல அவ்வானந்தத்திற்கு வெதிருத்தமில்லை. ஆதலா லாத்மாவே காலத்திரயத்திலு மிருக்கிறபடியால் சத்தெ ன்றும், சொப்பிரகாசமா யிருக்கிறபடியாற் சித்தென்று ம், இரண்டாம்வஸ்து உண்டாகிறதில்லாமற் போகிறபடி யா லானந்தமென்றும் சொல்லப்படும். ஆதலால் சத்ரூப னுகிய ஆத்மாவுக்குச் சுதந்தர மின்மையால் சுசாதிகமு ம், சுசாதிகபேதமும்; விசாதியாகிய அசத்தில்லாதபடி யினுல் விசாதிகமும், விசாதிகபேதமும்; சத்தே சித்து சித்தே யானந்தமானபடியினுல்சுவகதமும், சுவகதபே தமுமில்லை இதனு லாத்மா அத்விதியனென்கிற சுருதி வாக்கியப்படி யுத்தி யனுபவமுஞ் சித்தித்தது. இந்தப்ப டிமுமூட்சுவானவர்கள் அத்விதியனுகிய ஆத்மாவே நா னென்றறிந்து அனுபவிக்கத்தக்கது.

ச-கை. ஆத்மா அத்விதியனென்று சுருதி சொல்லுகிறதுபோல வே பரிபூரணனென்றுஞ் சொல்லுகின்றதே; ஆத்மாவுக் குப் பரிபூரணத்வ மெப்படியென்னில்,

உ-ம். பரிபூரணத்வமென்று சாமானியமாகச் சொன்னுல் வியா பகத்வமோ, விபுதவமோ, அபரிச்சின்னத்வமோ, பரிபூ ரணத்வமென்று விசாரிக்கவரும். அவற்றுள் அபரிச்சின் னத்வமே பரிபூரணத்வமென்று சொல்லவேண்டும்.

ச-கை. அப்படியேன் சொல்லவேண்டும்? வியாபகத்வமே பரிபூ ரணத்வமென்று சொல்லலாமேயென்னில்,

உ-ம். சுவயகாரிய வனுரூதத்வ மல்லவோ வியாபகத்வம்? அது பிருதிவியாதிகளுக்குமிருக்கிறபடியினால் அப்படிகூடாது.

ச-கை. ஆனால் விபுத்வமே பரிபூரணத்வமென்று சொல்லலாமே யென்னில்,

உ-ம். சர்வ மூர்த்திரவிய சையோகத்வ மல்லவோ விபுத்வம்? அது ஆகாசாதிகளுக்கு மிருக்கிறபடியினால் அப்படியுங் கூடாது. அபரிச்சின்னத்வமேபரிபூரத்வமென்று சொல்லவேண்டும். இந்த அபரிச்சின்னத்வம் பரிச்சின்னமான வாகாசாதிகளுக்கில்லை. ஆத்மாவுக்கோவென்றால்,வியாபகத்வம்விபுத்வம் அபரிச்சின்னத்வமாகிய மூன்றுமுண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். பிருதிவியாதிகளுக்குச் சுவயகாரியமான சதுர்வித பூதக்கிராகியத்தில் அனுரூதத்வமிருக்கிறதுபோல, ஆத்மாவுக்குச் சுவயகாரியமான பிரபஞ்சத்தி லனுரூதக்வ மிருக்கிறபடியால், வியாபகத்வமும், ஆகாசாதிகளுக்குச் சர்வ மூர்த்திரவிய சையோகத்வ மிருக்கிறதுபோல, ஆத்மாவுக்குஞ் சர்வமூர்த்திரவிய சையோகமிருக்கிறபடியால், விபுத்வமுமிருக்கின்றது.

ச-கை. ஆனால் வியாபகமானவனே யாத்மா,விபுவானவனேயாத்மாவென்று சொல்லலாமேயென்னில்,

உ-ம். அப்படி சொல்லுமிடத்து ஆத்மாவுக்குத்துவிதந் தோற்றுகிறபடிபா லங்ஙனங் கூடாது. அபரிச்சின்னத்வமே பரிபூரணத்வம், அத்விதியத்வமே யபரிச்சின்னத்வம். மேலும் அத்விதியத்வமே யபரிச்சின்னத்வ மானபோதிலும் இன்னும் விசாரிக்கவேண்டும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். திரிவித பரிச்சேத சூனியத்வமே யபரிச்சின்னத்வம்.

ச-கை. திரிவிதபரிச்சேதமாவ தேதென்னில்,

உ-ம். தேச காலவஸ்துவே திரிவிதபரிச்சேதம்.

ச-கை. தேசகால வஸ்துவினு லாத்மாவுக்குப் பரிச்சேதம் பிரசித்த மாயிற்றுவென்னில்,

உ-ம். அனுதியாகிய பிராந்தியினுற் பிரசித்தமாயிற்று.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். நான் இந்தத்தேசத்திலிருந்தேன், அந்தத்தேசத்தி லில்லையென்று தேசத்தினுலும், இந்த வருஷத்திற் பிறந்தே

னினிமேல் நானில்லாமற் போகப்போகிறேனென்று கா லத்திலும், இந்த வஸ்து நான், அந்தவஸ்து நானல்ல வென்று வஸ்துவினுலும், ஆத்மா பிராந்தியினுற் பரிச் சேதமாகத் தோற்றுகின்றது. அதை விசாரிக்குமிடத்தி லில்லை.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஆத்மா வியாபகனுயிருக்கிறபடியால் தேசத்திலும், நித் தியனு யிருக்கிறபடியால் காலத்திலும், சர்வாத்மனு யிருக்கிற படியால் வஸ்துவினுலும் பரிச்சேதமில்லை.

ச-கை. திரிவிதபரிச்சேத சூனியமேயபரிச்சின்னத்வமென்றேன் சொல்லவேண்டும்; தேசத்திலுற் பரிச்சேதாகிதமே அப ரிச்சின்னத்வமென்று சொல்லலாகாதா வென்னில்,

உ-ம். தேச பரிச்சேத ரகிதம் ஆகாயத்துக்கிருப்பதால் அதற் கும் அபரிச்சின்னத்வம்வரும். அதை நிராகரிக்கிறநிமித் தம் காலத்திலும் ஆத்மா பரிச்சேத ரகிதனென்றங்கீ கரிக்கவேண்டும்,

ச-கை. ஆனுலாகாசத்திற்குங் காலபரிச்சேதமுண்டாவென்னில்,

உ-ம். சுருதிகளி லாகாசத்திற்கு நாசஞ் சொல்லுகிறபடியினுல் காலத்தி லாகாசத்திற்குப் பரிச்சேதமுண்டு.

ச-கை. ஆனுலாத்மாவுக்குத் தேசத்திலுங்காலத்திலும்பரிச் சேதாகிதமே யபரிச்சின்னத்வமென்று சொல்லலாமே யெனில்,

உ-ம். காலத்திற்குந் தேசத்திலுந் தன்னுலும் பரிச்சேத ரகி தமாயிருக்கிறபடியா லதற்கும் அபரிச்சின்னத்வம்வரும். அதை நிராகரிக்கிற நிமித்தம் வஸ்துவினுலும் பரிச்சேத ரகிதமே யபரிச்சின்னத்வமென் றங்கீகரிக்கவேண்டும்.

ச-கை. ஆனுல் காலத்திற்கு வஸ்துபரிச்சேதமுண்டாவென்னில்,

உ-ம். காலம் ஆகாசாதி வஸ்துவல்லாதபடியால் காலத்திற்கு வஸ்துவினுற் பரிச்சேதமுண்டு.

ச-கை. அப்படியானுல் ஆத்மாவுக்கும் வஸ்துவினுற் பரிச்சேதந் தோற்றுகின்றது. எப்படியென்றுல் ஆத்மாவுக்கு வியா பகத்வமும் நித்தியத்வமு மிருக்கிறபடியால் தேசத்தி லுங் காலத்திலும் பரிச்சேத ரகிதமுண்டான போதி லும் ஆத்மா ஆகாசாதி வஸ்துவல்லாதபடியினுல் பரிச் சேதந் தோற்றுகின்றதே யெனில்,

உ-ம். அதனாலாத்மாவுக்குப் பரிச்சேதமில்லை.

ச-ங்கை. எப்படி யில்லையென்னில்,

உ-ம். ஆகாசகாலமே, வாய்வுகாலமே, தேய்வுகாலமே, அப்பு காலமே, பிருதிவிகாலமேயென்று விவகாரமின்மையால், காலத்தை யுபசீவித்துக்கொண்டு ஆகாசாதிகளிருக்கவில்லை. மேலும் அவ்வாகாசாதிகளைப்போற் காலமும் அவித்தியா பரிணாமமானதையினாலும்; விவகாரத்தில் காலமும், ஆகாசாதிகளும் பின்னரந்தாகாரமாகத் தோற்றுகிறபடியினாலும், கடாதிகளினால் கடாதிகளுக்குப் பரிச்சேதம் பிரத்தியட்சமாய்த் தோற்றுகிறதுபோல, வஸ்துவினாற் காலத்திற்குப்பரிச்சேதம் பிரத்தியட்சமாய்த் தோற்றுகின்றது. ஆதலால் வஸ்துவினால் காலத்திற்குப் பரிச்சேதஞ் சொல்லுவதுயுக்தமே. ஆத்மாவோவென்றால் ஆகாசாதிகளல்லாத வஸ்துவைப்போற் றோற்றப்பட்டாலும் எப்போதுஞ் சத்தாமாத்திரமா யிருக்கின்ற படியாலும் அவ்வாத்மசொரூபமாகிய சத்தை யுபசீவித்துக்கொண்டேயாகாசாதிக ளிருக்கிறபடியினாலும் பழுதையினிடத் தாரோபிக்கப்பட்ட பாம்பு அந்தப்பழுதையையன்றி யெப்படிபரிச்சேதமல்லவோ, மிருத்துவினிடத்திற்றோற்றப்பட்ட கடாதிகள் மிருத்துவன்றியெய்படி பரிச்சேத மல்லவோ, அப்படிபோல ஆத்மசொரூபமாகிய சத்தினிடத்திற் றோற்றப்பட்ட ஆகாசாதி வஸ்துக்களும் ஆத்மசொரூபமாகிய சத்துக் கன்னியமல்லாதபடியினாலாத்மாவுக்குப் பரிச்சேதமல்ல. ஆதலாலாத்மாவுக்கு வஸ்துவினாலும் பரிச்சேதமில்லையென்பது யுக்தமே.

ச-ங்கை. தேசமுங் காலமும் வஸ்துவாயிருக்கிறபடியினால், அந்த வஸ்துவினாற் பரிச்சேதரகிதமே யாத்மாவுக்கு அபரிச்சின்னத்வமென்று சொன்னாற்போதாதோவென்னில்,

உ-ம். போதும். ஆனாலுந் தேசகாலங்களுக்கு ஆகாசாதிகளைப் போலவஸ்துத்வப் பிரசித்தியின்மையினாலும் ஆத்மாவுக்குச்சுதசித்தமாகிய வியாபகத்வமும் அநாதியாகிய வஞ்ஞானத்தினால்வந்த தேகேந்திரியாதி யத்தியாசத்தினால் தோற்றாமற் போனபடியினாலும் அந்தப் பிராந்தியைத் தள்ளுநிமித்த மித்தனையுஞ் சொல்லவேண்டிற்று. இந்தத்திரிவிதபரிச்சேத சூனியத்வமே, யபரிச்சின்னத்வம்;

அஃதே பரிபூரணத்வம், அஃதே யகண்டத்வம், அஃதே யத்துவிதியத்வம் என்று சுருதியாதிகளிற் சொல்லுகிற படி சற்குருமுன்னிலையில்விசாரித்தறிந்தவனே முத்தன்.

ச-ஙை. ஆனாலாத்மாவுக்கு அசங்கத்வ மெப்படியென்னில்,

உ-ம. சங்கத்வம் பிரசித்தமானாலல்லவோ அசங்கத்வம் விசாரிக்கவேண்டும்.

ச-ஙை. விசாரத்தினால் தள்ளப்பட்ட சங்கத்வம்ஆத்மாவுக் குண்டோவென்னில்,

உ-ம். உண்டு.

ச-ஙை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். பிராந்தியினால் வந்த தேகேந்திரியாதி யத்யாசத்தினால் ஆத்மாவுக்குச் சங்கத்வந் தோற்றப்படுகின்றது. இதுவுமன்றி அவர்களுடன் கூடிக்கொண்டிருந்தேன், இவர்களுடன் கூடிக்கொண்டிருந்தேனென்று சங்கத்வந்தோற்றப்படுகின்றது. ஆதலால் சுருதி விசாரத்தினா லாத்மா அத்விதியனென் றெப்போ தறிகிறானோ, அப்போதிரண்டாம்வஸ்து வில்லாதபடியினா லாத்மாவுக்குச் சங்கத்வந் தள்ளப்பட்டது.

ச-ஙை. ஆனால் பரமாத்மா ஜீவாத்மா வென்பதின்றி அத்விதியனும் அசங்கனு மிருந்தபோதிலும் விவகார காலத்திற் சங்கனைப்போற் றோற்றுவதா லாத்மாவுக்கு அசங்கத்வ மெப்படி கூடுமென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் பழுதையாதிகளிடத்தி லாரோபிக்கின்ற பாம்பாதிகளுடன்கூட அந்தப்பழுதையாதிகளுக் கெப்படி காலத்திரயத்திலுஞ் சங்கமில்லையோ, அப்படியே யாத்மாவினிடத்திலும் ஆரோபிதமாய்த் தோற்றுகின்ற தேகேந்திரியாதிப் பிரபஞ்சத்துடன்கூடியும் ஆத்மாவுக்குக் காலத்திரயத்திலுஞ் சங்கமேயில்லை. இதுவுமன்றி உலகத்தில் சாவயவமா யிருக்கப்பட்ட பதார்த்தங்களுக்கன்னியோன்னிய சங்கங்கள்கண்டோம்; நிரவயவமா யிருக்கப்பட்ட பதார்த்தங்களுக்குச் சாவயவமா யிருக்கப்பட்ட பதார்த்தங்களுடன்கூடியுங் காலத்திரயத்திலுஞ் சங்கங்காணோம்.

ச-ஙை. அஃதெப்படி காணோமென்னில்,

உ-ம். பரமார்த்தத்தில் நிரவயவமென்று சம்மதமாயிருக்கப்பட்ட ஆகாசாதிகளுக்குப் பிருதிவியாதிகளுடன் கூடச் சங்கஞ் சொல்லங்காணோம். அப்படிசொன்னால் ஜலாதிசங்கத்தினால் வஸ்திராதிகளுக்கு ஈரமுதலானதுகள் வருவதுபோல், ஆகாசாதிகளுக்கும் பிருதிவியாதிகளுடன்கூடின சங்கத்தினால் அந்தப் பிருதிவியாதிகளின் விகாரம் வரவேண்டும். அங்ஙனமின்மையால் அவ்வாகாசாதிகள் பிருதிவியாதிகளுடன் கூடிக்கொண்டதுபோலத் தோற்றினாலும் அவ்வாகாசாதிகளுக்குப் பிருதிவியாதிகளுடன் கூடியுமெப்படிசங்கமில்லையோ, அப்படிபோல ஆத்மாவும் பிராந்தியினா லிந்தத்தேகேந்திரியாதிப் பிரபஞ்சத்துடன் கூடிக்கொண்டிருக்கிறவனைப்போலத்தோற்றமாகத் தோற்றினாலும் ஆத்மா அசங்கனே அல்லாமலும் விவகாரகாலத்திற் பரமார்த்தத்தை யனுசரித்து ஆகாசாதிகளுக்கு நிரவயத்வ மங்கீகரித்து இப்படி சொன்னோம். பரமார்த்தமாக விசாரிக்குமிடத்தில் ஆகாசாதி சர்வபதார்த்தமும் பிராந்தியினால் ஆத்மாவினிடத்தி லாரோபிதமாகத் தோற்றியபடியால், அவ்வாரோபித பதார்த்தங்களும் பழுதையிற்றோற்றப்பட்ட பாம்பாதிகளைப் போலவே அதிஷ்டான ஆத்மசத்தே ஸ்வரூபமாயிருக்கிறபடியினால் காலத்திரயத்திலும் அத்விதியனாகிய வாத்மா வசங்கனென்பதிற் சந்தேகமில்லை.

ச-கை. ஆனா லாத்மாவுக்கு அகர்த்தத்வ மெப்படியென்னில்,

உ-ம். கர்த்ருத்வம் பிரசித்தமான லல்லவோ அகர்த்ருத்வம் விசாரிக்க வேண்டும்.

ச-கை. விசாரத்தினால் தள்ளப்பட்ட கர்த்ருத்வம் ஆத்மாவுக்குண்டோவென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். நான் ஸ்நானம்பண்ணினேன், ஸ்நானம்பண்ணப் போகிறேன், ஜபம்பண்ணினேன், ஜபம்பண்ணப் போகிறேன், அக்கினி ஹோத்திரம்பண்ணினேன், அக்கினிஹோத்திரம் பண்ணப்போகிறேன், எக்கியம்பண்ணினேன், எக்கியம் பண்ணப்போகிறேன் என்கிற கர்த்ருத்வம் அத்தியா

சத்தினால் ஆத்மசுபாவமாகவே தோற்றப்படுகிறபடியால் அதை நிராகரிக்கு நிமித்தம் விசாரிக்கவந்தது.

ச-கை. ஆனாலாத்மாவுக்கு அகர்த்ருத்வ மெப்படியென்னில்,

உ-ம். உலகத்தில் கர்த்ருத்வமென்பது கிரியைகள் முன்னிலையாய் நானென்றுசிரயித்துப் பரிச்சின்னமாய் சங்கமாய் சாவயமாய் விகாரமாயந்தந்தவஸ்துக்களை யாசிரயித்துக் கொண்டிருப்பதாகக் கண்டோம். ஆத்மா அபரிச்சின்னனாய் அசங்கனாய் நிருவிகாரியாய் நிரவயமாயிருக்கிறபடியால், அவ்வாத்மாவுக்குக் கர்த்ருத்வஞ் சொல்வதுகூடாது. ஆத்மா அகர்த்தாவென்றே சொல்லவேண்டும். ஆத்மாவுக்கு அத்விதிய ஞானத்தினால் அகர்த்ருத்வஞ் சித்தித்தது. அப்படி சித்தித்தாலும் நன்றாயறியவேண்டி விசேஷமாகச் சொல்லுகிறோம். விவகாரத்தில் ஸ்நானாதிக்கிரியை யாசிரயத்வம், நானென்கிற வபிமான கர்த்தவியம் தேகாதிகளுக்கே கண்டோம். வியாபகத்வமாகிய வாகாசாதிகளுக்குக் காணோம். ஆதலால் அபரிச்சின்னமாகிய வாத்மாவுக்குக் கர்த்ருத்வமில்லையென்பது சொல்ல வேண்டுமோ? பிராந்தியினால்வந்த தேகேந்திரியாதி யத்தியாசத்தினால் ஆத்மா கர்த்தாவைப்போற் றோற்றினபோதிலும் விசாரிக்கிறபோதும் அனுபவத்திற்கும் அபரிச்சின்னனாயிருக்கிறபடியால் அகர்த்தாவென்பதிற் சந்தேகமில்லை.

ச-கை. ஆனாலாத்மாவுக்கு அபோக்த்ருத்வ மெப்படியென்னில்,

உ-ம். போக்த்ருத்வம் பிரசித்தியானதல்லவோ அபோக்த்ருத்வம் விசாரிக்கவேண்டும்.

ச-கை. விசாரத்தினால் தள்ளப்பட்ட போக்த்ருத்வம் ஆத்மாவுக்குண்டோவென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அதெப்படி யென்னில்,

உ-ம். நான் போஜனம்பண்ணினேன். அனேக போகங்களனுபவித்துக்கொண் டிருக்கிறேனென்று பிராந்தியினாலாத்மாவுக்குப் போக்த்ருத்வந் தோற்றப்படுகின்றது. விசாரிக்கும்போது சர்வாத்மனாயில்லை.

ச-கை. எப்படியில்லையென்னில்,

உ-ம். அத்விதியனாயிருக்கிறபடியால்போக்த்ருத்வஞ் சொல்லக் கூடாது. ஆதலாலாத்மா அபோக்தாவென்பதிற்சந்தேக மில்லை. மேலும் உலகத்தில் தேவதத்தாதிகள்தங்களுக்கு வெதிருத்வமான அன்னாதிகள் புசிக்கிறதாய்க் கண் டோம். அந்தத்தேவதத்தாதிகள் தங்களுக்குத் தாங்க ளே போக்கியமாயிருப்பது எங்கேயுங்காணோம். போக் கியவஸ்துவில்லாமற் போக்த்ருத்வ மெங்கேயுங் காணாத படியினா லத்விதியனாகிய வாத்மாவுக்கு அபோக்த்ருத் வஞ்சித்தித்தது. இந்தப்படி யருளே திருமேனியாகிய பரமாசாரியர் முன்னிலையில் ஐயந்திரிபின்றி விசாரித்த றிந்து அத்விதியனாய் அபரிச்சின்னனாய் அசங்கனாப் அ கர்த்தாவாய் அபோக்தாவாகிய ஆத்மாவே நானென்றெ வன றிகிறானோ, அவனே கிருதகிருத்தியனாகிய சீவன்முத் தனாம் பரமுத்தனுமென்று சுருதிஸ்மிருதி இதிகாசபுரா ணாகமங்களிற் சொல்லப் படுகின்றது. இதிற் சம்சய மில்லை சித்தம்.

ஞானஞ்ஞானசொரூபநிரூபகம்

முற்றிற்று.

பதினோராவது,

சரீரத்திரயநிரூபகம்.

ச-கை. பிராணிகளுக்குச் சரீரத்திரயம் விசாரிப்பதில் பிரசித்தி யாவதேது? பிரயோசனமாவ தேதென்னில்,

உ-ம். ஸ்தூலசரீர மெல்லாருக்கும் பிரத்தியட்சமாய்த் தோற் றப்படுகின்றது. பின்னை ஒன்றுந்தோற்றப்படவில்லை. இ துவுமல்லாமல் வேதாந்தசாஸ்திரிகளுக் கன்னியரானவர் களெல்லாம் இந்திரியங்கள் தோற்றியபோதிலும் பிரத் தியட்சத்திற் காணுகிற சரீரமொன்று மாத்திரமேயன்றி வேறேயொரு சரீரமில்லையென்று சொல்லுகிறபடியினால், பிரசித்தியுண்டு. மேலும் இந்த விசாரத்தினாலேயே சம ஸ்தமான தேகாதிகளும் அந்தத் தேகசுபாவமாகிய விகா ரங்களும் காலத்திரயத்திலும் ஆத்மாவைஸ்மரிக்கவில்லை யென்று தோற்றப்படுகின்றது; இப்படி தோற்றப்படுகிற தே இந்த விசாரத்திற்குப் பலமாகிய பிரயோசனம்.

ச-கை. ஆனாலும் விசாரிப்போம். பிராணிகளுக் கெத்தனை சரீரமெனில்,

உ-ம். தூல சூட்சும காரணமென்று மூன்றுசரீரம்.

ச-கை. தூலத்துக்குச் சரீரலட்சணமிருக்கிறபடியாலிருக்கலாம். சூட்சுமகாரண சரீரங்களுக்குச் சரீரத்வ மெப்படி கூடுமென்னில்,

உ-ம். அதுகளுக்குஞ் சேரணித்துப்போகிற லட்சண மிருக்கிற படியாற் சரீரத்வமுண்டு.

ச-கை. அதுகளுக்குச்சேரணத்வமெங்கேகாணப்படுகிறதென்னில்

உ-ம். சுழுந்தியிலும்மூமூட்சுக்களிடத்திலுங்காணப்படுகின்றது.

ச-கை. இந்தச் சூட்சுமகாரண சரீரங்களிரண்டுந் தூலத்தைப் போற் பிரத்தியட்சமாய்க் காணுதபடியினால் இல்லையென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். அவ்விரண்டு சரீரமுஞ்சாஸ்திரங்களாலுண்டென்றுசொல்லுகிறபடியினாலும், பெரியோர்களால் அங்கீகரிக்கப் பட்டபடியினாலு மில்லையென்பது கூடாது.

ச-கை. ஒரு பிராணிக்குத் தூலசரீரமெத்தனை? சூட்சுமகாரண சரீரமெத்தனையென்னில்,

உ-ம். தூலசரீரமோவென்றால் அனந்தம்; சூட்சுமமும் காரண முமொவ்வொன்றேயாம்.

ச-கை இம்மூன்றுக்குஞ் சரீரத்வந் துல்யமாயிருக்கத் தூலசரீர மனந்தமாகவும், சூட்சுமகாரண சரீரமொவ்வொன்றாகவு மிருக்கிற தென்னவென்னில்,

உ-ம். சூட்சுமகாரண சரீரங்கள் கர்மஜன்னியமல்லாதபடியினலதுகளொவ்வொன்றாயிற்று.

ச-கை. அதுகளுக்குப்பிரகாராந்தரத்திலானாலுங் கர்மஜன்யத்வ மங்கீகரிக்கப்படுமேயென்னில்,

உ-ம். அப்படி கூடாது.

ச-கை. சூட்சுமகாரண சரீரங்களுக்குக் கர்மஜன்யத்வமங்கீகரிக் காதபடியினாற் சரீரத்வமேயில்லாமற்போகின்றது. போனாற் போகட்டுமென் றெண்ணுவோமானாற் பிராணிகளுக்கு மூன்று சரீரமென்று சொன்ன தெடுபட்டுப்போயிற்றேயெனில்,

உ-ம். அப்படியல்ல. சூட்சுமசரீரத்திற்குப் பிரகாராந்தரத்தினாலுற்பத்தி யங்கீகரித்தோமானாற் சீவனுக்கு அனாதித்வ மெடுபட்டுப்போகின்றது.

ச-கை. எதினுலெடுபட்டுப் போகின்றதென்னில்,

உ-ம். ஆத்மாவுக்குச் சீவத்வம் சூட்சுமசரீரமென்கிற வுபாதியினுலல்லவாவந்ததென்றுசொல்லுகிறுர்கள்? ஆகையினுல் சீவனுக்கு உபாதியாகிய சூட்சுமசரீரத்திற் குற்பத்திசொல்லுமிடத்துச்சீவனுக்குஅநாதித்வமெடுபடுகின்றது.

ச-கை. ஆனுல் அவ்வநாதித்வஞ் சித்திக்குநிமித்தம் உற்பத்தியங்கீகரிக்காம லிருப்போமேயென்னில்,

உ-ம். அங்ஙனமானுற் சுருதிகளுக்கு விரோதமும் சூட்சும சரீரத்திற்கு நித்யத்வமும் வருகின்றது. ஆத்மாவுக்கு அநித்யத்வமு மெடுபட்டுப்போகின்றது. ஆதலால் சுருதிகளுக்கர்த்தஞ் சித்திக்குநிமித்தமும் ஆத்மாவுக்கு அநித்யத்தஞ் சித்திக்குநிமித்தமும் சூட்சுமசரீரத்திற் குற்பத்தி யங்கீகரித்தோமானுல் சீவனுக்கநாதித்வ மெடுபட்டுப்போகின்றது. இதுவன்றியும் உலகத்திலெது ஜன்னியமாயிருக்கின்றதோ வதுகளெல்லாங் கன்மத்தினுலுற்பத்தியாச்சுதென்று கண்டோம். ஆகையால் சூட்சும சரீரத்துக்கு ஜன்னியத்வமங்கீகரிக்கிறபோது சூட்சுமசரீரங் கர்மஜன்னியமென்றே யங்கீகரிக்கவேண்டும். இல்லாவிட்டால் திருஷ்டாந்த விரோதம்வரும்.

ச-கை. வந்தால் வரட்டுமேயென்னில்,

உ-ம். அதுயுக்தமல்ல. இந்தவிரோதங்களைப் பரிகரிக்குநிமித்தம் சூட்சுமசரீரத்திற்குக் கர்மஜன்யத்வ மங்கீகரித்தோமானுற் கர்மஜன்னியமாகிய தூலசரீரங்களுக் கனேகத்வங்கண்டதுபோல, ஒருபிராணிக்குச் சூட்சுமசரீரமு மனேகத்வம் வரவேண்டுமென்று சங்கைவரும்.

ச-கை. வந்தால் வரட்டுமேயென்னில்,

உ-ம். அப்போது ஒவ்வொருபிராணிக்கு ஒவ்வொருசூட்சும சரீரமென்று சொன்ன தெடுபட்டுப்போகின்றது.

ச-கை. போனுற் போகட்டுமேயென்னில்,

உ-ம். பூர்வமொன்றென்றுசொல்லி இப்போ தனேக மென்று சொல்வதற்கும், பூர்வங்கர்மஜன்னிய மல்லவென்றுசொல்லி இப்போது கர்மஜன்னிய மென்பதற்கும் விரோதமாய்த் தோற்றப்படுகின்றது. இப்படி ஒருதோஷத்தைப்பரிகரிக்கப்போனுல் மற்றொருதோஷம் வருகின்றது.

ச-கை. ஆனால் இந்த விசாரத்தை விட்டுவிட்டுப்பின்னெதுவாகி லுஞ் சொல்லுவோமேயென்னில்,

உ-ம். பின்னையொன்றுஞ் சொல்லுவதற்கிடமில்லை. ஆனபடியி னால் இப்போது சூட்சுமசரீரங் கர்ம ஜன்னியமென்று சொன்னதற்கும், சீவனுக்கனாதித்வத்திற்கும் சூட்சுமச ரீரமொன்றென்றதற்கும், பூர்வம் சூட்சுமசரீரங் கர்மஜ ன்னியமல்லவென்றதற்கும் விரோதம்வராமற் பின்னுஞ் சொல்லுகிறோம். இப்போது காரணசரீரத்திற்கு ஜன் னியத்வஞ் சொல்லாமல் சரீரத்வலக்ஷணஞ் சொல்லுகின் றோம்.

ச-கை. அதேதெனன்னில்,

உ-ம். சூட்சுமசரீரத்திற்கு ஜன்னியத்வ மங்கீகரித்தல்லவா கா ரண சரீரத்வ மங்கீகரிக்கப்படவேண்டும்,

ச-கை. காரணசரீரத்திற்கு ஜன்னியத்வ மங்கீகரிக்காமலெப்படி சூட்சுமசரீரத்வஞ் சொல்லக்கூடுமென்னில்,

உ-ம். அதற்குஞ் சிரியதேயென்ற சரீரலக்ஷண மிருக்கின்றது. ஆதலாற் சரீரத்வஞ் சொல்லக்கூடும்.

ச-கை. அனாதியான வஸ்துவுக்கு நாசமுண்டாவென்னில்,

உ-ம். உண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். கடாதிப் பிராகபாவம் அனாதியாயிருந்தபோதிலும் அத ற்குக் கடாதியுற்பத்தியினால் நாசமெப்படியோ, பிரகிரு தி புருஷசையோகம் அனாதியா யிருந்தபோதிலு மந்தப் பிரகிருதிபுருஷாளுடைய விவேகத்தினால் அதற்கு நாச மெப்படியோ, அப்படிபோலவே அனாதி யஞ்ஞானமெ ன்ற காரணசரீரத்திற்குப் பிரம்மாத்மவயிக்க ஞானத்தி னால் நாசம்வரலாம். அதற்குஞ் சரீரத்வமங்கீகரிக்கிறது விருத்தமல்ல. இந்தப்படி சூட்சுமசரீரத்துக் குற்பத்தி யங்கீகரித்தோமானா லொருவிரோதமுமில்லை.

ச-கை. எப்படி யில்லையென்னில்,

உ-ம். சூட்சுமசரீரத்திற் குற்பத்தி யங்கீகரித்தால் அதற்குற்ப த்திசொல்லுகிற சுருதிகளுக்கும் விரோதமில்லை. சூட்சு மசரீரம் ஆத்மகாரியமாயிருப்பதினாலும் காரணமான வா த்மாவையன்றி வெதிருத்தமாயில்லாதபடியினாலும் ஆத் மாவுக்கும் அத்விதியத்திற்கும் ஆனியில்லை, சீவனுக்கு அனாதித்வபங்கமில்லை.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். பிரளயத்திலுஞ் சூட்சுமசரீரங் காரணாத்மகமாயிருக்கிற படியினாலும் உபாதிக்கேதுவாகிய ஜீவசம்ஸ்காரமுமிருக்கிறபடியினாலும் ஜீவனுக்கு அனாதித்வபங்கமில்லை.

ச-கை. இந்தப்படி சூட்சுமசரீரம் பிரளயத்திலிருந்தா லதற்குற்பத்தி சொல்லக்கூடாதேயென்னில்,

உ-ம். அப்படி சொல்வது யுக்தமல்ல.

ச-கை. உலகத்தில் மிருத்தாதிகளிடத்தில் இல்லாதகடத்துக்கே யுற்பத்திகண்டோம்; இருக்கிற மிருத்தாதிகளுக் குற்பத்திகாணோமேயென்னில்,

உ-ம். அப்படி சொல்லக்கூடாது.

ச-கை. ஏன் சொல்லக்கூடாதென்னில்,

உ-ம். இல்லாதவஸ்து அசத்து; அவ்வசத்துக்குற்பத்திசொன்னால் சசவிஷாணாதியும் பிறக்கவேண்டும். அங்ஙன மின்மையால் அசத்துக்குற்பத்தி சொல்லக்கூடாது.

ச-கை. பின்னை யெப்படியென்னில்,

உ-ம். இருக்கிறவஸ்துசத்து. அதற்கே யுற்பத்திசொல்ல வேண்டுமென்பது உலகத்திற் கண்டோம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். கடம்பண்ணவேண்டிப் பிரவர்த்திக்கிற புருஷன் மிருத்திகையெடுத்துவருகிறான். புடவை நெய்ய வேண்டினவன் நூலைக்கொண்டுவருகிறான். தயிர் வெண்ணெய் வேண்டுமென்றவன் பால்சம்பாதிக்கிறான், எண்ணெய்வேண்டினவன் எள்ளுசம்பாதிக்கிறான். இந்தமிருத்தாதிகளிடத்திற் கடாதிகளுண்டாகாமற்போனா லவனவன் அதுவதுகளைநியமமாயேன்சம்பாதிக்கிறான்? இல்லாமற் சம்பாதியான். சம்பாதிக்கிறபடியினால் இருக்கிறவஸ்துவுக்குற்பத்திசொல்லவேண்டும். இல்லாதவஸ்துக் குற்பத்திசொன்னா லிந்தக்காரியத்துக்கிதுவே காரணமென்கிற நியமமில்லையாகின்றது. அப்படியானால் நூலிற்கடமும் மண்ணிற் பிடவையும் தண்ணீரிற்றயிரும் வெண்ணெய்யும் மணலில் எண்ணெய்யு முண்டாகவேண்டும். அப்படியுண்டாகாதபடியினால் அது அதுகளுக்கு நியமிதமான காரணத்தினாலேயே காரியமுண்டாகிறது கண்டோம். ஆதலாலிருக்கிறவஸ்துவே பிறக்கிறதென்று சொல்லவேண்டு

ம். அந்தந்தக் காரியத்துக்குங் காரணமா யிருக்கிற
வஸ்துவிருக்கிறபடியினு லதுவுமிப்படியேபிறக்கிறதென்
று சொல்லக்கூடாது.

ச-கை. ஏன் சொல்லக்கூடாதென்னில்,

உ-ம் அந்தக் காரணங்களுக்கு உற்பத்தி பிரத்தியட்சமாய்க்
காணுதபடியினு லிந்தக்கடத்திற்கு உற்பத்திசொன்னது
போ லிதற்குக்காரணமாகிய மிருத்திவாதிகளுக்குச்சொ
ல்லப்படாது. இந்தக்காரணமான மிருத்வாதிகளுக்கோ
ரொருதிக்கி லுற்பத்திகண்டபோதிலும், பிரதிவியாதிக
ளுக்குச் சுருதியாதிகளினு லுற்பத்திகேட்டபோதிலும்
சர்வகாரணமாகிய வாத்மாவுக்குற்பத்தியுண்டென்பதற்
கு யாதொருபிரமாணமு மில்லாதபடியினுலும், அனவஸ்
தாதோஷம் வருகிறபடியினுலும் சர்வகாரணமான வாத்
மாவுக்குற்பத்தி சொல்லக்கூடாது. ஆனுலும் இருக்கிற
வஸ்துவுக்கே யுற்பத்திசொல்லுகிறது யுக்தி யுக்த மல்ல
வென்று சொல்லக்கூடாது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். இப்போதுசொன்ன யுத்தியால் அசத்துக்குற்பத்தி சொ
ல்லக்கூடாமற்போனதினுற் சத்துக்கே யுற்பத்திசொல்
லவேண்டும். சத்தென்று லிருக்கிறவஸ்துவே சத்து அ
தற்கேயுற்பத்தி.

ச-கை. அசத்துக்கேன் சொல்லப்படாதென்னில்,

உ-ம். பிரபஞ்சத்துக்குப் பூர்வந்தோற்றமின்றிய நாமரூபாத்ம
கம் காரணுத்மகமாய் பீஜாதிகளிடத்திருக்கிற விருட்சா
திகளும் நாமரூபமாய்த்தோற்றுகிறதுபோலப் பிரளயத்
திலுந் தோற்றுமலிருந்து நாமரூபாத்மகமாயிருக்கிற சூ
ட்சுமசரீரங்களுக்கு நாமரூபாத்மகமாய்த் தோற்றுகிற
தேயுற்பத்தி.

ச-கை. ஆனுற் காரணகாரியங்களுக்குப்பேதமெப்படியென்னில்,

உ-ம். அனபிவியக்த நாமரூபகமாயிருக்கிறதுகாரணம்; அபிவி
யக்த நாமரூபகமாயிருக்கிறதுகாரியம் இப்படியேகாரிய
காரணங்களுக்குப் பேதமுண்டு. காரியங்காரணுத்மகமா
யுண்டென்பதிற்காலத்திரயத்திலுஞ்சந்தேகமில்லை. இது
போ லுற்பத்திக்கும் அனபிவியக்த நாம ரூபாத்மகமா
யிருக்கிற காரணங்காரியமாய்த்தோற்றுகிறதற்குக் குலா
லாதிவியாபாரத்தை யபேட்சிக்கிறது யுக்தமே.

மகாமகோபாத்யாய, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை-20.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். அசத்தான காரியம் பிறக்கிறதென்னும் பட்சத்தில் குலாலாதி வியாபாரத்திற்கு அசத்து ஆசிரயமில்லாதபடியினாலும், அன்னியம் ஆசிரயமான வியாபாரத்தினால் அன்னியத்துக் குற்பத்திசொல்லும்போது அதிகப் பிரசங்கம் வருகிறபடியினாலும் குலாலாதி வியாபாரம் வியர்த்தமாகின்றது. அந்தக்குலாலாதி வியாபாரத்திற்குவியர்த்தஞ் சொல்லக்கூடாது. ஆனபடியினால் காரியங் காரணாத்மகமாயிருந்தபோதிலும் குலாலாதி வியாபாரத்தை யபேட்சிக்கிறது யுக்தமே. ஆனால் பூர்வஞ்சொன்ன யுக்திகளினால் காலத்திரயத்திலுங் காரியம் காரணாத்மகமாயிருக்கிறபடியால், பிரளயத்திலும் ஆத்மாவுக்குச் சீவத்துவத்தி னுபாதிபூதமாகிய சூட்சுமசரீரங் காரணாத்மகமாயிருக்கிறதினாலும், பிரளயத்திலும் ஆத்மாவுக்குச் சீவத்வம் சம்ஸ்காராத்மகமாயிருக்கின்றதினாலும் சீவனுக்கும் அநாதித்வ பங்கமில்லை. சூட்சும சரீரத்துக்கு நாமரூபாத்மகமாய்த் தோற்றுகிறதே யுற்பத்தியென்றங்கீகரிக்கிறபடியினாற் சுருதிகளுக்கும் விரோதமில்லை.

ச-கை. இந்தத்தோஷமிப்படி பரிகரித்தபோதிலும் உலகத்தில் ஜன்னியமான வஸ்துகளுக்குக் கர்ம ஜன்னியத்வமும் அனேகத்வமுங் கண்டோம். ஆதலால் சூட்சுமசரீரமுஞ் ஜன்னியமாகிறபோது அதற்குக் கர்ம ஜன்னியத்வமுமனேகத்வமும் வரவேண்டுமென்கிற தோஷம் பரிகரிக்கப் படவில்லையே யென்னில்,

உ-ம். அதுவும் பரிகரிக்கிறோம்.

ச-கை. சூட்சும சரீரத்திற்குக் கர்மஜன்யத்வமும் அனேகத்வமுமங்கீகரித்தாலல்லவா; அந்தத் தோஷங்கள் பரிகரிக்கவேண்டும்? அப்படி யங்கீகரித்தால் பூர்வஞ் சூட்சுமசரீரங் கர்மஜன்னிய மல்லவென்று மொன்றென்றுஞ் சொன்னதற்கு விரோதம் வருகிறதே யென்னில்,

உ-ம். அந்த விரோதங்களுமில்லாமல் பரிகரிக்கிறோம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஜன்னியமெல்லாங் கர்மஜன்னியமென்றே யங்கீகரிக்கவேண்டும். ஆதலால் அது சாமானியகர்மஜன்னியமென்றும், விசேஷ கர்மஜன்னியமென்று மிரண்டுவிதம். இப்படியி

ருப்பதினால் சூட்சுமசரீரத்திற்குச் சாமானிய கர்மஜன்னிய மங்கீகரித்தபடியினால் ஜன்னியமாத்திரத்திற்குக் கர்ம ஜன்யத்வம் நியமபங்கமில்லை. சூட்சும சரீரத்துக்குச் சாமானிய கர்மஜன்யத்வ மங்கீகரித்தபோதிலும் விசேஷ கர்ம ஜன்யத்வமங்கீகரிக்காதபடியினால் பூர்வஞ் சூட்சும சரீரங் கர்மஜன்யமல்லவென்று சொன்னதற்கும்விரோதமில்லை. மேலும் சாமானிய கர்மஜன்யமாகிய வஸ்துவுக்கு விவகாரத்தி லேகத்வமும், விசேஷகர்மஜன்யமாகிய வஸ்துவுக்கு அனேகத்வமும் உலகத்திற்கண்டோம். ஆதலால் சூட்சுமசரீரஞ் சாமானிய கர்மஜன்யமா யிருந்தபோதிலும் விசேஷகர்ம ஜன்யமல்லாதபடியினால், சூட்சுமசரீர மொன்றென்றுசொன்னதற்கும் விரோதமில்லை.

ச-கை. சாமானிய கர்மஜன்யமான வஸ்துவுக்கு ஏகத்வமும், விசேஷ கர்மஜன்யமானவஸ்துவுக்கு அனேகத்வமுமெங்கேயாகிலுங் கண்டதுண்டோ வென்னில்,

உ-ம். உலகத்திற் பிருதிவியாதிகளிடத்திற் கண்டோம்.

ச-கை. பிருதிவியாதிகளுக்குக் கர்மஜன்யத்துவங் காணோமேயெப்படி சொல்லுகிறதென்னில்,

உ-ம். ஜகத்தெல்லாஞ் ஜன்யமானபடியாலும் சீவர்களுக்குப் போக்கியமானபடியினாலுஞ் ஜகத்து சாமானிய கர்மஜன்யமென்றேசொல்லவேண்டும்.

ச-கை. சீவர்களுக்குப் போக்கியமானால் ஜகத்து கர்மஜன்யமாகவேண்டுமோவென்னில்,

உ-ம். ஆம். கர்மங்களுக்கெல்லாஞ் சுகதுக்கம் பலமாகையினால், அச்சுகதுக்கங்களனுகூலப்பிரதிகூலிய வஸ்துக்களையவலம்பித்துக்கொண்டு வருகின்றது. அதுகளிற்சிலபதார்த்தஞ் சிலருக்கு அனுகூலமாயிருந்து சுகமாகவும், சிலருக்குப் பிரதிகூலமாயிருந்து துக்கமாகவு மிருக்கிறபடியினாலும், சீவர்களுடைய கர்மங்கள் தங்களுக்குப் பலமாகிய சுக துக்கங்களுக்குச் சாதனங்களாகிய வாகாசாதிகளுக்குற்பத்திகளைச் சம்பாதித்துக்கொண்டே சீவர்களுக்குச் சுகதுக்கங்களைக் கொடுக்கிறபடியினாலும் ஜகத்தெல்லாங் கர்மஜன்யமென்றே சொல்லவேண்டும்.

ச-கை. திதிகாலத்திலல்லவா சீவர்களையு மவர்கள் கர்மங்களையுங் காணுகிறோம். பிரளயத்திற் சீவர்களையும் அவர்கள் கர்

மங்களையும் காணோமே. இப்படியிருக்கச் சீவர்களது கன்மத்தினு லாகாசாதி ஜகத்து பிறக்குமென் றெப்படி சொல்லலாமென்னில்,

உ-ம். பிரளயத்திலுஞ் சீவர்களெல்லாந் தங்கள் தங்களுபாதிகளுடன்கூடச் சுழுத்தியைப்போற் சம்ஸ்காராத்மகமாயிருக்கிறார்கள். அவர்களது கன்மங்களுஞ் சம்ஸ்காராத்மகமாயிருக்கின்றது. அப்படிப்பட்ட கர்மத்தினு லாகாசாதி ஜகத்து பிறக்குமென்பதுகூடும். அங்ஙனமங்கீகரிக்காவிட்டால், பூர்வகற்பத்திற் சீவர்களாற் செய்யப்பட்ட கன்மத்துக்கும், இந்தக்கற்பத்திற் பலமில்லாமற்போகவேண்டும். பூர்வகற்பத்திற் செய்யாதகன்மத்திற் கிந்தக் கற்பத்திற் பலமாகவேண்டும். ஆனல் சுருதியாதிகளுக்கு வியர்த்தமும்வரும். அல்லாமலும் ஒரொரு காரணமுமின்றி ஜகத்துற்பிக்குமென்று சொல்லுமிடத்து, முத்திபுருஷாளும் உற்பத்தியாகவேண்டும். மேலும் ஜகத்தில் மனுஷர் தேவர் திரியக்காதிகள் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களென்கிற விவஸ்தைகளில்லாமற் போகவேண்டும். இந்தத்தோஷங்கள் வந்தாலும் வரட்டுமென்கிற துசிதமல்ல. ஆதலாற் பிரளயத்திலுஞ் சம்ஸ்காராத்மகமாயிருக்கிற சீவர்களது கர்மத்தினுலேயே ஆகாசாதிஜகத்து பிறக்குமென்பதிற் சந்தேகமில்லை. இப்படியாகாசாதிகள் கர்மத்தினுற்பிறந்தபோதிலு முத்திபரியந்தமுமொன்றாகவேயிருக்கின்றது. அன்றியும் பிரளயத்தில் லயித்திருந்து சிருஷ்டியில் ஆகாசமாகாசமாகவும், வாய்வுவாய்வாகவும், தேய்வு தேய்வாகவும், அப்பு அப்புவாகவும், பிருதிவி பிருதிவியாகவும் பிறக்கிறது. அதுபோலச் சூட்சுமசரீரம் பிரளயத்தில் லயித்திருந்தபோதிலு மந்தந்தச் சீவர்களது கர்மத்தினுற் பூர்வகற்பத்தி லிருக்கிறதுபோற் பிரதிகற்பத்திலும் பிறக்கின்றது இப்படி பிறந்தபோதிலுஞ் சுவகத விகாரமாயிருந்தபோதிலும் சூட்சுமசரீரம் ஒவ்வொரு பிராணிக்கு முத்திபரியந்தமு மொன்றென்பதிற் சந்தேகமில்லை.

ச-ங்கை. இப்படிசொன்னல் முத்திக்குப்பிறகு சூட்சுமசரீரங்களனேகமா யிருக்குமென்று தோற்றுகின்றதே யென்னில்,

உ-ம். முத்திக்குப் பிறகு சூட்சுமசரீரம் இல்லவேயில்லை. ஆத்லாலந்தச் சங்கைக் கவகாசமில்லை. இந்தப்படி சூட்சும சரீரம் ஆகாசாதிகளைப்போல் சாமானிய கர்மஜன்னியத்தினுற் பிறந்திருக்கிறபடியினு லொவ்வொருபிராணிகளுக் கொவ்வொரு சரீரமென்று சொன்னது யுக்தமே.

ச-கை. இப்படிசொல்லுகிறது விரோதமாகத் தோற்றுகின்றதே யென்னில்,

உ-ம். அதில் விரோதமேயில்லை.

ச-கை. ஆகாசாதிகள் சர்வப் பிராணிகளுடைய கர்மத்தினுற்பிறந்ததாகையால், அவ்வாகாசாதிகளுக்குச் சாமானிய கர்மஜன்யத்வமும், பிரளயபரியந்த மொன்ருயிருக்கின்றதும், பிரதிகற்பத்திலு மப்படியே பிறக்கிறதும் யுக்தமே. அந்தந்தப் பிராணிகளுடைய சூட்சுமசரீரம் சமஸ்தபிராணிகளது கர்மத்தினுற் பிறந்ததல்லவே. ஆகையால் அதற்குச் சாமானிய கர்மஜன்னியத்வமும், ஒவ்வொருபிராணிகளுக் கொவ்வொன்றென்பதும் பிரதிகற்பத்தி லப்படியப்படி பிறக்குமென்பது மெப்படி கூடுமென்னில்,

உ-ம். ஆகாசாதிகளைப்போலந்தப் பிராணிகளுடைய சூட்சும சரீரங்கள் சமஸ்தபிராணிகளுடைய கர்மத்தினுற் பிறக்காமற்போனுலும் அந்தந்தப் பிராணிகளுக்குச் சிருஷ்டிமுதற் பிரளயபரியந்தமும் தூலசரீரத்துவாரா சுகதுக்கங்களைக் கொடுக்கிற கன்மங்களினுலேயே அந்தந்தப் பிராணிகளது சூட்சுமசரீரங்க ளப்படியப்படியே பிறக்கின்றது. ஆதலாலந்தச் சூட்சுமசரீரத்திற்குச் சாமானிய கர்ம ஜன்னியத்வமும்; ஒவ்வொரு பிராணிக் கொவ்வொரு சூட்சும சரீரமென்பதும், பிரதிகற்பத்தி லப்படி யப்படியே பிறக்குமென்பதும், முத்திபரியந்தம் நித்தியமென்பதுங்கூடும்.

ச-கை. ஆனுல் வீனமானவஸ்து கர்மத்தை யபேட்சித்துப் பிறக்கு மென்பதற்கும், சாமானிய கர்மத்தினுற் பிறந்தவஸ்து ஒன்ருயிருக்குமென்பதற்கும், விசேஷ கன்மத்தினுற் பிறந்தவஸ்து நானுருபமா யநேகமா யிருக்குமென்பதற்குந் திருஷ்டாந்தமுண்டோவென்னில்,

உ-ம். உண்டு. காஷ்டபாஷாணுதிகளிடத்தில் வீனமாயிருக்கிற அக்கினிக்கு மர்த்தனுதிரூபமான கர்மத்தினுலெப்படியுற்

பத்தியோ, அப்படியே காரணரூபமான சூட்சுமசரீரத்திற்குங் காரியகாரணமாகத் தோற்றுகிற கர்மத்தினாலேயேயுற்பத்தி சொல்லப்பட்டது. இதனாற் காரியம் அசத்தென்பது கூடாது மேலுங் குலாலனால் நானாவித பாண்டங்கள் பண்ணவேண்டுமென்று சம்பாதிக்கப்பட்டமண்மொத்தையொன்றே. அது அனேக கர்மத்தினாற் பண்ணப்பட்டாலும் அக்கருமங்களெல்லாம் அந்தமிருத்து பிண்டத்தினாற் பிறந்த வனேகம் பாண்டங்களுக்கெல்லாஞ் சமானமாயிருக்கிறபடியினால், அம் மண்மொத்தை சாமானிய கர்மமானதால் அந்தமிருத்துபிண்டம் ஒன்றேயாகும். மேலும் அம்மிருத்து பிண்டத்தினாற் பண்ணப்பட்ட பாண்டங்களில் ஒருபாண்டம் பண்ணப்பட்ட கர்மத்தினால் மற்றொருபாண்டம் பண்ணப்படவில்லை. ஆகையால் அந்தப்பாண்டங்களெல்லாம் விசேஷ கர்மஜன்னியமே. அந்தப் பாண்டங்கள் நானாரூபமாகவும் அனேகமாகவு மிருக்குமென்பதும் சர்வானுபவசித்தமே. இந்தப்படி சூட்சுமசரீரஞ் சாமானிய கர்மஜன்னியமானபடியினா லொவ்வொருபிராணிக் கொவ்வொரு சரீரமென்பதும், தூலசரீரம் விசேஷகர்மஜன்னியமானபடியினாலொவ்வொரு பிராணிக் கனந்தமென்பதுங்கூடும்.

சு-கை. இன்னம் இதற்கு விசேஷமான திருஷ்டாந்தமுண்டோவென்னில்,

உ-ம். உண்டு. உலகத்தில் ஒருதேவதத்தனுக்குக் கர்மவசத்தினால் நானாவித வஸ்திரங்கள் வருகின்றது. அதுகளொன்றுபோ லொன்றிருக்கவில்லை யப்படியேவிசேஷகன்மத்தினா லெப்படியெப்படி வருகின்றதோ அதுபோலத் தூலசரீரங்களு மொவ்வொரு பிராணிக்குவிசித்திரமாய் அனந்தமாகவும் வருகின்றதால் அந்தத் தூலசரீரங்களும் விசேஷகர்ம ஜன்னியமென் றறியத்தக்கது. அந்தத் தேவதத்தனுக்கு அந்தந்த விசேஷகர்மத்தினால் வரப்பட்ட வஸ்திரங்கள்வந்து அவ்வஸ்திரங்களால் வருகிற சுகதுக்கங்களுக்குச் சாதனபூதமாகிய ஸ்தூலசரீரமு மொன்றாயிருக்கிறப்டியால், அவ்வஸ்திரங்களை யபேட்சித்து ஸ்தூல சரீரமெப்படி சாமானிய கர்மஜன்னியமாச்சுதோ அப்படியே சூட்சுமசரீரமு மொவ்வொரு பிராணிக்கு

மொவ்வொன்று யிருக்கிறபடியினால், அதுவும் சாமானிய கர்மஜன்னியமென்றே யறியவேண்டும்.

ச-கை. இதனாலென்ன சித்தித்ததென்னில்,

உ-ம். சூட்சுமசரீரத்திற்கே தூலசரீரத்தைத்தரிக்கிறதுங் களைகிறதுமென்று சித்தித்தது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் தூலசரீரங்களுக்கே வஸ்திரங்களைக் கிரகிக்கிறதும் களைகிறதும் பிரத்தியட்ச மாய்க்கண்டது போலச் சூட்சுமசரீரத்திற்கும் தூலசரீரங்களுடைய பரிக்கிரகமும் தியாகமுமென்று அறியத்தக்கது. இதனாற் சூட்சுமசரீரத்திற்குத் தூலசரீரத்தைத் தரிக்கிறதே ஜனனமென்றும், அத்துடன்கூடி யினிமேற் சம்பந்தமின்றி விட்டுவிடுகிறதே மரணமென்றும் பிரசித்தியாயிற்று. ஆதலாற் சூட்சுமசரீரத்திற்கே பிரத்தியட்சத்திற் ஜனன மரணங்க ளில்லையென்று தோற்றுகிறபடியால், ஆத்மாவுக்கும் ஜனனமரணாதிகளுக்கும் பிரசித்தியே யில்லையென்றறியத்தக்கது.

ச-கை. இப்படி சொல்லுமிடத்தில் இந்தச் சூட்சும சரீரத்திற்குத் தூலசரீர மனந்தமென்று தோற்றப்படுகின்றது. தோற்றினாற் குற்றமென்று சொல்லுவீராகில், பூர்வம் பிராணிகளுக்குத் தூலசரீர மனந்தமென்றுசொல்லி, இப்போது சூட்சுமசரீரத்துக்குத் தூலசரீரமனந்தமென்று சொன்னால், முன்சொன்னதற்கு மிப்போதுசொல்வதற்கும் விருத்தமல்லவா? ஆகையாலிந்தச் சூட்சுமசரீரமே பிராணிசப்தத்திற் கர்த்தமென்று சொல்லலாமே யென்னில்,

உ-ம். அப்படி சொல்லக்கூடாது.

ச-கை. ஏன் சொல்லக்கூடாதென்னில்,

உ-ம். பூர்வம் பிராணிகளுக்குச் சூட்சும சரீரமொன்றென்று சொல்லி, இப்போது சூட்சுமசரீரமே பிராணிசப்தத்திற்கர்த்தமென் றெப்படிசொல்லலாம்.

ச-கை. ஆனாலிவ்விரண்டு விரோதமுந்தோற் றுகின்றதேயெனில்,

உ-ம். விரோதம் வராமற் சொல்லுகிறோம். பிராணி சப்தத்திற்கு ஆத்மாவேயர்த்தம். அவ்வாத்மாவுக்கு காரணசரீரமென்று பேருண்டாகிய வஞ்ஞானத்தினால்வந்த சூட்சும

சரீர வத்தியாசத்துவாரா அனந்தமான தூலசரீரங்கள் வருகிறதும் போகிறதுமாகவும் அந்தத்தூலசரீர சுபாவமாகிய ஜனனமரணங்கள் பிரசித்தமானதுபோலவுந்தோற்றப்படுகின்றது.

ச-கை. அஃதெப்படி தோற்றப்படுகிறதென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் தூலசரீரத்தினால் வஸ்திரங்கிரகிக்கிறதும், விடுகிறதும் பிரத்தியட்சமாய்க் கண்டபோதிலும், அந்தஸ்தூலசரீர வெதிருத்தமாகியவாத்மா அந்தத்தூல சரீரத்தின்வழியே வஸ்திரக்கிரணத் தியாகாதிகளைப்படி தோற்றுகிறதோ; அப்படியே யஞ்ஞானத்தினால்வரப்பட்ட சூட்சுமசரீரத்தின்வழியே ஆத்மாவுக்கு அனந்தமான தூலசரீரங்கள் வருகிறதுபோலும் போகிறதுபோலும் மோகத்தினால் தோற்றப்படுகின்றது. விசாரிக்குமிடத்து ஆத்மாவுக்குப் பிரசித்தியில்லாமல் தூலசரீரத்துக்கே பிரத்தியட்சமாய்க் காணப்படுகிறபடியால், சூட்சுமசரீரத்திற்குத் தூலசரீரத்துடனேகூட அத்தியாசம் வினவாய் ஜனனமரணங்களில்லை. சூட்சுமசரீரத்திற்கே ஜனனமரணமில்லாமற் போனபடியாலாத்மாவுக்குமோகமாத்திரமல்லாமற் ஜனனமரணங்களில்லை யென்பதிற் சந்தேகமில்லை. இந்தப்படி பிராணிகளுக்குத் தூலசரீரமனந்தமென்றதும்; சூட்சுமசரீரமும் காரணசரீரமும் ஒன்றென்று சொன்னதும் யுக்தமே.

ச-கை. இதனு லென்ன சித்தித்ததென்னில்,

உ-ம். சரீரத்திரயமும் பிராணிசப்தத்தினாற் சொல்லப்பட்டவாத்மா வல்லவென்பது சித்தித்தது.

ச-கை. அஃதெப்படி சித்தித்ததென்னில்,

உ-ம். உலகத்திலொருவன் மற்றொருவனைப்பார்த்து உனக்கு ருத்திராட்சத்தாழ்வட மெத்தனையென்றால் மூன்றென்கிறான்; பூணநூ லெத்தனையென்றால் மூன்றேயென்கிறான்; தோவித்தி யெத்தனையென்று லதுவுமூன்றேயென்கிறான். இப்படியே பிராணிகளுக்கெத்தனை சரீரமென்று விசாரிக்குமிடத்துமூன்றுசரீரமென்றேதோற்றுகின்றது.

ச-கை. இப்படி தோற்றுகிறதினு லென்னசித்தித்ததென்னில்,

உ-ம். திஷ்டாந்தத்தில் அந்த உருத்திராட்சத் தாழ்வடமுதலானவிதங்களத்தனையுந் தரித்துக்கொண்டிருக்கிறவர்களே

ப்படியதுகளல்லவோ, அந்தருத்திராட்சாதி சுபாவமான விகாரங்கள் அதைத் தரித்துக்கொண்டவர்களையெப்படி பரிசிக்கவில்லையோ, அப்படியே தாஷ்டாந்தத்திலும் தூல சூட்சும காரண சரீரங்கள் பிராணி சப்தத்தினற்சொல்லப்பட்ட வாத்மாவல்லவென்றும் சரீரத்திரய சுபாவமான விகாரங்கள் அந்தப் பிராணி சப்தவாச்சியனாகிய வாத்மாவைப் பரிசிக்கவில்லையென்றுஞ் சித்தித்தது. உலகத்தில் அந்தத் தேவதத்தாதிகளுக்குக் கிரகியென்றும், க்ஷேத்திரனென்றும் புத்திரியென்றும், தனியென்றும், குண்டலியென்றும் விவகாரங்கள்கண்டோம். அதுபோல ஆத்மாவுக்குஞ் சரீரியென்றுந் தேகியென்றும்பிராணியென்றுஞ் சொல்லப்பட்ட விவகாரமும் லோகத்திலும் வேதங்களிலுந் தோற்றப்படுகின்றது. அப்படி தோற்றப்பட்ட தேவதத்தாதிக ளந்தக்கிரகாதிக ளெப்படியல்லவோ, அதுகளின் சுபாவமான விவகாரங்களவர்களையெப்படி பரிசிக்கவில்லையோ, அப்படிபோல் தேகி சரீரி பிராணியென்கிற வுபாதியினல் தோற்றுகிற வாத்மா அந்தத் தேகாதிகளல்லவென்றும், அந்தத் தேகாதி சுபாவ விவகாரங்களும் ஆத்மாவைக் காலத்திரயத்திலும் பரிசிக்கவில்லையென்றுந் தோற்றப்படுகின்றது.

ச-ஙை. இந்தப்படி சரீரத்திரயமு மாத்மா வல்லாததாய்சரீரத்திரய சுபாவமான விகாரங்க ளாத்மாவுக்கில்லாததா யிருந்தாலும் சாமானியமாய்த் தோற்றப்படுகிறபடியினலும் விசேஷமாய் தூலசரீரம்போல் சூட்சுமகாரணசரீரந்தோற்றப்படாமையினலும் நன்றாய்ப் பலபலவிதமாக விசாரித்தபோதிலும் இந்தச்சரீரங்களாத்மாவல்லவென்றுதோற்றுகிறது கடினமா யிருக்கிறபடியினலும் சரீரமூன்றே. இந்தச்சரீரங்க ளாத்மாவல்ல; இந்தச்சரீரத்திரய சுபாவமான விகாரங்க ளாத்மாவைப்பரிசிக்கவில்லையென்றுதிடமாகத் தோற்றும்படி விசேஷயுத்தியுண்டாவென்னில்,

உ-ம். உண்டு. தூலசரீரஞ் சமஸ்த பிராணிகளுக்கும் பிரத்தியட்சமாகையின லிந்தத் தூலசரீரமுண்டோ, வில்லையோ வென்னுமிடத்தில் யாருக்குஞ் சம்சயமில்லை. சாருவாக பாமராளுங் கன்னியரானபேர்கள் இந்தத்தூலசரீர மாத்மாவல்லவென்னுமிடத்தில் சந்தேகமில்லை. அந்தச் சாரு

வாக பாமராளுக்கு இந்தத் தூலசரீரமேயாத்மாவென்று சொல்லுகிறது உசிதமல்ல.

ச-கை. அது எப்படி யுசிதமல்லவென்னில்,

உ-ம். சூட்சுமசரீரத்தி லத்தியாசத்தினால் சீவரூபனானவாத்மா சூட்சும சரீரத்துவாரா தூலசரீரவத்தியாசத்தினால்வந்த புத்திராதி யபேட்சையினால் பிதுராதிசப்தஞ் சொல்லப் படுகிறான். இப்படி பிதுராதி சப்தத்தினாற்சொல்லப்பட் டவன்போற் றோற்றுகிற வாத்மா தூலசரீரத்துக் கன்னி யனே. அந்தப் பிதுராதி சப்தத்தினலிந்தத் தூலசரீரஞ் சொல்லப்பட்டதானால் அந்தப் பிதுராதிகள் செத்தபிற கும் அந்தப்பிதுராதி சப்தார்த்தமாய் சாருவாக பாமரா ளுக்குத் தூலசரீர மாத்மாவென் றங்கீகரிக்கப்பட்டால் தூலசரீர மிருக்கவேண்டும். அவர்கள்செத்துப்போனார்க ளென்று சொல்லாதிருக்கவேண்டும். அங்ஙன மின்மை யால் இந்தத் தூலசரீர வெதிருத்தனே யாத்மாவென்று சாருவாக பாமராளுக்கு மங்கீகரிக்கவே வேண்டும். இது வல்லாமற் பின்னும் யுக்தி யாந்தரத்தினாலும் தூலசரீர வெதிருத்தனே யாத்மாவென்று தோற்றப்படுகின்றது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். பிதுராதிசப்தங்களுக்கர்த்தம்போல் தோற்றப்பட்டதூல சரீரஞ் செத்துக்கிடக்கும்போது அதைத்தழுவி யோல மிட்டழுகிற புத்திராதிகள், அப்பா எங்களைஅவாந்தரத் தில் விட்டுவிட்டு கடன்கொடுத்தவிடமும், வாங்கினவிட முஞ் சொல்லாமல், எங்கள்வாயில் மண்போட்டுவிட்டுப் போகலாமா ஆதெய்வமேயென்று கதறுகிறார்கள். அல் லாமலும் பந்துஜனங்கள், சினேகர்கள், அறிந்தவர்கள் வந்து, ஐயோ இப்படியேயுன்தாயார்முதலானபேர்களெ ல்லா மிறந்துபோனார்க ளல்லவா? உங்கள் சவரட்சணைக் கு ஒருவருமில்லாமற் போய்விட்டார்களேயென்று துக் கம் விஞவினால், அவர்களைக்கண்டு, கூகாவென் றலறி வா யிலடித்துக்கொண்டு, இப்படியே எங்களை யனாதரவாய் விட்டுவிட்டு எல்லாரும் போய்விட்டார்க ளினிநாங்களெ ப்படி பிழைக்கப்போகிறோமென்று பூமியில்விழுந்தழுகி றார்கள். பின்னும் வேறொருவன்வந்து அவன்மனைவியை அம்மா! உன்புருஷனிறந்துபோய்விட்டாராவென்றுதுக்

கம் விளைவினால், ஆ தெய்வமே! கெட்டேனென்று தலையில் மோதிக்கொண்டு தரையில் விழுந்தழுகிறாள். பின்னும் ஒருவன்வந்து தகப்பனை ஐயா! உன்பிள்ளை போய்விட்டானெவெனத் துக்கம் விளைவினால், ஐயா, என்வாயில் மண்ணைப்போட்டு இறந்துபோய்விட்டான். அடா மகனே, என்னையும் உன்கூட அழைத்துக்கொண்டுபோடா நீ பிறந்தநாள்முதற் றுக்கமேயனுபவித்தேன், உன்னுடன் ஏழுபிள்ளைகளைக் கொன்றேன், இன்னமுந்தெய்வமெங்களையே சோதிக்கின்றது. நான் இந்தத் துக்கத்தைச் சகிக்கமாட்டேன், நானும் என்வீட்டிலுள்ளவர்களுமாய் விஷந்தைத்தின்று எல்லாரு மொருமுகூர்த்தத்தி லிறந்துபோகிறோமென் றழுகிறான்.

ஒருவித்துவானை யுன்பெண்சாதியிறந்துபோனாளாவென்று ஒருவன் துக்கம்விளைவவந்தால், அப்போது அவன்கற்றிருக்கிற பலகல்விசாமர்த்திய யுத்திகளையெல்லா மறந்து, துக்காக்கிராந்தனாய் ஐயா, என்பிராணனானவள், என்வாயில் மண்போட்டுவிட்டுப்போனாள். அவள் ஸ்ரீதேவியைப்பழித்த அழகும், பூதேவியைப்பழித்த பொறுமையும், அருந்ததியைப்பழித்த கற்புமுடையவள். அவளைப்பிரிந்து நானெப்படியிருப்பேன்? ஆ என் பிராணநாயகியே! ஒருவார்த்தை சொல்லடி எனக்குத் நிக்காரடி, நானுன்கூடவருகிறேன், என்னையு மழைத்துக்கொண்டுபோடி, எனக்குங் கஞ்சிதண்ணீர்வார்த்து இனி யுன்னைப்போலுபசரிக்கிறவராரடி; தேவபூசை, அவுபாசனம்பண்ணவும் பந்துக்கள்வந்தாலுபசாரம்பண்ணவும் உரித்தானவர்களொருவரில்லையே. ஆயிரம்பேர்வந்தாலும் நீயாவார்களாவென்றிப்படி பலபலவிதமாகப் பிரலாபித்தழுகிறான்.

ச-ஙை. இப்படியழுகிறவிதத்தினு லென்னதோற்றுகிறதெனில்,

உ-ம். ஊரிலிருந்தவந்த வுன்மாமன் முதலானவர்க ளுருக்குப் போய்விட்டார்களாவென்று ஒருவனைக்கேட்டால் அவர்களெங்களுடன் சொல்லாமற் கட்டியிருந்த தோவித்திபுடைவைகளையும் விட்டுவிட்டுச் செவ்வையாய்ப் போய்விட்டார்களென்று சொல்வதுபோலிருக்கின்றது. இந்தத்திருஷ்டாந்தத்தில் மாமன்முதலியோர்கள் கட்டியிருந்த தோவித்தி புடவைகளுடன் தோற்றப்பட்டாலும் அ

துகளை விட்டுப்போனவர்களே மாமன் முதலானவர்கள் சப்தத்திற் கர்த்தமானதுபோல் இந்தத் தூலசரீரத்தை விட்டுவிட்டுக் கர்மானுசாரத்தினால் லோகாந்தரத்திற்குப் போனவர்களே பிதுராதி சப்தத்திற் கர்த்தமென்றும், தூலசரீரம் பிதுராதி சப்தத்திற் கர்த்தமல்லவென்றும், தோற்றப்படுகின்றது. ஆதலாலிந்தத் தூலசரீரத்திலிருந்து வெளிப்பட்டுப் போனவர்களே பிதுராதிசப்தத்துக் கர்த்தமேயன்றி வெளிப்படா முன்னுமிங்கிருந்த சரீரம் பிதுராதிசப்தத்துங் கர்த்தமென்றுஞ்சொல்லக்கூடாது.

ச-கை. அப்படி சொல்லலாமேயென்னில்,

உ-ம். ஆனால் தோவித்தி புடவைகளை விட்டுப்போன மாமன் முதலியோர்கள் அதுகளை விட்டுப்போகாமுன்னும் தோவித்தி புடவைகளே மாமன்முதலியோராகவேண்டும் பின்னும் ஒருவீட்டிலிருந்து வெளிப்பட்டுப்போன புருஷன் அந்தக்கிரகத்திலிருந்து வெளிப்படாமுன்னும் அந்தக்கிரகமேயாகவேண்டும்; அப்படி சொல்லக்கூடாமையினால் தோவித்திபுடவைகளுடன் கூடிக்கொண்டிருந்த மாமன்முதலியோர் கூடியபோதும் விட்டபோதும் அந்தத் தோவித்தி புடவைகளெப்படி யவர்களல்லவோ, கிரகத்திலிருந்து வெளிப்பட்டபுருஷன்கிரகத்திலிருந்தபோதும் நீங்கினபோதும் அவன் அந்தக்கிரகசப்தமெப்படியல்லவோ, அப்படியே பிதுராதிசப்தங்களுங் கர்த்தமாகிய பிதுராதிகள் தூலசரீரத்திருந்தபோதும் விட்டுப்போன போதும் அந்தப் பிதுராதி சப்தத்திற்கு ஸ்தூலசரீரத்தை விட்டுப்போனவர்களே யர்த்தமாகுமன்றித் தூலசரீரமர்த்தமல்ல. பின்னும் எந்தப்பிதுராதி சரீரமானாலென்ன; அதன்மரணத்திற்குமுன் பிதுராதிசப்தத்துக் கர்த்தமென் றெண்ணியிருந்த இந்தச்சரீரத்தைக் குறித்து ஒருவர் உதாசினஞ் சொன்னபோதிலும் அந்தச் சரீரத்திற் பிராணவஸ்தை செய்தபோதிலு மனேகநரகமுண்டாகுமென்று சாஸ்திரங்களிற் சொல்லக்கேட்டும் மரணமானபிறகு சரீரத்தைக் கொளுத்திவிடுகிறார்கள்.

அந்தப் பிதுராதி சப்தத்துக்கிந்தத் தூலசரீரமே யர்த்தமானால் இதைக்கொளுத்திய புத்திராதிகளுக்கும் பிதுராதிகளுக்கும் பிதுர்ஹத்திபாதி தோஷம்வரவேண்டும். அவ்

னம் வந்தால் அப்புத்திராதிகளுக் கனந்தங்கோடி நர கம் வரவேண்டும். அன்றியும் உலகத்திலவர்களை மாதுர் ஹத்திபிதுர்ஹத்தியுடையவர்களென்று எல்லாருந் தூஷிக்கவேண்டும். அப்படி யில்லாமையினாலும் பிதுராதி சரீரங்களைக் கொளுத்தினவர்களுக்கு நரகமென்று சாஸ்திரஞ் சொல்லாமையினாலும் தூலசரீரம் பிதுராதி சப்தங்களுக் கர்த்தமல்ல. மேலும் எந்தச் சரீரத்தைப் பிதுராதி சப்தத்துக் கர்த்தமாக வெண்ணிக்கொண்டு பூஜை நமஸ்கார வுபசாரங்கள் செய்து வந்தார்களோ, அந்தச் சம்பந்தமான சரீரத்தை மரணாந்தத்திற் றகித்துப் போடாவிட்டால், புத்திராதிகளுக்குப் பிரத்திவாயதோஷமுண்டென்று சாஸ்திரங்களிற் சொல்லுகின்றது.

புத்திராதிகளந்தத் தேகத்திற்குத்தகனாதிக் கிரியைகள்பண்ணினார்களானால் அதிலிருந்து வெளிப்பட்டு லோகாந்தரம்போன பிதுராதிகளுக்குப் பிரேதத்வ விமோசனரூபமான வதிகசயமும் நற்கதியுமுண்டு. அதைத் தகனாதி செய்த புத்திராதிகளுக்கும் பிரத்திவாயதோஷ மில்லையென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். பாளயத்திலிருந்த ராஜன் வெளிப்பட்டுப்போனால் அவனுக்கு நல்லபாளயம் வரவேண்டுமென்றும், மிகுந்தசெல்வம் வரவேண்டுமென்றுங் கோருவார்கள். அப்படிகோராதவர்களை அவ்வரசனுக்குப் பாளயம் வந்தவுடனெப்படி சிகிச்சைபண்ணுவானோ, அப்படியே செத்துகிடக்கிற பிதுர்க்கள் சரீரங்களைப் புத்திராதிகள் சம்ஸ்காரஞ் செய்தால் அப்பிதுராதிகளுக்க கதிகசயமும் நற்கதியுமுண்டு; அப்படிசெய்யாவிட்டால் புத்திராதிகளுக்குப் பிரத்திவாயதோஷமுண்டு. இன்னமும் உலகத்தில்செத்துக்கிடக்கும் பிதுராதிசரீரங்களைச் சம்ஸ்காராதிகள் பண்ணின புத்திராதிகளைப்பார்த்து, அப்பா, நீநல்லகதியுண்டுபண்ணினையென்றுகொண்டாடுகிறார்கள்; அப்படிசெய்யாதவர்களைத்தூஷிக்கிறார்கள். இதனாலும் பிதுராதிசப்தத்திற்குத் தூலசரீரத்திலிருந்து வெளிப்பட்டு லோகாந்தரம்போனவர்களே யர்த்தமெனத் தோற்றுகின்றது.

ச-கை. யுத்தியினாலிந்தப் பிதுராதி சப்தங்களுக்குத் தூலசரீர மர்த்தமல்லாமற் போனாலும் தூலசரீரத்தையே பிதுராதிகளென்றெண்ணி ஏன் பணிவிடை பண்ணுகிறார்களென்னில்,

உ-ம். இந்தத் தூலசரீரத்தினு ளிருக்கிறவர்களுக்குப் பிரீதியாகப் பணிவிடை பண்ணுகிறார்களன்றித் தூலசரீரப்பிரீதி நிமித்தம் பணிவிடை பண்ணவில்லை.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஒருபட்டணத்தில் ராஜனிருக்கும்போது அந்தராஜப்பிரியநிமித்தம் அவ்வாமனைமேற் கட்டு முதலிய வலங்காரங்களெப்படி செய்கிறார்களோ, அவ்வரமனை முதலானதின் பிரியநிமித்த மெப்படிசெய்யவில்லையோ, அப்படியே தூலசரீரத் திருக்கிறவர்கள் பிரியநிமித்தமல்லது தூலசரீர பிரியநிமித்தஞ் சிசுருஷை பண்ணவில்லை. மோகத்தினால் தூலசரீரப் பிதுராதி சப்தத்துங் கர்த்தம்போற் காணப்பட்டாலும் தூலசரீரத்தி லிருக்கிறவனே பிதுராதி சப்தத்துக் கர்த்தம்.

உலகத்தில் கிராமாந்தரம்போன பிதாமுதலியோர்களின் வஸ்திரத்தைத், திருடன் பறித்துக்கொண்டுபோனானென்று கேள்விப்பட்ட புத்திராதிகள் மறுவஸ்திர மனுப்புவதுபோல, இறந்துலோகாந்தரம்போன பிதுராதிகள்அம் மணத்துடன் போனார்களென்று சாஸ்திரஞ் சொல்லக் கேட்டு அவர்களைக் குறித்து இவ்விடத்தில் பிராமணர்களுக்கு வஸ்திரங் கொடுத்தால், அவர்களுக்குப்போய்சேருமென்று புத்திராதிகள் இப்போதும்பிராமணர்களுக்கு வஸ்திரங்கொடுத்து வருகிறார்கள். இதனாலும் இந்தத் தூலசரீரம் பிதுராதிசப்தத்துக்கர்த்தமல்லவென்று தோற்றுகின்றது.

மேலும் கழனியில் வேலைசெய்கிறவன் வெய்யிலிலடிபட்டுத் தாபத்தினால் வாதைப் படுகிறானென்று கேட்டுக் கிரகத்திலிருக்கின்றவர்க ளன்னந்தண்ணீ ரனுப்புவதுபோலச் செத்துலோகாந்தரம்போன பிதுராதிகளுக்குப் பசிதாக நிமித்தம் பிண்ட திலோதகங் கொடுக்கவேண்டுமென்று சாஸ்திரஞ் சொல்லக்கேட்டு, புத்திராதிகள் அவர்களைக் குறித்துப் பிண்டதிலோதகங்கொடுக்கிறார்கள். பின்னுங்

தேசாந்தரம் போகவேண்டுமென்று பரஸ்தானம்பண்ணி யிருக்கிறவர்களுக்கு கட்டுச்சாதங்கொடுத் தனுப்புவது போற் செத்து லோகாந்தரம்போன பிதுராதிகளுக்கு இ விடத்தில் சொர்க்கபாத்தியங்கொடுத்தா லவர்களுக்குத் திருப்தியாகுமென்று சாஸ்திரங்களிற் சொல்லுகிறபடி சொர்க்கபாத்தியங் கொடுக்கிறார்கள். மேலும் அடுத்த ஊருக்குப் போகவேண்டிச் செலவு பெற்றுக்கொண்டு போனவர்கள் ஆறுதாண்டிப்போக வசமின்றி யாற்றங் கரையிலிருப்பதாய்க்கேள்விப்பட்டு, வீட்டிலிருக்கிறவர் கள் கட்டுமரந் தெப்பங்கட்டிக்கொடுத்து அனுப்பிவைப் பதுபோல, செத்து லோகாந்தரம்போன பிதுராதிகளுக் குச் சொர்க்கப் பிராப்தியைக் குறித்து விகாதமானவை தரணிநதி யிருக்கிறதென்று சாஸ்திரஞ் சொல்லக்கேட் டு; அதையவர்கள் தாண்டிப்போகிறநிமித்தம் இவ்விடத் தில் புத்திராதிகள் வைதரணி கோதானங் கொடுக்கிறார் கள்.

மேலும் இறந்துபோன பிதுராதிகளைக்குறித்து அவர்களி றந்தநாள்முதல் வருஷாப்திகவரைக்கு மாதமாதம் மாசி யமும் புத்திராளிருக்கிறபரியந்தம் வருஷாந்தர திவசமு ம் மத்தியமத்தியத்தில் அட்டகாதி சிரார்த்தங்களும் பு ண்ணிய க்ஷேத்திரங்களிற் சிரார்த்தங்களுஞ் செய்கிறார் கள். இப்போது சொல்லிவந்த ஸ்தூலசரீரங்கள் பிதுரா தி சப்தத்துக்கர்த்தமல்ல. இதுகளிலிருந்து வெளிப்பட் டுலோகாந்தரம் போனவர்களே பிதுராதிசப்தத்துக்கர்த் தமென்று சந்தேகமின்றி யறியத்தக்கது.

ச-கை. இந்த யுக்திகளினால் தூலசரீரம் பிதுராதி சப்தத்துக்கர் த்த மாகாமற்போனாற்போகட்டும். இதனாற் சூட்சுமசரீர சித்தி உமக்கெதினாற் சித்தித்ததென்னில்,

உ-ம். தூலசரீரத்தை விட்டுப்போட்டு எது லோகாந்தம்போ கிறதோ, அதுவே சூட்சும சரீரமென்று நமக்குச் சித் தித்தது,

ச-கை. ஆனால் பிதுராதி சப்தத்துக்கிந்தச் சூட்சுமசரீரமே யர்த் தமென்று சொல்லலாமேயென்னில்,

உ-ம். பிதுராதி சப்தம் சேதனம்; சூட்சுமசரீரம் அசேதனம். இவ்வசேதனமான சூட்சுமசரீரம் பிதுராதி சப்தத்துக் கெப்படியர்த்தமாகும்.

ச-கை. அப்படியேன் சொல்லவேண்டுமென்னில்,

உ-ம். சேதனம் ஆத்மா. அவ்வாத்மா ஆகாசத்தைப்போல வியாபகமானதையா லதற்கு லோகாந்தர கமனுகமனங்கூடாது; நிரவயவனானபடியால், கர்மாதி சம்ஸ்காராதி யாசிரயத்வங்கூடாது. கர்மாதி சம்ஸ்காரத்துக் காசிரயமாயிருந்து ஒன்றை யங்கீகரிக்காமற்போனால் கிருதநாசா கிருதாப்பியாசமாதி தோஷம்வரும். ஆதலா லாத்மாவுக்குக் கர்மாதி சம்ஸ்காரத்துக் காசிரயமான சூட்சுமசரீரமே லோகாந்தரத்திற்குப் போகிறதும் வருகிறதுமென் றங்கீகரிக்கவேண்டும்.

ச-கை. ஆனால் சாகிறதும் பிறக்கிறதும் லோகாந்தரங்களுக்குப் போகிறதும் புண்ணியபாவங்கள் செய்கிறதுஞ் சேதனதர்மமா யெப்படி தோற்றுகிறதென்னில்,

உ-ம். வியாபகமான வாத்மாவுக்குச் சூட்சுமசரீரப் பிரதானவவயவமான அந்தக்கரண பிரதிபிம்பத்துவாரா சூட்சுமசரீரத்துடன் அத்தியாசம் வந்தபடியினால், அக்கினியுடன்கூடிய தாதாத்மியத்தினால் அயப்பிண்டம் எப்படி யக்கினிபோற் றோற்றுகின்றதோ, அப்படியே அந்தச் சூட்சுமசரீரமுஞ் சேதனம்போற் றோற்றுகின்றது. இந்தச் சூட்சுமசரீர தாதான்மியத்தினால் தூலசரீரமு மோகத்தினாற் சேதனம்போற் றோற்றுகின்றது. ஆதலால் ஜனனமரண முதலிய கர்மங்களும் தூலசூட்சும காரணசரீரங்களும் அந்தக்கரணத்தி லாத்மப் பிரதிபிம்பமும் அதிஷ்டான பூத சைதன்னியமுமாகிய இதுகளெல்லாங்கூடி மோகத்திற் பிதுராதிசப்தத்துக்குத் தூலசரீரமே யர்த்தமாகத் தோற்றுகின்றது. விசாரிக்குமிடத்தில் இதுகளெல்லாம் அதற்கு வாசகமான சப்தத்தினாற் சொல்லப்பட்டது.

ஆகையால் இந்தப்பிதுராதிசப்தத்துக்கு இதற்குளொன்றிலுமர்த்தமாய்த் தோற்றப்படவில்லை. ஜனனமரணங்களுமிந்தத் தூலசரீரத்திற்கே பிரத்தியட்சமாய்க்காணப்படுகிறபடியினாலும், கமனுகமனுதிக்கிரியாஆசிரயத்வம் பரிச்சின்னமாகியவஸ்துவுக்கேபிரத்தியட்சமாய்க் காணப்படுகிறபடியினாலும், புண்ணியபாவக் கிரியையாதிகளென்

கிற விகாராசிரயத்வமும் விகாரமாகியவஸ்துவுக்கே சித்தித்திருக்கிறபடியினாலும் நிரைஷ்டுவென்பதேசித்தியனாய் வியாபகனாய் சைதன்னியசொரூபனாகிய வாத்மாவுக்கு இப்படிசொன்ன தர்மங்களுள். ஒன்றாகிலுமில்லையென்று தோற்றுகின்றது. இப்படி சொச்சொரூபமாகிய வாத்மாவுக்கு மோகத்தினால்வந்த சீவத்வமும் லோகாந்தரகமனக மனங்களும் பிதுராதி சப்தவாச்சியத்வமு மெதினிடத்தி லத்தியாசத்துவாரா வந்ததோ, அதுவே ஸ்தூலசரீரவெதிருத்தமான சூட்சுமசரீரமென் றறியப்பட்டது. மேலும் யுத்தியினாலுந் தூலசரீரத்திற்குச் சூட்சுமசரீரம் அன்னியமென்றே தோற்றுகின்றது.

ச-கை. அந்த யுத்தியாவதேதென்னில்,

உ-ம். விசித்திராதிகளாவன நானாவித வியாபாரங்களெதினாற் செய்யப்படுகின்றதோ, அதுவே சூட்சுமசரீரமென்றாயூகித்தறியவேண்டியது.

ச-கை. இவ்வியாபாரங்கள் தூலசரீரத்தினாற்செய்யப்படுகிறதென்று சொல்லலாமேயென்னில்.

உ-ம். அப்படியானால் பிரேத சரீரத்தினாலுஞ் செய்யவேண்டும். அங்ஙனமின்மையால் தூலத்துக் கன்னியமான சூட்சுமசரீரத்தினாலேயே செய்யப்படுகின்றது.

ச-கை. அப்படியேன் சொல்லவேண்டும்? ஆத்மாவே சகலகாரியங்களுஞ் செய்கின்றதென்றுசொல்லுவோமேயென்னில்,

உ-ம். ஆத்மா வியாபகனாயிருக்கிறபடியால் அதுகூடாது. ஆகாசாதிகளிடத்திலிருக்கப்பட்ட ஆத்மாவுங் கர்மங்கள் செய்யவேண்டும்; அப்படி செய்யாதபடியினால் அங்ஙனஞ் சொல்லப்படாது.

ச-கை. ஆகாசாதிகளிடத்தி லிருக்கிறவாத்மா கர்மங்கள்செய்யாமற்போனால்போகட்டும்; தூலசரீரத்துடன் கூடியிருக்கிறவாத்மா, கர்மங்கள்செய்கிறானென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். பிரேதசரீரத்துடன் கூடியிருக்கிற வாத்மாவும் கர்மம்பண்ணவேண்டும். அங்ஙனமின்மையால் அப்படி சொல்லுவது கூடாது.

ச-கை. ஆத்மாவுடன் கூடியிருக்கிற தூலசரீரங் கர்மம் பண்ணுகிறதென்று சொல்லுவோமே யென்னில்,

உ-ம். வியாபகனான வாத்மாவுடன் கூடியிருக்கிற பிரேதசரீரத்தினாலுங் கர்மம்பண்ணவேண்டும் அப்படி இல்லாமையாலதுவுங்கூடாது. இந்தப் பிரகாரத்திற் கேவலந் தூலசரீரமுங் கர்மம்பண்ணுகிறது காணோம்; கேவலஞ் சத்ரூபனான வாத்மாவினாலுங் கர்மம்பண்ணுகிறதுகாணோம்; தூலசரீரத்துடன் கூடியிருக்கிற வாத்மாவினாலுங் கர்மம்பண்ணுகிறதுகாணோம்; மேலும் ஆத்மாவுடன் கூடியிருக்கிற தூலசரீரமுங் கர்மம்பண்ணுகிறது காணோம். இப்படியிருந்தபோதிலும் விசித்திரமாய் நானாவிதமான கர்மங்கள்செய்கிறதாய்க் காணப்படுகின்றபடியால், இந்தக் கர்மங்களெதினாற்செய்யப்படுகின்றதோ அதுவே சூட்சுமசரீரம்.

சத்ரூபனாகிய வாத்மா வியாபகனும் நிரவயவனும் நிர்விகாரியும் அத்விதியனுமாயிருக்கிறபடியால், அவ்வாத்மாவொன்றுடனுங்கூடவுமில்லை; அவ்வாத்மாவுக்கு வெதிருத்தமாக வொருவஸ்துவு மில்லாதபடியினால் அவ் வாத்மாவுடன் ஒருவஸ்துவுங் கூடவில்லை. இதனாற் கர்மங்களெல்லாங் கர்த்துருசாபேட்சையா யிருக்கிறபடியினால், ஆத்மா வொரு கர்மமாகிலும் பண்ணாதபோதிலும் இந்த ஆத்மாவினிடத்தி லனாதிகற்பிதமான அவித்தையென்னு மஞ்ஞானத்தினாலேயே கற்பிக்கப்பட்ட அபஞ்சீகிருதபஞ்சமகா பூதத்துவாரா கற்பிதப்பட்டு ஆத்மாவினுடைய சத்தினாலேயே சத்துப்போற் றோற்றப்பட்ட சூட்சுமசரீரம் தூலசரீரத்துடன் கூடிக்கொண்டு சமஸ்தகர்மங்களையும் பண்ணுகின்றது.

ச-கை. ஆனால் இந்தச் சூட்சுமசரீரம் தூலசரீரத்தைப்போலேன் தோற்றவில்லை? மேலும் சூட்சுமசரீரந் தூலசரீரத்துடன்கூடிக்கொண்டு ஏன்கர்மம்பண்ணவேண்டும்? தூலசரீரத்துடன்கூடிச் சூட்சுமசரீரங் கர்மம்பண்ணபோதிலும் அக்கர்மம் சூட்சுமசரீரத்தினாலேயே செய்யப்படுகிறதென் றறிகிறதெப்படியென்னில்,

உ-ம். சூட்சுமசரீரஞ் சூட்சுமமானபடியினால் தூலசரீரம்போற் றோற்றவில்லை. உலகத்தி லெந்தெந்தவஸ்துக்கள் கர்மத்துக்குக்கர்த்தாவாயிருக்கின்றதோ, அந்தந்தவஸ்துக்கள் ஒன்றையாசிரயித்துக் கர்மத்தைச்செய்கிறதாகவும் அப்

படி காமத்தைச்செய்தபோதிலும் எந்தெந்தவஸ்துவை யாசிரயித்துக்கொண்டுகர்மஞ்செய்கின்றதோ, அந்தக்கர்மமும் ஆசிரத்தினாலேயே செய்யப்பட்டதாகவு மக்கிரியாதிகளிடத்திற் றோற்றப்படுகின்றது. அப்படியே சூட்சுமசரீரமுந் தூலசரீரத்தையாசிரயித்துக்கொண்டு சகல கர்மங்களையும் பண்ணினபோதிலும் அவ்வாசிரயமான சூட்சுமசரீரத்தினுடைய கர்மமே சமஸ்தகர்மங்களுமாதலால் இந்தக்கர்மத்தின்வழியே தூலசரீரம்போற் சூட்சுமசரீரமென்றும், அஃது இந்தத் தூலசரீரத்துக்கன்னியமென்றும் விசாரிக்கப்பட்ட புருஷனுக்குத் தோற்றப்படுகின்றது. இதுவல்லாமலும்;

என்கண்; என்சுரோத்திரம், என்வாக்கு, என்பிராணன், என் அந்தக்கரணம், என் புத்தியென்கிறவனுபவத்தினால், தூலசரீரத்துக் கன்னியமாயொரு சூட்சுமசரீரமுந் தோற்றப்படுகின்றது. இப்படி காரியமான ஸ்தூலசூட்சுமசரீரத்தினால், இதுகளுக்குங் காரணமாய் ஆத்மாவுக்குச் சீவத்துவத்தினாலும் ஈசுவரத்வத்தினாலும் ஜகத்காரணத்தினாலு னுபாதியான வவயவங்களினால் அனிர்வசன்னியமென்றும் சுருதியாதிகளினாற் பிரகிருதியென்றும்மாயையென்றும் அவித்தையென்றும் சொல்லப்படுகிற காரணசரீரமொன்றுண்டென்றுசொல்லப்படுகின்றது. மேலும்,

நான் அஞ்ஞானி, நான் சடன், ஒன்றுமறியேனென்கிறவனுபவத்தினாலுங் காரணசரீர மொன்றுண்டென்றுந் தோற்றப்படுகின்றது. இந்தப் பிரகாரத்தில் சமஸ்த பிராணிகளுக்கு மூன்றுசரீர முண்டென்று நிச்சயிக்கப்படுகின்றது. இப்படியே யாத்மாவும் இம்மூன்று சரீரத்தை யறிகிறவராகியும் இம்மூன்றுடன் கூடியிருந்தபோதிலும் ஆகாசத்தைப்போல ஒன்றிலுங் கூடாமலும் காலத்திரயத்திலுமிருக்கிறபடியால் சத்ரூபனாகவும் சமஷ்டி வியஷ்டி ரூபமாகிய சரீரத்திரய வாத்மகமான பிரபஞ்ச சுபாவ பதார்த்தங்களுக்குள் ஒருபதார்த்தத்தினாலுந் தன்னையறியப்படாமல் சமஸ்தபதார்த்தங்களையுந் தானே யறியப்படுகிறபடியினால்சித்ரூபனாகவும் பரமப்பிரியம் ஆஸ்பதனானபடியினால் ஆனந்தரூபனாகவுந் தோற்றுகின்றது. இப்படிப்பட்ட ஆத்மசொரூபமே நானென்றுமுமூட்சுக்களா லறியத்தக்கது.

ச-கை. காரியமான சரீரத்திரயமுங் காரணமான பிருதி வியாதியும் பிரத்தியக்ஷமாய்த் தோற்றிக்கொண்டிருக்கச் சுருதியாதிகளாற் சொல்லப்பட்ட அத்விதியத்வமும்பரிபூரணத்வமும் ஆத்மாவுக் கெப்படி கூடுமென்னில்,

உ-ம். சமஷ்டி வியஷ்டி யாத்மகமாகிய சரீரத்திரயமென்கிறபிரபஞ்சம் அவ்வாத்மாவினிடத்தி லாரோபிதமா யிருக்கிறபடியால் ரச்சுவினிடத்திலாரோபிக்கப்பட்ட சர்ப்பாதிகளுக்கு ரச்சுமாத்திர மெப்படிசுபரூபமோ அப்படிபோலவே ஆத்மாவினிடத்தி லாரோபிக்கப்பட்ட பிரபஞ்சத்திற்கு மாத்மாவே சுவரூபமன்றி வஸ்துவாதிகள் வேறில்லை, ஆதலா லாத்மாவினுடைய சத்தைப்போல வெதிருத்தமான சத்துபதார்த்தமிருந்து பிரதிபத்திய மில்லாதபடியினால், ஆத்மா அத்விதிய னென்பதிற் சந்தேகமில்லை. எப்போது ஆத்மாவுக்கு அத்விதியத்வஞ் சித்தித்ததோ, அப்போதே பரிபூரணத்வமுஞ் சித்தித்தது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஆத்மாவுக்குப் பிராந்தியினாற் பரிச்சேதம்போற் கண்டிதம்போற் றோற்றப்பட்ட தேசகாலவஸ்துக்கள் ஆத்மாவுக் கன்னியமா யில்லாதபடியினால் திரிவித பரிச்சேதசூனியத்வ சொரூபமான பரிபூரணத்வஞ்சித்தித்தது. இப்படியே யாத்மா நானென் றெவனறிகிறானோ வவனுக்குக் காலத்திரயத்திலும் பிரபஞ்சமில்லை, ஆனாலும் பிராரத்தமுள்ளமட்டு மிந்தத் தேகேந்திரியாதி பிரபஞ்ச மித்தையா பூதமாய்த் தோற்றலாம். அப்படி தோற்றினதினால் சீவன் முத்திக்கு மித்தையா பூதமாய் ஆபாசசுரூபமாகிய சுகதுக்கப் பிரீதிகளேதாவது விவேகித்தபிறகு தோற்றினாலும் வாதையில்லை.

ச-கை. மித்தையாவ தேதென்னில்,

உ-ம். ரச்சுசர்ப்பம்போல அதிஷ்டானஞ் ஞானத்தினால் வாதிக்கப்படுகிறதும், சொப்பன மனோராச்சியம்போற் பார்த்துக்கொண்டிருக்கும்போதே நசித்துப்போகிறதும்,கானற்சலத்தைப்போல் அனிர்வஜன்னியமும், கடாதிகளைப்போற் சத்தாரகிதமுமாய்த் தோற்றுகிறதே மித்தையென்று சொல்லப்படும். இந்த மித்தையாத்மக லட்சணம் சமஷ்டி வியஷ்டியாத்மகமான தேகேந்திரியாதிப் பிரப

ஞ்சத்திலிருக்கின்றது ஆதலால் பரமார்த்த ஸ்வரூபரான வாத்மாவே பரதத்துவம். அன்றியும்,

ஆத்மாவையன்றிப் பேதம்போற் பிராந்தியினுல் தோற்றப் படுகிற ஜகத்து மித்தையென்கிறதிற் சந்தேகமில்லை. ஆத லாலெந்த வர்ணுசிரம தர்மங்களை யுடையவனு யிருந்தா லும் சாஸ்திரோக்த சாதன சம்பன்னனுகிப் பரமார்த்த அத்வைத பரிபூரண சச்சிதானந்த ஸ்வரூபமாகிய ஆத் மாவே நான்; என்னைவிட ஜகத்தில்லை; அதவாஜகத்து வெதிருத்தமாய்த் தோற்றினபோதிலும், சசவிஷாணம் போல மித்தையா பூதமான ஜகத்தினு லெனக்குப் பரிச மேயில்லையென்று சம்சயபாவனை விபரீதபாவனை யின்றி அருளே திருமேனியாகிய ஆசாரியர் முன்னிலையி லெவ னறிகிறுனே, அவனே சீவன் முத்தனென்று சுருதி ஸ்மி ருதி யிதிகாச புராணுகமங்களிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

சரீரத்திரயநிருபகம்

முற்றிற்று.

பதினேழாவது,

தாபத்திரயநிருபகம்.

ச-கை. தாபத்திரய சொரூபத்தை விசாரிக்கவேண்டு மென்று சுருதியாதிகள் சொல்லுகின்றபடியினுல் தாபத்திரயமா வதேதென்னில்,

உ-ம். ஆதியாத்மீகம், ஆதிபெளதீகம், ஆதிதெய்வீகமெனமூன் றுவிதம்.

ச-கை. ஆதியாத்மீகமாவ தேதென்னில்,

உ-ம். சரீரத்தையதிஷ்டித்துக்கொண்டுவரப்பட்ட க்ஷயரோகம் சீதசுரம், தாபசுரம், குன்மம், தலைநோய், அதிசாரம், வெப்பம், சூலைமுதலான வியாதிகளும்; மக்கள் மிருகங் கள், பேய்கள், திருடர்கள், இராக்ஷதர்கள் முதலானவர் களா லுண்டாகின்றதுக்கங்களும் ஆதியாத்மீக மென்று சொல்லப்படும்

ச-கை. ஆதிபெளதீகமாவ தேதென்னில்

உ-ம். ஜலம், வெய்யில், மழை, காற்று; இடி, மின்னல், பனி, கோவில், கோபுரங்கள், பிரகாரங்கள், மண்டபங்கள், சுவர்கள் இதுமுதலிய வஸ்துக்களா லுண்டாகப்பட்டதுக்கங்கள் ஆதிபௌதிகமென்று சொல்லப்படும்.

ச-கை. ஆதிதெய்வீகமாவ தேதென்னில்,

உ-ம். கருப்பந்தரித்தல், உண்டாதல், வளர்தல், நரை, திரை, அஞ்ஞானம், துர்மரணம், நாசம், ஜனனமுதலியதுக்கங்களே ஆதிதெய்வீக மென்று சொல்லப்படும். இந்தத் தாபத்திரயதுக்கஞ் சரீரத்திரயத்துக்கேயன்றிச் சாட்சியாகிய வாத்மாவுக்கில்லை. இந்தப்படி தாபத்திரயங்களுடைய சொரூபத்தை அருளேதிருமேனியாகியஆசாரியர் முன்னிலையில் விசாரித்தறிந்து இந்தத் தாபத்திரயங்கள் தேகேந்திரியாதிகளுக்கல்லாமல் சாட்சியாகியவெனக் கில்லையென்று சந்தேகவிபரீதமற வெவனறிகிறானோ வவனே சீவன்முத்தனென்று சுருதிஸ்மிருதி யிதிகாச புராணாகமங்களிற் சொல்லப்படுகின்றது.

ச-கை. ஆனால் சுருதியாதிகளில் தாபத்திரய காரணத்தையும் விசாரித்தறிய வேண்டுமென்று சொல்லுகிறபடியால்தாபத்திரய காரணமாவ தேதென்னில்,

உ-ம். ஆனாலதுவும் சொல்லுகிறோம் சுரோத்திரம் ஆதியாத்மீகம், சத்தம் ஆதிபூதம், ஆகாசம் ஆதிதெய்வீகம்; தொக்கு ஆதியாத்மீகம், பரிசம் ஆதிபூதம், வாய்வு ஆதிதெய்வீகம்; சட்சு ஆதியாத்மீகம், ரூபம் ஆதிபூதம், ஆதித்தன் ஆதிதெய்வீகம்; நாக்கு ஆதியாத்மீகம், ரசம் ஆதிபூதம், வருணன் ஆதிதெய்வீகம்; ஆக்கிராணம்ஆதியாத்மீகம், கந்தம் ஆதிபூதம், அசுவனி ஆதிதெய்வீகம்; வாக்கு ஆதியாத்மீகம், வசனம் ஆதிபூதம், அக்கினி ஆதிதெய்வீகம்; பாணி ஆதியாத்மீகம், தானம் ஆதிபூதம், இந்திரன் ஆதிதெய்வீகம்; பாதம் ஆதியாத்மீகம், கமனம் ஆதிபூதம், உபேந்திரன் ஆதிதெய்வீகம்; பாயுரு ஆதியாத்மீகம், விசர்க்கம் ஆதிபூதம், பிரசாபதி ஆதிதெய்வீகம்; மனம் ஆதியாத்மீகம், சங்கற்பம் ஆதிபூதம், சந்திரன் ஆதிதெய்வீகம்; புத்தி ஆதியாத்மீகம்; நிச்சயம்ஆதிபூதம், சதுர்முகன் ஆதிதெய்வீகம்; அகங்காரம் ஆதியாத்மீகம், அபிமானம். ஆதிபூதம், உருத்திரன் ஆதிதெ

ய்வீகம்; சித்தம் ஆதியாத்மீகம், தாரணை ஆதிபூதம், க்ஷேத்திரக்ஞன் ஆதிதெய்வீகம்; தமசு ஆதியாத்மீகம், விகாரம் ஆதிபூதம், ஈஸ்வரன் ஆதிதெய்வீகம். இதுகளெல்லாங்கூடிச் சாக்கிரசொப்பன சுழுத்தியாகிய அவஸ்தாத்திரயங்களாயிற்று. இந்த அவஸ்தாத் திரயங்களுக்குச் சாட்சியாய் நித்தியனும் நிர்விகாரனும் ஆனந்தசுவரூபனுகிய வாத்மாவே நானென்று ஸ்ரீசற்குரு முன்னிலையில் விசாரித்து எவனறிகிறானோ வவனேகிருதார்த்தனென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணங்களிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

தாபத்திரயநிருபகம்

முற்றிற்று.

பதினெட்டாவது,

பிரதிபந்தத்திரயநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளிற் பிரதிபந்தத்திரயமும் அதனிவர்த்தியும் விசாரித் தறியவேண்டுமென்று சொல்லுகிற படியினல் பிரதிபந்தத் திரயமாவதேதென்னில்,

உ-ம். பூதப்பிரதிபந்தம், வர்த்தமானப்பிரதிபந்தம், ஆகாமியப் பிரதிபந்தமென மூன்றுவிதமாயிருக்கும்.

ச-கை. ஆனல் பூதப்பிரதிபந்தமாவதேதென்னில்,

உ-ம். பெரிய குடும்பியாகிய வொரு பிராமணன்சீவனார்த்தமாய் ஒரு எருமையைச் சம்பாதித்து அவ் வெருமையினுடைடைய பால்தயிர் நெய்முதலானதுகளை விற்பனைசெய்து, அதனுல் அவன் புத்திரபாரியாதிகளை யிரட்சித்துக்கொண்டு அவ்வெருமைக்கும்வைக்கோல் தவிடுமுதலானதுகளுங்கொடுத்து வருகிற வுபசாரங்களிற் குறைவில்லாமல் நடத்திக்கொண்டு வெகுநாள் தேகநிஷ்டனாய் சீவனம் பண்ணிக்கொண்டிருந்தான். இப்படி யிருக்குங்காலத்தில் கர்மவசத்தினல் அவன்புத்திரபாரியாதிகளுமெருமையும் இறந்துபோய், அந்தப்பிராமண னொருவனுமே யிறவாமல் தனித்திருந்து துக்காக்கிராந்தனாய் விசனப்பட்டு, ஐயோ! இந்தக் குடும்பம் சத்தியமென் றிருந்தோமே,

சொப்பனம்போல் அசத்தியமாய் விட்டதேயென்றுமகா வருத்தமடைந்து நாம் இனி யிந்தச் சமுசாரத்தி லிருக்கப்போகாதென்கிற விரத்தியுடன் சந்நியாசியாய் ஓர் ஆசிரியரிடத்திற்போய் சேர்ந்து, வேதாந்தசாஸ்திர சிரவணாதிகளைச் செய்தான்.

அவ்வாசிரியரும் இவனுக்குச் சொல்லவேண்டிய சாஸ்திரார்த்தங்களையெல்லா முபதேசித்து, அந்தச்சீடனை மாறாமல் ஒருலட்சியத்தைச் சிந்தித்திருக்கும்படி வைத்திருந்தார். அவனும் அந்தலட்சியத்தை யிடைவிடாம லனுஷ்டித்துக்கொண்டே யிருந்தான்.

அங்ஙனமிருக்க ஒருநாள் அவ்வாசிரியர் அந்தச்சீடனையழைத்து அப்பா, நீ இத்தனைநாளாய் சிந்தனையிற் பழகிவருகிறாயே; உன்னுடையசித்தம்நிருமலமாச்சுதா? கிருதகிருத்தியனால் விளங்குகின்றாயா? சுவானுபவத்தில் இன்னங் கர்த்தவியமுண்டா யிருப்பதாய்த்தோற்றப்படுகிறதாவென்றுவினவ, அந்தச்சீடன் அவ்வாசிரியருக்கு நமஸ்காராதிகள்செய்து, சுவாமீ, எனக்கு வேறொன்றுந் தோற்றப்படவில்லை,பூர்வம் ஆசிரமத்திலெனக்கொருஎருமைஉண்டு; அவ்வெருமை அப்போதே யிறந்துவிட்டது. அவ்வெருமைமாத்திரந்தான் சார்வதா முன்னிட்டுச் சாட்சாத்காரமாய் நிற்கின்றதேயன்றி வேறொன்றுங் காணேனென்று தன்னுடைய நிசானுபவத்தை மறைக்காமல் யதார்த்தமாகச் சொன்னான். அதுகேட்ட வாசிரியர் இது பூதப்பிரதிபந்தமென்று மவுனமாயிருந்தார்.

ச-கை. ஆனா லந்தப்பிரதிபந்தத்திற்குநிவிர்த்தியெப்படியெனில்,

உ-ம். பிற்பாடு அவ்வாசிரியர் அந்தப் பிரதிபந்தநிவிர்த்தி யாகும்பொருட்டு, அவ்வெருமையினிடத் திருக்கப்பட்ட பிரியவாஞ்சையை யனுசரித்து, அந்தச்சீடனுக்குத் தத்துவவுபதேசஞ்செய்து அம் மோகத்தைக்கெடுத்து கிருதகிருத்தியனாகச் செய்தருளினார்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். அந்தச் சாக்ஷாத்காரமான வெருமையே அஸ்திபாதிப்பிரியநாமரூபமாகியவைந்தவயங்களுடன்கூடி யிருக்கிறதென்றும், அவற்றுள் நாமரூப மிரண்டையுந்தள்ளி, அஸ்திபாதிப் பிரியமாத்திரமே உனது சொரூபமென்று சிந்தி

த்திருவென்றும் கிருபையினால் அனுக்கிரகஞ் செய்தருளினார். அதுமுதல் அவனு மப்படியே யிடைவிடாமற் சிந்தித்துச் சிலநாளில் நாமரூபமாகிய அந்தப் பூதப்பிரதிபந்தநீங்கிச் சச்சிதானந்த ஸ்வரூபமாகிய ஆத்மாவே தானென்று சாக்ஷாத்கார சுவானுபவம்பெற்றுக்கிருதார்த்தனாகினனென்று இந்தக் கதை யுலகத்தில் வழங்கிவருகின்றது. அல்லாமலும் வித்தியாரண்ய சுவாமிகளும் பஞ்சதசப்பிரகரணத்தில் நிரூபித்திருக்கின்றபடியினாலும் இதுவே பூதப்பிரதிபந்த விவகாரமும் அதனிவிர்த்தியு மென்றறியத்தக்கது.

ச-கை. ஆன லினி வர்த்தமானப்பிரதிபந்தமாவ தேதென்னில்,

உ-ம். விஷயாசத்தி, பிரக்ஞாமாந்தம், குதர்க்கம், விபரீததுராகிருதம் என்று நான்குவிதமா யிருக்கும்.

ச-கை. விஷயாசத்தி லட்சண மேதென்னில்,

உ-ம். சமஸ்த விஷயங்களிலும் ரூடமான ஆசத்தி யுண்டாயிருக்கிறது.

ச-கை. பிரக்ஞாமாந்தமாவ தேதென்னில்,

உ-ம். ஒருவர்சொன்ன அர்த்தம்புத்தியிற்பதியாம லிருக்கிறது.

ச-கை. குதர்க்கமாவ தேதென்னில்,

உ-ம். ஆசிரியர்சொன்ன அர்த்தத்திற்கு விபரீத அர்த்தஞ்சொல்வது.

ச-கை. விபரீத துராகிருதமாவ தேதென்னில்,

உ-ம். நான்பண்டிதன், நான்வித்துவான், நான்விரத்தன், நான் சந்நியாசி, நான்சடையையுடையவன், நான்காஷாயந்தரித்தவன், நான் தபசியென்று தேகேந்திரியாதிகளிடத்தில் ஆத்மபுத்திபண்ணுகிறது. இதுவே வர்த்தமானப்பிரதிபந்தமென்று சொல்லப்படும்.

ச-கை. இதுகளுக்கு நிவிர்த்தி யெப்படியென்னில்,

உ-ம். சமை, தமை, யுபரதி, திதிட்சைகளினால் விஷயாசத்தியும், சிரவணத்தினால் பிரக்ஞாமாந்தமும், மனனத்தினால் குதர்க்கமும், நிதித்தியாசனத்தினால் துராகிருத விபரீதமும் நீங்கிவிடும். இந்தப்படி பிரதிபந்தம் நாசப்படுமானால் முமூட்சுக்களுக்குத் தானே யாத்மசொரூபமென்கிற திடபுத்தி யெளிதில்வரும்.

ச-கை. ஆகாமியப் பிரதிபந்தமாவ தேதென்னில்,

உ-ம். எந்தவேளையிலெந்தக்கன்மம்வருமோ வென்பது தெரியாது அது புண்ணியபாவ மிசிரகன்மத்தினாலேயே வருகின்றது. அங்ஙனமிருக்க இந்தவேளையிலிது வரவேண்டுமென்றும், இது வருமல்லவாவென்றும், இதுவரலாகாதென்றும் ரூடமனதாய்ச் சிந்தித்துக்கொண் டிருப்பதேயாகாமியப் பிரதிபந்தமென் றறியத்தக்கது.

ச-கை. இதற்கு நிவிர்த்தி யெப்படியென்னில்,

உ-ம். உபஸ்திதமான பாவகர்மமும், முமூட்சுக்களுக்கு விஷயத்தினிடத்தில் ரூடமாய் தயாரூபமாகிய ஆசத்திபிறப்பிக்குமென்றும், தேகத்திற்கு நடக்கவேண்டிய பொசிப்பு ஏற்றக்குறைச்சலில்லாமற் சுதசித்தமாய் நடக்குமென்றுங் குருவாக்கியத்தினாற் றெளிந்திருக்கிறபடி மேல்வருங் காரியத்தை நாடவேண்டியதேயில்லை. ரூடமான மனதாய் நாட்டம்வைத்தா லதுவே பாக்கியப் பிரதிபந்தமென்று சொல்லப்படும், முமூட்சுவானவர்கள் அந்த ஆசத்தியை யாகாமியப் பிரதிபந்தமென்றறியாமல்; அகர்த்தாவாய் அசங்கனாகிய வென்னை இந்தவாசத்தி யென்னசெய்யப்போகிறதென்று சட்டைபண்ணும லிருந்தார்களேயானால், அது அவர்களுக்குச் சிறிது ஜன்மங்களைக் கொடாமற்போகாது.

ச-கை. ஆகாமியப் பிரதிபந்தஞ்சனனங்கொடுக்குமென் றெங்கே சொல்லப்படுகிறதென்னில்,

உ-ம். சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணங்களிற் சொல்லப்படுகின்றது.

ச-கை. அஃதெப்படி யென்னில்;

உ-ம். வாமதேவருக்கொரு ஜன்மங் கொடுத்ததென்றும், ஜடபரதருக்கு மூன்றுஜன்மங் கொடுத்ததென்றும், இன்னஞ் சிறிதுபேர்களுக் கனேகஞ் சன்மங்களைக் கொடுத்ததென்றுஞ் சொல்லப்படுகின்றது. ஆதலால் ஸ்ரீசற்குருவானவர்கள் சிஷனுக்குப் பாகியத்திலும் அந்தக்கரணத்திலுமிருக்கிற பூர்வபழக்கமாகிய அஞ்ஞானங்களை நன்றாய்விமரிசையாய் நிலைவிலிருக்கவொட்டாமல் அதின்மலினங்களையும் சொரூபத்தையும் பலதிருஷ்டாந்த தாஷ்டாந்தங்களினால் போதமாகும்படி யெடுத்தறிவித்து, அவனைப் பிரதிபந்தத்திலொட்டாமற் பண்ணுவார்கள் ஆதலாலிந்

தப்படி முமூட்சுக்களானவர்கள் ஸ்ரீசற்குருமுகமாய்ப்பிரதிபந்தங்களை நன்ருய்விசாரித்து அதுகள்தங்களை யனுசரிக்கவொட்டாமற் றள்ளவேண்டும் அப்படி தள்ளாவிட்டால் அவர்களுக்குச் சிறிறுஜன்மங்கள் வருமென்பதிற் சந்தேகமில்லை. இந்தப் பிரதிபந்தத்திரயம் எந்தச்சென்மத்தி லெவனுக்கு நசித்துப்போகின்றதோ அவனுக்கே அந்த ஜன்மத்தில் முத்தி. இந்தப் பிரதிபந்தங்களிலொன்ருகிலு மிருந்தா லந்தச் சென்மத்தில் முத்தியில்லையென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணுகமங்களிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

பிரதிபந்தத்திரயநிருபகம்

முற்றிற்று.

பத்தோன்பதாவது,

நவவிதசமுசாரநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளில் நவவித சமுசாரங்களை விசாரித்தறிய வேண்டுமென்று சொல்லுகிறபடியால் நவவித சமுசாரமாவதேதென்னில்,

உ-ம். ஞாதுரு, ஞான, ஞேயம், போக்தா, போக்கிய, போகம், கர்த்தா, கர்ம, கிரியையென் ருெருபகூஷஞ் சொல்லுவார்கள்.

ச-கை. ஆனல் பட்சாந்தரமாவ் தேதென்னில்,

உ-ம். பஞ்சமகா பூதங்கள், ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள், பிராணுதிபஞ்சகம், அந்தக்கரண சதுஷ்டயம், தூலசரீரம், அவஸ்தாத்திரயம், இதுகளுக்குக்காரணமாகிய அஞ்ஞானம் இதுகளையேநவவிதசமுசாரமென்றும், நவவிதப்பிரபஞ்சமென்றுஞ் சொல்லுவார்கள், இந்தநவவிதசமுசாரமும் பிராந்தியிஞல்வந்தது. இவை அகங்காரத்திற்கேயன்றிச் சாட்சியாகிய வெனக்கில்லையென்றும்; ஞானேந்திரியம், கன்மேந்திரியம், மனுதிசதுஷ்டயம், பிராணுதிபஞ்சகம், விஷயாதிபஞ்சகம், காமம், கர்மம், அஞ்ஞானம் இதுகளே புரியட்டகசரீரமென்றும் ஸ்ரீசற்குரு முன்னிலையிலெவன் சம்சய விபரீதமில்லாமல் விசா

ரித்தறிகிருனே, அவனே சீவன்முத்தனென்று சுருதிஸ்மிருதியிதிகாச புராணுகமங்களிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

நவவிதசமுசாரநிருபகம்

முற்றிற்று.

இருபதாவது,

வயிராக்கியாதிநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளில் வயிராக்கியவுபரதிஞானங்களையும்அவற்றின் தன்மைகளையும் விசாரித் தறியவேண்டுமென்று சொல்லுகிறபடியினுல் அந்த வயிராக்கியாதிகள் எவர்களிடத்தி லிருக்குமென்னில்,

உ-ம். இம்மூன்றும் விவேகிகளிடத்திற் கூடியிருக்கும்; கன்மவசத்திஞ லில்லாதிருந்தாலு மிருக்கும்.

ச-கை. அவற்றின் தன்மைகளாவதேதென்னில்,

உ-ம். ஏது, சொரூபம், காரியம், அவதி, பலம் இவ்வைந்தும் அவற்றின் தன்மைகளென்று சொல்லப்படும்.

ச-கை. ஆனுல் வயிராக்கியத்திற்கு ஏதுவாவதேதென்னில்,

உ-ம். சமஸ்த விஷயத்திலுந் தோஷதிருஷ்டி யுண்டாகின்றது.

ச-கை. சொரூபமாவதேதென்னில்,

உ-ம். தேககாரண வெதிருத்தமான விஷயங்கள்வந்தாலும் அந்தவிஷயத்தில் தோஷம்பிறந்து சக்கினசாதத்தைப் போற் காண்பது.

ச-கை. காரியமாவதேதென்னில்,

-ம். அந்த விஷயங்களைப் புசிக்காமலேன் தள்ளிவிட்டோமென்று திரும்பவும் நினையாதிருக்கின்றது.

ச-கை. அவதியாவதேதென்னில்,

உ-ம். பிரமலோகாதிபரியந்தந் திரணீகரிக்கப்படுவது

ச-கை. பலமாவதேதென்னில்,

உ-ம். பிரமலோகம்.

ச-கை. ஆனுலுபரதிக்கேதுவாவதேதென்னில்,

உ-ம். இயம நியமாதி யஷ்டாங்க யோகங்கள்.

ச-கை. சொரூபமாவதேதென்னில்,

உ-ம். சித்த நிரோத முண்டாவது.

ச-கை. காரியமாவ தேதென்னில்,

உ-ம். சர்வவிகாரங்களுமற்றிருப்பது.

ச-கை. அவதியாவ தேதென்னில்,

உ-ம். சுழுத்தியைப்போற் சாக்கிரத்திலுஞ் சமஸ்த விஷயங்களையு மறந்திருப்பது.

ச-கை. பலமாவ தேதென்னில்,

உ-ம். பிரமலோகம்.

ச-கை. ஞானத்திற்கு ஏதுவாவ தேதென்னில்,

உ-ம். சிரவணமனன நிதித்தியாசனம்.

ச-கை. சொரூபமாவ தேதென்னில்,

உ-ம். அந்தச் சிரவணாதிகளினால் தேகேந்திரியாதிப் பிரபஞ்சத்தினிடத்தி லாத்மசொரூபத்தைப் பிரித்து அந்த அத்விதியவாத்ம சொரூபமே தானென்றும், இந்தத் தேகாதிப்பிரபஞ்சம் நானல்லவென்றும், இந்தப் பிரபஞ்சங்கள் தோற்றினபோதிலும் காலத்திரயத்திலு மில்லையென்றும் புத்தியிற் றிடநிச்சயம் வருவதற்குச் சற்குருமுகமாய் அனுதியிற் பிராந்தி விவேகத்தினிடமாய் தோற்றினவிதமும் எப்போதும் பிரபஞ்சமில்லாத விதத்துக்குப் பிராந்திநிவிர்த்தியு மறிந்ததே சொரூபமென்று சொல்லப்படும்.

ச-கை. காரியமாவ தேதென்னில்,

உ-ம். இவ்வனுத்ம சொரூபமான வகங்காரக் கிரந்திமுதல் காரிய தேகேந்திரியாதிகளும் மறுபடியும் நினைவில்வராதிருப்பது.

ச-கை. அவதியாவ தேதென்னில்,

உ-ம். அஞ்ஞானகாலத்தில் தேகம் நானென்று உரப்புவந்தது போல் பிரமசொரூபமே நானென்று திடநிச்சயம் வருகிறது.

ச-கை. பலமாவ தேதென்னில்,

உ-ம். உபாதி ரகிதமான மோட்சமே பலம். இந்தப்படி ஒவ்வொன்றுக் கைந்து தன்மைகளும் அன்னியோன்னிய சகங் காரியமில்லாத பிரகாரஞ் சொல்லப்படும்.

ச-கை. இந்த வயிராக்கியாதிகள் மூன்றும் மோட்சத்திற் கேதுவோ? அல்லது இரண்டு ஏதுவோ? அல்லது ஒன்றேதுவோவென்னில்,

உ-ம். சாதனாந்தரத்தை யபேட்சியாமல் பிரத்தியட்ச மோட்சம்வருகிறபடியால் ஞானமொன்றுமே பிரதானம். வயிராக்கிய வுபரதியிரண்டும் ஞானத்திற்குச் சாதனம். இந்த மூன்றுமொரு புருடனிடத்திலிருந்தால் மகா தபோபலமாகும். அல்லது ஒருவனிடத்திற் கன்மத்துக்கீடாயொன்றிருந்தாலு மிருக்கும்; இரண்டிருந்தாலு மிருக்கும். சுத்தமா யிரண்டுமில்லாமற் போனாலும்போம். ஒருவனுக்கு வயிராக்கிய வுபரதியிரண்டும் பூரணமாயிருந்து ஞானமொன் றில்லாமற்போனா லவனுக்கு மோக்ஷமில்லை.

ச-கை. ஆனால் வயிராக்கியவுபாதிவியர்த்தமாய்ப்போமோவெனில்;

உ-ம். போகாது.

ச-கை. பின்னை யெப்படியென்னில்,

உ-ம். வயிராக்கிய வுபரதிகள் தபசாகியபடியினால் அதனாற்புண்ணியலோகங்கள் கிடைக்கும். ஒருவனுக்கு ஞானம் பூரணமாயிருந்து வயிராக்கிய வுபரதிகளில்லாமற் போனாலும் அவனுக்கு மோக்ஷம்வருமென்பதிற் சந்தேகமில்லை.

ச-கை. இவ் வயிராக்கிய வுபரதிகளாற் பிரயோசன மென்னவெனில்.

உ-ம். அதுக ளில்லாவிட்டாற் பிரத்தியட்சதுக்கம் போகாது. இதுவே ஞானவயிராக்கியவுபரதிகளின் தாரதம்மியமென்றறியத்தக்கது. பிராரத்த நானாவிதமானபடியினால்ஞானிகளுடைய விவகாரமும் நானாவிதமாயிருக்கும். விவேகிகள் ஞானிகளது விவகாரத்தைப் பார்த்துச் சாஸ்திரமொருவிதமாய்ச் சொல்லியிருக்க இவர்கள் நடைபேதப்படலாமாவென் றுபிரமிக்கவேண்டியதில்லை அவரவர்கள் கன்மத்தினா லவரவர்கள் நானாவித வியாபாரத்துடன்கூடியிருந்தபோதிலும் ஞானமும் ஞானபலமான மோக்ஷமும் பேதமே யில்லையென்று ஸ்ரீசற்குருவினாற்றெளிந்து நானே சுயம்பிரகாசப் பிரமசொரூபமென் றெவனறிகிறானோவவனே சீவன்முத்தனும், அதிவர்ணாசிரமியுமென்று சுருதிஸ்மிருதி யிதிகாசபுராணாகமங்களிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

வயிராக்கியாதிநிரூபகம்

முற்றிற்று.

இருபத்தோராவது,

வாசனாத்திரயநிருபணம்.

ச-கை. சுருதியாதிகளில் ஞானத்திற்குப் பிரதிபந்தமான வாசனாத்திரயங்களை விசாரித்தறியவேண்டுமென்று சொல்லுகிறபடியினால் வாசனாத்திரயமாவ தேதென்னில்,

உ-ம். லோகவாசனை, தேகவாசனை, சாஸ்திரவாசனை என மூன்றுவிதம்.

ச-கை. லோகவாசனையாவ தேதென்னில்,

உ-ம். உலகத்தில் சமஸ்தமானபேர்களுந் தன்னை நிந்திக்காமலிருக்கவேண்டும்: சர்வதா தன்னையே தோத்திரம்பண்ணவேண்டும் என்று அபிமானபூர்வகமாய்த் தோற்றுகின்றதே யுலகவாசனையென்று சொல்லப்படும்.

ச-கை. ஆனாலிந்தப் பிரதிபந்தத்திற்குநிவர்த்தி யெப்படியெனில்

உ-ம். தன்னை ஒருவராலும் நிந்திக்கப்படாம லிருக்கவேண்டும்; தன்னையெல்லாரும் புகழவேண்டும் என்கிற ஈஸ்வராதிகளுக்கும் அசாத்தியமான பிரயத்தினமா யிருக்கிறபடியினால், அஞ்ஞானிகளானவர்கள் ஒருபோதுநிந்திப்பார்கள்; ஒருபோதுதோத்திரமும் பண்ணுவார்கள்; அதனால்தனக்கு ஹானியேது? லாபமேது? என்று விசாரித்தறிவதே அந்தப்பிரதிபந்தத்துக்கு நிவர்த்தியாகும்.

ச-கை. ஆனாலீஸ்வரனை நிந்திக்கிறவர்க ளுண்டாவென்னில்,

உ-ம். உண்டு. சர்வலோகேஸ்வரனை சதுர்முகப்பிரமா சிவனாலுங் குமாரசுவாமியினாலுந் தண்டிக்கப்பட்டானென்றும் நமதுசிவன் நமதுகுமாரசுவாமியென் றபிமானமுடையவர்களாய்ப் பிரமதேவன் மகிமையறியாமல்சிவபாஷாண்டிகளும் வைணவவைஷாண்டிகளும் நிந்திக்கிறார்கள்; இதுவல்லாமல் சமஸ்தமான பேர்களும் ஞான சற்குருவாய் தோத்திரஞ்செய்யப்பட்ட மகாதேவரும் தட்சப்பிரஜாபதி முதலானவர்களால் நிந்திக்கப்பட்டாரென்றெண்ணி அவர்மகிமையறியாமல் வைணவ வைஷாண்டிகள் முதலியோர்களும் நிந்திக்கின்றார்கள். நிரீஸ்வரசாங்கியருஞ்சில மீமாம்சரும் அந்தரியாமியில்லையென்று நிந்திக்கிறார்கள். இராமகிருஷ்ணாதிகளும் சிசுபாலதந்த வக்ராதிகளால்

நிந்திக்கப்பட்டார்களென்று புராணாதிகளிற் சொல்லப்படுகின்றது. ஆதலால் பாமரராகிய பகிர்முகமான பிரஜைகள் நம்மை நிந்திப்பார்களென்பதிற் சந்தேகமில்லை.

ச-கை. ஆனால் அந்த நிந்தை யாருக்கென்னில்,

உ-ம். அத்விதியப் பிரமசொரூப பரிபூரண வாத்மாவை யெவர்களாலும் நிந்தைபண்ணக்கூடாது.

ச-கை. ஏன் கூடாதென்னில்,

உ-ம். அவ்வாத்மா சர்வப்பிராணிகளுக்குஞ் சொரூபமானபடியினால் தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டதாகும்.

ச-கை. ஆனாலாநட்டமேயென்னில்,

உ-ம். உலகத்தில் அன்னியன் அன்னியனை நிந்திக்கக்கண்டோமன்றி ஒருவன் தன்சொரூபத்தைத் தானே நிந்திக்கவில்லை. அப்படி நிந்தித்தால் தனக்கு லாபமேயன்றி ஆனியில்லை.

ச-கை. ஆனால் தேகத்தை நிந்தித்தானென்று சொல்லுவோமே எனில்,

உ-ம். அந்தத்தேகம் முமூட்சுக்களால் பூர்வமே நிந்திக்கப்பட்டபடியினால், அதைப் பிறர்நிந்திப்பார்களாகில், அந்தநிந்தை முமூட்சுகளுக்குலாபமேயன்றி அஃது ஆனியல்ல.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஒருவனுடைய சத்துருவை அன்னியர் நிந்தித்தால் அப்படிநிந்தித்தவன் அவனுக்கெப்படிபிரியனோ, அப்படியே விவேகியானவர்கள் தன் தேகத்தைநிந்தித்தவர்களைத் தனக்குப்பிரியனென்றே காண்பார்கள்.மேலும்இம்மூன்று சரீரத்தினுள் தூலசரீரமே நிந்திக்கப்படுகின்றது. மற்ற இரண்டும் திரிசியமல்லாதபடியினால் நிந்தைக்கு விஷயமல்ல. இந்தச்சரீரமே நிந்தைக்கு விஷயமல்லாமற் போனபடியினால் சர்வாதீதமாய் சமஸ்தமானபேர்களுக்கு மாத்மசொரூபமாய் சாட்சிசொப்பிரகாச சொரூபனாகிய நம்மை எந்தநிந்தையும் பரிசிக்கவில்லையென்பது சொல்லவேண்டுமோவென்று விசாரித்தறிகிற விவேகிகளுக்குலோகவாசனையாகிய பிரதிபந்தம் நசித்துப்போம். பிரபஞ்சாதீதமாய் பரமானந்த சொரூபமா யிருக்கப்பட்ட நமக்கு உலகத்தில்வரும் நிந்தாஸ்துதிகளால் பிரயோசனமில்லையென்று அபிமான ரகிதமாயிருக்கிற விவேகிகளுக்குச்

சந்தோஷதுக்கமான விகாரங்களும் நசித்துப்போமென்பதிற் சந்தேகமில்லை.

ச-கை. ஆனால் தேகவாசனையாவதேதென்னில்,

உ-ம். ஆயுசு, ஆரோக்கியம், அழகு சம்பாதிக்க வேண்டுமென்றுவருகிற வபிமானமே தேகவாசனையென்று சொல்லப்படும்.

ச-கை. ஆயசாவதேனென்னில்,

உ-ம். சீவித்திருக்கிற சரீரந் திறமாக விருக்கவேண்டுமென்றுகோருகிறது. அந்தத் தேகஸ்திதியுங் கர்மாதீன மானதையினால் புருஷயத்தினத்தினாற் சம்பாதிக்கக்கூடாது.

ச-கை. அப்படி சொன்னால் சிலர் யோகாப்பியாசம்பண்ணித்தீர்க்ககாலமாகிய ஆயுசுசம்பாதிக்கிறார்களென்று புராணாதிகளிற் சொல்லுகின்றதே யென்னில்,

உ-ம். அந்த யோகாப்பியாசம் அனாத்மவிஷயமானபடியினால் ஞானம்வராமற்பண்ணும். ஆதலால் தேகம் வெகுகாலமிருக்கவேண்டுமென்பதில் பிரயத்தினஞ் செய்யவேண்டியதில்லையென்று முமுட்சுக்களுபேட்சிக்கத்தக்கது. இந்தக்கருத்தே சுருதி ஸ்மிருதி புராணாதிகளிற் சொல்லப்படுகின்றது. இப்படியே புருஷராலாரோக்கியமுஞ் சம்பாதிக்கக்கூடாது.

ச-கை. அதெப்படி யென்னில்,

உ-ம். ஆரோக்கியமுங் கர்மாதீனமானதையால் அது புருஷயத்தினத்தினாற் சித்திக்காது. சித்தித்தபோதிலும் முமுட்சுவுக்கு அதனால் இலாபமேது? ஆனியேது? அவ்வாரோக்கியசித்தியினாலுண்டானசந்தோஷவிகாரமும், சித்திக்காமையினாலுண்டான துக்கவிகாரமும் அந்தக்கரணத்திற்கே, அதற்குச் சாட்சியாகிய நமக்கு இவ்விகாரங்களில்லையென்று விசாரித்தறிந்து, அவ்வாரோக்கியசித்தியிலபிமானிக்காமல் விட்டுவிடவேண்டியது. மேலும் அழகாயிருக்கப்பட்ட புருஷருங் காலாந்தரத்திற் குரூபியாகக் கண்டோம்; ஆதலாலழகுவரவேண்டுமென்று நாம் பிரயத்தினம் பண்ணபோதிலும் வியர்த்தமாய்ப் போனதுங் கண்டோம். அழகு சம்பாதிக்க வேண்டுமென்றுவருகிற அபிமானமும் சமஸ்தமான பரமார்த்தத்துக்கும் லௌகிக பிரவிர்த்தி விகாதமாயிருந்து அனர்த்த பரம்பரை

யுண்டாக்குமாகையினால் அழகுசம்பாதிக்கவேண்டுமெ ன்னுமபிமானமும் முமூட்சுக்கள் வர்ச்சிக்கத்தக்கது.

ச-கை. ஆனால் சாஸ்திரவாசனையாவதேதென்னில்,

உ-ம். சாஸ்திர பாடத்திலும், சாஸ்திரார்த்த ஞானத்திலும், சாஸ்திரானுஷ்டானத்திலும் விதனமுண்டாயிருப்பதே சாஸ்திரவாசனை. இதனால்தன்னுண்மையாகிய வாத்மவிசாரஞ் சம்பாதிக்கக்கூடாது. அந்த விதனம் சாஸ்திரவிஷயமான வாசனாசொரூபப் பிரதிபந்தமென்றே சொல்லப்படும்.

ச-கை. மோக்ஷசாதன வேதுவாகப்பட்டதைப் பிரதிபந்தமென்று சொல்லுவதெப்படியென்னில்,

உ-ம். பரத்துவாசர், நாரதர் முதலானவர்கள்வேதசாஸ்திரங்களையாதியந்தமாயறிந்து அப்பியாசிக்கவாரம்பித்து வெகு துக்கங்களையடைந்து அசாத்தியமென்றுவிட்டுவிட்டார்களென்று சுருதியாதிகளிற் கண்டிருப்பதாலும் வேதாந்தவெதிருத்தமான அன்னிய சாஸ்திராப்பியாசம் ஆத்மவிசாரத்திற்கு விரோதமாகையினாலும் பிரதிபந்தமென்றுசொல்லப்படும். ஆதலால் சாஸ்திரபாடமுஞ் சாஸ்திரார்த்தஞானமும் சாஸ்திரானுஷ்டானமும் ஆதியந்தமாகச் சம்பாதிக்கக்கூடாது. ஆகையால் முமூட்சுக்கள் சாஸ்திரார்த்தங்களை ஆதியந்தமாய் விசாரிக்கவேண்டுமென்கிற அபிமானத்தை விடத்தக்கது.

உலகத்தில் சாஸ்திராப்பியாசம் பண்ணினவனுக்குப்பூர்வங்கற்றுப் பிற்பாடு மறந்துபோகிறபடியினால் துக்கமேதோற்றுகின்றது. தான்பிறருடனே வாதுசெய்து செயித்தபோதுந் துக்கமேதோற்றுகின்றது. ஆதலால் அன்னிய சாஸ்திராப்பியாசம் சார்வதா அனர்த்த ஏதுவானபடியினால் முமூட்சுக்கள்விடத்தக்கது. இந்தப்படி வேதாந்தசாஸ்திராப்பியாசம்பண்ணியனுபவஞ் சம்பாதித்தபிறகு வேதாந்தசாஸ்திரத்திலு முபரதிவருமானால் அந்தச் சாஸ்திரவிஷயவாசனைப் பிரதிபந்தமும் நசித்துப்போமென்றுசுருதிஸ்மிருதியாதிகளிற்சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

வாசனாத்திரயநிரூபகம்

முற்றிற்று.

இருபத்திரண்டாவது,

ஆசுரவாசனுப்பிரதிபந்தநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளில் ஆசுரவாசனுப் பிரதிபந்தம் விசாரித்த றியவேண்டுமென்று சொல்லுகிறபடியினால்; அஃதெதெ ன்னில்,

உ-ம். அது தன்னிடத்தில் இல்லாததாய்த் தோற்றினபோதி லும் ஒவ்வொருசமயத்திற் பிறருடைய ஆசாரத்தைப்பா ர்த்தபிறகு ஆட்சேபாதிகளாலுண்டாகும். அதுவே யா சுரவாசனுப் பிரதிபந்தமென்று சொல்லப்படும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். அடா பிரஷ்டா! ஆசாரமிப்படியா பண்ணுகிறது? நீ பிர ஷ்டனுய்ப்போனாய், சந்தேகமில்லை. அடா உனக்குபதே சம்பண்ணி யாசாரஞ்சொன்ன குருவாரோ? அவனும் பிரஷ்டனென்பதிற் சந்தேகமில்லை. அடாநாளைமுதல் நீ நம்மிடத்துக்கு வரவேண்டாம். நீ எழுந்துபோடா. இ ல்லாவிட்டால் நமதுபாததீர்த்தம்வாங்கிக்கொண்டுபிழை த்துப்போடா வென்றுசொல்லிப் பின்னையுந் தன்னின்ப த்தைக்குறித்து அடா நீநமக்குச்சிசுருஷை செய்வதைப் பார்க்கிலும் வேதாந்தவிசாரத்தி லென்னபலனிருக்கின் றது? நம்மை யுபாசனைபண்ணினு லுனக்குத் தர்மார்த்த காமியமோட்சமும் சகல அயிஸ்வரியாபீஷ்டமும் சித்தி க்கும். ஆதலால் நீ இதுமுதனம்மையன்றி யாருக்குஞ் சிசுருஷை பண்ணவேண்டாம்; ஒருவரிடத்திலும் போக வேண்டாம்; போனலவர்களை நீ நமஸ்கரிக்கவேண்டாம் அவர்களே உன்னைமுன்பாக நமஸ்கரித்தால் பிறகு நீநம ஸ்காரஞ்செய்யென்று பலவாகச்சொல்லிப்பின்னும் ஒரு வரிடத்திற்போனல், தனதுமர்மம் வெளியாய் விடுமென் றுநினைத்து, அப்பா, நீமற்றொரு பெரியவாளிடத்திற் போய் பேசினலும் அவர்களை வணங்கினலும் பிறகு நீந ம்முடைய சந்நிதானத்தில் வரக்கூடாது இப்படியே ஒ ருவன் வெகுநாளாய் நம்மையடுத்தவனயிருந்து பின்பு சட்டைபண்ணமல் நம்மைக்கண்டெழுந்திராதிருந்தான் நாம் அதுகண்டு, உனக்காயசு இக்மதட்டுந்தானென்று சபித்தோம். அவனப்படியே யிறந்துபோனன்.

பின்னும் நம்மையறிந்த ஒருவன் ஐசுவரியகர்வத்தினால் நம்மைப் பராமரிக்காமற்போனான். அவனுக்கும் ஐசுவரியமிந்தமட்டுந்தானென்று சபித்தோம். அவனுந் தரித்திரனாகியிருக்கிறான். ஒருவனை நீ நம்மிடத்தில் உபதேசம் பெற்றுக்கொண்டும் நம்மைமதியாமலிருக்கிற படியினால்நீ பஸ்பமாய்ப்போவென்று சபித்தோம். அவனுமப்படியே போனான். நீ நமதுமகிமை நன்றாயறிந்தவனானையாலும், நல்லவனானையாலும் உன்னைப்போலொத்தவர்களறியவேண்டுமெல்லது பின்னையார்தான் அறியப்போகிறார்கள்.

நாம் பூதபவுஷிய வர்த்தமானங்களெல்லா மறிவோம். பூர்வம் அனேகம்பேர்களுக்கு உபதேசம்பண்ணி ரட்சித்தோம்; இப்போது மனேகருக் குபதேசம்பண்ணி ரட்சித்துக்கொண்டிருக்கிறோம், இனிமேலு மனேகம்பேரைச் சீஷராக்கி யிரட்சிக்கப்போகிறோம். இதுவரையில் நமது கையினால் அனேகதிரவியங்களைச்சம்பாதித்து பெரியவாளுக்கும், அதிதிகளுக்குங் கோயில்களுக்குங் கொடுத்து, ஈஸ்வரப் பிரதிஷ்டை செய்வித்தோம். நமது மனது எதைக்கோருகின்றதோ, அதுகளெல்லாம்உடனேவந்து முன்னிற்கும். நமக்கு இன்னம் இவ்வளவுதிரவியம் வரப்போகின்றது. சகல சித்திமுத்திகளுக்கும் நாமேபாத்திரமன்றி மற்றொருவர்கள் பாத்திரமாவார்களா? ஆதலால் நீசெய்யத்தக்க தான தர்மங்களெல்லாம் நமக்கேசேரும்படிபண்ணு; நீ நமக்கு உடல் பொரு ளாவி மூன்றுந்தத்தம்பண்ணி உபதேசம்பெற்றுக்கொண்டபிறகு நீ வேறு மூலமாய்ச் சிலவுபண்ணினா லுனக்கு நரகமுண்டாகும்.

மேலும் அவன் தலைகீழாய் விழுகிறான்; இவன் தலைகீழாய் விழுகிறான். இன்னஞ் சிலபேர்கள் தலைகீழாய்விழுகிறார்கள். இவர்களை யெல்லாம் பார்த்து நாம் சற்றே விகற்பமாய் நினைத்தா லவர்கள் கெட்டுப்போவார்கள். அதுவும் நீயே யின்னஞ்சிலநாளில் தெரியப்போகிறாய். நாமேஈஸ்வரன்; நாமேயோகி; நாமேசித்தபுருஷன்; நமது பாதத்திற் சரணம்பண்ணு; நமது சந்நிதானத்தில் மனங்கரையாமற் சும்மாவிருக்கிற நீ மற்றெவர்களைத்தான் சார்வதா சரணமடைந்து மோட்சமடையப்போகிறாய்.

மேலும் இந்த மானிடசரீரங் கிடைப்பதேயருமை. இது கிடைத்ததற்குப் பெரியவாளைக் கண்டமாத்திரம் அவர்களுக்குப் பணிவிடைசெய்து ஜனனமரணவுபாதியைநீக்கிக்கொள்ளவேண்டும். நாமே மகாஞானி; நம்போலிகள் உலகத்தில் யாருமில்லை. நமக்கே சகலகலைகளுந்தெரியும்; நாமே யெக்கியங்களும், பிராமண போஜனமும், மயேஸ்வரபூஜையும் தானங்களுஞ்செய்யத்தக்க யோக்கியதை வகித்திருக்கிறோம். நமது சாமார்த்திய வல்லபமும், புத்தி யுத்திகளும் மந்திரசித்தியும் யோகசித்தியும் தியானசித்தியும் வாதசித்தியும்போல் எவரிடத்திலாகிலும் நீ கண்ட துண்டானாற் சொல்லு. உனக்கென்ன வேண்டினாலும் அதுகளையெல்லாம் உபதேசித்து ஒரு நிமிஷமாத்திரத்தில் உனக்கு மனோலயம்வரப்பண்ணுகிறோம். நமக்கு பகையாளிபேரில் ஒருமந்திரத்தை யுச்சாடனம்பண்ணினால் அவனுடனே மரணமடைவான். நாம் ஒரு சீஷனுக்குபதேசஞ்செய்திருந்தோம். அவன் அதுமுதல்மகாபாக்கியவந்தனாயிருக்கிறான். மற்றொருவன் சாகவேண்டுமென்று ஒருமந்திரத்தையுபதேசித்தோம். அவன் அதைச் செபித்த மூன்றுநாளிறந்துபோய்விட்டான். முன்பு நம்மையடுத்திருந்த ஒருசீஷன் திரும்பி வேறொருவனிடத்திற்போய்ச்சேர்ந்து உபதேசம் பெற்றுக்கொண்டான். அது நமக்குத்தெரிந்து அவனுக்கு நாவெழாமற்செய்துவிட்டோம். பூர்வம் அனேகம் பெரியவாளிருந்தார்கள் அவர்களிலொருவரும் நம்மைப்போற் பிரதிஷ்டையானவர்களில்லை.

ஆதலால் மனவஞ்சகமற நமக்குப்பணிவிடைசெய்கிறவனே கிருதார்த்தன். கொடுக்கப்பட்ட தானங்களெல்லாம் நமக்கே கொடுக்கவேண்டும்; நம்மையே பூசிக்கவேண்டும்; நம்மையே சேவிக்கவேண்டும்; நம்முடைய பாததூள் விழுந்தகிரகமே மோட்சவீடாகும். நமது பாதோதகத்தைச் சிரசில் புரோட்சித்துக் கொள்ளுகின்றவர்களே கிருதகிருத்தியர்கள். நமக்கிவ்வளவு மகிமையில்லாவிட்டால் ஒருவரும் நம்மையுபாசிக்கமாட்டார்கள். நாம் இன்னமும் வெகு சீஷவர்க்கங்களைச் சம்பாதிக்கவேண்டுமென்றிப்படி பிரதாபமாகச் சொல்லி யனர்த்தரூபமாக

வரப்பட்ட சித்தவிருத்திக்கு ஆசுரவாசனுப் பிரதிபந்த மென்று சொல்லப்படும் இதுமகா அனர்த்தத்திற்கே யேதுவான படியினுலும், அனுத்ம விஷயமான படியினு லும், ஆத்மஞான விரோதமானபடியினுலும் விவேகிக ளிதை விசாரித்து விட்டுவிடத்தக்கது. இந்தப் பிரதி பந்தத்துடன் சிரவணம்பண்ணினு லவர்களுக்கு அந்த ஜன்மத்தில் ஞானம்வராது.

ச-கை. ஆனுல் சிரவணம் வீணுய்ப்போகுமாவென்னில்,

உ-ம். போகாது. அசுவமேதயாகம் பண்ணினவர்கள் போய டைகிற லோகத்திற்போயடைந்து அங்குள்ள போகங்க ளை யனுபவித்துப் பிறகு பிரமநிஷ்டாகுலத்திற் பிறந்து சம்சாரவசத்தனுயிருந்து பூர்வஜன்ம வாசனுவசத்தினுல் சிரவணத்தில் வந்துநிற்பான். அப்படி நின்றபின் தன க்குப் பிரதிபந்தமுண்டென்றுதெரிந்து ஸ்ரீசற்குருமுன் னிலையிற் போக்கடித்து அந்தச் சற்குருகடாட்ச வீட்ச ணியப் பிரபாவத்தினுல்பரஞானம்பெற்றுமுக்தனுவான். இந்தப் பிரகாரத்தில் பிரதிபந்தத்தைப் போக்கடித்துச் சிரவணுதிகள்செய்து ஞானம் பெற்றவனே சீவன்முக்த னென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணுகமங்களிற் சொல்லப்படுகின்றது இதிற் சம்சயமில்லை சித்தம்.

ஆசுரவாசனுப்பிரதிபந்தநிருபகம்
முற்றிற்று.

இருபத்துமூன்றுவது,

சிரவணுதித்திரயநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளிற் சிரவணுதிகள் செய்யவேண்டுமென்று சொல்லுகிறபடியால் சிரவணமாவ தேதென்னில்,

உ-ம். சமஸ்தமான வேதாந்தங்களுக்குஞ் சட்விதலிங்க தாற்ப ரியத்தினுல் பிரமசுவரூபமாகிய வாத்மாவினிடத்திற் ருற் பரியமென்று புத்தியில் நிச்சயிப்பதே சிரவணம்.

ச-கை. மனனமாவ தேதென்னில்,

உ-ம். சுருதியர்த்தங்களை விசாரித்துக் கேட்கப்பட்ட அர்த்தத் திற்கு யுத்தியினு லேகவாக்கியம் பண்ணிச் சிந்திக்கிறதே மனனம்.

ச-கை. நிதித்தியாசனமாவதேதென்னில்,

உ-ம். விசாதிகமான காமக்குரோதாஞ்ஞானங்களைவிட்டுவிட்டுச் சுசாதிகமான அகம்பிரமாஸ்மியென்கிற நிரந்தர சிந்தையைப் பெறுவதே நிதித்தியாசனம்.

ச-கை. இதுகளாற் பிரயோசன மேதென்னில்,

உ-ம். சார்வதா சிரவணம்பண்ணினால் சகல சம்சயபாவனைகளையும், சார்வதா மனனம்பண்ணினால் அசம்பாவனைகளையும், சார்வதா நிதித்தியாசனம்பண்ணினால் விபரீதபாவனைகளையும் போக்கடிக்கும். பிரதிபந்த அழுத்தமுள்ளவர்களும், சார்வதா இந்தமூன்றுஞ் செய்யவேண்டும். அஃதில்லாத சூட்சுமபுத்தியுடையவர்களுக்குச் சிரவணகாலத்திற்றானே மனனநிதித்தியாசனங்களுஞ்சித்திக்கும்.

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். புத்திசாலியானவன் ஸ்ரீசற்குருவினிடத்தில் பாடங்கேட்டுப் படித்தபோதே யுத்தியினால் வாக்கியார்த்த ஆலோசனைபண்ணி அவ்வர்த்தத்திற் கேகவாக்கியம் பண்ணுவான். அதுவே மனனமும் அவனதுசித்தம் விஷயாகாரமாகச் செல்லாது சிரவணமனனத்தினாற் சம்சயரகிதமான சுவரூபத்தில் ஏகாக்கிரமாய் நிற்கும். அதுவே நிதித்தியாசனமுமென்று சொல்லப்படும். எந்தமூடனானவன் பிரதிபந்தத்துடன் கூடியிருக்கிறானோ, அவன் சிரவண மனன நிதித்தியாசனங்களைத் திரும்பவும் திரும்பவும் பண்ணவேண்டும். பிரதிபந்தமின்றிச் சூட்சும புத்தி யுடையவனாயிருக்கிற விவேகிக்குச் சிரவணகாலத்திற்றானே மனனமும் நிதித்தியாசனமுஞ் சித்திக்கும். இந்த அர்த்தத்தை ஸ்ரீசற்குருமுன்னிலையில் சங்கையற விசாரித்துணர்ந்தவனே சீவன்முத்தனென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணாதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

சிரவணாதித்திரயநிருபகம்

முற்றிற்று.

இருபத்துநான்காவது,

பாவனாத்திரயநிருபணம்.

ச-கை. சுருதியாதிகளிற் பாவனாத்திரயங்களை விசாரித்து நீக்க வேண்டுமென்று சொல்லுகிறபடியால் பாவனாத்திரய மாவதேதென்னில்,

உ-ம். சம்சயபாவனை அசம்பாவனை விபரீத பாவனை யென்று மூன்றுவிதம்.

ச-கை. அவற்றுள் சம்சயபாவனையாவ தேதென்னில்,

உ-ம். வஸ்து த்வயத்தைப் பற்றிக்கொண்டு வருவதே சம்சய பாவனை.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் மார்க்கத்திற் போகிற வொரு புருஷ னுக்கு ஊர்த்தாகாரமாயிருக்கிற ஸ்தாணுவைப்பார்த்து, இதுஸ்தாணுவோ, புருஷனோவென்றுவருகிற சித்தவிரு த்திக்குச் சம்சயபாவனையென்றுபெயர்.

ச-கை. அசம்பாவனையாவ தேதென்னில்,

உ-ம். இங்கே ஸ்தாணுவரக்காரணமில்லையே; ஸ்தாணுவராதே யென்றுவருகிற சித்தவிருத்திக்கு அசபாவனையென்று பெயர்.

ச-கை. விபரீதபாவனையாவ தேதென்னில்,

உ-ம். இது சர்வாத்மனாய் ஸ்தாணுவல்ல, புருடனேயென்று நிச்சயரூபமாய்வருகிற சித்தவிருத்திக்கு விபரீதபாவனை யென்றுபெயர். இப்படியே தாஷ்டாந்தத்திலும் பிர மாணகத சம்சயம், பிரமாணகத அசம்பாவனை, பிரமாண கதவிபரீதம், பிரமேயகதசம்சயம், பிரமேயகத அசம்பா வனை, பிரமேயகத விபரீதம் என ஒவ்வொன் றிரண்டு விதமாயிருக்கும்.

ச-கை. ஆனல் பிரமாணகத சம்சயமாவ தேதென்னில்,

உ-ம். சுருதிப்பிரமாணமானது கன்மத்தைப் பிரதிபாதிக்கின் றதோ, அல்லது சுதசித்தமாகிய பிரத்தியகாத்ம பிர மத்தைப் பிரதிபாதிக்கின்றதோவென்று வருகிற சித்த விருத்திக்குப் பிரமாணகத சம்சயமென்றுபெயர்.

ச-கை. பிரமாணகத அசம்பாவனையாவ தேதென்னில்,

உ-ம். பிரமம் சித்தவஸ்துவானபடியினலும் பிரமாணந்தரங்களினல் பிருதிவியாதிகளைப்போ லறியப்படுகிற படியினலும் சுருதியாதிகளந்தச் சித்தப்பிரமத்தையெப்படிப்பிரதிபாதிக்கும்? அப்படி பிரதிபாதிக்கமாட்டாது என்றுவருகிற சித்தவிருத்திக்குப் பிரமாணகத அசம்பாவனை யென்றுபெயர்.

ச-கை. பிரமாண விபரீதமாவ தேதென்னில்,

உ-ம். பிரமம் சித்த வஸ்துவானபடியினல் சுருதிகளுக்குச் சித்தப்பிரமத்தைப் பிரதிபாதிக்குமிடத்தில் தாற்பரியமில்லை மேலும் சுருதிகள் சித்தப்பிரமத்தைப் பிரதிபாதிக்குமேயானல் புருஷனுக்குப் பிரவிர்த்திநிவிர்த்தி போக்குவரவு காணமலிருக்கவேண்டும். ஆதலாற் பிரயோசனமில்லாமற்போகும். உலகத்திற் பிரவிர்த்தி பூர்வகமாய்ப் புருஷார்த்தங்கண்டோம் ஆகையினல் சமஸ்த வேதார்த்தங்களுங் கர்மம் பிரமமேயென்று வருகிற சித்தவிருத்திக்குப் பிரமாணகத விபரீதமென்றுபெயர்.

ச-கை. பிரமேயகத சம்சயமாவ தேதென்னில்,

உ-ம். பிரமமே ஜகத்காரணமோ, அல்லது பிரதானதிகள்ஜகத்காரணமோவென்று வருகிற சித்தவிருத்திக்குப்பிரமேயகத சம்சயமென்று பெயர்.

ச-கை. பிரமேயகத அசம்பாவனையாவ தேதென்னில்,

உ-ம். ஜகத்துக்குப் பிரமம் அன்னியமாய் விலக்ஷணமாயிருக்கிறபடியினல் ஜகத்திற்குப் பிரமங் காரணமாகமாட்டாது. ஆதலால் பிரதானதிகளே ஜகத்காரணமென்றுவருகிற சித்தவிருத்திக்குப் பிரமேயகத அசம்பாவனை யென்றுபெயர்.

ச-கை. பிரமேயகத விபரீதமாவ தேதென்னில்,

உ-ம். உலகத்திற் புடவை நூலினிடத்தில்காரியகாரணங்களுக்கு ஏகரூபங்கண்டோம். அதுபோல அசுத்தியாதி விகாரங்களுடன் கூடியிருக்கப்பட்ட ஜகத்திற்குக் காரணமான பிரமமுமசுத்தியாதிகளுடன் கூடிக்கொண்டிருக்கவேண்டும். அங்ஙனமின்மையால் பிரதானதிகளே ஜகத்காரணமென்று திடமாய் வருகிற சித்தவிருத்திக்குப் பிரமேயகத விபரீதமென்று பெயர். இப்படியே பிரத்தியேகாத்ம விஷயசம்சயம், பிரத்தியேகாத்மவிஷய அசம்பாவனை, பிரத்தியேகாத்மவிஷய விபரீதமென மூன்றுண்டு.

ச-கை. ஆனாற்பிரத்தியேகாத்மவிஷய சம்சயமாவதேதென்னில்,
உ-ம். யந்திரத்திற் சீவனாகவும் ஜகத்திலொருவனாகவும் தோற்றிக்கொண்டிருக்கப்பட்டதான ஜகத்விலக்ஷணமான பிரமமாவேனோ, ஆகேனோவென்றுவருகிற சித்தவிருத்திக்குப் பிரத்தியேகாத்மவிஷய சம்சயமென்றுபெயர்.

ச-கை. பிரத்தியேகாத்மவிஷய அசம்பாவனையாவதேதென்னில்,
உ-ம். கர்த்ருத்வாதி அனேகதர்மயுக்தனாய்ப்பரிச்சின்னனாய்ஜனனமரணங்களிற் கூடிக்கொண்டிருக்கிறதனக்குஇத்தியாதிவிபரீத லட்சணங்களுண்டானதற்குப் பிரமசொரூபத்வமெப்படிகூடும். அதுகூடாதென்று வருகிறசித்தவிருத்திக்குப் பிரத்தியேகாத்மவிஷய அசம்பாவனையென்றுபெயர்.

ச-கை. பிரத்தியேகாத்மவிஷயமாவதேதென்னில்,
உ-ம். தான் அகர்த்தாவானால், தன்னைக்குறித்து இந்தக்கர்மத்தைப்பண்ணு, இந்தக்கர்மத்தைப்பண்ணாதே, இதைப்பார், இதைப்பாராதே, இதைக்கிரகி, இதைக்கிரகியாதே, இதைப்பட்சி, இதைப்பட்சிக்காதேயென்றுவிதிரூபமாக வேதஞ்சொல்லவே மாட்டாது. சொல்லுகிறபடியால், நான் கர்த்தாவென்பதிற் சந்தேகமேயில்லையென்று கர்த்ருத்வயுபயோக்கியமான வபிமானாதிகளுக்குச் சுதர்மப்பிரீதிலட்சணமாய்வருகிற சித்தவிருத்திக்குப் பிரத்தியேகாத்மவிஷய விபரீதமென்றுபெயர். இந்தப்பாவனைகளின் தாரதன்மியங்களை ஸ்ரீசற்குரு முன்னிலையில் நன்றாய் விசாரித்துத்தள்ளிப் பரஞானத்தை யடைந்தவனே சீவன்முத்தனென்று சொல்லப்படும். இந்த விபரீதபாவனையைமாத்திரம் இன்னம் விசேஷமாய்விசாரித்தறியவேண்டும்.

ஏனென்றால் உலகத்தில் சுருதி ஸ்மிருதியிதிகாச புராணாதியுக்த வசனங்களெல்லாம் நீயேயாத்மா, நீயேபிரமமென்றுசொல்லப்பட்டும், ஸ்ரீசற்குருவும் நீயேயாத்மா, நீயேபிரமமென்று சுருதியுத்தியனுபவங்கள்முதலிய வெகுபிரகாரங்களால் உபதேசஞ்செய்வித்தும் ஈஸ்வரகடாக்ஷமும் பெரியோர்களுடைய கடாக்ஷவீக்ஷண்ணியமுமில்லாத பரமாத்மாக்களுடைய மலசகிதசித்தமானது துன்மார்க்கத்வ சங்கத்தினால் சச்சிதானந்த சொரூபமாகிய வாத்மாவே நானென்றுகிரகிக்க வல்லமையில்லாமையால்

சடமாகிய தேகேந்திரியாதிகளையே நானென்றுகிரகிக்கும். ஆதலால் அந்த விபரீதத்தை நானுவித திருஷ்டாந்தத்தினால் விசாரித்தறிந்து யூகபுத்தியினாற் றள்ளிவிடவேண்டியது.

ச-கை. ஆனாலந்தத் திருஷ்டாந்த மெப்படியென்னில்,

உ-ம். தர்மகுத்தனென்றொரு அரசனுண்டு அவன் தனது தர்மத்தினாலேயே பிரதானிமுதலிய பரிசனங்களுக்கும் நன்றாய்சவரட்சணைசெய்து துஷ்டநிக்கிரகஞ் சிஷ்டபரிபாலனம்பண்ணிக்கொண்டுவந்தான். அப்படியிருக்குங்காலத்தில் பரிசினியென்னும் பெயரையுடைய ஒருபரமார்த்த வஞ்சகன் அந்தராஜனிடத்தில் பிரதானியாக வந்துசேர்ந்தான்.

அவன் அவ்வரசனுக்கு அதர்மங்களையே போதித்து ஓய் மகாராஜாவே! இந்த வித்துவான் முதலானபேர்களுக்கு ஏன்விருதாவிற் சம்பளங்கொடுத்துவருகிறீர்கள்? இவர்களாலும் ஸ்தானாதிபதி, வாயில்காப்போர், கொல்லர் முதலான இவ்வளவுஜனங்களாலும், மாதமொன்றுக்குஎவ்வளவுபொருள் வீணாகச்செலவாகின்றது? இந்தப் பிரதிஷ்டையினால் நமக்கென்னபிரயோசனமென்று நாள்தோறுஞ் சொல்லிச்சொல்லி அவர்களுக்கெல்லாஞ் சீவனமில்லாமற் பண்ணுவித்து, அவர்களையெல்லாந் துவேஷம்பண்ணிக்கொண்டு, ராஜாவும்நாமும் ஒருமையாயிருந்தால், இவர்கள் துவேஷம் நம்மை யென்னசெய்யுமென்று அசட்டையாய்அவர்களையெல்லாம் அவமதித்திருந்தான்.

இப்படியிருக்க ஒருநாள் சமஸ்தமானபேரு மொன்றாகக்கூடியாலோசித்து, இந்தப்பரிசினியென்பவனை ராஜசமுகத்திற்குவரவொட்டாமற் செய்கிறதே யுக்தமென்று தீர்மானித்துக்கொண்டு அவன்வருஞ் சமயம்பார்த்துப் பலபேருமாய்அவன்மேல்விழுந்து அடித்துத்துரத்திவிட்டார்கள். இந்தச்சேதியைதெரியாத அரசன் பரிசினியேன்வரவில்லையென்றுகேட்டால் அவனுக்கு மகாசுரவியாதிவந்து சம்பவித்திருக்கிறதென்றுசொன்னார்கள். அதைக்கேட்டவரசன் அவனிடத்தில் வைத்திருக்குமிஷ்டத்தினால் அரமனைவயித்தியர்களையனுப்பிப்பார்க்கும்படி செய்வித்தான். அவர்களும் மேற்படியார் கூட்டத்திற் சேர்ந்தவ

ர்களாதலால் ஓய்மகாராஜாவே! நாங்களென்ன அவுஷதங்கள் கொடுப்பித்தபோதிலும் அவன்பிழைக்கிறது அருமையாயிருக்கிறதென்று சொன்னார்கள்.

அதைக்கேட்ட அரசனும் மகாவிசனங்கொண்டு நான் அவனைப்போய்ப்பார்த்து வரவேண்டுமென்றுபிரயாணப்பட்டுப்போகும்போது அந்தச்சேதிதெரிந்து சிலபேர் அரசனுக்கெதிரேவந்து, சுவாமீ! பரிசினி யிறந்துபோனான், அந்தப்பிணத்தை நீங்கள்போய்ப் பார்க்கலாகாதென்று சிலசாஸ்திர திருஷ்டாந்தங்க ளெடுத்துக்காட்டியரசனை பரிசினிவீட்டுக்குப் போகவொட்டாமற்றடுத்து ஓய்மகாராஜாவே! உமக்கு இந்தலோகத்தில் எவ்வளவுசிநேகர்களிருக்கிறார்கள்? அனேகராயிருந்தாலும் உங்களுக்கு எவர்கள்பேரில் கிருபையோ, அவர்கள்தான் உங்கள்சிநேகத்திற்குப் பாத்திரராவார்களென்று பலவிதமான இதவார்த்தைகளைச்சொல்லி அரசனதுதுக்கத்தைப்போக்கியரண்மனைக்குத் திரும்பும்படிசெய்து விட்டார்கள்.

பிற்பாடு இதுகளெல்லாம் பரிசினியென்பவனறிந்து நாம் எப்போதும்போல ராஜசமுகம்போய்ச் சேர்ந்தல்லவா இவர்களுக்கெல்லாம் பிராயச்சித்தம் பண்ணுவிக்கவேண்டும். இவர்களைப் பிராயச்சித்தம் பண்ணுவிக்காமல் நாம் க்ஷவரகர்மம் பண்ணக்கூடாதென்று பிரதிக்கினை பண்ணிக்கொண்டு, நமக்கு ராஜசேவை யெப்போது கிடைக்கப்போகிறதென்று வெகுநாள் காத்துக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்கப் பரிசினியும் ஒருநாள் அவ்வரசன்சவாரிபுறப்படுகிற சமாசாரங்கேள்விப்பட்டு, வழியிலொருஅரசமரத்திலேறிக்கொண்டு, ஒருவருக்குந் தெரியாமற் பதுங்கியிருந்தான். அப்படியிருக்க; அவ்வரசன் சதுரங்கசேனைகளுடன் தாம்தாமென்று சகலவாத்தியங்களும் முழங்கும்படி அம்மரத்திற்குச் சமீபமாய் சவாரிவரும்போது, இந்தப்பரிசினியென்பவன் பிரத்தியட்சமாய்க்கண்டு விஜைபவாவென்றுகூவி, நான்தான் பரிசினி, என்னையுங்கள் சமுகத்திற்கு வரவொட்டாமலெல்லாருங்கூடிச் சங்கேதம்பண்ணிக்கொண்டு, என்னைக்கண்டவிடத்தி லடித்துத்துரத்தித் துராகிருதம்பண்ணுகிறார்களென் றாரத்தசத்தமாகச்சொல்ல, அதுகேட்டு அரசனுந்திரும்பி மரத்

தின்மேலிருக்கும் பரிசினியைப் பிரத்தியட்சமாகப் பார்த்தான்.

அந்தச்சமயத்தி லங்கிருந்தபரிசனங்களெல்லாம் ஓ! ஓ!! ஏதுமோசம்வந்ததே; இனியெப்படியென்று சீக்கிரத்தில் விபூதியை அபிமந்திரித்து, அரசன்மேல் தெளித்து, துப்பட்டாவல் ராஜனை மூடிமறைத்து, அகோ மகாராஜாவே! தேவரீர் பீதிகொள்ள வேண்டாம், முன்செத்துப் போன பரிசினி இந்தமரத்தில் பிரமராட்சதனுயிருந்து; உம்மைக்கூப்பிட்டிரைகிறுனென்று சகலவாத்தியங்களையும் நன்றுய்கோஷிக்கும்படிசெய்வித்து; அதிசீக்கிரத்தில்தானே ராஜாவை யரமனைக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டார்கள்.

பிற்பாடு சிலபேரைவிட்டு அந்தப்பரிசினியைநன்றுயடித்துப் பட்டணத்திற்குப்புறம்பே துரத்திவிட்டார்கள். இப்படிராஜன், தனதுதோஷரகிதமான கண்களால் பரிசினியை நன்றுய்ப்பார்த்தும் அவன்குரல்வசனங்களைக்கேட்டும் அவர்கள்செய்த ஜாலத்திறல் விவேகம் விளங்காமல் உள்ளபடி பிரமராட்சதனென்றெப்படி நிச்சயிக்கப்பட்டானே, அப்படியேசுருதி ஸ்மிருதியிதிகாசபுராணுகமாதிக ளனேகவிதங்களினுல், நீயேபிரமமென்று சொன்னுலும், ஸ்ரீசற்குருநாதனும் சுருதியுத்தி யனுபவங்களாற் பிரத்தியட்சப் பிரமாணத்துடன் நீயே பிரமமென்று உபதேசித்தாலும், சுருதிப்பிரமாணத்தினுல் ஞானேதயமுண்டாயிருந்தாலும் பிரதிபந்தமுடையவர்கள்தேகேந்திரியாதி விபரீதங்களையே நானென்று விவேகவிளக்கமில்லாமற் கிரகித்துக்கொள்வார்கள்.

ஆதலாலுண்மையாகிய வேதாந்த சாஸ்திர யுக்தசொரூபமே திருமேனியாகிய ஸ்ரீ சற்குருகடாட்சத்திறற் சம்சயமறக்கேட்டுத்தெளிந்து, கேட்டபடியுத்திபண்ணி, யுத்திபண்ணினபடி யனுபவத்திற்கண்டு, கண்டபடி பிரதிபந்தங்களைநீக்கிச் சாட் ாத்கார மடைந்தவனெவனே, அவனே சீவன்முத்தனென்று சுருதி ஸ்மிருதி யிதிகாசபுராணுதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்,

பாவனுத்திரய நிருபகம்

முற்றிற்று

இருபத்தைந்தாவது,

ஷட்விதலிங்கதாற்பரியநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளில் ஷட்விதலிங்க தாற்பரியங்களைக் குருமுகமாய் விசாரித்தறியவேண்டுமென்று சொல்லுகிறபடியால் ஷட்விதலிங்கமாவ தேதென்னில்,

உ-ம். உபக்கிரமம், உபசங்காரம், அப்பியாசம், அபூர்வதை பலம், அர்த்தவாதம், உற்பத்தியென்று சொல்லப்படும்.

ச-கை. உபக்கிரமமாவ தேதென்னில்,

உ-ம். அகண்டபரிபூரண சச்சிதானந்த பிரமத்தினிடத்தில் ரச்சுவிற் சர்ப்பந் தோன்றினதுபோல சகல பிரமாண்டங்களாகிய ஜகத்துண்டாயிற்று; சிருஷ்டிக்குமுன்னமே இந்த ஜகத்து நாமரூபரகிதமாய் சத்தாமாத்திரமா யிருந்ததென்று பிரதிபாதிக்கப்படுகிறதே உபக்கிரமம்.

ச-கை. உபசங்காரமாவ தேதென்னில்,

உ-ம். இப்படி தோற்றப்படுகிற சர்வ ஜகத்தும் அந்தச் சத்தினுடையசொரூபம்; அதுவே சத்தியம்; அதுவே யாத்மசொரூபமென்று பிரதிபாதிக்கப்படுவதே யுபசங்காரம். இவ்விரண்டும் அத்விதிய வாத்ம சொரூபத்தைப் பிரதிபாதிக்கிறபடியா லிவ்விரண்டு மொருலிங்கமாம்.

ச-கை. அப்பியாசமாவ தேதென்னில்,

உ-ம். பிரத்தியேகாத்மாவாகிய நீயேபிரமமென்று ஒன்பது பிரகாரமாக வுபதேசிப்பது. அவ்வுபதேசம் சேதனனைக் குறித்துச்சொல்வதினாலும், சேதனனுக்கே அத்தொய்த வாத்மதத்துவம் போதிப்பதினாலும் அஃதேயப்பியாசம்.

ச-கை. அபூர்வதையாவ தேதென்னில்,

உ-ம். அஷ்டப்பிரமாணங்களுள் உபநிஷத் பிரமாணத்தினாற் பிரத்தியேகாத்ம லக்ஷணத்தை யறியப்படுவதன்றி, மற்றைப்பிரமாணங்களா லறியப்படாதென்று பிரதிபாதிக்கப்படுகிறதே யபூர்வதை.

ச-கை. பலமாவ தேதென்னில்,

உ-ம். ஆத்மஞானிக்கு இந்தத் தேகேந்திரியாதி சர்வஜகத்தும் பிராரத்தமுள்ளமட்டு மித்தையாய்த் தோற்றப்படுகின்

றது. பிராரத்தநாசத்தில் சர்வாத்மனுய்த் தோற்ருமல் அத்வொய்த சொரூபமாத்திரமாய்ப்பிரகாசிக்குமென்று பிரதிபாதிக்கப்படுகிறதே பலம்.

ச-ஷ. அர்த்தவாதமாவ தேதென்னில்,

உ-ம். எந்தவஸ்துவைக் கேட்டமாத்திரத்தில் கேட்கப்படாத வஸ்து கேட்கப்படுகின்றது, எந்த வஸ்துவை மனனம் பண்ணினமாத்திரத்தில் மனனம்பண்ணப்படாத வஸ்து மனனம்பண்ணப்படுகின்றது, எந்த வ்ஸ்துவை யறிந்த மாத்திரத்தில் அறியப்படாத வஸ்து அறியப்படுகின்றதோ, அதுவே பஞ்சகிர்த்தியங்கட் காதாரபூதமான கர்த்தவ்வியமாய் விளங்குகிறதென்று பிரதிபாதிக்கப்படுகிறதே யர்த்தவாதம்.

ச-கை. உற்பத்தியாவ தேதென்னில்,

உ-ம். மிருத்திகையிற்பிறந்த கடகலசாதிகளும், சொர்ணத்திற் பிறந்த கடகமகுடாதிகளும், இரும்பிற்பிறந்த கட்கமுதலானதுகளும் காரணத்தையன்றிப் பிரதக்கதாய்த் தோற்றினபோதிலும் இந்தக் காரியாதிகளுக்கு உச்சாடன மாத்திரமன்றி, வேறே யர்த்தமில்லாதபடியினல் காரண வெதிருத்தமாய்க் காரியமில்லையென்று பிரதிபாதிக்கப் படுகிறதே யுற்பத்தி. இப்படியே பிரசித்தமாய்த் தோற்றப்பட்ட ஜகத்தும் பிரத்தியேகாத்மசொரூபமான பிரம விகாரமானபடியினல் பிரத்தியேகாத்மாவையன்றி வெதிருத்தமா யில்லையென் றறியவேண்டியது.

இந்தப்பிரகாரம் அனுபவமே திருமேனியாகிய வாசிரியர் முன்னிலையில் ஷட்விதலிங்கத்திறைச் சுருதிகளுக்குத் தாற்பரியங்களைக் களங்கரகிதமாய் விசாரித்தறிந்து நிச்சயிக்கின்றவன் சிரவணமாத்திரத்தில் அத்விதிய வாத்மஞானியாவன், அவனுக்கு மனனநிதித்தியாசனம் வேண்டுவதில்லை. ஆசிரியர் சம்சயரகிதமாய்ப் பிரத்தியக்ஷமாய்ப் போதித்தும் சிஷன் மந்தனுய் விபரீதபுத்தியுடையவனுயிருந்தால் அவனுக்கே மனன நிதித்தியாசனமுதலிய வுபாதிகாரியமெல்லாம் வேண்டும். ஆதலால் எவன் ஷட்விதலிங்க தாற்பரியத்தினுல் ஸ்ரீ சற்குரு முன்னிலையில்

சாக்ஷாத் தரிக்கிறானோ, அவனே சீவன்முத்தனும் பரமுத்தனு முபாதிரகிதனுமென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணாகமங்களிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சய மில்லை சித்தம்.

ஷட்விதலிங்கதாற்பரியநிருபகம்
முற்றிற்று.

இருபத்தாறாவது,

தத்துவநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளில் தத்துவவிசாரம்பண்ணவேண்டுமென்று சொல்லுகிறபடியால் தத்துவமாவ தேதென்னில்,

உ-ம். ஞானேந்திரிய பஞ்சகமும், கன்மேந்திரிய பஞ்சகமும், பிராணாதிபஞ்சகமும், சத்தாதிபஞ்சகமும், அந்தக்கரண சதுஷ்டயமுங்கூடி உச-தத்துவங்களென்றும், இப்படி சொன்ன உச-தத்துவங்களும், அபஞ்சீகிருத பூதமும், சரீரத்திரயமும், அவஸ்தாத்திரயமும், அஞ்ஞானமுங் கூடி ௩௬-தத்துவங்களென்றுஞ் சொல்லப்படும். இதுகளைச் சற்குருமுன்னிலையில் சந்தேகவிபரீதமின்றி விசாரித்தறிந்து; இதுகளுக்கு விலக்ஷணமாகிய அத்விதிய ஆத்மசொரூபமே நானென் றெவனறிகிறானோ, அவனே சீவன்முத்தனென்று சுருதி ஸ்மிருதியாதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

தத்துவநிருபகம்
முற்றிற்று.

இருபத்தேழாவது

பிரமசரியத்வநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளிற் சொல்லப்படுகிற பிரமசரியத்வ மாவ தேதென்னில்,

உ-ம். தரிசனம், பரிசனம், கேளி, கீர்த்தனம், குய்யபாஷணம், சங்கற்பம், அத்தியாவசாயம், கிரியா நிவர்த்தி என்கிற

எண்வகையிலும் நிராசையா யிருப்பதே பிரமசரியத்வ மென்னப்படும்.

ச-கை. தரிசனமாவ தேதென்னில்,

உ-ம். ஒரு ஸ்திரீயை ஆசையாகப் பார்க்கிறது.

ச-கை. பரிசனமாவ தேதென்னில்,

உ-ம். ஒருஸ்திரீயை ஆசையாகத் தீண்டுவது.

ச-கை. கேளியாவ தேதென்னில்,

உ-ம். ஒருஸ்திரீயோடு ஆசையாகச் சரசமாய் விளையாடுகிறது.

ச-கை. கீர்த்தனமாவ தேதென்னில்,

உ-ம். ஒருஸ்திரீயை அப்படிப்பட்டவ ளிப்படிப்பட்டவளென்று ஆசையாக வர்ணிக்கிறது.

ச-கை. குய்யபாஷணமாவ தேதென்னில்,

உ-ம். ஒருஸ்திரீயோடு ஆசையாய் ஏகாந்தத்தில் வசனிக்கிறது.

ச-கை. சங்கற்பமாவ தேதென்னில்,

உ-ம். ஒருஸ்திரீயை யாசையாய் மனதில் நினைக்கிறது.

ச-கை. அத்தியாசமாவ தேதென்னில்,

உ-ம். ஒருஸ்திரீயைச் சேரவேண்டுமென்று மனதிலாசையாய்த் தீர்மானிக்கிறது.

ச-கை. கிரியாநிவர்த்தியாவ தேதென்னில்,

உ-ம். ஒரு ஸ்திரீயை ஆசையாய்க் கூடியனுபவிக்கிறது. இவ்வெண்வகைகளும் ஒன்றுக்கொன்று தாரதன்மியமாயிருந்தாலும் சமஸ்தத்துக்கும் இச்சையே காரணமாகையால், சாமானியமாய் மைதுனங்களென்றே பெரியோர்கள் சொல்லுவார்கள். அன்றியும் இந்தப் பிரமசரியத்வமுடையவர்களுக்குச் சிரவணமாத்திரத்தில் தானே ஞானம்வருமென்பதிற் சந்தேகமில்லை. மேலும் அப்படிப்பட்ட ஆத்மஞானிகளை அஜிம்மன், சண்டகன், பங்குரன், அந்தகன், பதிரன், முகதனென்று சுருதியாதிகள் கோஷிக்கின்றது

ச-கை. அஜிம்மனுவ தேதென்னில்,

உ-ம். நாவில்லாதவனல்ல; இதுவெனக்குப் பிரியம், இதுவெனக்கு அப்பிரியமென்று சொல்லாமல் கர்த்ருத்வாபிமானரகிதமாய் இட்டதைப்பொசித்து அசத்தியம் பேசாமலும் மிகுந்து பேசாமலுமிருக்கிறவனை அஜிம்மன்.

ச-கை. சண்டகனுவ தேதென்னில்,

உ-ம். பேடியல்ல; சத்தியாய்ப் பிறக்கப்பட்ட சிசுவையும் பதினாறுவயதுள்ள ஸ்திரீயையும் நூறுவயதுள்ள ஸ்திரீயையும் சமமாகக்கண்டு நிருவிகாரியாயிருக்கிறவனே சண்டகன்.

ச-கை. பங்குரனுவ தேதென்னில்,

உ-ம். முடவனல்ல; பிச்சைநிமித்தம், மலசல நிமித்தமாய் ஓரிடத்திற்குப்போகிறதும், அதவா கிராமாந்தரங்களுக்குப் போகவேண்டுமென்கிற விச்சையுண்டானாலும் யோசனை தூரத்திற்குப் போகிறதேயன்றி அதிகமாய்ப்போகாமலுமிருக்கிறவனே பங்குரன்.

ச-கை. அந்தகனுவ தேதென்னில்,

உ-ம். குருடனல்ல; கண்ணிருந்தபோதுஞ் சஞ்சரித்தபோதும் நாலுநுகத்தடியளவு பூமியைவிட்டு அப்பால் பார்க்காமலிருக்கிறவனே அந்தகன்.

ச-கை. பதிரனுவ தேதென்னில்,

உ-ம். காதுகேளாதவனல்ல; இதமாகியவசனமும் அகிதமாகிய வசனமுஞ் சுரோத்திரத்திற்குக் கேட்கப்படுகிறதாயிருந்தாலும் அதுகளி லிதாகிதங்களில்லாம லிருக்கிறவனே பதிரன்.

ச-கை. முகதவனுவ தேதென்னில்,

உ-ம். மூடனும் சவுந்தரியவானுமல்ல; சமஸ்த விஷயமுந் தன் சந்நிதானத்தின்முன் வந்திருந்தபோதிலும் இந்திரிய படுத்துவ முண்டானவனும், அவ்விஷயங்களை யனுபவித்தற்குத் திடகாத்திரனுயிருந்தாலும்நித்திரைபோகிறவன் போல் புத்தியில் நழுவியிருக்கிறவனே முகதன் என்று சொல்லப்படும். இவ் வாறுதன்மையு முண்டானவனே விவகாரதசையிலிருந்து விடுபட்ட விரத்தனென்றும், சந்நியாசியென்றும், முத்தனென்றும், அதிவர்ணுசிரமியென்றும் சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணுதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

பிரமசரியத்வநிருபகம்

முற்றிற்று.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

இருபத்தெட்டாவது,

சத்தவிதசைதன்யநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளிற் சொல்லப்படுகிற சத்தவிதசைதன்னியமாவதேதென்னில்,

உ-ம். சுத்த சைதன்யம், ஈஸ்வர சைதன்யம், சீவ சைதன்யம், பிரமாத்துரு சைதன்யம், பிரமாணசைதன்யம், பிரமேய சைதன்யம், பல சைதன்னியமென்று ஒருசைதன்னியமே விவகாரத்தி லேழுவிதமாகச் சொல்லப்படும்.

ச-கை இவ்வேழுக்கும் பேதமெப்படியென்னில்,

உ-ம். மாயாரகித சைதன்னியத்திற்குச் சுத்த சைதன்னியமென்றும், மாயாசகித சைதன்யத்திற்கு ஈஸ்வரனென்றும், அவித்தியாசகித சைதன்னியத்திற்குச் சீவனென்றும், அந்தக்கரணசகித சைதன்னியத்திற்குப் பிரமாதாவென்றும், அந்தக்கரணவிருதிசகித சைதன்னியத்திற்குப் பிரமாணமென்றும், அப்பிரத்தியக்ஷ விஷயசகிதசைதன்னியத்திற்குப் பிரமேயமென்றும், பிரத்தியக்ஷ விஷயசகித சைதன்னியத்திற்குப் பலமென்றுஞ் சொல்லப்படும். இந்தப்பிரகாரத்தில் அத்விதியமாகிய பரிபூரண வாத்மாவே யுபாதிபேதத்தினுல் அனேகவிதமாகத் தோற்றப்படுகின்றது. ஆகலால் இந்தவுபாதி பேதங்களை ஸ்ரீசற்குருவினுற்றெளிந்து சொரூபமுதற் பலம் வரையிலுமுண்டான வுபாதிமுறைமையையறிந்து தள்ளி ஒன்றினுலுந் தள்ளப்படாத அத்விதிய பரிபூரணமாகிய வாத்மாவே நானென்று எவனறிகிறுனே, அவனே உபாதிரகிதனுன சீவன்முத்தனென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணங்களிற்சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

சத்தவிதசைதன்யநிருபகம்

முற்றிற்று.

இருபத்தொன்பதாவது,

பஞ்சப்பிரமைநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளில் பஞ்சப்பிரமைகளையும் அதனதன் நிவிர்த்திகளையும் விசாரித்தறியவேண்டுமென்று சொல்லுகிறபடியால் பஞ்சப்பிரமையாவ தேதென்னில்,

உ-ம். பிரமமும், பரமேஸ்வரனும் வேறென்பது பேதப்பிரமை; பிரமத்துக்கே கர்த்ருத்வாதிகம் வாஸ்தவமென்பது கர்த்தவியப்பிரமை; சரீரத்திரய வசிச்சின்னனாகிய வாத்மாவைச் சங்கனாய்க் காணப்படுகின்றது சங்கப்பிரமை; ஜகத்துக்குக் காரணமான பிரமத்தை விகாரியென்பது விகாரப்பிரமை; காரணமான பிரமமன்றி இந்த ஜகத்து சத்தியமென்பது ஜகத்பிரமை இதுகளையே பஞ்சப்பிரமையென்றுசொல்லுவார்கள்.

ச-கை இதுகளுக்கு நிவிர்த்தியெப்படியென்னில்,

உ-ம். பிம்பப்பிரதிவிம்ப திருஷ்டாந்தத்தினாற் பேதப்பிரமையும், படிகலோகிதத்தினாற் கர்த்தவ்வியப் பிரமையும், கடாகாச மடாகாச திருஷ்டாந்தத்தினாற் சங்கப்பிரமையும், ரச்சுசர்ப்ப திருஷ்டாந்தத்தினால் ஜகத்காரணமான பிரமத்தினிடத்திற்றோற்றின விகாரப்பிரமையும் சொர்ணலோக மிருத்திகா திருஷ்டாந்தத்தினால் காரணத்திற் கன்னியமான ஜகத்பிரமையும் நிவிர்த்திக்கப்படும்.

இந்தப் பஞ்சப்பிரமைகளும் அஞ்ஞானத்தினால்வரும். ஆகையால் ஸ்ரீசற்குரு முன்னிலையில் இவற்றிற்குக் காரணமான அஞ்ஞானப் பிரமையுண்டான விதத்தை விசாரித்தறிந்து தன்னையுள்ளபடிகண்டு மேற்சொன்ன பிரமைகளணுகாத பரஞானத்தை யெவன் சம்பாதிக்கிறானோ, அவனே கிருதகிருத்தியனென்று. சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணங்களிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

பஞ்சப்பிரமைநிருபகம்

முற்றிற்று.

முப்பதாவது,

பிராரத்தத்திரயநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளில் பிராரத்தத்திரயங்களை விசாரித்தறிய வேண்டுமென்று சொல்லுகிறபடியால் பிராரத்திரயமாவ தேதென்னில்,

உ-ம். இச்சாபிராரத்தம், அனிச்சாபிராரத்தம், பரவிச்சாபிரா ரத்தமென மூன்றுவிதம். இம் மூன்று பிராரத்தமும் அவிவேகிகளுக்கும் விவேகிகளுக்குஞ் சமானமாயிருக் கும். இருந்தபோதிலும் அவிவேகிகளது பிராரத்தத் துக்கும் விவேகிகளது பிராரத்தத்திற்கும் பேதமுண்டு.

ச-கை. ஆனால் அவிவேகிகளினிச்சா பிராரத்த மெப்படிப்பட்ட தென்னில்,

உ-ம். ஐப்பசிமாதத்தின் மேகத்தைப்போ லொத்தது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஐப்பசிமாதத்தின் மேகஞ் சுலபமாய்க் காண்பித்து சர்வ த்திரா வியாபித்துக் கும்பத்துரோணமாய் வருஷித்துச் சகலபயிர்க ளழுகிப்போகவும் வீடுகள் சுவர்கள்விழவும் பண்ணிப் பிராணிகளுக்கனேக துக்கங்கள்செய்விக்கிறது போல, அஞ்ஞானிக்குச் சுலபமானவிச்சைபிறந்து அந்த மேகத்தைப்போல் சர்வத்திராவியாபித்துப் பருக்கநேக துக்கங்களைச்செய்து, தன்சாமார்த்திய வேதுவினலேயே கூடிவந்ததென்றும், தன் சாமர்த்திய மில்லாமையினுற் கூடியவரவில்லையென்று மெண்ணி இகபரங்களிற் சுக மில்லாமல் நரகமுஞ் சம்பாதிக்கும்.

ச-கை. விவேகிகளது இச்சாபிராரத்தமெவ்வகைப்பட்டதெனில்

உ-ம். தைமாதத்தின் மேகத்தைப்போலொத்தது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். தைமாதத்தின் மேகஞ் சர்வத்திரா வியாபித்துக்கொண் டே பிறக்கும். அப்படி பிறந்தாலுஞ் சுலபமாய் வருஷித் துப் பயிர்களுக்கும் பிரஜைகளுக்கும் துன்பத்தைக்கொ டாமல் தானுங்கெட்டுப்போம். அதுபோலவிவேகிகளது இச்சையானது கர்மவசத்தினல் வெகுவாய் வருகிறது போலிருக்கும். வந்தபோதிலும் புஷ்களமான விவேகத்

திஞலேயே பரருக்கு உபத்திரவங் கொடாமல் வருகிற தும் வராததும் பூர்வஜன்மசம்ஸ்காரகர்மப்படியேயென் றெண்ணித் தனக்குப் பரலோகத்துங் காணிசம்பாதிக்கா மல் தேகதாரணைமாத்திரமேவரும்.

மேலும் விவேகிகளானவர்கள் உலகத்தில் அவபத்தியங்கள் செய்து இறந்துபோனவர்களையும், திருடித் தலைவெட்டு ண்டவர்களையும், ராஜஸ்திரீயைக்கைப்பிடித்து ஆக்கினை பட்டவர்களையும் பார்த்து நாம் இந்தக்காரியங்களைச்செ ய்யப்போகாது; செய்தோமாஞல் நமக்கும் இவ்வனர்த்த ங்கள் நேரிடுமென்று பயந்து நிற்பார்கள்.

அவிவேகிகளோ வென்ருல் சுபாவ அனர்த்தமறிந்திருந்து ம் அதுநமக்கெம்மாத்திரம், அந்தக்காரியஞ் செய்கிறதற் கு அவர்களுக்குச் சமர்த்தில்லாமற் போச்சுது. நமது சமர்த்திஞற் செய்யலாமென்றெண்ணி அந்தவியாபாரத் திற் பிரவிர்த்தித்து தலைவெட்டுண்டு நிற்பார்கள். இந்த ப்படி அவிவேகிகளது இச்சாபிராரத்தத்துக்கும்விவேகி களது இச்சாபிராரத்தத்துக்கும் பேதமுண்டு.

மேலும் விவேகியானவர்கள் பிரீதியெல்லாம் அனர்த்தமெ ன்றெண்ணி உலகத்தில் அர்த்தவாசக்தியுடைய சமுசா ரிகள் அர்த்தஞ்சம்பாதிக்கிறதிலும் அதைச் சவரட்சணை செய்கிறதிலும் செலவழிந்து நஷ்டம்வருவதிலுந் துக்கப் படுவதைக்கண்டு, நாமும் இந்த அர்த்தத்தி லாசக்திவை க்கலாகாது, வைத்தோமேயாஞல் அவர்கள் துக்கப்படுவ துபோல நாமுந் துக்கப்படவேண்டுமென்று விசாரித்து, சமஸ்தபதார்த்தங்களிலும் ஆசத்திவிட்டுவிட்டு, லபிக்க ப்பட்ட லாபத்தை யனுபவித்துச் சந்தோஷகரமாயிருப் பார்கள், அவர்களது சரீர தாரணைமாத்திரமாகிய கிரி யைகளிடத்திலும் சவுசாதிக் கிரியைகளிடத்திலும் இச் சைவருமேயன்றி அன்னியவஸ்துவி லிச்சையுண்டாக மாட்டாது.

ச-கை. இனியனிச்சா பிராரத்த மெப்படியிருக்குமென்னில்,

உ-ம். விவேகிகளுக்கும் அவிவேகிகளுக்குஞ்சமானமாயிருக்கும்

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். தலையிற்றுங்குதல், காலிற்படுதல், தண்ணீரி லடித்துக் கொண்டுபோதல்,மழையினனைதல்,வெய்யிலிலடிபடுதல்

க்ஷயரோக முதலிய வியாதிகளுண்டாதல், இடிவிழுதல், கோயிற்கோபுரம் பிரகாரமண்டபம் விழுதல் ஆகியஇது களால்வருந்துக்கமும், வெய்யில் காற்று மழை யக்கினி இதுமுதலியவைகளால்வருஞ்சுகமும் விவேகிகளுக்குஞ் சமமா யிருக்கும்.

ச-கை. பரவிச்சா பிராரத்த மெப்படியிருக்குமென்னில்,

உ-ம். அதுவுஞ் சமானமாகவே யிருக்கும்.

ச-கை. அஃதெப்படியென்னில்.

உ-ம். ஒருபுருஷன் மவுனமாயுட்கார்ந்திருக்கும்போது அன்னி யனொருவன்வந்து, அவனை நமஸ்காரஞ்செய்து, நீஒருகா ரியம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அந்த த் தாட்சணியத்தினல் அந்தக்காரியத்தைசெய்து, அத னல்வருஞ் சுகதுக்கத்தை அவனனுபவிக்கிறன். இந்தவ னுபவம் விவேகிகளுக்கும் அவிவேகிகளுக்குஞ் சமமா யிருக்கும்.

இந்தப்படி பிராரத்தத்திரயத்தைவிசாரித்தபின்பு இச்சை யிலாவது, அனிச்சையிலாவது, பரவிச்சையிலாவது ஆ சைவந்தாலும்வரட்டும்; அவ்வாசையான இந்தப்பிராரத் தத்திரயவனுபவம் அகங்காரத்துக்கேயன்றி, அகங்கார சாட்சியாகிய நமக்கில்லையென்று ஸ்ரீசற்குருமுன்னிலையி ல் அகங்காரத்தையுந் தன்னையும்பகுத்தறிந்து அகங்கா ரத்திற்கூடாம லெவனிருக்கிறனே அவனே சுவரூபமு த்தனென்று சுருதி ஸ்மிருதி யிதிகாசபுராணுகமங்களிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

பிராரத்தத்திரயநிருபகம்
முற்றிற்று.

முப்பத்தோராவது,

சஞ்சிதாதிகன்மத்திரயநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளில் சஞ்சிதாதி கன்மத்திரயங்களைவிசாரித் தறியவேண்டுமென்று சொல்லுகிறபடியால் அஃதேதெ ன்னில்,

உ-ம். திருஷ்டாந்த பூர்வகமாய் நிரூபிக்கிறோம்.

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். ஒருபிராமணனுக்குப் பத்துக்ஷேத்திரமுண்டு. அதிலொவ்வொன்றுக்கு வருஷத்திலாயிரக்கலதானியம் விழுக்காடு பதினாயிரக்கலதானியம் விளையும். அதில் ஆயிரக்கலதானியம்விரைமுதலுக்கும், இரண்டாயிரக்கலதானியம் தர்மத்துக்கும், ஆயிரக்கலதானியம் பயிரிடுமாள்களுக்கும், ஆயிரக்கலதானியம் தீவாணத்தாருக்குமாகச் செலவுபண்ணதுபோக, மீந்த தானியத்தைப் பத்திரப்படுத்தி வைப்பான். இப்படியே வருஷாவருஷம் மீந்ததானியங்களைப் பத்திரப்படுத்திக் குறைந்தகாலத்தில் விற்போமென் றெண்ணிக்கொண்டிருந்தான்.

இந்தத் தானியத்திற்குச் சஞ்சிதமென்றுபெயர். வீட்டுச் சாப்பாட்டுக்குநிறுத்திய சிலவுமுதலிய தானியத்திற்குப் பிராரத்தமென்றுபெயர். முளைபயிர், பெரியபயிர், கதிர்ப்பயிர்களாகிய நன்செய், புன்செய்களுக்கு ஆகாமியமென்றுபெயர். இப்படியிருக்க ஒருசமயத்தில் கலகம்வந்து பிறதேசத்தார்கள் மேலிட்டுச் சஞ்சித தானியங்களெல்லாங் கொள்ளையிட்டுநெருப்புவைத்தார்கள். வரப்போகிற ஆகாமியவிளைவுமுதலானதுகளெல்லாம் இடைக்கொள்ளைக்காரர்கள் கொள்ளையிட்டுப் பயிர்களையெல்லாங்குதிரைகளுக்கு மாடுகளுக்குமாய் அறுத்துப்போட்டழித்துவிட்டார்கள்.

அதைக்கேட்டு அந்தப்பிராமணன் மிகுந்த விசனமடைந்து கிரகத்திற் சாப்பாட்டுக்கிருந்த பிராரத்ததானியத்தைப் பூமிக்குள்பத்திரம்பண்ணி நித்தியங் கொஞ்சங் கொஞ்சமாயெடுத்துச் சாப்பிட்டுக்கொண்டுவந்தான். அப்படியிருக்க அவன்பந்துக்கள்வந்து நீயுன்தேகபோஷணைக்கென்னசெய்கிறாயென்றுகேட்க, நான் சஞ்சிதமாய் வைத்திருந்த களஞ்சியதானியமெல்லாங் கொள்ளையாய்விட்டது வரப்போகிற வாகாமியதானத்தைஇடைக்கொள்ளைக்காரர் கொள்ளையிட்டுப்போனார்கள். வீட்டிற் கொஞ்சம் பிராரத்ததானியங் கட்டுக்கிடையாயிருந்தது. அதில்கொஞ்சங்கொஞ்சம் எடுத்துச் சீவனம்பண்ணிக்கொண்டு வருகிறேனென்று சொன்னான்.

ச-கை. இதினால் என்ன சித்தித்ததென்னில்,

உ-ம். சஞ்சிதாகாமியங்களுக்கு நாசமுண்டாகுமென்றும் பிராரத்தமாத்திரம் புசித்துத்தீரவேண்டுமென்றுஞ் சித்தித்தது. இந்தப்படி தாஷ்டாந்தத்திலும் நிரூபிக்கிறோம்.

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். உலகத்தில் அனாதியான சீவன் புண்ணியபாபகர்மங்களைச்செய்துவருகையில் ஒருநாள்செய்கிற பாவபுண்ணியகர்மமே வெகுஜன்மங்களுக்குக் காரணமாயிருக்கும். இப்படியே ஜன்மஜன்மங்களிலுஞ் செய்துவருகிறபோது அந்தக் கர்மமெல்லாம் ராசிராசியாகக்கூடும். இதுகளுக்கே சஞ்சிதமென்று பெயர்.

மரணமடைந்தபிறகு உடனே ஜன்மமெடுக்கிறநிமித்தம் அந்தக் கர்மசஞ்சிதத்திற்கொஞ்சங்கிரகித்து அதையனுபவிப்பதற்குக் காரணமான சரீரவேதுவாகிய பஞ்சீகிருதபஞ்சமகா பூதங்களைச் சரீராகாரமாகப் பரிணமிக்கப்பண்ணி அந்தச்சரீரத்தினாற் சிலகர்மங்களைச்செய்து அந்தக்கர்மத்துவாரா சுகதுக்கமனுபவிப்பன். இப்படியனுபவிக்கிறதற்கே பிராரத்தமென்றுபெயர். இந்தப் பிராரத்தங்களை யனுபவிக்குமிடத்து மரணபரியந்தஞ் செய்துவருகிற இதாகிதங்களுக்கே ஆகாமியமென்றுபெயர். இதுவே மேற்சஞ்சிதத்துக்குக் கட்டுப்படும்.

இப்படியே சீவன் கர்மங்களை யனாதியாய்ச்செய்து வரவர அந்தச்சஞ்சிதம் விருத்தியாகிவரும் ஆதலால்சீவர்களது ஜன்மங்களுக்கு நாசமேயில்லை.

ச-கை. ஆனாலந்தஜன்மங்களுக்குஅவதியெப்போதுவருமெனில்,

உ-ம். இப்படி கர்மங்களைச்செய்து வருகிறபோது ஒருஜன்மத்தில் ஓர் அதிக புண்ணியகர்ம பரிபாகபலத்தினால் சீவனுக்குச் சம்சாரபந்தம் வரவொட்டாமற் செய்துக்கொள்ளவேண்டுமென்கிற விவேகமுண்டாகும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். நான் காமியகன்மங்களையே பண்ணுவேனாகில் சித்தசுத்திவாராது; சம்சாரபந்தமும் போகாது என்கிற விசாரம் பிறந்து விகிதமான நிஷ்காமியகன்மங்களையே யீசுவரார்ப்பணமாகச் செய்துவருவான். அந்த நிஷ்காமபுண்ணியபலத்தினால் பக்தியும் அதனாற்சற்குருலாபமும் அதனாற் சிரவணமனன நிதித்தியாசனங்களுஞ் சித்தித்துஞானத்

தைச் சம்பாதித்துக் கொள்ளுவான். அப்படி ஞானமும் வந்தபோதே அந்தஞானாக்கினியினால் சஞ்சிதாகாமிய வஞ்ஞானமெரிந்து பஸ்பமாகிப்போம். அந்த ஞானம் வந்தபின் செய்யப்பட்ட புண்ணிய பாவகர்மங்களெல்லாம் அதர்த்தாவாகிய விவனைப் பரிசிக்கமாட்டாது.

ச-கை. ஆனாலந்தப் புண்ணியபாவங்களுக்குக் கதியேதென்னில்,

உ-ம். அந்த ஞானியைப் பூசித்தவர்களுக்குப் புண்ணியமுந்தூஷித்தவர்களுக்குப் பாவமும்போகும். பிராரத்தமாத்திரமனுபவித்துத் தீரவேண்டும். அதற்கு வேறே நாசஞ்சொல்லக்கூடாது இந்தப்படியே சஞ்சிதாகாமிய பிராரத்தங்களினுதியந்தமும் கர்த்தா போக்தாவின் அகமமதைகளும் நன்றாய்விசாரித்து இதுகளெல்லா மகங்காரத்திற்கேயல்லது சாட்சியாகிய நமக்கில்லையென்று ஸ்ரீசற்குருமுன்னிலையில் விசாரித்தறிகிறவனெவனோ, அவனே கிருதார்த்தனென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணுகமங்களிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

சஞ்சிதாதிகன்மத்திரயநிருபகம்

முற்றிற்று.

முப்பத்திரண்டாவது,

தார்க்கீகாதிபேதநிருபகம்.

ச-கை. உலகத்தில் வேதாந்த சாஸ்திரத்துக்கு வெதிருத்தமான காவிய நாடக தர்க்க சப்த மீமாம்சைகளைப் படித்தவர்களுங் கேவலமான கர்மிகளும் முமூட்சுக்களை நானுவிதவுபாயத்தினுற் பேதப்படுத்திக்கொடுப்பார்களென்றுபெரியோர்கள் சொல்லுகின்றார்களே; அஃதெப்படியெனில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் ஒரு மகாராஜனுனவன் தனது புரோகிதனையழைத்து எக்கியம்பண்ணுமென்றாக்கியாபித்துச் சகல பதார்த்தங்களுங்கொடுத்து, அதற்குத் தகுந்தபசுவகப்படாமலிருக்க, அதுதெரிந்து அவ்வரசனுனவன்; பசுலட்சணமறிந்த வொருபிராமணனையழைத்து, அவன்

கையிற் சிலதிரவியங்களைக்கொடுத்துப் பசுவைக்கொண் டுவரும்படி யனுப்பினான்.

அப்படியே நல்லதென்றுபோய் அந்தப்பிராமணன்பசுவுண் டாயிருக்கிற திக்கில்விசாரித்து சகலலட்சணமுநிறைந்த ஒருபசுவைப்பேசி அதற்கு அவர்கள் கேட்ட திரவியத் தைக்கொடுத்துப் பசுவை யோட்டிக்கொண்டுவரும்போ து வழியில், சுங்கக்காரர்கள்கண்டுமறிக்க, அரண்மனைக் குப் போகிறதென்று சொன்னமாத்திரத்தில் ராஜாக்கி னைக்குப்பயந்துவிட்டுவிட்டார்கள். அதுகண்டிருந்தவொ ருவன் அந்தச் சுங்கக்காரருக்குப் போதித்து, இதுநல்ல லட்சணமுள்ள பசுவாயிருக்கின்றது, இதை நா முபாய த்தினாற்கிரகிக்கலாமென்றுசொல்ல அவர்களவ்வுபாயமெ ன்னவென்றுகேட்க, ஐயா, நாம்நாலுபேரும்அவன்போ கிறமார்க்கத்தில் நாலு நாழிகைவழிக்கொருவராயிருந்து அந்தப்பசுவைப் பேய் நாய் என்றுசொல்லுவோம்; அப் படியே நாலுபேருஞ் சொல்லுகிறதினால் அந்தப் பிராம ணன் பிரமித்து அந்தப்பசுவை விட்டுவிடுவானென்றான் அதுகேட்ட சுங்கக்காரரும் அதற்குச்சம்மதித்துப்பிரா மணன் போகிறவழியில் நாலுபேர் நாலிடத்தி லிருந்தார் கள்.

பிற்பாடு அந்தப்பிராமணன் பசுவைப் பிடித்துக்கொண்டு போகிறதைப்பார்த்து, முன்னாக விருந்தவன் ஓய் பிராம ணா! பிராமணர்களுக்கு நாய்வளர்ப்பது உசிதமல்லவே; அதிலும் மனுஷரைக்கடித்துக் கொல்லப்பட்ட பேய்நா யை வளர்க்கலாமா, உமக்குத் தெரியாதா, ஒருநல்ல நாய கப்படாமற் போச்சுதாவென் றிப்படியனேகமாகச் சொ ல்லி, மேலு மிதுவெல்லாரையுங் கடிக்கிறதாகத் தோற் றுது; என்னிடங் கொண்டுவர வேண்டாமென்று சொல் லிப் பயந்தவனைப்போ லோடிப்போனான். அதுகேட்ட பிராமணன் ஓ! ஓ! இவனுக்குப் பயித்தியம்போற் காணு து. இவ்வளவு லட்சணமுள்ள பசுவைப்பார்த் திப்படி யேன் சொல்லுகிறானென்று அவன்சொல்லைச் சட்டை பண்ணாமற் செவ்வையாய்ப் போகிறபோது.

அவ்விரண்டா மனுஷனு மந்தப் பிராமணனைக்கண்டு, பேய் நாயென்று முன்சொன்னவன் போலவே சொல்லி யோ

டிப்போனன் அதுகேட்டு அந்தப் பிராமணனுந் திடுக்கி ட்டு, ஐயோ! இதுவென்ன ஆச்சரியம்! நாம் பேய்நாயை த்தான்வாங்கி மோசம்போனோமோவென்று மனதிற்சம் சயமுண்டாகி, இந்தப்பேய்நாய் நம்மையெங்கே கொல் லுமோவென்று, பதறிப்பதறி, அடிக்கடியந்தப்பசுவைப் பார்த்துக்கொண்டு; மகாபயத்துடன் அப்பால் நடந்து போகும்போது மூன்றாமிடத்திருந்தவ னிவனைக்கண்டு, இவன் தூரத்தில் வரும்போதே ஓய்பிராமணரேயென்று கூவி, நீர்பிடித்துவருகிற பேய்நாயை நம்மிடத்திற்கொ ண்டுவரவேண்டாமென்று தானுமோடித் தன்பக்கத்திரு ந்தவர்களையு மோடும்படி செய்தான்.

அதைக்கண்டு அந்தப் பிராமணன் திகிலடைந்து, ஓ ஓநாம் பேய்நாயைத்தான் யுந்தமாய்வாங்கிவந்தோம், இதிற்சந் தேகமேயில்லையென்று விசனத்தையடைந்து நாம் இந்த ப்பேய்நாயை விட்டுவிட்டுப்போகலாமென்றுநினைத்தால், இதுபிறகே துறத்திவந்து கடிக்குமேயென்கிற நிச்சயங் கொண்டு அந்தப்பசுவைவிட்டுவிடுகிற வுபாயசிந்தையுட ன்யோசித்துக்கொண்டு, அப்பால்போகும்போதுநாலாமி டத்திலிருந்தவன், இவனைப்பார்த்து, ஓய் பிராமணா! உ மக்குப் பயித்தியமோ தெரியவில்லை யேன்காணும் இந்த ப்பேய்நாயைப் பிடித்துக்கொண்டுவருகிறீர் இது எவர் களையுங் கடித்துக்கொல்லுமே, யுமக்குத் தெரியாதாவெ ன்று சொல்லி விலகிப்போனான்.

அதுகேட்டு அந்தப்பிராமணன்பயந்து, அப்பா, நான்தெரி யாமல் இதைவாங்கிவந்தேன்,இதையென்னிடத்திலிருந் துவிடுவித்தால் உனக்கு வெகுசுகிர்தமுண்டாகுமென்று பரிதாபமாய்க் கெஞ்சினான். அப்படி கெஞ்சின சொல் லைக்கேட்டு, ஐயா, எனக்கு உன்னிடத்தில்வரப்பயமாயி ருக்கின்றது, அதைவிடுகிற வுபாயமாத்திரஞ் சொல்லுகி றேன், என்னவென்றால்; உன்னைக்கயிற்றைப் பேய்நாயு டனேகூட்டி அதோவிருக்கிற மரத்தடியிற்கொண்டுபோ ய்நிறுத்தி; அந்தக்கயிற்றைவிடாமல் அந்தமரத்தைமூன் றுபிரதட்சணஞ்செய்துமுடிபோட்டோடிப்போமென்று சொன்னான்.

அதுகேட்ட பிராமணன் அப்படியேசெய்துவிட்டு இப்பால் வந்து அப்பா, உன்னுடைய சகாயத்தினலின்றுபிழைத்தேன், நீ இன்றைக்குப் பிராமணனை ரட்சித்தாய், துன்மரணத்தினல் நான் இறவாதபடி யென்னைக்காப்பாற்றினயேயென்று பலவாகத் தோத்திரஞ்செய்து, அவனிடத்திற்செலவுபெற்றுக்கொண்டு, இன்றைக்குநமக்குப்புனர் ஜனனமாச்சுது, இனிமேற் பசுக்கொள்ளப் போகப்படாதென்று நிச்சயித்துக்கொண்டு தன்னுடைய ஸ்தானம் போய் சேர்ந்துவிட்டான்.

இந்தப்படி அந்தவஞ்சகர்கள் பிரத்தியட்சமாய்ப்பரிஷித்துக்கொண்ட பசுவாயிருக்க அதை தாங்கள்கிரகிக்கிறநிமித்தம் பேய்நாயாக்கிப் பிராமணனது புத்தியைவெருட்டிமாறுபடுத்தினதுபோலத் தார்க்கிக சப்த மீமாம்ச கர்மிகள் முமூட்சுக்களையழைத்து அடா, கீதைகளையேன்படிக்கிறாய்? சந்நியாசிகளிடத்தி லுனக் கென்னகாரியம்? உபநிஷத்தேன்சொல்லிக்கொள்ளுகிறாய்? உனக்கெந்தப் பாவகர்மமோ ஸ்திரமாயிருக்கின்றது? நாரதர்முதலியரிஷியீஸ்வரர்களுக்கும் இந்திரன்முதலியதேவர்களுக்குங் கூட ஞானமில்லையென்று புராணசித்தமிருக்கின்றது. ஏக ஜீவபட்சமாகிய பேர்களுக்குச் சர்வாத்மனய் ஞானங் கூடாதென்றும், சந்நியாசம்வாங்கிக் கெட்டுப்போகிறார்களென்றும், கலியுகத்திற் சந்நியாசமே கூடாதென்றுஞ் சாஸ்திரசித்த மிருக்கின்றது; இவர்களெல்லாந் திரவிய மார்ச்சிக்கிற நிமித்தம் சந்நியாசம் பெற்றார்கள்.

நியாவதேது உனக்கு ஞானமேது? நாம் சகலசாஸ்திரமும் படித்தோம் படித்தநமக்கும்; ஞானங்கிட்டாதென்றுதீர விசாரித்தறிந்து கர்மமேபண்ணிவருகிறோம்; உனக்குமுத்திவேண்டுமானல் தர்க்கம்படி; இல்லாவிட்டால்சப்தம் படி; இல்லாவிட்டால காவியநாடக கர்மங்கள்படி, கீதைகளையு முபநிஷத்துக்களையுஞ் சர்வாத்மனய் ஸ்மரிக்கவேண்டாம்; உனக்கு ஞானம் போதிக்கிறே மென்கிறபேர்களை மகாவஞ்சகரென்றேயறி, அவர்களுக்குஞானமுண்டாயிருந்தல்லவா உனக்குமூலமான ஞானத்தைச்சொல்லவேண்டும்; அவர்களுக்கு முதலாய் ஞானசாதனமே யி

ல்லையே; அவர்கள் க்ஷணகாலம் வெய்யிலிற்பொறுக்கமா ட்டார்கள்; க்ஷணமாத்திரஞ் சீதஞ் சகிக்கமாட்டார்கள்.

அவர்கள் நாங்களே ஞானிகளென்று பெயரிட்டுக்கொண்டு திரிகிறார்களேயல்லாமல் ஞானலட்சணமாகிய திடப்பிர க்ஞைகளவர்களிடத்திற்சற்றுங்காணோம்; கோபதாபங்க ளே யதிகமாயிருக்கின்றது; ஒரு சுலோகத்துக் கர்த்தங் கேட்டால் தெரிந்துசொல்லமாட்டார்கள்; இவர்களது வஞ்சகத்துக்குள்ளா யனேகப்புருஷர்கள் கெட்டுப்போ னார்கள்; நீயுமெங்கே கெட்டுப்போகிறாயோவென் றுன் பேரில் தயவுபிறந்து இத்தனை தூரஞ்சொன்னோம்; நீயும் எங்களைப்போல் நன்றாய் விசாரித்தறிந்து இதுமுதல் வேதாந்திகளுடைய சங்கத்தை விட்டுவிடவேண்டியது.

உனக்கு முத்திவேண்டியதாயிருந்தால் நாமறிந்திருக்கிற ரகசியமான மந்திரங்களி லொன்றை யுபதேசிக்கிறோம்; அந்த மந்திரமாத்திரஞ் சார்வதாஜபம்பண்ணிக்கொண்டு வந்தால், இகத்தில் சர்வாபீஷ்டமு முண்டாகிறதன்றிக் கடைசியில் மோட்சமுஞ்சித்திக்கும்; உனக்கு நூறுவித த்திற் சொன்னோம்; எங்கள் சொற்படிகேட்டால் பிழை க்கலாம்; கேளாவிட்டாற் சந்தேகமில்லாமற் கெட்டுப் போவாயென்று இந்தப்படியே பலபலவிதமாக அவ்வஞ் சகமான சங்கக்காரர்களைப்போல வஞ்சகமுள்ள விவர் களும் முமூட்சுக்களை வெருட்டிக்கெடுப்பார்கள்.

ஆதலால் முமூட்சுவானவர்கள் நன்றாய்விசாரித்த யுக்தி புத்திகளால் சுருதி குருவாக்கொத்த வேதாந்த சாஸ்தி ரமே தனக்குத் தாரகமென்றும், மற்றைச் சாஸ்திரங் களை விட்டுச் சம்சயமறச் சுதரூபலட்சணத்தை யுபதே சஞ்செய்யப்பட்ட குருநாதனே தனக்குச் சற்குருவெ ன்றும், மற்றவர்களெல்லாம் வஞ்சகரென்றும் விசாரித் தறிந்து, வேதாந்த சாஸ்திரத்தினிடத்தும்; ஆத்மாவி னிடத் தத்தியாசமும், பிரதிவிம்ப லட்சணமும் ஆத்ம நிச்சயசொரூபமு முபதேசம்பண்ணப்பட்ட ஸ்ரீசற்குரு வினிடத்திலும் விசுவாசம்வைத்து, குருபணிவிடைசெய் து, சிரவணாதிகளை யையமறக்கேட்டு, ஞானத்தைச் சம் பாதித்துக் கிருதார்த்தனாகவேண்டுமென்று சுருதி ஸ்மி ருதி யிதிகாச புராணாதிகளிற் சொல்லப்படுகின்றது. இ திற் சம்சயமில்லை சித்தம்.

தார்க்கீகாதிபேதநிருபகம்

முற்றிற்று.

முப்பத்துமூன்றாவது,

பஞ்சவிதமுத்திநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளிற் சொல்லப்படுகிற பஞ்சவித முத்தியாவ தேதென்னில்,

உ-ம். சாலோக சாமீப சாரூப சாயுச்சிய கைவல்லியமென் றை

ச-கை. சாலோகமுத்தியாவ தேதென்னில்,

உ-ம். உபாசனுமகிமையினுற் பிரமலோகம்போய்ப் பிரமதேவர் சமூகமில்லாம லொருபிறதேசத்தி லிருந்துக்கொண்டு சமஸ்தபோகங்களையு மனுபவித்துக்கொண்டிருப்பது.

ச-கை. சாமீபமுத்தியாவ தேதென்னில்,

உ-ம். பிரமதேவர் சமூகங் கிடைத்துச் சமஸ்த போகங்களையு மனுபவித்துக்கொண்டிருப்பது.

ச-கை. சாரூபமுத்தியாவ தேதென்னில்,

உ-ம். பிரமதேவருடைய ரூபத்தைப்பெற்றுச் சமஸ்த போகங் களையு மனுபவிக்கிறது.

ச-கை. சாயுச்சிய முத்தியாவ தேதென்னில்,

உ-ம். பிரமதேவருக்குண்டான அதிகார ஐசுவரியம்பெற்று சம ஸ்த போகங்களையு மனுபவித்துக்கொண் டிருக்கிறது. இந்த நாலுபேருக்கும் முத்தி யேகரூபமா யிருந்தபோதி லும் உபாசன தாரதம்மியத்தின லவாந்திரபல தாரதம் மியங்களுண்டு.

ச-கை. கைவல்யமாவ தேதென்னில்,

உ-ம். முமூட்சுவானவர்கள் சாந்தியாதி குணங்களுடன் கூடிக் குருநாதனிடத்தில் சம்சயமின்றிச் சிரவணுதிகளைச்செ செய்து ஞானவடிவமென்கிற தன்னைத்தானே சம்பாதி த்துச் சச்சிதானந்தசொரூபமான வாத்மாவை நானென் றறிந்தபிறகு சொரூபமாத்திரமா யிருக்கிறதே கைவல்ய மென்றுசொல்லப்படும். இந்தக்கைவல்யமுத்திதனது வி சாரத்தினுற்பிறந்த ஞானத்தினுல்வரவேண்டுமென்றிக் கர் மவுபாசனைகளால் வரமாட்டாது. ஸ்ரீ சற்குருதரிசனத் தினுல் மலமாயை கன்மங்கள் நீங்குமேயல்லது வேறொ ருபாயத்தினுலு மெவ்வளவு நீங்காது பிரமலோகத்திலிரு

க்கிறவர்களும் பிரமதேவரிடத்திற் கேட்டு விசாரத்தி ஞலேயே ஞானஞ்சம்பாதித்து மோட்சமடைந்தார்களெ ன்று சுருதிகளிற் சொல்லப்படுகின்றது.

ச-ஙை. இதனாலென்ன சித்தித்ததென்னில்,

உ-ம். சமஸ்தபிராணிகளுக்கும் ஞானத்திஞல் முத்தியன்றிக்கர் மயோக வுபாசனைகளால் முத்தியில்லையென்று சித்தித் தது. ஆதலால் சமஸ்தமானபேர்களுக்கும் ஞானத்தி ஞலேயே முத்தியென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புரா ணுதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

பஞ்சவிதமுத்திநிருபகம்
முற்றிற்று.

முப்பத்துநான்காவது

பிரமவித்தாதிசதுஷ்டயநிருபகம்.

ச-கை. உலகத்தில் ஞானியானவர்கள் சார்வதாசமாதிநிஷ்டையி லிருக்கவேண்டுமென்றும், யோகமில்லாவிட்டால்சிரவண த்திஞல்வருகிற ஞானந்திடமாகாதென்றும்,விவகாரத்து டன் கூடியிருப்பவர்களுக்கு ஞானங்கூடாதென்றும்,அ விவேகிகளுக்குள் சிலருக்கிப்படிப்பட்ட சம்சயமுண்டா கும் அந்தச்சம்சயமும் நிவிர்த்திக்கும்படி பிரமவித்தா தி சதுஷ்டயருடைய திதிப்பிரகாரமும் விசாரித்தறிய வேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுகிறபடியால் பி ரமவித்துவின் திதியெப்படிப்பட்டதென்னில்,

உ-ம். தனக்குக் காலத்திரயத்திலு மொன்றிலும் பாத்தியத்வ மில்லாமல் பாத்தியத்வமும் சொப்பனம்போற் சார்வதா பார்த்துக்கொண்டிருந்து யெக்கியாதிகர்மங்களும், அதி திபூசைகளும்,சுதர்மமானசந்தியாவந்தனக்கிரியைகளும்; விடாமற் பண்ணிக்கொண்டிருந்தபோதிலுந் தான்சாட்சி யே; தாளுெரு கர்மமும் பண்ணுகிறவனல்ல; அகங்காரா திகளதனதன் விஷயங்களிற் பிரவிர்த்திக்கின்றதல்லது, தான் அசங்கனே. யுபரதியைக் குறித்துத் தனக்குச் சா ட்சித்வமுங் கற்பிக்கப்பட்டதென்கிற திடசித்தத்துடன்

சகல வியகாரங்களுஞ்செய்து வருகின்றவனுக்குப் பிரம வித்தென்று சொல்லப்படும்.

ச-கை. பிரமவரன் தன்மை யெவ்வகைப்பட்டதென்னில்,

உ-ம். பாகிய விவகாரமெல்லாந் துக்கமென்றறிந்து விவகாரங்களில் நமக்கெவ்வளவும்பிரயோசனமில்லையென்று யூகித்துணர்ந்து, முன்பிருந்த விவகாராதிகளைவிட்டொழிந்து, அந்தர்முகநாட்டமாய் நித்திரைசெய்பவன்போலிருந்து காலத்திரயத்திலும் பிரபஞ்சமேயில்லை, தோற்றினபோதிலுமித்தையே எனக்குச் சாட்சித்வமுங் கற்பிதமேயென்கிற நிச்சயத்துடன் தன்னை வந்தடுத்த முமுட்சுக்களுக்குபதேசம்பண்ணிக்கொண்டு, அநிர்வாச்சி மானசவுச அன்னபானாதிக் கிரியைகளில்மாத்திரம்பிரவிர்த்தி யுடையவனாய், சகலமுமகங்காரவியாபாரங்களென்றுதிடசித்தனாய் தானொரு கர்மங்களுஞ் செய்தவனல்லவென்று சம்சயமின்றி நிச்சயங்கொண்டவனாய் பாகியவியாபார மின்றிச் சார்வதா ஏகாந்தநிஷ்டையி லிருக்கின்றவனுக்குப் பிரமவரனென்று சொல்லப்படும்.

ச-கை. பிரமவரியான் தன்மை யெப்படிப்பட்டதென்னில்,

உ-ம் பாகியமெல்லாந் துக்கமென்ற திடங்கொண்டு பாகியஸ்புரணத்தைவிட்டுச் சார்வதா நிதித்தியாசனபரனாயிருந்து ஒருவராற் பிரேரிக்கப்பட்டு அன்னபானாதிக்கிரியைகளைச்செய்தபோதிலுஞ் சகலவிவகாரமு மகங்காரமே செய்கிறதென்றும், தானொரு வியாபாரமுஞ்செய்யவில்லையென்றும், சாட்சியுஞ் சாட்சித்வமுங் கற்பிதமேயென்றும், அசங்கனாகிய தனக்கு ஒன்றிலுஞ் சம்பந்தமில்லையென்றுந் திடநிச்சயங்கொண்டு, சகல சம்சயரகிதனாய் சார்வதா நிதித்தியாசன பரனாயிருப்பவனுக்குப் பிரமவரியானென்று சொல்லப்படும்.

ச-கை. பிரமவரிட்டன் தன்மை யெத்தன்மைத் தென்னில்,

உ-ம். பாகியமெல்லாந் துக்கமென்று விட்டுவிட்டுச்சகலசம்சயரகிதனாய் சார்வதா நிருவிகற்ப சமாதிபரனாய் அந்தர் வியாபாரமும் பாகியவியாபாரமுமறந்து, சுவரூபத்தில் மக்கின சித்தமாய் சுதந்தரத்திலாகிலும் பிறரைக்குறித்தாகிலும் ஒருபிரவிர்த்தியில்லாமல் சுகமாயிருப்பன். அவனுக்குச் சர்வாத்மனாய் அன்னபானாதிக் கிரியைகளில்லை.

அனேகபுண்ணியகர்ம பரிபாகத்தினற் சமாதி சித்தித்த படியினுலும், சகலதுக்கங்களும் நசித்துப் போனபடியினுலும் சதா நிருவிகற்ப சமாதிநிஷ்டையிலிருப்பன. அந்தமகாத்மாவுக்குப் பிரமவரிட்டனென்றுசொல்லப்படும். இவர்கள் நால்வருக்குந் தாரதம்மியத்தினல் யுகதமான சுகமுண்டாயிருந்தபோதிலும் முத்திமாத்திரஞ் சமானமாகும்.

ச-கை. ஆனலிவர்களிப்படியிருந்ததற்குபிரயோசனமேதெனில்,

உ-ம். கர்மம் நானவிதமாகையால் திர்ஷ்டசவுக்கியப் பிரயோசனமெப்படியோ, அப்படியே யிருப்பார்கள். ஞானிகள் இந்தப்பிரகார மிருக்கவேண்டுமென்று ஒருநியமமுஞ் சொல்லக்கூடாது.

ச-கை. இதற்குப்பிரமாண மேதென்னில்,

உ-ம். ஜனகர் அரசாட்சிசெய்துக்கொண்டிருந்தாரென்றும், ஜடபரதர் அசங்கனய்ச் சஞ்சரித்தாரென்றும்,சுகர்உபநயனதற்பூர்வமேகிரகத்திலிருந்து வெளிப்பட்டாரென்றும், தூருவாசர் சிலரைச் சபித்தார், சிலரை யனுக்கிரகித்தாரென்றும்; சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணுகமாதிகளிற் சொல்லப்படுகின்றது. கர்மங்களும் நானவிதமானதால் ஞானிகளொருவரிருந்தபடி யொருவரிரார்களென்பதற்குச் சுருதியாதிகளுஞ் ஜனகாதிகளுமே பிரமாணம். விவேகிகளானவர்கள் ஞானிகளிப்படியிருக்கிறர்கள், அப்படியிருக்கவில்லை, இப்படியிருக்கவேண்டும், அப்படியிருக்கக்கூடாதென்று சந்தேகிக்கவேண்டுவதில்லை. கர்மத்துக்கன்னியமாய் அவரவர்களுடைய கர்மம் எப்படிநடத்துவிக்குமோ, அப்படியே யிருப்பார்களென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணுதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

பிரமவித்தாதிசதுஷ்டயநிருபகம்
முற்றிற்று.

முப்பத்தைந்தாவது,

சப்தாவஸ்தைநிருபகம்.

ச-கை. உலகத்தில் சாஸ்திரிகளாகிய சிலபேர் சமஸ்த வாக்கியங்களும் பரோட்சஞான வுற்பத்தியேயன்றி, அபரோட்சஞானவுற்பத்தியல்லவென்றும், சார்வதா அபரோட்சஞானங்களுக்கு விஷயனல்லவென்றும், சொப்பிரகாசனாகிய வாத்மாவுக்குஞானுஞ்ஞானவாசிரயங்களானயுக்தங்கூடாதென்றுஞ் சொல்லுவார்கள். அவர்களது வார்த்தையைக்கேட்டு அனேகர் பிரமிப்பார்கள். அப்படி பிரமிக்காதபடி சப்தாவஸ்தைகளை விசாரித் தறியவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுகிறபடியால் ஆத்மாவுக்குச் சப்தாவஸ்தைகளாவ தேதென்னில்,

உ-ம். அஞ்ஞானம், ஆவரணம், விட்சேபம், பரோட்சம், அபரோட்சம், துக்கநிவிர்த்தி, தடையற்ற வானந்தமென்று சொல்லப்படும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். திருஷ்டாந்தத்தில் பரமஜீயரென்றொரு சந்நியாசியுண்டு. அவருக்கனேகஞ் சிஷர்களிருந்தார்கள்! அவர்களிற் பதின்மரையழைத்து ஒருகாரியநிமித்தம் ஒருவூருக்கனுப்பிவைத்தார். அவர்கள் போகும்போது மார்க்கத்தில் குறுக்கேயிருக்கிறவொரு ஆற்றிலிறங்கி அந்தக்கரையேறியபிறகு, அவர்களிற் பிரதானமானவன் சம்சயங்கொண்டு, நாம் பத்துப்பேரும் கரையேறினோமோ, இல்லையோவென் றெண்ணிப்பார்த்துத் தன்னையெண்ணாமல்லொன்பதுபேரிடத்திற் சித்தம்வைத்தவனாய், அவர்களைப்பிரத்தியட்சமாகப் பார்த்திருந்தும் அஞ்ஞானத்தினால் கணிதகர்த்தாவாகிய தன்னைத் தசமனென்றறியாமல் மறந்து நிற்பதேயஞ்ஞானம்.

ச-கை. ஆரணமாவ தேதென்னில்,

உ-ம். அசத்தாவரணம், ஆபாசாவரணம் என்றிரண்டுவிதம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். தசமனானவன், தான் சுயந் தசமனாயிருந்துக்கொண்டே, தசம னிருக்கிறானோவென்று கேட்டது அசத்தாவரணம்.

தசமனைக்காணோம்; இருந்தால்தோற்றலாமே; தோற்ற வில்லையாகையினால், தசமனில்லையென்றேசொல்லுகிறது ஆபாசாவரணம். இவ்விவகாரத்திற்குக் காரணமாயிருக்கிற தெதுவோ, அதுவே யஞ்ஞான காரியமான வாவரணம்.

ச-கை. விட்சேபமாவ தேதென்னில்,

உ-ம். தசமன் ஆற்றிலிறந்தானென்று நிச்சயித் தழுகிறதே விட்சேபம்.

ச-கை. பரோட்சமாவ தேதென்னில்,

உ-ம். தசமனிப்படி யழும்போது ஆப்தன்வந்து ஏனழுகிறாய், அழாதே தசமன் செத்துப்போகவில்லை, யிருக்கிறானென்றுசொல்லச் சாஸ்திராதிகளாற் சொற்காதிகளை யறிந்ததுபோல அவ்வாப்தவாக்கியத்தினால் பரோட்சமாகத் தசமனிருக்கிறானென்றறிந்ததே அசத்தாவரண நிவர்த்தகமான பரோக்ஷஞானம்.

ச-கை. அபரோக்ஷமாவ தேதென்னில்,

உ-ம். அவ்வாப்தன் தசமனுக்கு ஒன்பதுபேரையு மெண்ணிக் காட்டிப் பத்தாவான் நீயேயென்றுகாட்ட, அவனுமப்படியேயெண்ணித் தானே தசமனென்பதிற் சந்தேகமில்லையென்றறிந்து, அஞ்ஞானத்திற் பிரமித்தேனென்றுங் காலத்திரயத்திலுந் தான் தசமனென்பதிற் சந்தேகமில்லையென்றுந் தன்னையுள்ளபடி யறிந்ததே ஆபாசாவரண நிவர்த்தகமான அபரோக்ஷஞானம்.

ச-கை. துக்கநிவிர்த்தியாவ தேதென்னில்,

உ-ம். முன்னிருந்த ரோதனாதிகளைவிட்டதே துக்கநிவிர்த்தி.

ச-கை. தடையற்ற வானந்தமாவ தேதென்னில்,

உ-ம். அந்தத்துக்க நீங்கினவுடனிருந்த சுதாசவுக்கியசுகமே தடையற்ற வானந்தம். இதுகளே சப்தாவஸ்தைகளாகும்.

ச-கை. ஆனால் தாஷ்டாந்தத்தி லெப்படியென்னில்,

உ-ம். சிதாபாசன் சமுசாரத்தி லாசத்தியுடையவனாய் ஒரொருபொழுதாகிலுந் தன்சுவரூப பூத சொப்பிரகாசனாகிய கூடஸ்தரை யறியாதிருப்பதே யஞ்ஞானம்.

ச-கை. ஆவரணமாவ தேதென்னில்,

உ-ம். ஒருவன் கூடஸ்தனை யறிவையாவென்றுகேட்க, கூடஸ்தனென் றொருவனிருக்கிறானோ? இல்லையே. உண்டாயிரு

ந்தால் தோற்றவேண்டுமேயென்று சொல்லுவதே யஞ்ஞானகாரியமான வாவரணம்.

ச-கை. விட்சேபமாவதேதென்னில்,

உ-ம். நான்கர்த்தா, போக்தா, சுகி, துக்கி, மனுஷன், பிராமணனென்கிறது இந்தத்தேகமேயன்றி, வேறே கூடஸ்தனில்லையென்று சொல்லுகிறதே விட்சேபம்.

ச-கை. பரோக்ஷமாவது தேதென்னில்,

உ-ம். ஸ்ரீசற்குரு உபதேசத்தினால் கூடஸ்த னொருவனுண்டென்றறிகிறதே பரோக்ஷஞானம்.

ச-கை. அபரோக்ஷஞானமாவதேதென்னில்,

உ-ம். ஸ்ரீசற்குரு சந்நிதானத்தில் சிரவணாதிகள்செய்து அதனாலுண்டான பரஞானத்தினால், தான் கூடஸ்தனென்பதிற் சம்சயமில்லையென்று பிரத்தியட்சமாய்க்காண்பதே அபரோக்ஷஞானம்.

ச-கை. துக்கநிவிர்த்தியாவதேதென்னில்,

உ-ம். இப்படி நிருவிகாரனாய், அசங்கனாகிய கூடஸ்தசொரூபமே தானென்றறிந்தபிறகு கர்த்ருத்வாதி சோகமுதலானதுகள் விட்டிருப்பதே துக்கநிவிர்த்தி.

ச-கை. தடையற்ற ஆனந்தமாவதேதென்னில்,

உ-ம். கர்த்தவ்யவுற்பத்தி யெம்மாத்திர மிருக்கின்றதோ, அதுகளெல்லா மென்னாலேயே செய்யப்பட்டதென்றும், அதனாலடையப்பட்ட பலவுற்பத்திக ளெவ்வளவிருக்கின்றதோ, அதுகளெல்லாம் என்னாலேயே யடையப்பட்டதென்றுஞ் சந்தோஷப்படுகிறதே தடையற்றவானந்தமென்றுஞ் சொல்லப்படும். இவற்றுள் ஆதியான மூன்றவஸ்தையும் பந்தத்திற்கு ஏது; மற்றநான்கவஸ்தையும் மோட்சத்திற்கு ஏதுவென்று விசாரித்தறிந்து இந்தச்சப்தாவஸ்தைகளும் என்னிடத்தி லாரோபிக்கப்பட்ட அகங்காரத்துக்கன்றிச் சாட்சியாகிய வெனக்கில்லையென்றுஸ்ரீ சற்குருமுன்னிலையில் சம்சயவிபரீதமற விசாரித்தறிந்தவனே சீவன்முத்தனென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணாகமாதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

சப்தாவஸ்தைநிருபகம்

முற்றிற்று.

முப்பத்தாறுது,

தாதாத்மியத்திரயநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளில் தாதாத்மியத்திரயங்களை விசாரித்தறிய வேண்டுமென்று சொல்லுகிறபடியால் அவையேதெனில்,

உ-ம். சகஜ தாதாத்மியம், கர்மஜ தாதாத்மியம், பிராந்திஜ தாதாத்மியம் என மூன்றுவிதமாயிருக்கும்.

ச-கை. ஆனாற் சகஜதாதாத்மிய மெப்படியென்னில்,

உ-ம். சித்து அகங்காரத்திற் பிரதிபிம்பித்து, அந்தப் பிரதிபிம்பமும் அகங்காரமுங்கூடித் தப்தாய பிண்டம்போ லேகரூபமாய் அந்தச் சித்தைப்போலவேதோற்றும். அந்தச் சிற்பிரதிபிம்பத்துடன் கூடிக்கொண்டிருக்கு மகங்காரத்திற்கே சகஜ தாதாத்மியமென்று சொல்லப்படும்.

ச-கை. சகஜ தாதாத்மியமென்று பெயரேன் வந்ததென்னில்,

உ-ம். பிறக்கும்போதேயிரண்டுங் கூடப்பிறந்தபடியினு லிவ்விரண்டினுடைய தாதாத்மியமே சகஜதாதாத்மியமென்று பெயராயிற்று.

ச-கை. கர்மஜ தாதாத்மிய மெப்படியென்னில்,

உ-ம். சிற்பிரதி பிம்பத்துடன் கூடிக்கொண்டு சித்தைப்போலவே தோற்றப்பட்ட வகங்காரத்திற்குத் தூலசரீரத்துடன்கூடச் சம்பந்தம்வந்தபோது கர்மஜ தாதாத்மியமென்று சொல்லப்படும்.

ச-கை. கர்மஜ தாதாத்மியமென்று பெயரேன் வந்ததென்னில்,

உ-ம். சாக்கிரபோகப் பிரதானமான கர்மம் பிறந்தபோது அந்தக் கர்மஜ தாதாத்மியம்பிறக்கின்றது. அந்தக் கர்மநசித்தா லந்தக் கர்மஜ தாதாத்மியமும் நசித்துப்போகின்றது. அதனாற் சிற்பிரதி பிம்பத்துடன் கூடியிருக்கிற வகங்காரத்திற்குத் தூலசரீரத்துடன்கூடிய தாதாத்மியமே கர்மஜ தாதாத்மியமென்று பெயராயிற்று. கர்மமுண்டானாற் கர்மஜ தாதாத்மியமுண்டு. கர்மமில்லாமற்போனால் கர்மஜ தாதாத்மிய மில்லையென்பதற்குச் சாக்கிரத்திலுஞ் சுழுத்தியிலும் பார்த்துக்கொள்ளவேண்டியது. இந்தத் தாதாத்மியத்தினாலேயே தூலதேகமுஞ் சேதனம்போலவே தோற்றுகின்றது.

ச-கை. பிராந்திஜ தாதாத்மிய மெப்படியென்னில்,

உ-ம். நான்பிராமணன், நான்க்ஷத்திரியன், நான்வைசியன், நான் சூத்திரன், நான்பிரமசாரி, நான்கிரகஸ்தன், நான்வானப்பிரஸ்தன், நான் சந்நியாசியென்கிற சித்தவிருத்தியுடன்கூடியிருக்கிற வகங்காரத்திற்கு அகஞ்சத்தார்த்தமான சாட்சியோடுங்கூடிய தாதாத்மியம் பிராந்திஜ தாதாத்மியமென்று சொல்லப்படும்.

ச-கை. பிராந்திஜமென்று பெயரேன் வந்ததென்னில்,

உ-ம். சர்வாபீஷ்டமான வாத்மசொரூபத்தை நானென்றறியாமல் இப்படி பிராந்தியினால் வந்தபடியாலிதற்குப் பிராந்திஜ தாதாத்மியமென்று பெயராயிற்று.

ச-கை. இதுகளுக்கு நிவிர்த்தி யெப்போது வருமென்னில்,

உ-ம். சம்பந்தங்களான சிற்சாயாவகங்காரமா யெந்தமட்டுமிருக்கின்றதோ அந்தமட்டுஞ் சகஜதாதாத்மியம் பிராந்திஜ தாதாத்மிய மிரண்டுக்கும் நிவிர்த்திவரமாட்டாது. விதேக கைவல்யத்தில் அத்தியந்த நிவிர்த்திவரும். கர்மஜ தாதாத்மியமோவென்றால் பிரதிதினமும்போகப் பிரதானமான கர்மத்தினாற் பிறக்கிறபடியினாலும், அந்தக் கர்மமுஞ் சுழுத்தியில் நாசப்படுவதினாலும் இதற்குப் பிரதிதினமுஞ் சர்வானுபவமாய் சுழுத்தியில் நாசங்கண்டுகொள்ளவேண்டியது. பிராந்திஜ தாதாத்மியமும் நானேபிரமமென்கிற ஞானமுண்டானதக்ஷணம் நசித்துப்போம்.

ச-கை. இதற்குப் பிரமாணமுண்டோ வென்னில்,

உ-ம். வித்தியாரண்ய சுவாமிகள் திருக்கு திரிசிய விவேகமென்கிற கிரந்தத்தில் இப்படியே நிரூபித்திருக்கின்றது. நாம் நிரூபிக்கப்பட்டதெல்லாம் நமது சுவானுபவமும், ஈஸ்வர வாக்கிய வேதாந்தவுபநிஷத்துகளும் பூர்வாசாரியர்கள் நிரூபித்திருக்கிற சாஸ்திரங்களும் ஒன்றுபட வனுபவத்திற்கண்டே நிரூபித்ததென் றறியத்தக்கது. இந்தத் தாதாத்மியத் திரயங்களை ஸ்ரீ சற்குருநாதன் முன்னிலையில் நன்றாய் விசாரித்தறிந்து, இந்தத் தாதாத்மியத்திரயங்க ளகங்காரத்திற்கேயல்லது, சாட்சியாகிய நமக்கில்லையென்று எவனறிகிறானோ, அவனே யசங்கனாகிய பரமுத்தனென்று சுருதி ஸ்மிருதி யிதிகாசபுராணாகமாதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற்சம்சயமில்லை சித்தம்.

தாதாத்மியத்திரயநிருபகம்

முற்றிற்று.

முப்பத்தேழாவது,

ஜீவேஸ்வரசொரூபநிரூபகம்.

ச-கை. ஜீவனாவ தாரென்னில்,

உ-ம். அந்தக்கரணம், அதிஷ்டானசைதன்யம், அந்தக்கரண பிரதிபிம்ப சைதன்னியம் இம்மூன்றுங்கூடிச் ஜீவனென்று சொல்லப்படும்.

ச-கை. அப்படி சொல்லுவானேன்? கேவல மந்தக்கரணத்திற்கே ஜீவத்துவஞ் சொல்லுவோமே யென்னில்,

உ-ம். கடத்துக்குஞ் ஜீவத்துவம் வரவேண்டும். அப்படி கூடாததால் கேவலமான வந்தக்கரணத்திற்குச் ஜீவத்வஞ் சொல்லக்கூடாது.

ச-கை. கடஞ் சொச்ச திரவிய மல்லாதபடியினாலும், அந்தக்கரணஞ் சொச்ச திரவிய மானபடியினாலும் அந்தக்கரணத்திற்குச் ஜீவத்துவஞ் சொல்லலாமேயென்னில்,

உ-ம். தர்ப்பணாதிகள் சொச்சதிரவியமானதா லதுகளுக்குஞ் ஜீவத்துவம் வரவேண்டும். அப்படி கூடாதபடியினால் அந்தக்கரணஞ் சொச்சதிரவியமானபோதிலுங் கேவலம் அந்தக்கரணத்திற்குச் ஜீவத்வஞ் சொல்லக்கூடாது.

ச-கை. தர்ப்பணாதிகள் பாகியபதார்த்த மானதினாலும், அந்தக்கரணம் அந்தர் பதார்த்தமானதினாலும், அந்தக்கரணத்திற்குச் ஜீவத்துவஞ் சொல்லலாமேயென்னில்,

உ-ம். இந்திரியங்களு மந்தர் பதார்த்தமானதா லதுகளுக்குஞ் ஜீவத்துவம் வரவேண்டும். அப்படி கூடாதபடியினால் அந்தக்கரணத்திற்குச் ஜீவத்துவஞ் சொல்லக்கூடாது.

ச-கை. அந்தக்கரணம் இந்திரியத்தைப்பார்க்கிலும் அந்தரானதினால் அந்தக்கரணத்திற்குச் ஜீவத்துவஞ் சொல்லலாமே யெனில்,

உ-ம். அஞ்ஞானம் அந்தக்கரணத்திலும் அந்தரானதால் அஞ்ஞானத்திற்குஞ் ஜீவத்துவங் கூடவேண்டும். அப்படி கூடாதபடியினால் அந்தக்கரணத்திற்குச் ஜீவத்துவஞ் சொல்லக்கூடாது. அல்லாமலும் ஜீவன் சேதன மானதினா 'லசேதனமான வந்தக்கரணத்திற்குச் ஜீவத்துவங் கூடாதென்பதிற் சந்தேகமேயில்லை.

ச-கை. ஆனாற் கேவலம் பிரதிபிம்பத்திற்குச் சீவத்துவஞ் சொல்லுவோமேயென்னில்,

உ-ம். அந்தக்கரண மில்லாமற் பிரதிபிம்பமில்லை யாகையினாற் கேவலம் பிரதிபிம்பத்திற்கே சீவத்துவஞ் சொல்லக் கூடாது.

ச-கை. ஆனால் பிரதிபிம்பநிமித்தம் அந்தக் கரணத்தையு மங்கீகரித்துக் கேவலம் பிரதிபிம்பத்திற்குச் சீவத்துவஞ்சொல்லுவோமே யென்னில்,

உ-ம். பிரதிபிம்பத்திற்குச் சுயம்விகார முண்டாயிருந்தபோதிலுங் கர்த்ருத்வாதி விகாரமில்லாதபடியினால் பிரதிபிம்பத்திற்கே சீவத்துவஞ் சொல்லக்கூடாது.

ச-கை. ஆனால் அதிஷ்டான சைதன்னியத்திற்குச் சீவத்துவஞ் சொல்லுவோமேயென்னில்,

உ-ம். அந்தச் சைதன்னியம் நிருவிகாரமானபடியினால் விகாரரூப மான சீவத்துவஞ் சொல்லக்கூடாது.

ச-கை. அந்தக்கரணமும் பிரதிபிம்பமுங் கூடினது சீவனென்று சொல்லுவோமே யென்னில்,

உ-ம். இவ்விரண்டுங் கற்பிதமானபடியினாற் சீவனுக்குநித்தியத்துவஞ் சித்தியாது.

ச-கை. சித்தியாமற்போனாற் போகட்டுமேயென்னில்,

உ-ம். முத்தரானவர்கள் யாருமில்லாமற் போகவேண்டும் ஆதலால் அந்தக்கரணமும்பிரதிபிம்பமுஞ் சீவனென்றுசொல்லக்கூடாது.

ச-கை. அதிஷ்டான சைதன்னியமும் பிரதிபிம்ப சைதன்னியமுங் கூடினது சீவனென்று சொல்லலாமேயென்னில்,

உ-ம். கேவலஞ் சைதன்னியமாத்திர நிருவிகாரமானபடியினால் கர்த்ருத்வ போக்த்ருத்வாதி விகாரலட்சணமான சீவத்வஞ் சொல்லக்கூடாது.

ச-கை. ஆனால் அதிஷ்டான சைதன்னியமு மந்தக்கரணமுங் கூட்டிச் சீவனென்று சொல்லுவோமேயென்னில்,

உ-ம். தர்ப்பணமும் தர்ப்பணவதிஷ்டானமுங்கூடிச்சீவனாகவேண்டும். அதுகளுக்குச் சீவத்துவம் வரவில்லை. ஆகையால் அதிஷ்டான சைதன்னியமும் அந்தக்கரணமுங்கூட்டிச் சீவனென்று சொல்லக்கூடாது. ஆதலால் அந்தக்கரணம் அதிஷ்டான சைதன்னியம் அந்தக்கரண பிரதி

பிம்ப சைதன்னியம் ஆகியமூன்றுங் கூட்டிச் சீவனென்றுசொல்லவேண்டும். இதுவுமல்லாமல் கர்ருத்வபோக்ருத்வாதி விசிஷ்டத்துவமே சீவத்துவம் ஆனபடியினுல், கர்த்ருத்வ போக்த்ருத்வங் சித்திக்கும்பொருட்டு அந்தக்கரணத்துடன் கூடப்பட்ட சூட்சுமசரீரமும் அத்தியந்தம் வேண்டும்.

மேலும் சூட்சுமசரீரந் தூலசரீரத்தை விட்டிராதபடியினுலும், அந்தத் தூலசரீர கோளகம் பினுவாய் அவ்விந்திரியங்களுக்குவிஷயங்களைக்கிரகிக்கும்வகைகள், கூடாதபடியினுலும், பிராமணத்வாதி யபிமானமில்லாமற் கர்த்ருத்வங்கூடாது ஆனதினுலுந் தூலசரீரமும் வேண்டும். அசங்கனுகிய வாத்மாவுக்கு அஞ்ஞானமில்லாமல்சரீரத்துவய வத்தியாசங்கூடாது. ஆனதினுலும், காரியங் காரணத்தை விட்டிராதபடியினுலுங்காரணசரீரமும்வேண்டும். ஆகையாலதிஷ்டான சைதன்னியமும், பிரதிபிம்பசைதன்னியமும், சரீரத்திரியமும், இதுகளிடத்திலத்தியாசமுங் கூடிச் சீவனென்று சொல்லப்படும்.

ச-கை. ஈஸ்வரனுவ தாரென்னில்,

உ-ம். மாயையும், மாயாவதிஷ்டான சைதன்னியமும், மாயையிற் பிரதிபிம்பித்த சைதன்னியமுங்கூடி யீஸ்வரனென்றுசொல்லப்படும்.

ச-கை. இம்மூன்றுங்கூட்டி யேன் சொல்லவேண்டும்? கேவலம் மாயைக்கே யீஸ்வரத்துவஞ் சொல்லுவோமேயெனில்,

உ-ம். அப்போது ஆகாசத்திற்கு ஈஸ்வரத்வம் வரவேண்டும். அப்படி கூடாததினுற் கேவலம் மாயைக்கு ஈஸ்வரத்வஞ் சொல்லக்கூடாது.

ச-கை. ஆகாசத்திற்கு உற்பத்திநாச மிருக்கிறபடியினுல் ஈஸ்வரத்வஞ் சொல்லக்கூடாமல்போனுலும் அனுதியாயிருக்கப்பட்ட மாயைக்குஈஸ்வரத்வஞ் சொல்லலாமேயெனில்,

உ-ம். அத்தியந்தமாகிய அபாவனைக்கும் ஈஸ்வரத்வம் வரவேண்டும். அபாவனைக்கு ஈஸ்வரத்வங் கூடாதபடியினுல் அனுதியாகியமாயைக்கு ஈஸ்வரத்வஞ் சொல்லக்கூடாது.

ச-கை. அபாவனை பாவபதார்த்த மல்லாதபடியினுலும், மாயை பாவபதார்த்த மாகையினுலும் மாயைக்கு ஈஸ்வரத்வஞ் சொல்லாமேயென்னில்,

உ-ம். சாதிகளும் பாவபதார்த்தமானதா லதுகளுக்குமீஸ்வரத்வம் வரவேண்டும். அப்படிவாராதபடியினல் மாயை பாவபதார்த்தமானபோதிலு மதற்கீஸ்வரத்வஞ் சொல்லக்கூடாது.

ச-கை. மாயை யனிர்வ ஜன்னியமானதால் மாயைக்கு ஜஜ்வரத்வஞ்சொல்லலாமோ யென்னில்,

உ-ம். அனிர்வஜன்யமான கிளிஞ்சல் வெள்ளிக்கு மீஸ்வரத்வம் வரவேண்டும். அங்ஙனம் வாராதபடியினல் அனிர்வஜன்யமான மாயைக்கு மீஸ்வரத்வஞ் சொல்லக்கூடாது. இதுவுமல்லாமல் ஈஸ்வரன் சேதனனுனபடியால் அசேதனமான மாயைக் கீஸ்வரத்வஞ் சொல்லக்கூடாது.

ச-கை. ஆனல் கேவலம் பிரதிபிம்பத்திற்கு ஈஸ்வரத்வஞ் சொல்லலாமே யென்னில்,

உ-ம். மாயையில்லாமற் பிரதிபிம்பமில்லையாதலால் அந்தப்பிரதிபிம்பத்திற்கு மீஸ்வரத்வஞ் சொல்லக்கூடாது.

ச-கை. பிரதிபிம்ப நிமித்த மாயையை யங்கீகரித்துப்பிரதிபிம்ப மாத்திரத்துக் கீஸ்வரத்வஞ் சொல்லலாமேயென்னில்,

உ-ம். மாயையில்லாமற் கேவலம் பிரதிபிம்பத்திற்குச் சர்வஞத்வாதிகள் கூடாது. ஆனபடியினலிந்தப் பிரதிபிம்பத்திற்குமாத்திர மீஸ்வரத்வஞ் சொல்லக்கூடாது.

ச-கை. அப்படியானல் அதிஷ்டான சைதன்னியத்திற்கீஸ்வரத்வஞ் சொல்லலாமேயென்னில்,

உ-ம். அதிஷ்டான சைதன்னியம் நிருவிகாரமானபடியினலும், கேவலம் நிருவிகார சைதன்னியத்திற்குச் சகத் சிருஷ்டியாதிகள் கூடாதபடியினலு மதற்குமீஸ்வரத்வஞ்சொல்லக்கூடாது.

ச-கை. அதிஷ்டான சைதன்னியமு மாயையுங்கூட்டி யீஸ்வரத்வஞ் சொல்லலாமேயென்னில்,

உ-ம். ஆகாசம், ஆகாசசைதன்னிய மிரண்டுக்கு மீஸ்வரத்வம் வரவேண்டும். அப்படி யில்லாதபடியினல் மாயைக்கு மதிஷ்டான சைதன்னியத்திற்கு மீஸ்வரத்வஞ் சொல்லக்கூடாது.

ச-கை. மாயையும் பிரதிபிம்பமுங் கூட்டி யீஸ்வரத்வஞ்சொல்லலாமே யென்னில்,

உ-ம். இரண்டுங்கற்பிதமாயிருக்கிறபடியினால் இதற்கீஸ்வரத்வஞ்சொல்லுவோமேயானால் நித்தியத்துவஞ் சித்தியாது.

ச-கை. சித்தியாமற்போனாற் போகட்டுமேயென்னில்,

உ-ம். ஈஸ்வரனுக்கு நித்தியத்துவம்பிரதிபாதிக்கப்பட்டசுருதியாதிகளுக்கு விரோதம்வரும் ஆதலால்மாயைக்கும் மாயாப்பிரதிபிம்பத்திற்கு மீஸ்வரத்வஞ் சொல்லக்கூடாது.

ச-கை. ஆனால் அதிஷ்டான சைதன்னியத்திற்கும் பிரதிபிம்பசைதன்னியத்திற்குமீஸ்வரத்வஞ்சொல்லலாமேயெனில்,

உ-ம். கேவலம் பிரதிபிம்பமும், அதிஷ்டான சைதன்னியமும் நிருவிகாரமாகையினால் நிருவிகாரசைதன்னிய மிரண்டுக்கும் விகாரமான ஈஸ்வரத்வஞ் சொல்லக்கூடாது. ஆதலால் மாயையும், அதிஷ்டான சைதன்னியமும், மாயையிற் பிரதிபிம்பித்த சைதன்னியமுங்கூட்டி யீஸ்வரத்வஞ்சொல்லவேண்டும்.

ச-கை. இந்தப்படி சீவேஸ்வரரானே யெங்கேநிரூபிக்கப்பட்டிருக்கின்றதென்னில்,

உ-ம். வித்தியாரண்ணிய சுவாமிகள் பஞ்சசதப் பிரகரணத்தில் நிரூபித்திருக்கின்றது.

இந்தப்படி சீவேஸ்வரானுடைய சொரூபத்தை விசாரித்தறிந்து சீவேஸ்வராதிகள் மாயாகற்பிதரென்று நிச்சயித்து, இவர்களுக் கதிஷ்டான பூதனுப் நிருவிகாரனுய்நிர்ச்சங்கனுய் நிரவயவனுய் சொப்பிரகாசனுய் சர்வசாட்சியாய் விளங்கப்பட்ட பிரத்தியேகாத்மாவே நானென்று ஸ்ரீசற்குருவினல் தெளிந்து சீவேஸ்வர பிம்பமும் பிம்பப்பிரதி பிம்பலட்சணமும் சுயசொரூப லட்சணமும் உபாதிபேதமும் தாதாத்மிய வத்தியாச தாரதன்மிய லட்சணங்களும் சம்சய விபரீதமற வெவனறிகிறானோ, அவனே சீவன்முத்தனென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணாகமங்களிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

சீவேஸ்வரசோரூபநிரூபகம்

முற்றிற்று.

முப்பத்தேட்டாவது,

சித்தநிரோதநிருபகம்.

ச-கை. சித்தநிரோதமாவ தேதென்னில்,

உ-ம். மனம் ஒருநிலையாயிராமல் சகலமான பதார்த்தமாயிருக்கிறபடியினால் தன்னுடன்கூடியிருக்கிற புருஷனையுமிகவும்தாபப்படுத்தும். அதுபோய் ஒருவிஷயத்தில்விழுந்தால் அதைத்திருப்பவேகூடாது. மேலும் வேகமான வாயுவைத்திருப்ப வசமல்லாதுபோலும், கொலுசிலிருந்து விடுபட்டுப்போகிற மதயானையைத்திருப்ப வசமல்லாதுபோலும் மனதையுந் திருப்பி நிறுத்த வசமல்லவென்று அருச்சுனன் ஸ்ரீகிருஷ்ண பகவானைக் கேட்டதாகவும்; சமுத்திரத்தையுங் குடிக்கலாம், மேருவையும் பிடுங்கலாம், காட்டுத்தீயையும் விழுங்கலாம், காற்றையும்பிடித்துச்சுமையாய்க்கட்டலாம், சித்தநிரோதம் பெறுவதுமாத்திரம் வெகுபிரயாசமென்று ஸ்ரீராமருக்கு ஸ்ரீவசிட்டமுனிவ ருபதேசித்ததாகவும் கிதைவாசிட்டங்களிற்சொல்லப்படுகின்றது. அப்படிசொன்ன வசிட்டமுனிவரே திரும்பவும் சித்தநிரோதம்வருவது வெகுசுலபமென்றுந்திருவுளம்பற்றியிருக்கிறார்.

இதைமறந்துவிட்டு உலகத்திற் சிலபேர் சித்தநிரோதங்கடினமென்ற வாக்கியத்தை மாத்திரம் பற்றிக்கொண்டு, யாருக்குஞ் சித்தநிரோதம் சர்வாத்மனுய் வராதென்றே நிச்சயித்து, வேதாந்தவிசாரத்துக் கதிகாரிகளேயில்லையென்று சொல்லுகிறார்கள். ஸ்ரீசற்குரு கடாட்சத்தினால் பிறிவுபடவறிவிக்க நன்றாயறிந்தும், பிறிந்தும்பிறிபட்ட பதார்த்தமில்லாமல் சித்தநிரோதம்வந்து முத்தரானவர்களும் அப்படியே உலகத்திற் சித்தநிரோதம்பண்ணவதிகாரிகளே யில்லையென்று சொல்லுகிறார்கள். இவர்கள் சொல்லைக்கேட்டுச் சிலர் பிரமைகொண்டார்கள். அவர்களது பிரமையைப் போக்கடிக்கிறநிமித்தம் அவர்கள்நினைவின்படியே சித்தநிரோதம் வருவது வெகுசுலப மென்பதைத் திருஷ்டாந்தபூர்வகமாய் நிரூபிக்கிறோம்.

ச-கை. அதெப்படி யென்னில்,

உ-ம். மனம் பட்டிமாட்டைப்போ லொத்தது. அதைப்பட்டி மாடு சார்வதா பயிரைக் குறித்துக்கொண்டே போகும். பிடித்துக் கட்டப்போனு லோடிப்போம். அதைப்பிரயா சத்தினுல்பிடித்துக்கட்டி வீட்டுக்குள்கொண்டுவந்தாலு ம் அதின்முன் வைக்கோலாதிகளைப் போட்டாலும் அது களை முகந்துவிட்டு முன்மேய்ந்த பயிர்களையேசிந்தித்து க்கொண்டிருக்கும்.

பிற்பாடு அவிழ்த்துவிட்டால் திரும்பவும் அந்தப்பயிரைநா டிக்கொண்டேபோய்விழும். மறுநாளுமிந்தப்படியே பிடி த்துக்கட்டி வீட்டுக்குள் வைக்கோல் தவிடு முதலானது கள்போட்டாலும் அதைச் சற்றுநேரந் தின்றுவிட்டுப் பிறகு எப்போதும்போ லந்தப்பயிரையே சிந்தித்திருக் கும். இந்தப்பிரகாரம் நாள்தோறும் விடுவித்தும் கட்டு வித்துத் தீனிபோட்டுப்பழக்கிக்கொண்டு வரவர, வீட்டு த்திண்டியப்பியாசமாய் வெளியிலோட்டிவிட்டாலும், அ து தானே போனுலும் மறுபடியும் வீட்டுக்கேவரும். பி றகு அதையோட்டினுலும் போகாது.

அந்தப் பட்டிமாடு அப்பியாசத்தினுல் வீட்டுக்குள்ளே தா னே கட்டுப்பட்டதுபோல், இந்தமனதையும் அப்பியாச த்தினுலும்வயிராக்கியத்தினுலும் நிறுத்திக்கொள்ளலாம்.

ச-கை. அவ்வப்பியாசமாவ தேதென்னில்,

உ-ம். நித்தியமும் தனக்கு அபீஷ்டமான மூர்த்தியைத் தியா னம்பண்ணவுட்கார்ந்தால், அம்மனம் அகமுகப்படாமல் முன்போலவே பகிர்முகப்பட்டு விஷயங்களிற்போய்விழு ம். அப்படி விழுகின்ற மனதைத் திருப்பித் திருப்பியக முகப்படுத்தி மூர்த்திசொரூபத்தில் நிறுத்தினுல் சற்றே நிற்கும். திரும்பவும் பழக்கப்படியே போய்விழும். மறு நா ளிரண்டுநாழிகை, மறுநாள் நாலுநாழிகை, மறுநாள் எட்டுநாழிகை இந்தப்படியே அப்பியாசப் படுத்திக்கொ ண்டு வரவர, இந்த அப்பியாசத்தினுல் முன்போடிய ம னம் எங்கே நிறுத்தினுலு மங்கேநிற்கும். இதுவே யப் பியாசமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

ச-கை. வயிராக்கியமாவ தேதென்னில்,

உ-ம். அநேக ஜன்மத்திற்செய்த விகிர்தகருமங்களெல்லாமீஸ் வரார்ப்பணமாகவே செய்துவருகிறபோது அப்படி செ

ய்த புருஷனுக்கு ஒருஜன்மத்திற் சித்தசுத்திவரும். அதி னலெந்தவிஷயத்திலுந் தோஷதிருஷ்டிவரும். அதனால் பிரமலோகாதிகளும் திரணீகரமா யெண்ணுகிற திடசித் தம்வரும். இதுவே வயிராக்கியமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இப்படிப்பட்ட அப்பியாச வயிராக் கிய புருஷர்களுடைய சித்தம் சிரவணாதிகளி லெங்கே நிறுத்தினபோதிலும் அங்ஙனே நிலையாகநிற்கும்.

ஆதலால் சித்தநிரோதம் சர்வத்திரா கூடாமற்போனபோதி லும் ஈஸ்வரானுக்கிரகமும், குருகடாக்ஷமு முண்டான வர்களுக்கு அப்பியாச வயிராக்கியங்களினால் வெகு சுல பத்திலுண்டாகும். ஆகையால் வேதாந்த விசாரத்திற் சாதன சதுட்டய சம்பன்னர்களாகிய வதிகாரிக ளில்லை யென்று பிரமிக்கத்தேவையில்லை. இந்த வியாபாரத்தில் சித்தநிரோதக்கடினத்தையுஞ் சுலபத்தையும்விசாரித்து அப்பியாச வைராக்கியஞ் சம்பாதித்த பூர்வகமாகவே சி ரவணாதிகள் பண்ணிச் சித்தநிரோதம்பெற்று, ஆசாரிய ரால் பரஞானத்தைக் கரதலாமலகம்போற் பெற்றவனெ வனோ, அவனே கிருதகிருத்தியனான சீவன்முத்தனென் று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணாகமாதிகளிற் சொல் லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

சித்தநிரோத நிருபகம்
முற்றிற்று.

முப்பத்தோன்பதாவது,

தேகாத்மவைலக்ஷண நிருபகம்.

ச-கை. தேகேந்திரியாதிகளுக்குமாத்மாவுக்கும் பேதலக்ஷணமா வதேதென்னில்,

உ-ம். தேகேந்திரியாதிகள் அநித்தியம், அசுத்தம், சடரூபம், துக்கரூபம், திரிசியம், சவிகாரம், நாநாரூபம், சாபேட் சை, அப்பிரகாசம், பரிச்சின்னம், சகம்பம், ஆதேயம், சாவயம், ஆதியந்தசகிதம், சுசாதி விசாதி சுகத பேத சகிதம், காரியம், குணம் என்று சொல்லப்படும்.

ஆத்மாவோவென்றால் நித்தியம், சுத்தம், சித்ரூபம், சுகரூ பம், திருக்கு, நிர்விகாரம், ஏகரூபம், நிராபேட்சை, பிர

காசம், அபரிச்சின்னம், நிஷ்கம்பம், ஆதாரம், நிரவயம், ஆதியந்தரகிதம், சுசாதி விசாதி சுகத பேத ரகிதம், கார ணம், நிர்க்குணம் என்று சொல்லப்படும்.

இந்தப்பிரகாரத்தில் தேகேந்திரியாதிகளுக்கு மாத்மாவுக்கு முள்ள வைலக்ஷணியங்களை ஸ்ரீ சற்குரு முன்னிலையில் நிரை நிரையாய் யூகயுத்தியினால் நன்றாய் விசாரித்தறிந் தவனெவனோ, அவனே சீவன்முத்தனென்றும், திடப் பிரக்ஞனென்றும் சுருதி ஸ்மிருதி யிதிகாசபுராணாகமாதி களிற் சொல்லப்படுகின்றது. இதிற்சம்சயமில்லை சித்தம்.

தேகாத்மவைலட்சணநிருபகம்

முற்றிற்று.

நாற்பதாவது,

ஆத்மானாத்மநிருபகம்.

ச-கை. சுருதியாதிகளில் ஆத்மானாத்ம விவேகம் பண்ணவேண்டு மென்கிறபடி ஆத்மாவாவ தேதென்னில்,

உ-ம். ஸ்தூலசூட்சும காரணசரீரமான பஞ்சகோசங்களுக்கும் வெதிருத்தனாய் அவஸ்தாத்திரய சாக்ஷியாய் நித்தியனாய் நிருவிகாரியாய் நிஷ்கிரியனாய் நிருபாதிகனாய் நிர்லேபனாய் நிச்சம்பந்தனாய் நிரந்தரியனாய் நிருமலனாய் அசங்கனாய் அனந்தனாய் அகர்த்தாவாய் அபோக்தாவாய் அசரீரியா ய் அப்பிராணனாய் அமனசனாய் அசலனாய் அபோதசுவ ரூபனாய் சுவயம்பிரகாசனாய் சொப்பிரகாசனாய் சுத்தனா ய் சர்வக்ஞனாய் அசித்தனாய் புண்ணியபாவத்தினாற் பரி சிக்கப்படாதவனாய் சர்வ சம்பந்தனாய் சத்தியனாய் கால த்திரயத்திலும் பாத்தியனாய் பரமானந்த சொரூபனாய் விளங்கப்பட்டவனே யாத்மாவென்று சொல்லப்படும்.

ச-கை. அனாத்மாவாவ தேதென்னில்,

உ-ம். வியஷ்டி சமஷ்டி சொரூபமான தூலசூட்சும காரண சரீ ராதிப் பிரபஞ்சங்களேயனாத்மாவென்று சொல்லப்படும்.

ச-கை. தூலசரீரமாவ தேதென்னில்,

உ-ம். பஞ்சீகிருத பூதகாரியமாய் பிராரத்தத்தினாற் சம்பாதிக் கப்பட்டதாய் சீவகர்மங்களுக்குப் பலரூபமான சுகதுக்க

போகங்களுக் காசிரயஸ்தானமாயிருக்கப்பட்டதே தூல சரீரம் இதையே அன்னமய கோசமென்றுஞ் சொல்லப் படும்.

ச-கை. அன்னமயகோசமாவ தேதென்னில்,

உ-ம். தாய்தகப்பன் புசிக்கப்பட்ட அன்னத்தினுற் பிறக்கப் பட்டதாயும், தாய்தகப்பன் சுரோணித சுக்கிலத்தினுற் பிறக்கப்பட்டதாயும், பாலன்னத்தினுல் விர்த்திபொருந் தினதாயும் இருக்கின்றதேகமே யன்னமயகோசமாகும். இந்தத் தூலமானது பிறப்பதற்கு முன்னும் மரணந்தத் திலுமில்லாதபடியினுலும் பஞ்சமகாபூத காரியமாகையி னுலும், திரிசியமாகையினுலும், சடமாகையினுலும், பரிச் சின்ன மாகையினுலும், சுவர்கள்போ லிருக்கிறபடியினு லும் இது ஆத்மாவாக மாட்டாது

அந்தச்சுவரைப் பார்க்கமாட்டாதவன் அந்தச்சுவருக்கெப் படி யன்னியனே, அப்படியே தாஷ்டாந்தத்திலுந் தூல தேக திருஷ்டாவானவன் தூலதேகத்திற் கன்னியனெ ன்றே விசாரித்து முமுட்சுவானவர்கள் தூலதேக சாட் சியும் சேதனனுமாகிய வாத்மாவே நானென்றறியவே ண்டும்.

ச-கை. இனி சூட்சுமசரீரமாவ தேதென்னில்,

உ-ம். அபஞ்சீகிருத பூதகாரியமான பதினே ழவயவத்துடன் கூடி யிருக்கப்பட்டதே சூட்சுமசரீரமென்று சொல்லப் படும்.

ச-கை. பதினே ழவயவமாவ தேதென்னில்,

உ-ம். ஞானேந்திரிய பஞ்சகம், கர்மேந்திரிய பஞ்சகம், பிரா ணுதி பஞ்சகம் மனம் புத்தி இதுகளே பதினே ழவயவ மென்று சொல்லப்படும்; இது கோசத் திரயாத்மகமா யிருக்கும்.

ச-கை. கோசத்திரயமாவ தேதென்னில்,

உ-ம். பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயமென்றுசொல்லு வார்கள். இதிற் பிராணமயகோசமாத்திரம் பத்தவயவ த்துடனிருக்கும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். அபஞ்சீகிருத பூதகாரிய பஞ்சமகாபூதங்களின் ஆதியா கிய ரஜோபாகத்திலிருந்து பிரத்தியேகம் பிரத்தியேக

மாய் கிரமமாகப் பிறக்கப்பட்ட வாக்காதியான கர்மேந்திரியமைந்தும், ரஜோகுண சமஷ்டியினாற்பிறக்கப்பட்ட பிராணாதி வாயுக்களைந்துங் கூடினது பிராணமயகோசமென்று சொல்லப்படும்.

ச-கை. மனோமயகோசமாவ தேதென்னில்,

உ-ம். ஆறவயவத்துடன் கூடியிருக்கும்.

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். முற்சொல்லிய அபஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களினாதியான சத்துவகுண பாகங்களினாற் பிரத்தியேகம் பிரத்தியேகமாய் கிரமத்துடன் பிறக்கப்பட்ட சுரோத்திராதியான ஞானேந்திரியமைந்தும், சத்துவகுண சமஷ்டியினாற் பிறக்கப்பட்டதாய் சம்சயாத்மகமாய் அந்தக்கரணவிருத்திரூபமாயிருக்கிற மனதொன்றுங்கூடி மனோமயகோசமென்று சொல்லப்படும்.

ச-கை. விஞ்ஞானமயகோசமாவ தேதென்னில்,

உ-ம். அதுவு மாறவயவத்துட னிருக்கும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். முற்சொல்லிய சுரோத்திராதியைந்தும், சத்துவகுணசமஷ்டியினாற்பிறந்து நிச்சயாத்மகமாய் அந்தக்கரண விருத்திரூபமான புத்தியொன்றுங்கூடி விஞ்ஞானமயகோசமென்று சொல்லப்படும். இந்தக் கோசத்திரயமும் லிங்கசரீரத்தி லந்தர்ப்பூதம். இந்த லிங்கசரீரமும் திரிசியமாய் சடமாயிருக்கிறபடியினால் தூல சரீரத்தைப்போலவே யாத்மாவாக மாட்டாது.

ச-கை. ஆனாலிந்தலிங்கசரீரத்திற்குப்பூதகாரியமெப்படியெனில்,

உ-ம். இதற்கர்த்தஞ் சுருதியினாலேயே பூதகாரிய நிச்சயிக்கிறபடியினால் தூலசரீரத்தைப்போ லிதற்குந் திரிசியத்துவமுஞ் சடத்துவமும் பரிச்சின்னத்வமும் விகாரங்களும் நிச்சயிக்கப்படுகின்றது. அந்தத் தூலதேக வதிஷ்டாவானவன் தூலதேகத்திற் கெப்படி யன்னியனோ, அப்படியே இந்த லிங்கதேகவதிஷ்டாவாகிய நான் இந்தலிங்கதேகத்திற் கன்னியனென்றும், இதற்குச் சாட்சியாகிய வாத்மாவே நானென்றும் முமுட்சுக்க ளறியத்தக்கது.

ச-கை. காரணசரீரமாவ தேதென்னில்,

உ-ம். தூலசூட்சும சரீரத்துவயத்திற் கேதுவாய் ஆதியாய் அநிர்வசனீயமாய் சடமாய் மோகாத்மகமாய் ஆத்மாவேயாசிரயமானதாயிருக்கிற பிரம வாவாரகமான வஞ்ஞானமே காரண சரீரமென்று சொல்லப்படும். இதற்கேயானந்தமயகோச மென்றுபெயர்.

ச-கை. ஆனந்தமயகோசமாவ தேதென்னில்,

உ-ம். பிரியமோதப் பிரமோத விர்த்திமத்தும் அந்தக்கரணவுபசர்ச்சனமும் ஆகிய விவையே ஆனந்தமயகோச மென்னப்படும்.

ச-கை. பிரியமோதப் பிரமோத விர்த்தியாவ தேதென்னில்,

உ-ம். இஷ்டமான வஸ்துவைப் பார்த்தமாத்திரத்தில்வந்த சந்தோஷமே பிரியம்; அவ்வஸ்து லபித்தபின்புவருகிற சந்தோஷமே மோதம். அவ்வஸ்துவை யனுபவித்தபின்புவருகிறசந்தோஷமே பிரமோதமென்று சொல்வார்கள்.

ச-கை. இவ்வஞ்ஞானத்திற்குப் பாவரூபத்வமெப்படியென்னில்,

உ-ம். நான் அஞ்ஞானி, சடன், மோகிதன், அசத்தனென்று சமஸ்தபிராணிகளாலும் அஞ்ஞான மனுபவிக்கப்படுகிறபடியினு லிதுவே பாவரூபத்வம்.

ச-கை. திரிசியத்துவ மெப்படியென்னில்,

உ-ம். சடத்துவமும், மோகத்துவமும் நிச்சயிக்கிறபடியினுலும் காரணசரீரமுஞ் சரீரமானதினுலுந் தூலசூட்சுமம்போலவே சடமானபடியினுலும் கடகுட்டியாதிகள்போலவேயாத்மாவாகமாட்டாதபடியினுலும் நானஞ்ஞானி, என் அஞ்ஞான மென்னைவாதிக்கின்றது, என் அஞ்ஞானம் முன்பின்தோற்றுமற் பண்ணுகின்றதென்று சாட்சியினுலறியப்படுகிறபடியினுலும் இவ்வஞ்ஞானத்திற்குத் திரிசியத்துவமுங்கூடும். இப்படிசொல்லப்பட்ட யுத்தியினுற் பஞ்சகோச சரீரத்திற்கு அனுத்மத்வஞ் சித்தித்தது.

இந்தச் சரீரத்திரயத்திற்கும் விலட்சணனுகிய பிரத்தியேகாத்மாவே தானென்று முமூட்சுக்கள் நிச்சயித்துக்கொள்ளத்தக்கது. பஞ்ச கோசாத்மகமாகிய சரீரத்திரயத்துக்கு மாத்மத்வங் கூடாதபடியினுல் தேகேந்திரியாதி விலட்சணனுகிய வாத்மாவே நானென்று ஸ்ரீசற்குரு சந்

நிதானத்தில் எவன் சந்தேகவிபரீதமின்றி விசாரித்தறி கிறனோ, அவனே சீவன்முத்தனுஞ் சகல சாஸ்திர சம் பன்னனுமென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணுகமா திகளிற்சொல்லப்படுகின்றது. இதிற்சம்சயமில்லைசித்தம்.

ஆத்மானத்மநிருபகம்
முற்றிற்று.

நாற்பத்தோருவது,

அவஸ்தாத்திரயநிருபகம்.

ச-கை அவஸ்தாத்திரயமாவ தேதென்னில்,

உ-ம். சாக்கிர சொப்பன சுழுத்தி என்று மூன்றுவிதம்.

ச-கை சாக்கிரமாவ தேதென்னில்,

உ-ம். சுரோத்திராதி யிந்திரியங்களினுற் சத்தாதி விஷயஞான மெந்தமட்டும் வருகின்றதோ, அந்தமட்டுஞ் சாக்கிரா வஸ்தை. இவ்வவஸ்தையில் தூலசரீரத்தி லபிமானிக் கப்பட்ட வாத்மாவை விசுவன், வியவகாரிகன், சிதாபா சன் என்று சொல்லப்படும்.

ச-கை. இம்மூன்றுபெய ரெப்படி வந்ததென்னில்,

உ-ம். சமஸ்தத்திலு மபிமானிக்கின்றபடியினுல் விசுவனென் றும், சமஸ்தவிவகாரமும் பண்ணுகிறபடியால் விவகாரிக னென்றும், சித்துப்போலவே தோற்றப்பட்டுச் சித்து ல ட்சணமில்லாதபடியினுல் சிதாபாசனென்றும் பேர்வந்த து. இந்தத் தூலசரீரமுஞ் சமஷ்டி வியஷ்டி பேதத்தி னு லிரண்டுவிதம்.

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். சாக்கிராவஸ்தையில் தூலசரீர சமஷ்டியில் அபிமானிக் கப்பட்ட வாத்மாவை விராட்டு வைசுவானரன் வைராஜ சன் என்று சொல்லப்படும்.

ச-கை. இம்மூன்றுபெய ரெப்படி வந்ததென்னில்,

உ-ம். நானுவிதமாய்த் தோற்றுகிறபடியால் விராட்டென்றும், சமஸ்த பிராணிகளிடத்திலும் நானென்றபிமானஞ்செய் வதினுல் வைசுவானரனென்றும், விசேஷமாய்த்தோற்று விப்பவனுதலால் வைராஜசனென்றும் பேர்வந்தது.

சு-கை. சொப்பனமாவ தேதென்னில்,

உ-ம். சாக்கிர வாசனையாற் பிறக்கப்பட்ட விஷயத்துடன்கூடின ஞானமே சொப்பன வவஸ்தை. இவ்வவஸ்தையில் சூட்சுமசரீரத்தி லபிமானிக்கப்பட்ட வாத்மாவைத் தைசதன் பிராதிபாதிகன் சொப்பன கற்பிதனென்று சொல்லப்படும்.

சு-கை. இம்மூன்று பெயரேன் வந்ததென்னில்,

உ-ம். தேஜோமயமான அந்தக்கரண விருத்தியுடன் கூடிக்கொண்டிருப்பதால் தைசதனென்றும் தோற்றுகின்றகாலத்தில்மாத்திரமிருப்பதால் பிராதி பாதிகனென்றும், அஞ்ஞானகாரியமான நித்திராசத்தியினாற் கற்பிக்கப்பட்டுச் சொப்பனத்தை யபிமானித்தபடியினால் சொப்பன கற்பிதனென்றும் பெயர்வந்தது. இந்தச் சூட்சுமசரீரமும் சமஷ்டி வியஷ்டி பேதத்தினா லிரண்டுவிதம்

சு-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். சொப்பனாவஸ்தையில் சமஷ்டி சூட்சுமசரீரத்தி லபிமானிக்கப்பட்ட வாத்மாவை இரணியகர்ப்பன், சூத்திராத்மா, பிராணன் என்று சொல்லப்படும்.

சு-கை. இம்மூன்று பெயரேன் வந்ததென்னில்,

உ-ம். ஞானசத்தி யுண்டாயிருப்பதால் இரணிய கர்ப்பனென்றும், நானாவித மணியினிடத்தில் சூத்திரங் கோத்தது போல நானாவித பிரபஞ்சங்களிலு மனுசூதனாயிருப்பதால் சூத்திராத்மாவென்றும், கிரியாசத்தியுடன் கூடியிருப்பதினால் பிராணனென்று பெயர்வந்தது.

சு-கை. சமஸ்த விஷயஞானங்களு மில்லாதிருக்கின்றதெதுவோ அதுவே சுழுத்தியவஸ்தை. இவ்வவஸ்தையில் காரண சரீரத்தி லபிமானிக்கப்பட்ட வாத்மாவைப் பிராஞ்ஞன், பாரமார்த்திகன், அவிச்சின்னனென்று சொல்லப்படும்.

சு-கை. இம்மூன்று பெயரேன் வந்ததென்னில்,

உ-ம். சொப்பிரகாச சொரூபனானதையால் பிராஞ்ஞனென்றும், அவஸ்தாத்திரயத்தி லனுசூதனா யிருக்கிறபடியால் பாரமார்த்திகனென்றும், தேகேந்திரியாதியுபாதியினாற் பரிச்சின்னனாகியபடியால் அவிச் சின்னனென்றும் பேர் வந்தது. இந்தக் காரண சரீரமுஞ் சமஷ்டி வியஷ்டி பேதத்தினாலிரண்டுவிதம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். சுழுத்தியவஸ்தையில் சமஷ்டி காரணசரீரத்தி லபிமானிக்கப்பட்ட வாத்மாவை ஈஸ்வரன் அந்தரியாமி அவ்வியாகிருதன் என்றுசொல்லப்படும்.

ச-கை. இம்மூன்று பெயரேன் வந்ததென்னில்,

உ-ம். சமஸ்த பிராணிகளையுஞ் சிருஷ்டிக்கிறபடியினு லீஸ்வரனென்றும், சமஸ்தபிராணிகளிருதயத்திலுமிருந்துபிரேரிப்பிக்கிறபடியினுல் அந்தரியாமியென்றும், நாமரூபரகிதமாயிருக்கிறபடியால் அவ்வியா கிருதனென்றும் பேர் வந்தது. இதுவே வியட்டி சமட்டி சாக்கிர சொப்பன சுழுத்தியவஸ்தாத் திரயங்களும் அபிமானிகளுமாகும்.

ச-கை. இந்தச் சரீரத்திரயங்களுங் கன்னியமாய் முப்பத்தாறுதத்துவங்களிருக்க, அதுகளைச்சொல்லாமற் சரீரத்திரயங்களைமாத்திரஞ் சொன்னதேதென்னில்,

உ-ம். அந்த முப்பத்தாறு தத்துவங்களு மிந்தச் சரீரத்திரயத்தி லந்தர்ப்பூதமாயிருக்கிறபடியினுல், இதுகளைச்சொன்னபோதே அந்தத்தத்துவங்களையுஞ் சொன்னதாயிற்று.

ச-கை. ஆயினும் முப்பத்தாறு தத்துவங்களாவ தேதென்னில்,

உ-ம். ஆகாசாதிபூதமைந்தும், சத்தாதிவிஷயமைந்தும், சுரோத்திராதி ஞானேந்திரியமைந்தும், வாக்காதி கன்மேந்திரியமைந்தும், பிராணுதி வாய்வுக்கள்பத்தும், மனுதி நான்கும், அஞ்ஞானமொன்றும்; பசுவாகிய சீவனென்றும் கூடினது முப்பத்தாறு தத்துவங்களென்று சொல்லுவார்கள். இந்தத் தத்துவங்களுக்கெல்லா மன்னியமாய் விளங்குவது ஜகத்காரண பூதமாகியபரமாத்மாவானபரப்பிரமமென்று சொல்லப்படும்.

இந்த முப்பத்தாறு தத்துவமு மிருபத்துநான்குதத்துவத்திலந்தர்ப்பூதமென்று நிச்சயித்து இருபத்துநான்குதத்துவமென்றுஞ் சொல்லப்பட் டிருகின்றது. இப்படி சொல்லப்பட்ட வவஸ்தாத் திரயங்களையுஞ் சரீரத்திரயங்களையும் ஸ்ரீசற்குரு முன்னிலையில்விசாரித்து அகண்டசச்சிதானந்த சொரூபமாகிய பிரத்தியேகாத்மாவே நானென்றறிகிறவனெவனே, அவனே பிரமவித்தென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணுகமாதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற்சம்சயமில்லை சித்தம்.

அவஸ்தாத்திரயநிருபகம்

முற்றிற்று.

நாற்பத்திரண்டாது,

பிரளயசொரூபநிரூபகம்.

ச-கை. பிரளயசொரூபமாவ தேதென்னில்,

உ-ம். நித்தியப்பிரளயம், அவாந்தரப்பிரளயம், தினப்பிரளயம், பிரமப்பிரளயம், அத்தியந்தப்பிரளயம் என்றைந்துவித மாயிருக்கும்.

ச-கை. நித்தியப்பிரளயமாவ தேதென்னில்,

உ-ம். சமஸ்தபிராணிகளுடைய சுழுத்தியேநித்தியப்பிரளயம்.

ச-கை. அவாந்தரப் பிரளயமாவ தேதென்னில்,

உ-ம். கிருதயுகந் திரேதாயுகம் துவாபரயுகம் கலியும் ஆகிய அவ்வவ் வாதிபத்தியம் வருகிறமட்டும் அவாந்திரப் பிரளயமென்று சொல்லப்படும். பிரமதேவருடைய மத்தியானத்தில் பதினான்கு அவாந்திரப்பிரளயம்வரும். அதுகளுக்கு நைமித்தியப் பிரளயமென்றும் மனுவராந்தரப்பிரளயமென்றுஞ் சொல்லப்படும். அதற்குள் யுகப்பிரளயம் அந்தர்ப்பூதமாயிருக்கும்.

ச-கை. தினப்பிரளயமாவ தேதென்னில்,

உ-ம். பிரமதேவருடைய சுழுத்தியே தினப்பிரளயம்.

ச-கை. பிரமப்பிரளயமாவ தேதென்னில்,

உ-ம். பிரமதேவருடைய நாசவவஸ்தை. அவ்வவஸ்தையில் ஆகாசாதிப் பிரபஞ்சங்கள் சார்வாத்மனாயில்லை. அஞ்ஞானமாத்திர மிஞ்சியிருக்கும். அதற்கு மகாப் பிரளயமென்றும், பிராகிருதப் பிரளயமென்று. மகாசுழுத்தியென்றும் மூன்றுபெயர்.

ச-கை. அத்தியந்தப்ப பிரளயமாவ தேதென்னில்,

உ-ம். முத்தி; அவ்வவஸ்தையில் அஞ்ஞானஞ் சர்வாத்மனாயில்லை இப்படி பஞ்சப்பிரளயங்களையும் ஸ்ரீசற்கு முன்னிலையில்விசாரித்து இதுகளுக்கெல்லா மாதாரமாய் அனுசூதனாய் அசங்கனா யிராநின்ற வாத்மாவே நானென்று எவனறிகிறானோ, அவனே சீவன்முத்தனென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணாகமாதிகளிற் சொல்லப்படுகின்றது இதிற்சம்சயமில்லை சித்தம்.

பிரளயசோரூபநிரூபகம்.

முற்றிற்று.

நாற்பத்துமூன்றாவது,

வேதாந்தவெதிருத்தமனன நிருபகம்.

ச-ஙை. உலகத்தில் வேதாந்தசாஸ்திர வெதிருத்தர்களாகிய சில வித்துவான்களும், லௌகீகர்களும், சில பாமரர்களும், ஆகிய இவர்கள் ஆபாசசாஸ்திர புராணாகமாதிகளைக் கேட்டு; அவற்றி னபிப்பிராயந் தெரியாமல் அதுகளையே சத்தியமென்றெண்ணிப் புத்திராளுண்டானவர்களுக்கே இகபரசவுக்கிய முண்டென்றும், புத்திராளில்லாதவர்களுக்கு இகலோக பரலோக துக்கமுண்டென்றுஞ்சொல்லி யிருக்கிறார்கள். அதைக்கேட்டு யதார்த்தமென்றெண்ணிப் பிரமைகொண்டவர்களுடைய பிராந்தி நீங்கும்படி. புத்திரா ளுண்டானவர்களுக்கே யதிகதுக்கமென்றுசொன்ன பிரபல சுருதிவாக்கியங்களை விசாரித்து முமூட்சுவானவர்கள் அந்தப் புத்திராதிகளிடத்திற் பிரியங்களை விட்டுவிட்டு, ஆத்ம சொரூபமாகிய தன்னிடத்திலேயே பரமப்பிரீதியாய் சதாநிஷ்டரு யிருக்கவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுகிறபடியினால் புத்திராளுண்டானவர்களுக் கதிகதுக்கமென்பதெப்படியென்னில்,

உ-ம். புத்திரனில்லாத தாய்தந்தைகள்புத்திரசோகங்கொண்டு சாஸ்திரிகளையழைத்து, சுவாமீ! எங்களுக்குப் புத்திரனில்லாமையாற் கதியில்லையென்று புராணாதிகளிற் சொல்லுகின்றதே. அந்தத் தோஷநீங்கப் புத்திரனுண்டாகும் வகை சொல்லவேண்டுமென்றுகேட்க.

அவர்களும் சந்தோஷகரமாய் நீங்கள் புண்ணியதீர்த்தயாத்திராதி விரதாதிகளை யனுஷ்டித்தீர்களானாலுங்களுடைய பாவநீங்கிப் புத்திரோச்சவ முண்டாகுமென்றுசொல்ல; அந்தப்படியே தீர்த்தயாத்திரைமுதலிய விரதாதிகளைப் பிரயாசைவகித்து வெகுநாளனுஷ்டித்தும் புத்திரனுண்டாகாமையினாலுந் துக்கம்; அப்படியிருக்கத் தெய்வகதியாய் ஒருகாலத்திற் கர்ப்பமுண்டாகி அஃதுங் கர்ம சம்பந்தத்தினாற் சேதப்பட அதனாலுந்துக்கமே; திரும்பவுந் தெய்வகதியாய்க் கெர்ப்பந்தரித்துப் பத்துமாதஞ்சென்

றபிறகு பிரசவகாலத்திலுந்துக்கம்; பிரசவித்தபிறகு மந்திராதி ஔஷதாதி தேவாதி பிரார்த்தனைகளினாலுந் துக்கப்பட்டவர்களாய் புத்திராபேட்சையினாற் பிராணஹானி யெங்கே நேரிடுகிறதோவென்று தாபப்படுவதினாலுந் துக்கம்; மாந்தம் சுரம் பட்சிதோஷ முண்டாதலினாலும் சதா துக்கம்; இதுகளுக்கெல்லாந் தப்பிப்பிழைத்தால் வித்தியாப்பியாசாதிகளினால் துக்கம்; அப்படி வித்தைவந்த பின்னும் விஷயவிச்சை சம்பந்தாதி துர்நடத்தைகளினாலதிகதுக்கம்.

பின்னும் விவாககாரியாதி செலவுகளினாலும் அப்படிவிவாகமாகிக் குழந்தைகளதிகரித்து தரித்திரப்படுவதினாலுந் துக்கம்; ஒருவேளை தரித்திரநீங்கி யயிசுவரியம் வந்தகாலத்திலும் இந்தப் புத்திரனுடைய ஐசுவரியவாரோக்கிய சம்பத்தைக் கூடவிருந்தனுபவியாமல் தாய் தந்தைகளாகிய நாம் செத்துப்போகிறோமே யென்பதில் அதிக துக்கம்; இந்தப்பிரகாரம் புத்திரா ளுண்டானவர்களுக்குச் சார்வதா துக்கமேயன்றி, அந்தப்புத்திரர்களா லிகலோக பரலோக சவுக்கியம் எள்ளளவுமில்லை.

இது வீணான பிராந்தியென்று நன்றாய் விசாரித்து முமூட்சுவானவர்கள் புத்திர களத்திராதிக ளிடத்திலிருக்கும் பிரியமோதப் பிரியத்தைச் சர்வாத்மனாய் விட்டுவிட்டு, அருளே திருமேனியாகிய ஆசிரியர் முன்னிலையில் விவேகித்து சார்வதா ஆத்மசொரூபமாகிய தன்னிடத்திற் பரமப் பிரீதிவைத்துச் சதாநிஷ்டனா யிருக்கவேண்டுமென்கிற வேதாந்த சித்தாந்தத்தைத் தெளிந்தவனெவனோ, அவனே மெய்ஞ்ஞானியென்று சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணாகமாதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற்சம்சயமில்லை சித்தம்.

வேதாந்தவேதிருத்தமனனநிருபகம்

முற்றிற்று.

நாற்பத்துநான்காவது,

பிரத்தியத்வநிருபகம்.

ச-கை. உலகத்திற் பிரியத்துவமாவதேதென்னில்,

உ-ம். திரவியம், அந்தத்திரவியத்திலும் புத்திரனேபிரியம்

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். புத்திரன் ஓர் அநந்தைசெய்ய அவனை ராஜன் தண்டனை பண்ணத்துடங்கினால் அதற்கு எவ்வளவுதிரவியஞ் சிலவானபோதிலு முன்பின்பாராமற் சிலவழித்துபுத்திரனை விடுவிக்கிறபடியினால் திரவியத்திலும் புத்திரனேபிரியவஸ்துவாகும். இந்தப்புத்திரனிலுந் தனதுசரீரமேபிரியம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். புத்திரன்செய்த குற்றங்கண்டு ராஜன் தகப்பனைப்பிடித்து தண்டிக்கத் துடங்கினால் புதத்திரனைக்காட்டிக்கொடுத்து, எனக்குமவனுக்குஞ் சம்பந்தமில்லையென்றுதகப்பன் தப்பித்துக்கொள்ளுகிறபடியினால், புத்திரனிலுந் தன்சரீரமேபிரியமாகும். இந்தச் சரீரத்திலும் மிந்திரியமே பிரியம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஒரு புருஷன் ஒரு தகாதகாரியஞ்செய்யஅதற்கு ராஜன் கண் காது மூக்குகளை யறுக்கத்தொடங்கினால் அப்போதுதன் அங்கத்திலேதாவதறுக்கக்கொடுத்து இந்திரியங்களைத் தப்பித்துக் கொள்ளுகிறபடியினால் சரீரத்திலுமிந்திரியமே பிரியமாகும். இவ் விந்திரியத்திலும் பிராணனே பிரியம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஒரு புருஷன் குற்றஞ்செய்து அவனையரசன் பிராணசேதம் பண்ணத்தொடங்கினால் இந்திரியங்களையாவதுகொடுத்துப் பிராணனைத் தப்பித்துக்கொள்ளுகிறபடியால்,இந்திரயத்திலும் பிராணனே பிரியமாகும். இந்தப் பிராணனிலும் ஆத்மாவே பிரியம்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். ஒருபுருடன் தான்தேவனாகவேண்டுமென்று பரலோகத்தையிச்சித்துங் கங்காப்பிரவேசம்பண்ணிப் பிராணனை விடுகிறபடியினால் பிராணனிலும் ஆத்மாவேபிரியமாகும். இந்தப்படி ஸ்ரீசற்குரு சன்னிதானத்தில் நன்றாய் விசாரித்துப் புத்திர மித்திர களத்திராதி தேகேந்திரிய பிராணாதிகளுந் துக்கசொரூபமென்றறிந்து அதுகளிடத்திலிருக்கிற பிரியாபிமானங்களை விட்டுவிட்டு, நீங்காப் பிரியத்துவமாகிய வாத்மாவே தானென்று அவ்வாத்மாவினிடத்திலெப்போதும் பிரியம்வைத்திருக்கிறவனெவனோ, அவனே சீவன் முத்தனென்று சுருதி ஸ்மிருதி யிதிகாசபுராணாதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம்.

பிரியத்வநிரூபகம்
முற்றிற்று.

நாற்பத்தைந்தாவது,

மகாவாக்கியநிரூபகம்.

ச-கை. சுருதியாதிகளில் மகாவாக்கிய ஜென்னியஞானமேஞானமென்றும் மற்ற ஞானமெல்லாங் குஞ்ஞானமென்றுஞ் சொல்லுகிறபடியினால் மகாவாக்கியமாவதேதென்னில்,

உ-ம். கூர்மையான புத்திசாதகமிருந்தால் மோக்ஷலட்சுமியையெளிதிற்கூடலாம். உலகத்தில் யாருக்காகிலும் பிரயாசையில்லாமல் புழுதியிலமிழ்ந்துகிடக்கிற மாணிக்கமகப்பட்டால் அதைப் பதனமபண்ணுவார்களன்றி லேசாய் விட்டுவிடமாட்டார்கள். எருக்கஞ்செடியில் தேன்குடங்குடமாயகப்பட்டால் காடுகள்தோறும்போய் வீணாய் அலைந்து திரியமாட்டார்கள். அதுபோல முமுட்சுக்களும் மகாவாக்கியார்த்த விசாரஞானமிருக்கச்சரிதையாதிகளையபேக்ஷித்து விருதாவில் அலைந்துதிரியமாட்டார்கள்.

ச-கை. ஆனால் அதை விசாரிக்கு முறைமை யெப்படியென்னில்,

உ-ம். அனேக ஜன்மாந்தரங்களி லீஸ்வரார்ப்பணமாகச் செய்யப்பட்ட நித்திய நைமித்திய கன்மங்களினாலும் சகுணவுபாசனையினாலும் சித்தசுத்தியுண்டாகி மனுஷலோகமுதல் பிரமலோகபரியந்தமான சர்வமும் அநித்தியமென்

றாந் துக்கமென்றுமறிந்து, இந்தஜனனமரணதுக்கமான சம்சாரத்திற்குப் பயந்து நித்தியா நித்திய வஸ்து விவேகம் இகமுத்திரார்த்த பரபோகவிராகம், சமாதி ஷட்க சம்பத்தி, முமூட்சுத்வம் என்கிற சாதன சதுஷ்டயமும் இயற்கையி லுண்டானவனாய், இந்தத்தேகத்தில்தானே பிரயாசையில்லாமல் முத்திநாந்தையைக் கூடுகிற மார்க்கமிருக்க, நாம்விருதாவாகப் பத்திவயிராக்கிய கன்மக்குழிகளில்விழுந்து, ஏன் இளைத்துப்போகவேண்டும்? தேகம் விழுந்துபோனபிறகு முத்தியுண்டாகு மென்பதிற் பிரமாணமே காணேப்; இந்தச் சரீரத்தில்தானே முத்திசுகத்தைக்காணும்வழி சொல்லமாட்டாமல், இறந்துபோன பின்பு முத்தியுண்டென்று சொல்லுகிற அஞசாரியர்களை நம்பிச் சேவை பண்ணுகின்றவர்கள் இந்தச் சம்சார சமுத்திரத்தை யெப்படி கடக்கப்போகிறுர்கள்.

ஞானதிருஷ்டியினு லகங்காரத்தை வேறுபடுத்தி அந்த க்ஷணமே பிரம சுகத்தை யபரோட்சமா யனுபவிக்கச் செய்யப்பட்ட சற்குருசேவையினுல் இந்தச் சம்சார துக்க நீங்குமென்பதிற் சந்தேகமில்லையென்று சிந்தித்துக்கொண்டு, சம்சாரத்திலிருந்து மில்லாமல் விடுபட்டவரும், ஞானவயிராக்கிய முடையவரும், பிரமானந்தானுபவத்தில் ரமித்திருக்கிறவரும், காமக்குரோதாதிரகிதரும், தானென்று ஈஸ்வரனென்றென்கிற துவைதபாவமில்லாதவரும், விதிமார்க்கமாய் கோடானுகோடி சற்கன்மங்கள் பண்ணுகிறவரும், அப்படிசெய்தபோது மவற்றிற்பற்றின்றி யிருப்பவரும், ஒருக்காலுஞ் சொரூபஸ்திதியை மறவாதவரும், அந்தரங்கமக்கினவரும், நினைப்பு மறப்பில்லாதவரும், எப்படிப்பட்ட அபக்குவர்களையும், ஒருநிமிஷமாத்திரத்தில் தமது சந்நிதான விசேஷத்தினுல் பரிபக்குவப்படுத்திப் பரஞானத்தைக் கொடுத்தருளப்பட்ட மகாத்மாவுமாகிய ஞானசிரிய ரெங்கேயெழுந்தருளியிருக்கிறுரேுவென்றுந் தேட்டரவுடன் அகத்தில் விரத்தியையும், புறத்தில் ஆராதனைக்குரிய பத்திர புஷ்பாதி வஸ்துக்களையுங் கைப்பற்றிக்கொண்டு,

காடு நாடு மலை குகை முதலிய ஸ்தானங்களெல்லாஞ் சுற்றித்திரிந்து ஓரிடத்தில் சமஸ்த வேதாந்த சாஸ்திர பூரண

க்கியரும், சொப்பிரகாசவானந்தமே திருமேனியாயெழுந்தருளி விளங்கப்பட்ட வனுபவசிகாமணியுமாகிய ஸ்ரீ சற்குருவைக்கண்டு சரணாகதியென்றடைந்து, அடியற்ற மரம்போல்விழுந்து சாஷ்டாங்க பஞ்சாங்க அஷ்டாங்க முதலிய நமஸ்காரங்கள்செய்து ஆனந்தபரவசனாயெழுந்துநின்று, கைகட்டி வாய்பொத்திக்கொண்டு, சைதன்யம், சாஸ்வதம், சாந்தம், வியோமாதீதம், நிரஞ்சனம், நாதபிந்துகளாதீதம், தஸ்மை ஸ்ரீ குரவேநமா என்றுபலவாறாகத் துதித்து,

ஓ சுவாமீ! கிருபாநிதீ! அடியேன் சம்சாரபந்தத்தி லுண்டான தாபத்திரயங்களினின்று நீங்கி, இந்தச்சரீரத்தில் தானே பிறப்பிறப்பில்லாதமோக்ஷானந்தத்தைப்பெறும்படி அனுக்கிரகஞ்செய்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான். அதுகேட்டு அவ்வாசிரியரும் கிருபைகூர்ந்து அப்படியேநல்லதென்று அபயாஸ்தங்கொடுத்து அவனையாதரித்துச் சிலகாலந் தமதுசந்நிதானத்திலிருக்கும்படி செய்தருளிப் பிற்பாடு ஆலசியன், நிஷ்டூரன், குருசேவை, வஞ்சகன், ஸ்தம்பன மாதிமாரண மந்தமான அஷ்டவித கர்மங்களைச்செய்கிறவன், விஷயாசத்தியுடையவன், பாஷாண்டமதஸ்தன், சோம்பன், பொய்யன், ஞானசோரன், சாரவிசாரன், கோபன், மூர்க்கன், டம்பன், கோளன், காமுகன், சித்தசுத்தியில்லாதவன், அனாசாரன் ஆகிய இவர்களைத்தள்ளி ஞானவயிராக்கியயுத்தன், சீவபாவமில்லாதவன், சித்தசுத்தியுடையவன் ஆசாரன், சத்தியன், திடவிரதன், குருபத்தியுள்ளவன் ஆகிய இவர்களுக்கேயுபதேசிக்கவேண்டுமென்றும், அனதிகாரிகளும் மோட்சவிச்சையுண்டாய் வருவார்களானால், அவர்களையும் தமது சந்நிதான விசேஷத்தினால் லோகத்தைப் பொன்னாகச்செய்கின்ற பரிசனவேதிபோலக் கிருபாலோசத்தினால் தரிசனவேதிசெய்து பரிபாகப்படுத்தி மந்திரபாவ தியான யோகங்களினா லவர்கள் சித்தத்தை நிருமலம்பண்ணி, அத்தியாரோப வபவாத யுத்திகளையும், அத்துவாவிருத்திலட்சணை, தடஸ்தலட்சணை, சொரூபலட்சணையாகிய லட்சணாத்திரயங்களை கிரமமாகவெடுத்துப் போதித்துத் தேகாதியனாத்ம புத்தி

யைநேதிபண்ணி, நீயே பரப்பிரமமென்றுள்ளபடி சகல சம்சயமுமறக் குருசாம்பிரதாயக் கிரமத்தினால் சொரூப ஞானத்தைத் தெரிவிக்கவேண்டுமென்றும், சொல்லுகின்ற வுபதேசக்கிரமவிதிப்படி தம்மைவந்தடுத்த சீடனது பக்குவத்தை தினேதினே பரிக்ஷித்து அதிதீவிரபக்குவனென்றறிந்து உத்தேசம், இலக்ஷணம், சோதனையோடுங்கூடிய மகாவாக்கியத்தை யனுக்கிரகஞ்செய்யும்படி திருவுளங்கொண்டு அவனது சஞ்சித கன்மமெல்லாம் அடியோடறும்படி ஆமைபோற் றிருவுள்ளத்திற் சிந்தித்து, ஆகாமிய கன்மமெல்லா நீங்கும்படி மீனைப்போற் கிருபாதிருஷ்டிவைத்து, பிராரத்தகன்மமும் பிரமானந்தரசமாய் ரமிக்கும்படி பறவைபோல் அஸ்தமஸ்தகசையோகஞ்செய்து, பஸ்மகவசமிட்டு விதிநிஷேத ரகிதமாகிய சாமவேத மகாவாக்கியார்த்தத்தை யுபதேசஞ்செய்தருளினார்.

ச-கை. ஆனால் அத்தியாரோபமாவ தேதென்னில்,

உ-ம். ரச்சு, சுத்திகை, ஸ்தாணுவாதியில் கிரமத்திலில்லாதசர்ப்ப ரஜித சோராதி கற்பிதம்போற் சத்ரூபப் பிரமத்திலில்லாத மாயாப் பிரபஞ்ச கற்பிதமே அத்தியாரோபம்.

ச-கை. அபவாதமாவ தேதென்னில்,

உ-ம். இது சர்ப்பமல்ல, ரச்சுவே, இது ரசிதமல்ல, கிளிஞ்சலே, இது சோனல்ல, ஸ்தாணுவேயென் றறிவிப்பது போலும்; ஒரு விருட்சத்தில் இலை, பூ, பிஞ்சு, காய், பழம், பட்டை, நார், வேர், கிளை, கொம்பு, ருசிகளாகிய இதுகள் பேதமானாலும் காரணமாகிய வித்து ஒன்றேயென்றறிவிப்பதுபோலும் இது பிரபஞ்சமல்ல, பிரமமே யென்றறிவிப்பது அபவாதமாகும்.

ச-கை. ஆனால் அத்துவாவிருத்தி லட்சணையாவ தேதென்னில்,

உ-ம். தேகாதி யனாத்ம வர்க்கங்களை யுத்தியினால்நேதிபண்ணி, நின்ற ஆத்மாவை யறிவிப்பதே அத்துவா விருத்தி லட்சணை.

ச-கை. தடஸ்தலட்சணையாவ தேதென்னில்,

உ-ம். விருட்சத்தின்மேல் சந்திரனிருப்பா னென்பதுபோலப் பூதாதி ஜகத்காரணங்கொண்டு ஆத்மாவை யறிவிப்பதே தடஸ்தலட்சணை.

ச-கை. சொரூபலட்சணையாவ தேதென்னில்,

உ-ம். பிரகாச சொரூபமே சூரியனென்பதுபோல ஆத்மாவினிஜசொரூபமறிவிப்பதே சொரூபலட்சணையென்று சொல்லப்படும். இதுவுமல்லாமல் அந்த மகாவாக்கியார்த்த விசாரத்தினாலுண்டாகிற கூடஸ்த பிரமாயிக்ய ஞானமே மோட்சமென்று சகலவேதாந்த சாஸ்திரங்களிலும்சொல்லப் படுகின்றது. பெரியோர்களுடைய வனுபவமும் நமது சுவானுபவமும் அதுவேயாகும்

ச-கை ஆனா லடியேனுக்கு அந்த மகாவாக்கியத்தை யுபதேசித்துக் கூடஸ்தபிரமாயிக்ய ஞானத்தையும் நன்றாய்சம்சய விபரீதமறும்படி யனுக்கிரகஞ் செய்தருளவேண்டும். ஆயினும் அதற்கு மகாவாக்கியமென்கிற சிலாக்கியமேன் வந்ததென்னில்,

உ-ம். வேதத்தில் விதிவாக்கியம், நிஷேத்தவாக்கியம், அவாந்தர வாக்கியம், ஆப்தவாக்கியம் என்றுசொல்லப்படுகிற வாக்ய சதுஷ்டயத்தில் ஆப்தவாக்கியம் அவாங்மனோ கோசரமாயிருக்கிற சைதன்யவஸ்துவைக் கரதலாமலகம்போற் காட்டுகிறபடியினால் அதற்கு மகாவாக்கியமென்றுபெயராயிற்று.

ச-கை. மற்றமூன்றில் விதிவாக்கியமாவ தேதென்னில்,

உ-ம். பிராமணனைக்குறித்து காலைமாலைகளி லனுஷ்டான சந்தியாவந்தனைகளும், மரணபரியந்தம் அக்கினி ஹோத்திரமும் பண்ணவேண்டு மென்கிறது விதிவாக்கியம்.

ச-கை. நிஷேத்தவாக்கியமாவ தேதென்னில்,

உ-ம். சுராபானாதிகளைப் பண்ணக்கூடாதென்கிறது நிஷேத்தவாக்கியம்.

ச-கை. அவாந்தரவாக்கியமாவ தேதென்னில்,

உ-ம். ஜோதிஷ்டோமாதிகளைப் பண்ணினால் சீவனுக்குச் சொர்க்காதிபல னுண்டாகு மென்றது அவாந்தர வாக்கியம். இம்மூன்றுவாக்கியமும் அதுபோலப் பிரத்தியேகாத்ம சொரூபத்தைத் தெரிவிக்கமாட்டாது. ஆதலால் அதற்கு மகாவாக்கியமென்பது பிரமாணசித்தமே.

ச-கை. காண்டத்திரயமென்று சுருதிகளிற் சொல்லப்படுகிறதேதென்னில்,

உ-ம். கன்மம்,உபாசனை,ஞானமென்றுமூன்றுவிதமாயிருக்கும்.

ச-கை. கன்மகாண்டமாவ தேதென்னில்,

உ-ம். வேதபுருஷனுடைய நாபிக்குக்கீழ் சொர்க்கலோக பரிய ந்தங் கன்மகாண்டம்.

ச-கை. உபாசனகாண்டமாவ தேதென்னில்,

உ-ம். வேதபுருஷனுடைய நாபிக்குமேல் கழுத்துக்குக் கீழ்ப்பி ரமலோகபரியந்தம் உபாசனகாண்டம்.

ச-கை. ஞானகாண்டமாவ தேதென்னில்,

உ-ம். வேத புருஷனுடைய கழுத்துக்குமேல் சிரசுபரியந்தம் ஞானகாண்டம்; அந்த ஞானகாண்டத்தில்இந்தத்தத்து வமசியென்னு மகாவாக்கியமானது நாலுவர்ணமும், மூ ன்றுபதமும், மூன்று பதார்த்தமும், மூன்று லக்ஷணையு மாக விளங்கும்.

ச-கை. நாலுவர்ணமாவ தேதென்னில்,

உ-ம். சத்தியம், ஞானம், அனந்தம், ஆனந்தம் என்பதே நாலு வர்ணம்.

ச-கை. மூன்றுபதமாவ தேதென்னில்,

உ-ம். தத்பதம், துவம்பதம், அசிபதம் என்பதேமூன்றுபதம்.

ச-கை. மூன்று பதார்த்தமாவ தேதென்னில்,

உ-ம். அது, நீ, ஆனாய் என்பதே மூன்று பதார்த்தம். இவற் றுள் அதுவென்பதுபாம, நீ என்பதுசீவன், ஆனாயென் பதுசிவம்.

ச-கை. மூன்றுலக்ஷணையாவ தேதென்னில்,

உ-ம். விட்டலக்ஷணை, விடாதலக்ஷணை, விட்டுவிடாதலக்ஷணை என்பதே மூன்றுலக்ஷணை இதற்குச் சஞ்சர்க்கவாக்கியம், விசிட்டவாக்கியம், அகண்டவாக்கியமென்றுசொல்லப்ப டும். இப்படிசொல்லப்பட்ட வேதாந்தசித்தாந்தத்திற்கு த் தத்துவம் இருபத்தெட்டென்று சொல்லுவார்கள். அசித்துருவமாகிய தத்துவம் இருபத்துநாலும் ஜகமாக வும், சித்துருவமாகிய தத்துவம் நாலில் புருடன் காலபர ம் வியோமம் ஆகியமூன்றும் சீவனாகவும், பரம் ஒன்றும் பரமாகவும் விளங்கும். இதுவுமல்லாமல் மேற்சொல்லிய சத்தியம் பரமாகவும், ஞானம் சீவனாகவும், அனந்தம் சராசரமாகவும், ஆனந்தம் சகல புவனமாகவும் விளங் கும்.

நீயென்னும் பதத்திற்கு அபரோக்ஷமாகிய காரியவுபாதி-௫, அதுவென்னும் பதத்திற்குப் பரோக்ஷமாகிய காரணவுபாதி-௫, அவத்தை-௯, அபிமானி-௯, முக்கியவிலக்கியம் ௨, அசுத்தசுத்தம்-௨, இதுகளையறியுமிடத்துச் சிரவண மனனநிதித்தியாசனமாகியமூவகையினுல்விளங்கப்படும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். சற்குரு சன்னிதானத்தில் வேதாந்த சாஸ்திரார்த்தங்களை யையந்திரிவறக்கேட் டறிவது சிரவணமென்றும், அங்ஙனங்கேட்ட சிரவணார்த்தத்தினல் உபாதியை யன்னியப்படுத்தி அவத்தையை யநித்தியமாக்கிச் சொரூப நிச்சயஞ்செய்து, அதை மனத்திற் சிந்தித்துத் தரிப்பதே மனனமென்றும், அங்ஙனமனனஞ்செய்தபொருளைச் சுவானுபூதியிற் காக்ஷிப்படுவதே நிதித்தியாசனமென்றும் சொல்லப்படும். இந்தச் சிரவணாதிகளில்தான் அந்தப் பொருள்விளங்கப்படும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். சிரவணமானது காரியகாரண வுபாதிகளை நீக்கிச் சீவனிது, பரனிதுவென்னக்கேள்வியினுற்றெரிசிக்கப்பண்ணும்

ச-கை. அஃதெவ்வா றென்னில்,

உ-ம். காரியவுபாதியென்பது சீவவுபாதி; அதற்கு வாக்கியம் சங்சர்க்கவாக்கியமென்று சொல்லப்படும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். மஞ்சாக் குரோசந்தி கங்காயாம் கோஷப் பிரதிவசதி யென்பது.

ச-கை. அதற் கர்த்தமேதென்னில்,

உ-ம். மஞ்சங் கூப்பிடுகிறதென்றும், கங்கை சத்திக்கிறதென்றுஞ் சொல்வது. அப்படி சொல்லுமிடத்து மஞ்சம் சடம்; அதுகூப்பிடுமோ? கூப்பிடவறியாது. மஞ்சத்தினுளொருபுருஷனிருந்து கூப்பிட்டானென்றறியவேண்டிற்று. கங்கையாவது ஜடம். அது சடமாதலால் கோஷிக்கவறியாது. அதன் கரையிலிடைச்சேரி யிருக்கிறதென்று கொள்ளவேண்டிற்று. இதுபோ லேழுபாதிக்குஞ் சீவனே சாக்ஷியாய் நின்று சேட்டிப்பிக்கிறனென் றறியவேண்டியது. இதுவிட்டலக்கணை.

ச-கை. காரணவுபாதி யேதென்னில்,

உ—ம். காரணவுபாதி யென்பது பாவுபாதி; இதற்கு வாக்கியம் விசிட்டவாக்கியமென்று சொல்லப்படும்.

ச—கை. அஃதெப்படி யென்னில்,

உ—ம். சுரோணத் திஷ்டதி சுவேதோதாவதி என்பது.

ச—கை. அதற்கர்த்த மேதென்னில்,

உ—ம். ஒரு சிவப்புக் குதிரையும், வெள்ளை பசுவுங்கண்டாயோ வென்பது. அப்படிச் சொல்லுமிடத்து சிவப்புநிற்கிறது. வெள்ளை போகிறதென்றால் சிவப்புநிறம்வேறுபட்டுக் குதிரையன்றித் தனியே நில்லாது; வெள்ளைநிறம் வேறுபட்டுப் பசுவையன்றித் தனியேபோகாது. ஆதலால் சிவப்புநிறமுள்ள குதிரை நிற்கிறதென்றும், வெள்ளைநிறமுள்ள பசு போகிறதென்றும், கொள்ளவேண்டிற்று. இதுபோல சர்வஞ்ஞத்வாதி காரணோபாதியாகிய துரியத்தை விடாமல் பரனே சாட்சியாய் நின்று சீவனும் பரனுமன்னியமாகாமல் மகா மாயையினால் அன்னியோன்னிய ஏகமா யிருக்கிறனென் றறியவேண்டியது. இதுவிடா

ச—கை. அசிபதமாவ தேதென்னில்,

உ—ம். மனனத்திலற்ற விருவகைப் பொருளையுங் காட்சியிலயிக்கம்பண்ணுவதே அசிபதம். இதற்குவாக்கியம் அகண்டவாக்கியமென்று சொல்லப்படும்.

ச—கை. அஃதெப்படி யென்னில்,

உ—ம். சோயந் தேவதத்தகா வென்பது.

ச—கை. அதற் கர்த்த மேதென்னில்,

உ—ம். அவனே யிவன், இவனே அவனென்பது, அப்படிச்சொல்லுமிடத்துச் சர்வ சராசரப் பிரபஞ்சமுந் தன்வடிவாகக்கண்டு விளங்கிய பரன், எல்லாந்தானாய்விளங்குகிறோமென்பது மறந்து, தன்னையுமிழந்து பாமாதீதமாய் சாந்தமான வுபசாந்தத்தை யயிக்கமென்றறியவேண்டியது

ச—கை. நாலுவேதத்திலுஞ் ஞானகாண்டத்தில் நான்கு உபநிஷத்திலிருந்து நான்கு மகாவாக்கிய முண்டாயிற்றென்பதெப்படியென்னில்,

உ—ம். இருக்குவேதத்தில் அயித்திரய வுபநிஷத்திற் பிரஞ்ஞானம் பிரமமென்னும் வாக்கியமும், யசுர்வேதத்தில் தை

த்திரிய வுபநிஷத்தில் அகம்பிரமாஸ்மியென்னும் வாக்கியமும், சாமவேதத்தில் சாந்தோக்கிய வுபநிஷத்தில் தத்துவமசியென்னும் வாக்கியமும், அதர்வண வேதத்தில் மாண்டோக்கிய வுபநிஷத்தில் அயமாத்மாப் பிரமமென்னும் வாக்கியமு முண்டாயிற்று. இந்த நான்கு வாக்கியமும் பதினொரு பதமாயிற்று.

ச-கை. சீவபரங்களுக் கயிக்கியத்தைப்பிரதிபாதிக்கிறதற்கு ஒரு வாக்கியம்போதாதோ?நாலுவாக்கிய மேதுக்கென்னில்,

உ-ம். இந்த நாலு வாக்கியங்களிலும் பிரயோசனமுண்டு.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். தத்துவமசி வாக்கியம் குருவின் உபதேசவாக்கியமும், அகம் பிரமாஸ்மி வாக்கியம் சீஷனனுபவ வாக்கியமும், பிரஞ்ஞானம் பிரமமென்னும் வாக்கியம் லட்சணவாக்கியமும், அயமாத்மாப் பிரமமென்னும் வாக்கியம் சாட்சாத்கார வாக்கியமுமாகும்.

ச-கை. இதுகளுக் கர்த்த மெப்படியென்னில்,

உ-ம். வாக்கியங்களுக்குக்காரணம்பதமும்,பதார்த்தமுமாதலால், பூர்வம் சாமானியமாய் விசாரித்திருந்தபோதிலும் இன்னும் விசேஷமாகவே விசாரித்தறியவேண்டும்.

ச-கை. ஆனால் பதமும், பதார்த்தமாவ தேதென்னில்,

உ-ம். தொம்பதம், தத்பதம், அசிபதம்எனமூன்றுபதம். தொம்பதார்த்தம் சீவன், தத்பதார்த்தம் ஈஸ்வரன், அசிபதார்த்தம் அயிக்கம். இதுவே பதார்த்தமென்று சொல்லப்படும்.

ச-கை. தொம்பதார்த்த பூதனான சீவசொரூப மேதென்னில்,

உ-ம். அவித்தையும், அதிஷ்டான சைதன்யமும்,சைதன்யகற்பிதமான அபஞ்சீகிருத பூதகாரியலிங்கசரீரமும், அதிற்பிரதிபிம்பித்த சிதாபாசனும், சிதாபாச தர்மமான கிஞ்சிஞ்ஞத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வாதிகளுங்கூடிச் சீவசொரூபமென்று சொல்லப்படும்.

ச-கை. தத்பதார்த்த பூதனான பரசொரூப மேதென்னில்,

உ-ம். மாயையும், அதிஷ்டான சைதன்யமும், அதிற்பிரதிபிம்பித்த ஈஸ்வரனும், ஈஸ்வரதர்மமான சர்வஞ்ஞத்வாதி குணங்களுங்கூடி; ஈஸ்வரசொரூபமென்று சொல்லப்படும்.

ச-கை. அசிபதசொரூப மேதென்னில்,

உ-ம். கூடஸ்தனே பிரமம், பிரமமே கூடஸ்தனென்னும் அயிக்கியார்த்தமா யறிவதே அசிபதசொரூபமென்று சொல்லப்படும்.

ச-கை. ஆனால் கிஞ்சிக்ஞத்வாதி குணங்களுடன் கூடியிருக்கிற சீவனுக்கும், சர்வக்ஞத்வாதி குணங்களுடன் கூடியிருக்கிற ஈஸ்வரனுக்கும் அயிக்கியமெப்படிகூடும்? இப்படி விரோதமான அர்த்தத்தைச் சுருதிகளில் எப்படி சொல்லுகின்றது? இதுகளைச் சந்தேக விபரீதமற அடியேனுக்குப் போதித்தருளவேண்டுமென்னில்,

உ-ம். முன்சொல்லிய லக்ஷணத்திரயங்களில் விட்டலக்ஷணையாகிய ஜகர்லக்ஷணையிற் சொல்லுகிறோம். நீ சாவதானமாய்க் கேள்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். கங்காதீரத்திலிருந்தொரு பிராமணன்வர, அவனைக்கண்டு மற்றொருபிராமணன் சுவாமீ! கங்காதீரத்தில் விசேஷமென்னவென்றுகேட்க, அந்தப் பிராமணன் கங்காயாங் கோஷவதியென்றான்.

ச-கை. அதற்குத் தாற்பரிய மேதென்னில்,

உ-ம். கங்கையென்கிற பதத்திற்குப் பிரவாகம் அர்த்தமாகையினால் பிரவாகத்தி லிடைச்சேரியிருக்குமென்று கொள்ளப்படாது; அப்படிகொள்ளுமிடத்துப் பிரத்தியட்சவிரோதமாயிருக்கும். ஆதலால் கங்கைக்கர்த்தமான பிரவாகத்தைச் சர்வாத்மனாய் விட்டுவிட்டு, அப்பிரவாகத்தோடுங் கூடியிருந்த கரையினிடத்தி லிடைச்சேரியிருக்கிறதென்று கொள்ளுவதே தாற்பரியமாயிற்று.

ச-கை. ஆனா லிந்தப்படியே மகாவாக்கியத்திலுஞ் சகர்லட்சணை சொல்லலாமா வென்னில்,

உ-ம். சொல்லப்படாது.

ச-கை. அதேனென்னில்,

உ-ம். தொம்பதார்த்த பூதனான கூடஸ்த சைதன்னிய பரியந்தமும் விட்டுவிட்டால், முமுட்சுக்கள் சொரூபமே யில்லாமற்போகின்றது. அதனால் பிரத்தியட்சவிரோதம்வரும். ஆதலால் இந்த ஜகர்லட்சணங் கூடாது.

ச-கை. ஆனால் எந்தலட்சணத்தினாலெந்தவாக்கியம் பிரமத்தைப் போதிக்கின்றதென்னில்,

உ-ம். அன்னமயகோசமுதல் விஞ்ஞானமயகோசமட்டும் இந்த நாலுகோசமும் பரப்பிரமமென்கிற வாக்கியத்திற்குச்சடமான கோசங்கள். அதுகள் பிரமமல்லாதபடியினாலதுகளை விட்டுவிட்டு அதுகளுக் கதிஷ்டானபூதமான சைதன்னியத்தினிடத்திலேயே தாற்பரியம்.

ச-கை. ஆனால் அஜகர்லட்சணையாவ தேதென்னில்,

உ-ம். மஞ்சாக் குரோசந்தியென்கிற வாக்கியத்தில் மஞ்சங்கூப்பிடுகிறதென்று அர்த்தமாகின்றது. அந்த அர்த்தத்தை யங்கீகரித்தால் பிரத்தியட்ச விரோதம்வரும். ஆதலால் மஞ்சத்தைவிடாமல் அதிலிருக்கும் புருஷன் கூப்பிடுகிறானென்று கொள்ளுகிறதே தாற்பரியம். இப்படிபோல வேதத்தில் சத்தியஞான வனந்தானந்தமென்னும் வாக்கியத்தில் ஆனந்தமயத்துடன் கூடியிருக்கிற வாத்மாவுக்குச் சச்சிதானந்த லட்சணத்தைவிடாமல் ஆனந்தமய கோசத்தைச் சொல்லுகின்றது.

ச-கை. ஆனாலிந்த அர்த்தத்தை மகாவாக்கியத்தி லங்கீகரிக்கலாமேயென்னில்,

உ-ம் அப்படி யங்கீகரிக்கப்படாது.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். கிஞ்சிக்ஞத்வாதி குணங்களுடன் கூடியிருக்கிற சைதன்னியமே சீவன், ஆகையினால் குணவிசிஷ்ட னானவனுக்கு ஐயிக்யஞ் சொல்லக்கூடாது. ஆதலாலிந்த அஜகர்லட்சணையுங் கூடாது.

ச-கை. ஜகத ஜகர்லட்சணையாவ தேதென்னில்,

உ-ம். சொயந் தேவதத்தகா என்கிறவாக்கியத்தில் கங்காதீரத்தில் அஞ்சாம்வருஷம் தேவதத்தனைப்பார்த்தோம். அவனையே இந்தக்காவேரிதீரத்தில் ஐம்பதாம்வருஷங் கண்டோமென்கிற விவகாரத்தில் அந்தத்தேசமும் அந்தக்காலமும் இந்தத்தேசமும் இந்தக்காலமும் ஆகியபுருஷனை வாச்சியார்த்தமென் றங்கீகரித்தோமானால்; வெகு விரோதமுண்டு. எப்படியென்றால், கங்காதீரங் காவேரிதீரமாகாது; காவேரிதீரங்கங்காதீரமாகாது; அந்தக்காலமிந்தக்காலமாகாது; இந்தக்கால மந்தக்காலமாகாது. அதனால் பிரமாணாந்தரமான பிரத்தியட்சனுக்கு விரோதமாயிருக்கின்றது. ஆதலால் அந்தத்தேசம், அந்தக்கா

லம், இந்தத்தேசம், இந்தக்காலமாகிய வாச்சியார்த்தத்தைவிட்டுவிட்டு, லட்சியார்த்த பூதமான தேவதத்தனை யறிந்துகொள்வதே தாற்பரியம்.

அதுபோல மகாவாக்கியத்தில் தற்பத வாச்சியார்த்தமான மாயைக்கும், மாயாப் பிரதிவிம்பனான ஈஸ்வரனது சர்வக்ஞத்வாதி குணங்களுக்கும், தொம்பத வாச்சியார்த்தமான அவித்தைக்கும், அவித்தையாப் பிரதிவிம்பனான சிதாபாசனது கிஞ்சிக்ஞத்வாதி குணங்களுக்கும் அன்னியோன்னிய அயிக்கியம் அங்கீகரித்தால் பிரத்தியட்சவிரோதம்வரும்.

ஆதலால் விரோதமான மாயாசர்வக்ஞத்வாதி குணங்களும், அவித்தையா கிஞ்சிக்ஞத்வாதி குணங்களுமாகிய இருவகையுந்தள்ளிவிட்டு, விம்பத்தோற்ற வொடுக்கமும், விம்பப்பிரதி விம்பத்தோற்ற வொடுக்கமும், அஞ்ஞானமும் அஞ்ஞானகாரியத் தோற்றவொடுக்கமு மறிவித்து, லட்சியபூதமான சைதன்னிய மாத்திரத்தைப் பற்றிச் சச்சிதானந்த பிரமமே நீ; நீயே அந்தச் சச்சிதானந்த, பிரமமென்று மகாவாக்கியத்தில் ஜகத ஜகர்லட்சணையினுல் போதிக்கப்படுகின்றது.

ஆதலால் நீயே பிரமம்; உன்னுடைய சித்தவிருத்தியில் நீயே யவதானித்துப் பார்க்கவேண்டும். இதிற் சம்சயமில்லை. இவற்றுள் வாச்சியார்த்தம், இலட்சியார்த்தமென்னு மிருவகையில் வாச்சியார்த்த மங்கீகரித்தாலெங்கே பிரத்தியட்ச விரோதமாய்த் தோற்றுகின்றதோ, அங்கே லட்சியார்த்த மங்கீகரிக்கவேண்டும். ஆனபடியினுல் மகாவாக்கிய லட்சணத்தினு லயிக்கியம் போதிக்கப்படுகிறதென்று லட்சணையை யங்கீகரிக்கத்தக்கது. ஆயினும் இந்த மகாவாக்கியத்தையே கிரமப்படி இன்னமொரு பிரகாரமாய் உனக்குப் புத்தியிலமையும்படி போதிக்கின்றோம்.

ச-கை. அஃதெப்படியென்னில்,

உ-ம். இருக்குவேதத்தில் பிரஞ்ஞானம் பிரமமென்கிற வாக்கியத்தில்பிரஞ்ஞானமென்றும், பிரமமென்றுமிரண்டுபதம்.

ச-கை. பிரஞ்ஞானபதத்திற் கர்த்தமேதென்னில்,

உ-ம். வாச்சியார்த்தம் லக்ஷியார்த்தமென் றிரண்டுவிதம். அவற்றில் வாச்சியார்த்தமானது பிரத்தியோகாத்மாவின் சாயை அந்தக்கரணத்திற் பிரதிபிம்பித்துத் தற்பிரகாசத்தை யகங்காரனுக்குங் கொடுத்து அகங்காரதர்மத்தைத் தான் மேல்போட்டுக்கொண்டு, சித்துஞ்சடமுமாயன்னியோன்னிய வத்தியாசத்தைப் பண்ணிக்கொண்டு, தப்தாயபிண்டம்போல நான்கர்த்தா, போக்தா, சுகி, துக்கியென் றபிமானிக்கிறபோது, சிதாபாசனுக்கு மகங்காரனுக்கும் சகச தாதாத்மியமென் றுஞ் சிற்சடக்கிறந்தியென் றுஞ் சொல்லப்படும்.

ஸ்தூலசரீரத்தை யத்தியாசம் பண்ணிக்கொண்டு அதனது ஷட்பாவ விகாரங்களெல்லாந் தான் மேற்போட்டுக்கொண்டு; உண்டானேன், பிறந்தேன், வளர்ந்தேன், பருத்தேன், இளைத்தேன், நசித்தேன், கறுப்பு சிவப்பு குட்டை நெட்டையென் றபிமானிருக்கிறபோது சிற்சாயை யகங்காரனுக்கும், ஸ்தூலசரீரத்திற்கும் கர்மஜதா தாதாத்மியமென் று சொல்லப்படும்.

சரீரதர்மங்களெல்லாம் சாட்சியினிடத் தாரோபிக்கும்போது அவ்வகங்காரனுக்குஞ் சாட்சிக்கும் பிராந்திஜ தாதாத்மியமென்று சொல்லப்படும். இந்தப்பிரகாரம் சரீரத்திரயத்திற் கூடியிருக்கிற சிதாபாசன், ஞாதுரு, ஞான, ஞேயமாகிய திரிபுடி வியாபாரம்பண்ணுவன்.

ச-கை. ஞாதுரு ஞான ஞேயமாவ தேதென்னில்,

உ-ம். அந்தக்கரண பிரதிபிம்ப சைதன்னியமே சிதாபாசன். அவனையே ஞாதுருவென் றும், அவன்விருத்தியுடன், கூடும்போது ஞானமென் றும், அவன் விஷயங்களுடன்கூடும்போது ஞேயமென் றுஞ் சொல்லப்படும். இந்தத் திரிபுடியுடன் கூடியிருக்கிற சிதாபாசனே தசேந்திரியவியாபாரத்தைச் செய்வன்.

யாதொரு சைதன்னியம் அந்தக்கரண விருத்தியோடுகூடிச் சுரோத்திரேந்திரியத் துவாரா சத்தங்களையெல்லா மறிகின்றது. அதுவே தொக்கிந்திரியத்துவாரா பரிசங்களையும், சட்சிந்திரியத்துவாரா ரூபங்களையும், சிங்குவையிந்திரியத்துவாரா ரசங்களையும், கிராணேந்திரியத்துவாரா கந்தங்களையும், வாக்கிந்திரியத்துவாரா வசனங்களையும்,

பாதேந்திரியத்துவாரா கமனங்களையும், பாணீந்திரியத்துவாரா தானங்களையும், பாயுரிந்திரியத்துவாரா மலவிசர்க்கத்தையும், உபஸ்தேந்திரியத்துவாரா ஆனந்தத்தையும் அறிகின்றது. இப்படி தசேந்திரிய வியாபார விஷயங்களையறிகிற சீவனையே வாச்சியார்த்தமென்று சொல்லப்படும்.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். லட்சியார்த்த பிம்பவாச்சிய மகங்காரத்திற்பிரதிபலித்து இரண்டுங் கூடினபோது லட்சியமாகிய சாட்சி யசைவற்றிருக்க, அகங்காரந் தொழிற்படுகிறதே வாச்சியார்த்தமென்னப்படும்.

ச-கை. இனி லட்சியார்த்த மேதென்னில்,

உ-ம். அவ்வந்தக்கரணத்தையும். அதுகளின் விருத்திகளையும், தேகேந்திரியாதி வியாபாரங்களாகிய வாச்சியத்தையுந் தள்ளி, மஞ்சாக்குரோச விலட்சணம்போல அவஸ்தாத்திரய சாச்சியாய் கூடஸ்தனுய் நிர்விகாரியாயிருக்கிறபிரத்தியேகாத்ம சைதன்னியமே லட்சியார்த்த மென்று சொல்லப்படும்.

ச-கை. இனி பிரமபதத்திற்கு வாச்சியார்த்தமேதென்னில்,

உ-ம். உத்தமமாயிருக்கிற இந்திராதி தேவதை சரீரங்களிலும், மத்திமமாயிருக்கிற மனுஷாதிசரீரங்களிலும், அதமமாயிருக்கிற பசுவாதி சரீரங்களிலும், அபஞ்சீகிருதபூத பஞ்சீகரண பூதங்களிலும் யாதொரு சைதன்னியமானது ஏகமாயிருக்கின்றதோ அதுவே வாச்சியார்த்தமென்று சொல்லப்படும்.

ச-கை. லட்சியார்த்தமாவ தேதென்னில்,

உ-ம். மாயாகாரியங்களனைத்தையுந் தள்ளிவிட்டுப்பிரபஞ்ச விலட்சணமாய் பிரபஞ்சவதிஷ்டானமாய் மாயாதற்காரியாதீதமாய் திரிவிதபரிச்சேத சூனியமாய் சர்வத்திரா அனுசூதமாயிருக்கிற பரமாத்ம சைதன்னியந் தானே லட்சியார்த்தமென்று சொல்லப்படும். அஃதே பிரத்தியேகாத்மாவாயிருக்கிற கூடஸ்தசைதன்னியம். அதுதான் என்னிடத்திலிருக்கிற பிரக்ஞை. இந்தப் பிரக்ஞையே பிரமாவினிடத்திலு மிருக்கிறது. பிரமாவினிடத்தி லிருக்கின்ற பிரக்ஞைதான் என்னிடத்திலு மிருக்கிறது. ஆ

தலால் சைதன்யமென்றாலும், பிரக்ஞானமென்றாலும், பிரமமென்றாலும், ஆத்மாவென்றாலும் பேர்மாத்திரம் வேறேயல்லாமல்; வஸ்து ஒன்றானபடியினாலே கமென்கிற பதத்தினாலயிக்கியஞ் சொல்லப்பட்டது.

ச-கை. யசுர்வேதத்தில் அகம்பிரமாஸ்மி யென்னும்பதத்தில் அகமென்கிற பதத்திற் கர்த்தமேதென்னில்,

உ-ம். பரிபூரணமாய் தேசகால வஸ்து பரிச்சேத சூனியமாயிருக்கிற பிரத்தியேகாத்ம சைதன்னியந் தானே பிரமவித்தைக் கதிகாரியாயிருக்கிற மனுஷ சரீரத்தில் புத்திக்குச்சாக்ஷியாயிருதயகமலத்தில் அகமகமென்று ஸ்மரித்துக்கொண்டிருக்கும்.

ச-கை. ஆனால் பரிபூரணமாயிருக்கிற வாத்மாவுக்குத் தேகசம்பந்தஞ் சொல்லுகையினால் பரிச்சின்னத்துவம் வாராதோவென்னில்,

உ-ம். சூட்சுமசரீர விலட்சணமா யிருக்கிறபடியினாலபரிச்சின்னத்வமாகிய பரிபூரணனென்பதிற் சம்சயமில்லை.

ச-கை. சூனிய பூரணத்தைப்போலயோ வென்னில்,

உ-ம். சூனியபூரணம்போலன்று; சுதாபூரணனே.

ச-கை. அஃதெப்படி யென்னில்,

உ-ம். அகமென்னும்போது சைதன்னியம் அது நிர்விகாரமாகையினாலகமென்று விகாரஞ் சொல்லக்கூடாது அகங்காரஞ் சடமாகையா லிதுவும் அகமென்று தோற்றமாட்டாது. பதமோவென்றால் பரமாத்ம பூதமான சைதன்யமே அகங்காரத்துடன் கூடிக்கொண் டகமென்றுவிளங்குகின்றது. ஆனபடியினால் சடமான வாச்சியத்தைத் தள்ளிச் சைதன்யமாத்திரமே அகமென்கிற சத்தத்திற்கிலட்சியார்த்தமென்று சொல்லப்படும்.

ச-கை. பிரமபதத்துக் கர்த்தமேதென்னில்,

உ-ம். சதா எப்போதும் பூரணமாய் தனக்கு முந்தி ஒருவஸ்துவுங் காரணமாயில்லாமல் தனக்குப் பிந்தியொருவஸ்துவுங் காரியமாயில்லாமல் தன்னிடத்தி லொருவஸ்துவு மில்லாமல் தனக்கன்னியமாய் ஒருவஸ்துவு மில்லாமல் யாதொரு சைதன்னியம்ஏகமாயிருக்கின்றதோ, அதுதான் பிரமபதத்துக்கு லட்சியார்த்தம்.

ச-கை. அஸ்மியென்கிற பதத்திற் கர்த்தமேதென்னில்,

உ-ம். அவ்விருபதத்தின் லட்சியார்த்த வயிக்கியமே அஸ்மியென்னும்பதார்த்தமென்று சுருதியிற்சொல்லப்படுகின்றது.

ச-கை. சாமவேதத்தில் தத்துவமசி வாக்கியத்தில் தத்பதத்திற் கர்த்தமேதென்னில்,

உ-ம். ஏகமேவாத்வைதம் பிரமமென்று சொல்லப்படும்.

ச-கை. ஏகமென்றால் போதாதோ? ஏகமே வாத்வைதம் பிரமமென்று சொல்லுவானேனென்னில்,

உ-ம். ஏகமென்பதிற் சுசாதி சூனியமும், ஏவவென்பதில்விசாதிசூனியமும், அத்வைத மென்பதில் சுவகத பேத சூனியமும் விளங்குகின்றது. அதனால் அப்படி சொல்லவேண்டிற்று.

ச-கை. உலக பதார்த்தங்களிற் சுசாதிக விசாதிக சுவகதபேதங்கள் பிரத்தியட்சமாக விளங்கப்படுகின்றது. எப்படியென்றால் விருட்சங்களெல்லா மேகமாயிருந்தாலும் ஆலமரம், அரசமரம் என்கிற பேதமிருக்கின்றபடியால் சுசாதி பேதமும், பாஷாணாதிகள் விருட்சங்களுக் கன்னியமாயிருக்கிறபடியால் விசாதிபேதமும், பத்திரபுஷ்பபலாதிகள் விருட்சத்திற்குப் பேதமாய்த் தோற்றுகிறபடியால் சுவகதபேதமுங் கண்டோம். அதுபோல ஆத்மாவிலும் அந்தப்பேதங்கள் கண்டோம். எப்படியென்றால் ஒருவஸ்துவில் சீவனென்றும் ஈஸ்வரனென்றும் பேதமிருக்கிறபடியால் சுசாதிபேதமும், சீவேஸ்வரரைப் பார்க்கிலும் சடப்பிரபஞ்ச மன்னியமாயிருக்கிறபடியினால் விசாதிபேதமும் சச்சிதானந்த குணங்களிருக்கின்றபடியால் சுவகதபேதமுங் கண்டோமே யென்னில்,

உ-ம். ஒருவஸ்து தானேயபின்னமாய் நிமித்தவுபாதான காரணமாயிருந்துக்கொண்டு தான்தானே சிருஷ்டித்துத்தான்தானே பிரவேசித்ததென்று சுருதிசொல்லுகிறபடியினால் சீவேஸ்வரபேதமாகிய சுசாதி பேதமில்லை. சீவேஸ்வரரைப் பார்க்கிலுஞ் சடப்பிரபஞ்சத்திற்குச் சுதாசத்தை யில்லாதபடியினால் சுத்திகாரசிதம் சொப்பனப்பிரபஞ்சம் ரச்சுசர்ப்ப முதலானதுகளைப்போல் மித்தையாபூதமாய் வாதிக்கப்படுகின்றது. ஆதலால் விசாதிபேதமில்லை. ஆத்மாவுக்குச் சச்சிதானந்தமெல்லாஞ் சொரூப

மாயிருக்கிறபடியினால் சுவகதபேதமில்லை. ஆனபடியினா லாத்மா சுசாதிக விசாதிக சுவகத பேத ரகிதசொரூப மென்று தத்பதத்துக் கர்த்தமாயிற்று.

ச-கை. இனி தொம்பதத்திற் கர்த்தமேதென்னில்,

உ-ம். தேகேந்திரியாதிகளுக்கெல்லா மதீதமாய் சிரவணமனன நிதித்தியாசனத்துடன் கூடியிருக்கிற பிரத்தியேகாத்ம சைதன்னியமே தொம்பதத்திற் கர்த்தமென்று சொல்லப்படும்.

ச-கை. அசிபதத்திற் கர்த்த மேதென்னில்,

உ-ம். அவ்விருபதத்தின் லட்சியார்த்த வயிக்கியமே அசியென னும் பதத்திற் கர்த்தமென்று சொல்லப்படும்.

ச-கை. அதர்வணவேதத்தில் அயமாத்மாப் பிரமமென்னும்வாக் கியத்தில் அயமென்னும் பதத்திற்கர்த்தமேதென்னில்,

உ-ம். ஆத்மா அபரோட்சசொரூபமென்று சொல்லப்படுவது.

ச-கை. ஆத்மா அபரோட்சசொரூபமானால் கடாதிகளைப்போல் திரிசியமாய்க் காணப்பட்டுச் சடமாயிற்றேவென்னில்,

உ-ம். திரிசியமாய்க் காணப்பட்டுச் சடமாயிருக்கிறதுமல்ல.

ச-கை. சொர்க்காதிகளைப்போற் பரோட்சமாய்க் காணப்படாத தோவென்னில்,

உ-ம். சொர்க்காதிகளைப்போற் பரோட்சமாய்க் காணப்படாத துமல்ல. ஆதலால் அந்த நித்தியாபரோட்ச சொப்பிரகா சசொரூபத்தை யறிவாகவே யறியவேண்டும்.

ச-கை. ஆத்மாவென்னும் பதத்திற் கர்த்த மேதென்னில்,

உ-ம். அகங்காரமுதல் ஸ்தூலதேக பரியந்தமானகாரியகாரண சங்கவாதத்துக்கெல்லா மதிஷ்டானமாய் இருதயகமலத் தில் அகமகமென்று ஸ்மரித்துக்கொண்டிருக்கிற பிரத்தி யேகாத்மசைதன்னியமே யாத்மாவென்னும் பதத்திற் கர்த்தம்.

ச-கை. ஆனால் பிரமபதத்திற் கர்த்த மேதென்னில்,

உ-ம். திரிசியமாய்க் காணப்படுகிற ஜகத்துக் கதிஷ்டானமாயி ருக்கிறபடியினால் தத்துவமாயிருக்கிற பரமாத்மசைதன் னியமே பிரமமென்னும் பதத்திற்கர்த்தமானலட்சியார்த் தம். அங்ஙனமான வஸ்து வெதுவோ அதுவே, நித்தி யாபரோட்ச சொப்பிரகாசமாயிருக்கிற பிரத்தியேகாத் ம சைதன்னியமென்று சுருதியிற் சொல்லப்படுகின்றது.

மேலும் முதல்வாக்கியந் தற்போதஞானமென்றும், இரண்டாம்வாக்கியஞ் சாட்சிஞானமென்றும், மூன்றும்வாக்கியஞ் சிவஞானமென்றும், நான்காம்வாக்கியம் பிரமஞானமென்றுஞ் சொல்லப்படும்.

ச-கை. இப்படி வாக்கியங்களொன்றுக்கொன்று பேதம்வருவானேனென்னில்,

உ-ம். பேதமல்ல. ஆசிரியர் சீடனுக்குப் பிரஞ்ஞானம் பிரமமென்றுபதேசிக்கச் சீடனும் பிரஞ்ஞானமாவதேதென்றுவினவ, அகமென்றிருக்கிறதே யஃதென்று இரண்டாம்வாக்கியத்தை யுபதேசிக்க, சீடனும் அனேகமான அகத்திலெந்தவகமென்று வினவ, சிவேஸ்வரானுக் கப்பாற்பட்டபிரமமென்றுமூன்றும்வாக்கியத்தை யுபதேசிக்க, சீடனும் சுவாமீ! சிவேஸ்வரானும் உபாதியுந் தள்ளுபட்டபோதே துவைதமாச்சுதே யென்றுவினவ, அன்னியமான துவைதமும் பிரமத்தைத்தா விரவில்லையென்றுநான்காம்வாக்கியத்தை யுபதேசித்தருளினர். ஆதலால் சச்சிதானந்த அத்வைதசொரூபமே நீ; நீ சீவனல்ல; நான்கு ஆசிரமமும், சட்பாவனையும், சட்கோசமும், சட்கோடியும், சட்ரமியும், சுகதுக்க கர்த்தவ்யமும், ஆகாமியசஞ்சித பிராரத்தங்களு முனக்குக் காலத்திரயத்திலுமில்லையென்றறிக.

ச-கை. ஆனல் முன்போலவே நாமரூப பதார்த்தங்கள்தோற்றப்படுகின்றதே யென்னில்,

உ-ம். அப்படி தோற்றுதவகைக்கோருபாயஞ் சொல்லுகிறேம் அஃதென்னவென்று கேட்பாயாகில், எதினல் பதார்த்தரூபந் தோற்றப்படுகின்றதோ, அதைப் பரிட்சித்தால் ஒருபதார்த்தமு மில்லாமற்போம். ஆதலால் எந்நேரமும் நீ நிராலம்பசொரூபத்தில் திருஷ்டிமாறுதிருப்பாயாகில், அகண்டசமரச சுகசொரூபமான ஆத்மாவாவாயென்று; சீஷனதுசிரசில் தமது திவ்வியாஸ்தத்தை வைத்துப் பூரணனுக்கிரகஞ் செய்தருளினர்.

அப்படி தரிசன பரிசுனங்களினல் ஸ்ரீசற்குருவானவர் சம்சயமறவனுக்கிரகம்பண்ணி, நிருமலர்ப்பாட்டையைக் காட்டிவிட்டபடியினல், அந்தச்சீடன் பாகிய திருஷ்டியை மறந்து அந்தர்முகப்பட்டு ஸ்தூல சூட்சுமகாரணசரீரவு

பாதிகளைக் கைவிட்டுச் சொரூபாகாரப் பட்டமாத்திரத்தில் ஞானசத்தி பிரவேசமானாள்; அதனால் அஞ்ஞானசத்தி நாசமானாள் அதனால் சாத்வீகபாவம் பிறந்தது. அதனாற் பதார்த்த வெதிருத்தமில்லாமற் போச்சுது. அதனால் ஞானசாம்பிராஜ்ய பட்டம்வந்தது. அதனாலானந்ததீர்த்த மெழுந்து சீடனாகிய மடுவை மூடிக்கொண்டோடும்போது விவேகமென்கிற நீச்சுக்காரன் முழுகிப்போனான். ஆங்காரமாகிய கர்த்தவ்யவிருட்சம் வேரோடு பேர்ந்துபோச்சுது. ஆசையென்கிற பட்சிக்கூடு கலைந்தது. அப்போது சுவானுபூதியாகிய வரமனையில் முத்திகாந்தையையாலிங்கனம்பண்ணிக்கொண்டு தன்னையிழந்துவிட்டான் இந்திரியங்களெல்லாந்தன்னுடைய ஆதாரத்திற் பிரவர்த்தித்துக் கொண்டிருந்தது.

அப்பால் இத்தன்மையவான சுவானுபவம்பெற்றசீடன் ஸ்ரீசற்குருநாதனுடைய பாதத்தில்விழுந்துநமஸ்கரித்தெழுந்துநின்று, ஓய் அநாதிபந்து கருணாசமுத்திரமான குருசுவாமீ! அநாதிகாலமே என்சொரூபத்தையிழந்து என்னை நான் திருடிக்கொண்டு மூடனாயிருந்தேன். அப்படியிருந்த என்களவைக் கண்டுபிடித்து என்சொரூபத்தையுள்ளபடி கரதலாமலகம்போல்சம்சயமறக் காட்டிக்கொடுத்த தேவரீரது பேருதவிக்கு அடியேன் செய்யுங்கைம்மாறு ஒன்றுங்காணேன். உமது கிருபாதரிசன மாத்திரத்தினால் அகங்காரமோகநீங்கிக் கிருதகிருத்தியனானேனென்று பலவாறுநத்துதித்து எப்போதும்போற் சமராசானந்த சுவானுபூதிநிலையில் ரமித்திருந்தான்.

ஆதலால் இந்த மகாவாக்கியத்தினர்த்தத்தை ஸ்ரீசற்குருசந்நிதானத்தில் சந்தேக விபரீதமற விசாரித்தறிந்தவனே சீவன்முத்தன்; அவனேபரமுத்தன். அவனே பிரமசொரூபம் என்றுசொல்லப்படும். மேலும்வேதத்தையும் பிராமணர்களையும் பிரமதேவரையும் பிரமமென்று சொல்வதுகூடாது. ஏனென்றால் காணப்பட்டதெல்லாமழிந்துபோகிறபடியினால் சர்வகாரணமான நிர்க்குணப்பிரமவஸ்துவைமாத்திரம் பிரமமென்று சொல்லவேண்டியதென்று சகலசுருதிஸ்மிருதி யிதிகாச புராணாகமாதிகளிற் சொல்லப்படுகின்றது. இதிற்சம்சயமில்லைசித்தம்.

மகாவாக்கியநிருபகம்
முற்றிற்று

ஆ பிரகரணங்கள்-சஅ.
வாசுதேவமனனம் முற்றிற்று